
KALKI 5.7.98
ரூ. 4.50
கல்கி
இலவச
இணைப்பைக் கேட்டு
வாங்குங்கள்!
கவர்ச்சிக்கு
குட்டை!
— ரோஜா

அறிமுகமாகிறது
கோல்கேட் டபுள் புரொட்டெக்ஷன்



2 ½ மடங்கு அதிக சக்தி

கிருமிகளுடன் போரிடுவதற்கு, சாதாரண டூத்பேஸ்ட்டைக் காட்டிலும்

2 ½ மடங்கு அதிக பாதுகாப்பு

வாய் துர்நாற்றம் மற்றும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளிலிருந்து



2 ½ மடங்கு அதிகம் நீங்கள் பெற முடியும் என்னும்போது அதனிலும் குறைவானதை ஏற்று வாங்க வேண்டும்?

Based on scientific tests carried out in the mouth.

உலகம் முழுவதையும் ஃபுட்பாலோ மேனியா பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கிறது. பிரான்ஸில் நடக்கிற ரகளைக்கு எதிரொலி, பழைய வண்ணாரப்பேட்டையிலும் கேட்கிறது. ராத்திரியெல்லாம் டீ.வி. முன் தவம் கிடக்கிறார்கள் ரசிகர்கள். யார் ஜெயிப்பார்கள் என்று ஆங்காங்கே பெட்டிங் வேலை நிழலாக ஒருபுறம். பிரபல வீரர்களின் ஹேர் ஸ்டைல், பனியன் டிஸைனை நகலெடுப்போர் மறுபுறம். திருப்பதிக்கோ, திருச்செந்தூருக்கோ போகாமலே ரொனால்டோ போல் நிறையப் பேர்





ஃபுட்பாலோமேனியா

மொட்டை போட்டுக் கொண்டு திரிகிறார்கள்!

நம் பங்குக்கு – மொட்டை போடுவது சாத்தியமில்லை. ஆகவே கால் பந்துக்காக ஸ்பெஷலாகச் சில பக்கங்கள் ஒதுக்குகிறோம்.

● அறுபது வருடங்களுக்குப் பிறகு இரண்டாவது முறையாக பிரான்ஸில் நடக்கிற உலகக் கோப்பைப் போட்டி இது. (நாலு வருஷத்துக்கு ஒருதரம் வரும்.) வேறு எந்த நாட்டிலும் இரண்டாவது முறையாக இது நடந்ததில்லை.

● 1930ல் தொடங்கி, அனைத்து உலக கோப்பைப் போட்டியிலும் கலந்து கொண்ட ஒரே அணி பிரேஸில். இது 16வது முறை. ஜெர்மன், இத்தாலி அணிகளுக்கு இது 14வது முறை.

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalki@md2.vsnl.net.in



• ஃபைனல் மேட்ச் நடக்கப் போகிற மைதானம்

● தெ. ஆப்பிரிக்கா, ஜப்பான், குரேஷியா ஆகிய அணிகளுக்கு இது முதல் போட்டி.

● அதிக முறை (4) கோப்பை வென்ற நாடு பிரேஸில். ஜெர்மனியும் இத்தாலியும் மூன்று முறை.

● இந்த சீஸனின் சீனியர் மோஸ்ட் ப்ளேயர் - ஸ்காட்லாந்தின் கோல் கீப்பர் ஜீன் லெய்ட்டன். வயது 39. ஐந்தாவது முறையாகக் களம் காண வந்திருப்பவர் இவர். ஜூனியர் மோஸ்ட்? கேமரூன் நாட்டைச் சேர்ந்த பதினேழு வயதான சாமுவேல் எடோ என்கிற 'பாப்பா'.

● அதிக அணிகள் இடம்பெற வேண்டும் என்று, சர்வ தேசக் கால்பந்து சம்மேளனம் விரும்பியதால் இந்த ஆண்டு மல்லுக்கட்டுவது 32 அணிகள். (சென்ற முறை 24) அணிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதால் போட்டிகளும் அதிகம். மொத்தம் 64 மேட்ச்கள்!

● உலக கோப்பைப் போட்டிகளில் அதிக முறை விளையாடிய (21 முறை) வீரர்கள் நால்



வர். அர்ஜன்டைனாவின் மாரடோனா, ஜெர்மனியின் லோத்தர் மாத்யூஸ், போலந்தின் விளாடிஸ்லா ஜமுடா (வெள்ளரிக்காய் கடிப்பது போலில்லை, பெயர்?) மற்றும் யூ ஸீலர் - இவரும் ஜெர்மானியர்.

● உ.கோ.யில் அதிக கோல் போட்டவர் ஜெர்மனியின் ஜெர்ட் ம்யுல்லர். 14 கோல்கள் போட்டவர் இவர்! இவருக்கு அடுத்தபடியாக 13 கோல்கள் போட்டிருப்பவர் பிரான்ஸின் பான்டேன். 'கால்பந்து அரசன்' எனப்படும் பிரேஸில் வீரர் பீலே போட்டது 12 கோல்கள். ஒரே ஆட்டத்தில் அதிக (5) கோல் போட்டவர், ரஷ்ய வீரர் ஏலக் லங்கோ - 1994ல்.



• டோனி

• ஹோடில்

● இம்முறை பிரேஸில்தான் கோப்பையை வெல்லும் என்பது பரவலான கணிப்பு + எதிர்பார்ப்பு. அடுத்தபடியான சான்ஸ், இத்தாலி, பிரான்ஸ், இங்கிலாந்துக்கு என்று வரிசைப்படுத்துகிறார்கள். யார் ஜெயித்து, யார் தோற்றால் என்ன? நாம் கட்டாயம் தோற்கமாட்டோம்! கலந்து கொள்ளவே இல்லையே!





• ஜாக்குவிட்



• ஜகாலோ



• வோக்ட்ஸ்

உலகை உலுக்கும் வீரர்கள்!

ரொனால்டோ : இந்த உலகக் கோப்பைப் போட்டியின் சூப்பர் ஸ்டார் என வர்ணிக்கப்படும் இந்த 21 வயது பிரேஸில் வீரருக்கு, உலகமெங்கும் லட்சக்கணக்கில் ரசிகர்கள். இரண்டு முறை சிறந்த வீரர் என்ற சர்வ தேச கால்பந்து சம்மேளன விருது வாங்கிய ரொனால்டோ, ஓர் ஆட்டத்தின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் திறன் படைத்தவர்!

மின்னல் வேக ஆட்டம், எதிரணியின் தற்காப்பு அரணை உடைத்தெறியும் வலு, அசாதாரணமான தொழில் நுணுக்கத் திறன் + அதே நேரம் நளினமான ஆட்டம் - இதுதான் ரொனால்டோ.

பிரேஸிலின் நம்பிக்கை நட்சத்திரம் ரொமாரியோ, கால் கோளாறு காரணமாக ஆட வராத சோகத்தில் இருக்கிற அந்நாட்டு ரசிகர்களுக்கு இப்போது ரொனால்டோதான் 'பகவான்'.

பாரிஸில் மேட்ச் இல்லாத சமயங்களில் ரொனால்டோ எங்காவது வெளியே கிளம்பினால் ரசிகர்கள் படை அமுக்கி விடுகிறதாம்! அவரது படம் போட்ட பனியன், தொப்பியெல்லாம் லட்சக்கணக்கில் விற்பனையாகி, பிளாக்கிலும் விலை போகிறதாகத் தகவல்.

மார்ஸிலோ சாலஸ் (சிலி) : "இவர் கோல் எல்லைக்குப் பந்தைக் கொண்டு போய்விட்டால் கோட்டை விட்டதாகச் சரித்திரமில்லை" என்கிறார்கள் கால்பந்து விமர்சகர்கள். 24 வயதான சாலஸ், சிலியின் மெகா ஸ்டார். அபாரமான உயரம் இவரது '++'பாயின்ட்! இந்த முறை தகுதிச் சுற்றுப் போட்டியில் மட்டும் 7 கோல்கள் போட்டு, ரசிகர்களை வாய் பிளக்க வைத்தவர் சாலஸ்.

டெல் பியரா : இத்தாலியின் முதுகெலும்பு. முழுப் பெயர் - அலெக்ஸாண்ட்ரோ டெல் பியரா. ரொமாரியோ, ரொனால்டோ லிஸ்டில் 'டெல்'லையும் சேர்க்கிறார்கள் கால்பந்து விமர்சகர்கள். இத்தாலியில் ஜீவன்டஸ் கிளப் என்னும் அணிக்காக விளையாடும் 'டெல்' ஒரு 'ஸீஸனில்' சம்பாதிக்கும் தொகையைக் கேட்டால் அனஸ்தீஷியா தராமலே மயக்கமாகி விடுவீர்கள். எட்டு மில்லியன் டாலர்! பின்னே, கடந்த ஒரு வருஷத்து மேட்ச்

களில் மட்டும் 30 கோல் போட்டவர் என்றால் சும்மாவா?

பியர் ஹாப் : "இந்த உலகக் கோப்பையில் அநேகமாக இவர்தான் ஸ்டாராக இருப்பார்!" என்று பிரேஸில் வீரர் ரொனால்டோவே சர்டிபிகேட் தந்திருக்கிறார் என்றால் பியர் ஹாபின் பெருமை புரிந்து விடும். ஏ.ஸி. மிலன் ஃபுட்பால் கிளப், 14 மில்லியன் டாலருக்கு ஒப்பந்தம் செய்துள்ள இந்த ஜெர்மனி வீரர், சமீபத்தில் இத்தாலியுடன் நடைபெற்ற லீக் போட்டி ஒன்றில் 'கோல் மாரி' பொழிந்து கொண்டிருந்ததை டி.வியில் பார்த்திருப்பீர்கள். 96ல் யூரோபியன் பந்தயங்களின் போது, செக் குடியரசுக்கு எதிராக, கொடுவாயில் இவர் அடித்த ஒரு 'கோல்டன் கோல்' ஞாபகம் கால்பந்து இருக்கும் வரை நிலைத்திருக்கும் என்கிறார்கள் விமர்சகர்கள்.

பாடிஸ்டுடா : மாரடோனாவுக்குப் பிறகு, அர்ஜென்டைனாவின் சூப்பர் ஸ்டார். அண்மையில், போஸ்னியாவுக்கெதிரான போட்டியில் 'ஹாட்ரிக்' அடித்த பாடிஸ்டுடா, சிலிக்கு எதிரான ஆட்டத்திலும் தமது அணிக்கான 'வெற்றி கோலை' அடித்தவர். ஏப்ரல், மேயில் நடந்த பயிற்சி ஆட்டத்தின் போதே இவரது சாதுர்யத்தையும் வேகத்தையும் கண்டு மூக்கு, கண், காது எல்லாவற்றின் மேலும் விரல் வைத்தார்கள் விமர்சகர்கள். இந்த உலகக் கோப்பை போட்டியில் மிகச் சிறந்த முதல் ஐந்து வீரர்களுள் ஒருவராக வருவார் என்று கம்ப்யூட்டர் கணித்திருக்கிறது, இவரை! அர்ஜென்டைனாவின் வெற்றி, தோல்வி எதுவாயினும் அது பாடிஸ்டுடாவின் கையில் - ஸாரி, காலில்தான் இருக்கிறது என்கிறார்கள்.

டோனி போல்ஸ்டர் : "இதுதான் நான் ஆடும் கடைசி உலகக் கோப்பைப் பந்தயம்" என்று அறிவித்து, ஆஸ்திரிய மக்களை சோகக் கடலில் ஆழ்த்தி இருக்கும் 34 வயது டோனி, பயங்கர உயரம்! வயதுதான் முப்பத்திநாலே தவிர கிரவுண்டில் இருபத்திநாலுதான் தெரியும் என்கிறார்கள் ரசிகர்கள்.



'பின்னால்' இருக்கும் முன்னாள் ஸ்டார்கள்

வேகம், வேகம், வேகம். இதுதான் கால்பந்து ஆட்டத்தின் ஸ்டார் அந்தஸ்தின் ரகசியம்.

ஆனால் அந்த வேகத்தில் விவேகத்தைக் கலந்து தருவதுதான் வெற்றியின் ரகசியம். அந்தக் காரியத்தை கிரவுண்டில் பந்தைத் துரத்தும் ஆட்டக்காரர்களுக்குத் தம் கை அசைவு, சமிக்ஞைகள் மூலம் சொல்லிக் கொடுத்து, ஆட்டக்காரர்களை விடவும் டென்ஷனுடன் இயங்குபவர்கள் பயிற்சியாளர்கள்.

உலகின் தலை சிறந்த பயிற்சியாளர்கள் சிலரைப் பற்றிய அறிமுகம் இதோ:

மரியோ ஜகாலோ (பிரேஸில்) : 66 வயதான ஜகாலோ, நாலு முறை பிரேஸில் உலகக் கோப்பை வென்றதற்குப் பின் பலமாக இருந்திருக்கிறார். பிரேஸில் அணியின் முன்னாள்

ஆட்டக்காரரும் கூட!

"ஜகாலோவின் சிறப்பு, ஒரு காதலி போல அணியினரை மென்மையாக அணுகி, ஐடியாக்கள் தருவார். தவறுகளை மென்மையாக எடுத்துக் கூறி திருத்துவதில் இவருக்கு நிகரே இல்லை" என்று பாராட்டியவர் பீலே!



பெர்ட்டி வோக்ட்ஸ் (ஜெர்மனி) : 74ல் ஜெர்மனி கோப்பையை வென்ற போது வோக்ட்ஸ், அணியில் ஒரு வீரர். இன்று கோச். 1994ல் இவர் முதல் முறை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டபோது, நடந்த உலகக் கோப்பையில் ஜெர்மனிக்குப் படுதோல்வி! ஆனாலும் மனம் தளராமல் தம் பணியை மேலும் தீவிரப்படுத்தியதால் இங்கிலாந்தில் நடைபெற்ற ஐரோப்பியக் கோப்பைப் போட்டியில் ஜெர்மனி வெற்றி பெற்றது. "அந்த வெற்றி, இங்கு பெறப்போகும் வெற்றிக்கு நல்ல அடித்தளமாகி விட்டது" என்கிறார் வோக்ட்ஸ்.

கெ(ல்)ன் ஹாடில் (இங்கிலாந்து) : இளமைத் துடிப்புள்ள பயிற்சியாளர். இவரது வெற்றி, இவரது அணுமுறையில் இருக்கிறது. வீரர்களை சகோதரர்களாக பாவித்துப் பழகுபவர். முன்னாள் ஆட்டக்காரர். இங்கிலாந்தின் ஸ்டார் வீரர் டேவிட் பெக்கன், "நான் சிறு வயதில், ஹாடில் போல் நாமும் ஆட வேண்டும்" என்று நினைத்துக் கொள்வேன். அவரிடமே நான் பயிற்சி பெறுவது பெரிய வரம்" என்கிறார் நெகிழ்ச்சியுடன்.

ஜாக்குயிட் (பிரான்ஸ்) : தம் நாட்டில் நடக்கிற போட்டியில் தான் வெற்றிபெற்றே தீர வேண்டும் என்கிற வெறியுடன் ஜெர்மானியப் பயிற்சியாளர் ஜாக்குயிட்டை அழைத்து வந்திருக்கிறது பிரான்ஸ். 74ல் ஜெர்மனி கோப்பை வென்றபோது ஜாக்குயிட் அந்த அணியில் முதல் நிலை ஆட்டக்காரராக இருந்தவர். அண்மையில் அர்ஜன்டைனாவுடன் நடந்த பயிற்சி ஆட்டத்தின் போது, பிரான்ஸ் வெற்றி பெற்றதற்கு ஜாக்குயிட்டின் திறமையே காரணம் என்கிறார்கள் விமர்சகர்கள். ●

தொகுப்பு : **நந்தினி**

படங்கள் - நன்றி : **ஏஷியன் ஏஜ்**

உலகக் கோப்பை சாம்பியன்கள்

உலகக் கோப்பை	ஆண்டு	நடைபெற்ற இடம்	சாம்பியன்
1	1930	உருகுவே	உருகுவே
2	1934	இத்தாலி	இத்தாலி
3	1938	பிரான்ஸ்	இத்தாலி
4	1950	பிரேசில்	உருகுவே
5	1954	சுவிட்சர்லாந்து	ஜெர்மனி
6	1958	ஸ்வீடன்	பிரேசில்
7	1962	சிலி	பிரேசில்
8	1966	இங்கிலாந்து	இங்கிலாந்து
9	1970	மெக்சிகோ	பிரேசில்
10	1974	ஜெர்மனி	ஜெர்மனி
11	1978	அர்ஜென்டைனா	அர்ஜென்டைனா
12	1982	ஸ்பெயின்	இத்தாலி
13	1986	மெக்ஸிகோ	அர்ஜென்டைனா
14	1990	இத்தாலி	ஜெர்மனி
15	1994	அமெரிக்கா	பிரேசில்

"எப்படியாவது நியூஸில் அடிபடும் தந்திரம் உங்களுக்கு நன்கு தெரிந்திருக்கிறது. எப்படி?"

"உலகம் முழுக்க என் குரல் ஒலிக்க வேண்டும் என்பது என் ஆசை. ஆனால், சில சமயம் என் கருத்துக்களைப் பத்திரிகைகள், சரியாக எடுத்துச் சொல்லத் தவறிவிடுகின்றன. இன்று அது சகஜம் என்று நானும் அதைப் பெரிது படுத்துவதில்லை."

"கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கிறபோது, நீங்கள் மகிழ்ச்சியடைகிறீர்களா?"

"நான் கடந்து வந்த பாதை கரடு முரடானது. ஒவ்வொரு கட்டத்திலும், உயிர் பிழைப்பதே அரிது. ஆனால் எப்போதும் கடவுள் என்னைக் கைவிட்டதே இல்லை."

"இன்றைய அரசியலில் நீங்கள் ஓரங்கட்டப்பட்டு விட்டது போலத் தோன்றுகிறதே?"

"இல்லை. எனக்கு சமீபமாக உடம்பு சரியில்லை. அதனால் அடிக்கடி பிரயாணம் செய்ய முடியவில்லை. அவ்வளவுதான்."

"அரசியலில் உங்கள் பணி என்ன?"

"பெண்களுக்காக, ஏழைகளுக்காக உழைப்பதுதான். என்னிடம் உதவி கேட்டு வருகிறவர்களுக்காக நான் போராடத் தயங்கியதே இல்லை."

"கடந்த தேர்தலில் நீங்கள் தோற்றதற்குக் காரணம் என்ன?"

"தேர்தலில் நான் தோற்றுவிட்டதாக நான் ஒப்புக் கொள்ளவே மாட்டேன். எனக்கு அநீதி இழைக்கப்பட்டு விட்டது. என்னை எதிர்த்துப் போட்டியிட்ட பி.ஜே.பி. வேட்பாளர் ஒரு மாபியா ஆசாமி. தவறான வழிகள் அத்தனையையும் பின்பற்றினார். அது குறித்துத்தான் கேஸ் போட்டிருக்கிறேன்."



"மண்டேலாவும் நானும் ஒண்ணு!"

தலைவர்களை தெய்வமாகத் தொழுவதென்பது கம்யூனிஸ்ட் கட்சிகளின் மத்தியிலும் பரவ ஆரம்பித்து விட்டது! கோவையில் கடந்த வாரம் இரு கம்யூனிஸ்டுகளும், தம் அகில இந்தியத் தலைவர்கள் முன்னிலையில் நடத்திய பேரணியில் 'சுர்ஜித் சிங்' ஜிந்தாபாத், ஏ.பி. பர்தன் ஜிந்தாபாத்' கோஷம் மிக அதிகம். சுர்ஜித் - பர்தன் பார்வையிட்டுக் கொண்டிருந்த மேடையைக் கடக்கும்போது ஒரிருவர் நிலத்தைத் தொட்டுக் கும்பிட்டுச் செல்வதையும் காண முடிந்தது.

இது பற்றிக் கேட்டபோது 'இடது' பக்கம் நின்றிருந்த ஒருவர், "இதெல்லாம் ரைட்டுக செய்யற வேலை... அதே மாதிரி அவங்க கூட்டம் கொஞ்சம்ன்னாலும் அவங்களது அதிகம்ன்னு காட்டிக்கிற மாதிரி ஆளுக்கு ரெண்டு கொடி மூணு பேனர்ன்னு' கொண்டு வந்து ஒவ்வொருத்தர் கையிலயும் கொடுத்துடறாங்க... அதுல எங்காளுக கூட...." என்று அங்கலாய்த்தார் ஒரு தொண்டர்.

தலைவர்கள் பார்வையிட்டுக் கொண்டிருந்த மேடையை ஊர்வலம் கடக்க சுமார் ஒன்றரை மணி நேரம் ஆனது. அதில் முக்கால்வாசி ஊர்வலம் ஒட்ட மயம்தான். காரணம் சிவானந்தா காலனி மாநாட்டிற்குத் தலைவர்கள் பாதியில் புறப்பட்டுச் செல்ல, மாநிலச் செயலர் சங்கரய்யா மட்டும் மேடையில்...

பேரணி துவக்கத்தில் 'தூறல்' விழ ஆரம்பிக்க 'ஒ... பேரணி இன்னெய்க்கு அம்போ...' எனக்

ஃபார்மாலிடி பேரணி?

• சங்கரய்யா, சுர்ஜித், பரதன் : மேடையிலிருந்து



"உங்கள் பெயரை நோபல் பரிசுக்கு சிபாரிசு செய்தது யார்?"

"உலகெங்கும் உள்ள பெண்கள் அமைப்புகள்தான் என்னை சிபாரிசு செய்துள்ளன. ஒரு பிரிட்டிஷ் பாராளுமன்ற எம்.பி. என்னிடம், தான் கூட என் பெயரை சிபாரிசு செய்திருப்பதாய்க் கூறினார். என் கதையை நேரில் வந்து பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று உலகெங்கும் இருந்து எனக்கு ஏகப்பட்ட அழைப்புகள்!"

"உங்களுக்கு நோபல் பரிசு பெறும் தகுதி இருப்பதாய்க் கருதுகிறீர்களா?"

"ஏன் இல்லை? எனக்கு இழைக்கப்பட்ட அநீதி பற்றி உலகமே அறியும். என்னைப் போல அநீதிக்கு ஆளான, தாழ்த்தப்பட்ட இனத்துப் பெண்ணுக்கு விருது கிடைத்தால், அது மொத்த உலகிற்குமே பெருமை தானே?"

"அப்படியெனில் நெல்சன் மண்டேலாவுக்கு இணையாக உங்களைக் கருதுகிறீர்களா?"

"அவர் பணியாற்றிய களம் வேறு என்றாலும், இருவரும் சமூக அநீதிக்கு எதிராகப் போராடியவர்கள்தானே!" ●

('அவுட்லுக்'கில்வெளியான பூலன் தேவியின் பேட்டியிலிருந்து ஒரு பகுதி. தொகுப்பு : மானஸா.)

சுத்த, இன்னொருவர் அவரை அடக்கினார். 'ஹேய் அடாது மழையிலும்; விடாது பேரணி.... நில்' என்று. சுமார் 10,000 பேருக்குக் குறையாது பேரணி.

''ஆனா உள்ளூர் பத்திரிகைக மூவாயிரம்னு போடுது... இதே வேற கட்சின்னா 3,000க்கு 10,000ன்னு போடுவாஙுக...!'' என்று அடுத்த நாள் கட்சி வட்டாரத்தில் ஒரே சிடுசிடுப்பு.

போகட்டும். இந்தப் பேரணி எதற்கு என்கிறீர்கள்? மத நல்லிணக்க - ஒருமைப்பாட்டுப் பேரணி.

''கோவையில் இது ஒரு ஃபார்மாலிட்டி ஆகிப் போச்சு...! இல்லே?''

ஜனங்களே முணுமுணுக்கிறார்கள். ●

— கேயெஸ்வி.

ஏசு ஏன் ஓடினார்?

● ஏசு கிருஸ்து, ஒரு நாள் தலை தெறிக்க ஓடிக் கொண்டிருந்தார். ஒரு பத்திரிகையாளர், 'ஏன் இப்படி ஓடிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்க, ''ஒரு முட்டாளைச் சந்தித்ததால், அவனிடமிருந்து தப்பிக்க ஓடிகிறேன்'' என்றார்.

''குருடனுக்குப் பார்வையளித்த, செவிடனுக்குக் கேட்கும் சக்தியளித்த, முடவனை நடக்க வைத்த உங்களுக்கு, முட்டாளைக் கண்டதும் ஓட வேண்டிய அவசியம் என்ன?''

''குருடனுக்குத் தனக்குக் கண் தெரியாது என்பது தெரியும். செவிடனுக்குத் தனக்குக் காது கேட்காது என்று தெரியும். முடவனுக்குத் தன்னால் நடக்க முடியாது என்று தெரியும். ஆனால், முட்டாள் இருக்கிறானே, அவனுக்கு, தான் முட்டாள் என்பது தெரியாது: தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்துக் கொண்டு பேசுவான். அங்கேதான் ஆபத்து'' என்றார் ஏசு.

• சுகபோதானந்தா



● ஒருவன், மிகக் கோபமுடன் கதவை எட்டி உதைத்தபடி உள்ளே நுழைந்தான். ஷூவை ஒரு பக்கம் உதறி, தன் தலையிலிருந்து தொப்பியை இன்னொரு பக்கம் எறிந்தான். அங்கிருந்த சுவாமிஜியிடம், ''எனக்கு ஒரு பிரச்னை; அதற்கு நீங்கள்தான் ஒரு தீர்வு சொல்ல வேண்டும்'' என்றான்.

சுவாமிஜி, ''நீ முதலில், எட்டி உதைத்தாயே அந்தக் கதவு, வீசி எறிந்தாயே, அந்த ஷூ, தொப்பி இவைகளிடமெல்லாம் சென்று உன் செயலுக்கு வருத்தம் தெரிவித்து விட்டு வந்து, அதன்பின் உன் பிரச்னையைச் சொல்'' என்றார்.

அவனும், அப்படியே செய்துவிட்டு மறுபடி சுவாமிஜியிடம் வந்து நின்றான். 'உன் பிரச்னை என்ன? இப்போது சொல்' என்றார்.

''என் பிரச்னை தீர்ந்து போய் விட்டது'' என்று சொல்லி வணங்கினான்.

(காரணம்: பிரச்னைகளுக்கு அடிப்படைக் காரணம் ஈகோதான்.) ●

அண்மையில் சென்னையில் நடந்த சுவாமி சுகபோதானந்தாவின் சொற்பொழிவிலிருந்து: கௌதம்

தமிழ் ஃபீல்டுக்குத் தற்காலிகமாக டாட்டா சொல்லிவிட்டு, சுந்தரத் தெலுங்குப் பக்கம் நங்கூரம் பாய்ச்சியிருந்த ரோஜா, திடீரென்று சென்ற வாரம் பொள்ளாச்சி வட்டாரத்தில் பூத்திருந்தார். 'சின்னதுரை' அவுட்டோர். ஆக, மறுபடியும் செந்தமிழ்ச் செல்வி!

"என்ன ரோஜா, தமிழில் வாய்ப்பே இல்லையா?"

"சேச்சே! தமிழைவிட அங்கே 'நடிக்க' நல்ல ஸ்கோப் உள்ள படங்கள் நிறைய வரவேதான் போய்விட்டேன். எங்கே நல்ல படம் கிடைக்கிறதோ, அங்கே போவது தானே முறை?"

"அதிலென்ன சந்தேகம்? ஆனால் சிம்ரன், தேவயானி, போதாக்குறைக்கு ஐஸ்வர்யாராய் எல்லாம் பிரமாதமாக டேரா போட்டுவிட்டதால் தான் உங்களுக்குப் பட வாய்ப்புகள் இல்லாமல் ஆகிவிட்டது என்று கோடம்பாக்கத்தில் பேசிக் கொள்கிறார்கள்?"

"அதெல்லாமில்லை சார். யாருக்கு யார் போட்டியா வந்துட முடியும்? எனக்கு நல்ல கதை, நல்ல கேரக்டர் அமையலை. அதான் நடிக்கலை."

"கதையா? கேரக்டரா? ரோஜா என்ன ஆச்சு உங்களுக்கு? பழைய கவர்ச்சி ரோஜா 'போயிந்தே'வா?"

"உம்! அந்த ஆசை, விருப்பமெல்லாம் போயாச்சு. அந்த சாப்டர் முடிந்து விட்டது! இப்பவெல்லாம் நல்ல கேரக்டர் ரோல்களாகத் தேடி நடிக்கிறேன். இந்த 'சின்னதுரை'யிலும் கூட அப்படியொரு வெயிட்டான பாத்திரம் கிடைத்ததால்தான் நடிக்கிறேன். மேலும் நீண்ட இடைவெளிக்குப் பிறகு (சூரியனுக்குப் பிறகு) சரத்குமாருடன் இணைந்து நடிக்கிற சந்தோஷம்."

"ரொம்ப சந்தோஷம். கலைமாமணியெல்லாம் கிடைச்சிருக்கிறாற்போல் இருக்கிறது...?"

"ஐயோ, எவ்ளோ சந்தோஷம் அது! சின்ன வயதில் பெரிய கௌரவம். 'செம்பருத்தி'யில் நான் அறிமுகமானபோது மக்கள் என்னிடம் மிகவும் எதிர்பார்க்கிறார்கள் என்பதைப் பலர் சொல்லிப் புரிய வைத்தும் 'கடவுள்' படத்துக்கப்புறம்தான் 'நடிகை'யாக ஒரு நல்ல இமேஜ் வந்திருக்கிறது. அந்தப் படத்தில் என் நடிப்பைப் பாராட்டாதவர்களே இல்லை. அதற்குப் பின்தான் கவர்ச்சிக்கு டாட்டா சொல்ல முடிவெடுத்தேன்."

"அப்புறம் ரோஜா, உங்கள் மேல் சில கம்ப்ளெயின்ட்ஸ். செல்வமணி படத்தில் மட்டும்தான் நடிப்பேன் என்று அடம் பிடிப்பது..."

"வெயிட், வெயிட். அதெல்லாம் சுத்தப் பொய். இதை நீங்கள் புரிஞ்சுக்கணும். நான் தமிழில் அறிமுகமானபோது, நிறையப் பேர் வந்து கதை சொல்லி, கால்ஷீட் கேட்டார்கள். யோசிக்காமல் தந்ததில், தொடர்ந்து சில தோல்விகள். காரணம் எனக்கு அப்போது மொழியே தெரியாது! எதற்கு வம்பு! நன்கு தெரிந்த செல்வமணி யூனிட்டிலேயே வருஷத்துக்கு இரண்டு மூன்று படங்கள் செய்தால் போதும் என்று முடிவெடுத்தேன். இது தப்பா?"

"தப்பே இல்லை. ஆனால் சமீப காலமாக செல்வமணிக்கும் உங்களுக்கும் ஒரு 'டைாய்' என்றும் கல்யாணம் கூட நடக்கப் போவதில்லையென்றும் பேசுகிறார்கள். உங்கள் காதில் இது விழுந்ததா?"

"ஐயோ! எல்லாரும் இதையேவா கேட்பீர்கள்? எங்களுக்குள் ஒரு பிரச்னையும் இல்லை. கல்யாணம் தள்ளிப் போவதற்குக் காரணம் இடைவிடாமல் ஷூட்டிங் இருப்பதுதான்."

"ரொம்ப நல்லது. அடிக்க வராமலிருந்தால் இன்னொரு விஷயம். நடுவில் உங்களுக்கு எயிட்ஸ் நோய் என்று ஒரு வதந்தி பலமாக எழுந்து புயலைக் கிளப்பியதே..."

"வெளிப்படையாகச் சொல்கிறேன். எனக்குத் தமிழ்ப் பத்திரிகையாளர்களைக் கண்டாலே பிடிப்பதில்லை. சர்குலேஷனுக்காக என்ன வேண்டுமானாலும் பொய் எழுதி, பூ சுற்றுவதா? மேலும் முழு நேர சினிமா ஜர்னலிஸ்டுகள் இங்கே அதிகமில்லை. பெரும்பாலும் ஃப்ரீ லான்ஸர்ஸ். ஒரு 'ஸ்டாண்டர்டே' இல்லை! ரொம்ப வெறுத்துப் போய் விட்டது. நல்ல வேளை, என் பெற்றோருக்குத் தமிழ் தெரியாததால் அதைப் படிக்கவில்லை. படித்திருந்தால் உடல்நலம் சரியில்லாத என் அம்மா என்ன ஆகியிருப்பாரோ?"

"கொஞ்சம் கூல் ஆகுங்கள் ரோஜா. போகட்டும். நீங்கள் ஃபெப்ஸியா? படைப்பாளியா?"

"ஆளை விடுங்கள். நான் கொக்ககோலா!" ⭘

பேட்டி : **கா.சு. வேலாயுதன்**

அட்டை, வண்ணப்படம்:

'தேர்ட் ஐ' பிரகாஷ்

கவர்ச்சிக்கு


குட்பை!

நகர்ப்புற வாழ்க்கை என்று தலைப்புக் கொடுத்தாலும் கொடுத்தார்கள், அது எத்தனை நரக வாழ்க்கை என்று நார்நாராய்க் கிழித்து விட்டார்கள் அத்தனை பேரும்!

● "என்ன ஆபீசில் எல்லாருக்கும் ஸ்வீட் கொடுக்கறே? பையனுக்கு எல்.கே.ஜி. சீட் கிடைச்சிட்டுதா?"

"இல்லை, குழாயில முழுசா ஒரு பக்கெட் தண்ணி வந்ததே இன்னைக்கு!"

● "இந்த நகரத்துல வீடுதான் பிரச்னை, கூடுகட்ட மரமே கிடையாது!" - சொல்வது ஒரு காகம்.

● நகரின் மிகச் சிறந்த பஸ் டிரைவர் என்று அவார்டு தருகிறார்கள். அவர் செய்த சாதனை: பஸ்ஸை ஆற்றில் மூழ்கடித்து 300 குழந்தைகளைக் கொன்றதுதான்!

● "வானமே எல்லை" - எதற்கு?
குப்பை கொட்ட!

● தான் பெற்ற குழந்தையை வேலைக்காரியிடம் கொடுத்துப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, வாக்கிங் புறப்படும் எஜமானியின் கையில் மேல் நாட்டு



நகர வாழ்க்கை





நாய்!

இதுபோன்ற சீரியஸ் நகைச்சுவை தவிர, லைட்டர் வெயினிலும் சில இருந்தன.

* ரிமோட் கண்ட்ரோலில், பட்டம் விடும் பையன்.
* அபார்ட்மென்ட் ஸ்டைலில் அடுக்குமாடி பறவைக் கூடு.
* பாம்பு படமெடுக்க, ரேடியோ பண்பலை ஒலிபரப்பில் 'நாகினா' படத்திலிருந்து பாட்டு போடச் சொல்லும் பாம்பாட்டி.
* "டீ.வியில் இந்தப் படமெல்லாம் நீ பார்க்கக் கூடாது" என்று கைக் குழந்தைக்கு அட்வைஸ் செய்யும் வாண்டு.
* இன்டர் நெட்டில் 'வெப் சைட்' வைத்திருக்கும் பிச்சைக்காரர்.

இத்தனையையும் ஒரு சேரப் பார்க்க முடிந்தது என்றால், அது ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையின் உபயத்தில்தான். கடந்த பன்னிரண்டு வருடங்களாக, இவர்கள் கார்ட்டூன், கேரிகேசர் (கேலிச் சித்திரம்) வரையும் போட்டியை நடத்தி வருகிறார்கள். இந்தியாவெங்குமிருந்து, ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டனர்!





நடுவர் குழுவில் மூந்நாள் லோக் சபா சபாநாயகர் பி.ஏ. சங்மா, ஸ்டார் டீவி. பிராணாய் ராய் உட்பட மொத்தம் ஐந்து பேர். நடுவர் குழுவினர் தேர்ந் தெடுத்த முதல் பரிசு கார்ட்டூன்:

டிராபிக் நெரிசலில் வாகனப் புகை மண்டலத்தின் நடுவில், மூச்சுவிடத் திணறும் தேசப் பிதா(வின் சிலை).

இரண்டாவது பரிசு பெற்ற கார்ட்டூனின் சப்ஜெக்ட்டும் சுற்றுச் சூழல் பாதிப்புதான். நகரில் ஆங்காங்கே, தண்ணீர்த் தொட்டிகள் போல ஆக்ஸிஜன் தொட்டிகள்.

பிர்சனாலிடிகளை, கேலிச் சித்திரமாய் வரையும் போட்டியில் அதிகம் பேர் வரைந்து தள்ளியவர்களின் பட்டியல் இது: வாஜ்பாய், விஞ்ஞானி அப்துல் கலாம், எம்.எஸ்., சச்சின் டெண்டுல்கர், ஏ.ஆர். ரஹ்மான், வீரப்பனைக் கூட விட்டு வைக்கவில்லை.

சென்னை லலித் கலா அகாடமியில் நடந்த கண்காட்சியில், கேரிகேசர் பிரிவில் முதல் பரிசு பெற்ற படம் இடம் பெறவில்லை. விசாரித்தபோது, முதல் பரிசுக் குரியதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டதை, ரத்து செய்து, போட்டியிலிருந்தே விலக்கி விட்டார்களாம். தேர்வுக் குழுவினரின் முடிவுக்குப் பின், டெல்லியில் கண்காட்சி நடத்தியபோது, பார்வையாளர் ஒருவர் முதல் பரிசு பெற்ற பி.ஏ. சங்மாவின் கேலிச் சித்திரம், ஏற்கெனவே ஒரு பத்திரிகையில் பிரசுரமானதன் பிரதி என்று கண்டு பிடித்துச் சொன்னதே காரணம்! இரண்டாம் பரிசு பெற்ற கேரிகேசர் ராப்ரி தேவி. மூன்றாம் பரிசு விஞ்ஞானி அப்துல் கலாம் சித்திரத்துக்கு.

கண்காட்சியை ரசித்துவிட்டு, வெளியே வரும்போது ஒரு கார்ட்டூன் மனதை ரொம்ப உறுத்தியது: சிறுவர்கள், கிருஸ்துமஸ் தாத்தாவிடம், "எங்களுக்கு வேறு எதுவும் வேணாம்; விளையாட ஒரு இடம் ஏற்பாடு செய்து கொடுங்கள்" என்று கேட்கிற கார்ட்டூன்தான்!

— எஸ். சந்திரமௌலி

"அந்த டாக்டருக்குப் பேஷண்டுகளே வரதில்லைன்னு நினைக்கிறேன்..."

"எப்படி சொல்றே?"

"கிளினிக்கிலேயே டீக்கடையும் ஒண்ணு திறந்துட்டார் பாரேன்!"

— வெ. ராஜாராமன்



குதிரை சக்தி

1

ஹேமா ராஜ்

அடுத்த பேஷண்ட் அவளாக இருக்கும் என்று நான் நிஜமாகவே எதிர்பார்க்கவில்லை. உண்மையைச் சொல்லப் போனால், அவள் உள்ளே வந்ததைக் கூட நான் கவனிக்கவில்லை.

கடைசியாக வெளியேறிய பேஷண்டின், கேஸ் ஷீட்டில், சில குறிப்புகளை எழுதிக் கொண்டிருந்தபோது அவள் உள்ளே வந்திருக்க வேண்டும்.

வழக்கமாக ஒவ்வொரு நோயாளிக்கும் இடையில் ஒரு பத்து நிமிடங்களாவது இடைவெளி விடுவது என் வழக்கம். மன சிகிச்சை செய்யும் ஒரு சைக்கியாட்ரிஸ்டுக்கு



இது ஒரு அத்தியாவசியத் தேவை என்று நினைக்கின்றேன். நோயாளியின் மன அழுத்தங்களைப் பகிர்ந்து கொள்ளும் போது, எனக்கும் மன இறுக்கம் ஏற்படுவது உண்டு.

அந்த மன இறுக்கத்தைத் தளர்த்திக் கொள்ள ஒவ்வொரு நோயாளியைப் பார்ப்பதற்கு முன், ஒரு பத்து நிமிடத்தை, லெமன் டீ சாப்பிட்டுக் கொண்டு, காமிக்ஸ் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டு கழிப்பேன்.

அந்த வாய்ப்பை எனக்கு வழங்காமல், உடனே உள்ளே புது நோயாளி வந்ததை, விழி ஓரங்களில் உணர்ந்தவுடன் எனக்கு எரிச்சல் வந்தது. அதுவும், பூந்தொட்டிகளைப் பார்க்கும் பொழுதெல்லாம் உதைக்கத் தோன்றுகிற முந்தைய கம்பல்ஸிவ் டிஸ்ஆர்டர் கேஸை என் மனத்தில் இருந்து கழற்றி விட எனக்குச் சற்று அதிகமாகவே நேரம் தேவைப்பட்டபொழுது, நான் மணியடிக்காமலேயே உள்ளே நுழைந்த புது நோயாளியை நன்றாகப் பார்க்க கோபத்துடனே நிமிர்ந்தேன்...

உடனே அவளை அடையாளம் கண்டுகொண்டேன். என் கல்லூரி நண்பனின் தங்கை அவள்.

அந்த முகத்தைப் பார்த்தவுடனேயே, அப்பொழுது பார்ப்பதற்கும் கடைசியாகப் பார்த்ததற்கும் இருந்த வித்தியாசங்களை என் மனது தேடி அலச ஆரம்பித்தது...

கொஞ்சமாய் அகன்றிருந்த நெற்றியில் கூடியிருந்த சுருக்கங்கள், வளையங்களிலிருந்து சிறிய தோடுகளுக்கு மாறிவிட்ட காதுகள், முன்னையிருந்த கதுப்புகள் குறைந்து சற்று உள்ளே ஒதுங்கி விட்ட கன்னங்கள், அகண்ட தாடை எலும்புகளின் மேலாக, அழுத்தமாய் அமைந்திருந்த உதடுகள்... என்று அவ்வளவாக மாற்றங்கள் தெரியவில்லை...

ஆனால், மிகப் பெரிய வித்தியாசம் தெரிந்தது கண்களில் மட்டும்தான்... முன்னையிருந்தது போல் அவற்றில் 'பளீர்' ஒளி

இல்லை... சற்று சிவந்து, ஒளி குறைந்து, கொஞ்சம் தடுமாற்றத்துடன், கொஞ்சம் பயத்துடன்...

"ஹலோ... முரளீ..." என்ற அவனின் குரல் என் அலசலை நிறுத்தியது.. அவனைப் பூரணமாகப் பார்த்து, "ஹலோ... சசீ..." என்றேன் இணறலாய்.

அவன் மஞ்சள் நிற குடிதார் அணிந்திருந்தான். சராசரிக்கும் சற்று உயரமாக இருந்த அவன் சற்று ஒல்லியாகவே தெரிந்தான்.

"என்ன முரளீ... என்ன அப்படிப் பார்க்கிறே...?"

நான் சற்றே திடுக்கிட்டு நிலைக்கு வந்தேன்.

"சாரி சசி... என்னாலே நம்பவே முடியலே.. உட்காரு..." என்றேன் எதிரிலிருந்த இருக்கையைக் காட்டி...

அவன் அமர்ந்தான். உடனே அவன் கை பேப்பர் வெயிட்டை எடுத்து உருட்டத் தொடங்கியது.



பொதுவாக பதற்றத்தில் இருக்கக்கூடிய நோயாளிகளை இனங்கண்டு கொள்ள, பேப்பர் வெயிட்டை, மேஜையின் மேல் அவர்களுக்கு அருகாமையில் வைத்திருப்பேன். பதற்றத்தில் இருக்கும் நோயாளிகள், அந்த பேப்பர் வெயிட்டை உருட்டத் தொடங்குவது இயல்பே.

நான் அவனைக் கூர்ந்து பார்த்தேன். அவனின் கவனம் பேப்பர் வெயிட்டின் மேலேயே இருந்தது. சற்று இடைவெளி கொடுத்து, "சொல்லு சசீ... எப்படி இருக்கே...?" என்றேன். சற்று நேரம் கழித்து, "ம்...." என்றான் ஒருமையாய்.

"என்ன பிரச்னை சசீ...?"

அவன் என்னை நிமிர்ந்து தீர்க்கமாய்ப் பார்த்தான்.

"முரளீ... உனக்கு பேய், பிசாசு... இதுல எல்லாம் நம்பிக்கை இருக்கா...?" என்றான்.

நான் அதிர்ந்தேன். ஒரு சைக்கியாட்ரிஸ்டிடம் அடிக்கடி இந்த மாதிரி கேள்விகள் கேட்கப்படும் என்றாலும் கூட அவனிடம் இருந்து நான் இதை எதிர்பார்க்கவில்லை.

"என்ன சொல்றே சசீ...?" என்றேன்.

"உனக்கு பேய், பிசாசுல எல்லாம் நம்பிக்கை இருக்கான்னு கேட்டேன்."

"என்னை மாதிரி ஒரு டாக்டர்கிட்ட கேட்டேன்னா, இல்லைன்னுதான் பதில் வரும்."

"ஒரு டாக்டரா உன்கிட்ட கேக்கலை முரளீ... ஒரு நண்பனா கேட்கறேன். தயவு செய்து சீரியஸா பதில் சொல்லு."

அவனைக் கூர்ந்து பார்த்தேன். ஒரு பரிதவிப்பு அவன் முகபாவங்களில் தெரிந்தது.

"சசீ... என்னோட விஞ்ஞானபூர்வமான அறிவை வைத்துப் பார்த்தா பேய், பிசாசுன்னு தனியா எதுவும் கிடையாது. சப்-கான்ஷியஸ்னு சொல்ற நம்முடைய உள்

மனதுதான் பேய், பிசாசுங்கற பிரமையை உண்டாக்கறது..."

அவன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஆனா..." என்று தொடர்ந்தேன். "சில நேரங்கள்ல சில விளக்க முடியாத விஷயங் களும் நடக்கறது உண்டுன்னு நான் ஒத்



துக்கறேன். உதாரணமாக செங்கல்பட்டு பக்கத்துல ஒரு கிராமத்துல இருந்து ஒரு பத்து வயசுப் பொண்ணைக் கூட்டிட்டு வந்தாங்க. அந்தப் பொண்ணைப் பார்த்த வுடனே அது ஸ்கிஜோஃப்ரீனியாங்கற மல்டிபுள் பெர்சனாலிட்டி கேஸ்னு எனக் குத் தெரிஞ்சு போச்சு. அந்தப் பொண்ணை சோதனை பண்ணிப் பார்த்ததுல, அந்தப் பொண்ணுகிட்ட ஏழு விதமான பெர்சனா லிட்டிகள்.. அதாவது ஏழுவிதமான நபர்களை அந்தப் பொண்ணோட மனசு சித்தரிச்சது. அதுல ஒரு பெர்சனாலிட்டி அழுதுகிட்டே ஃபிரெஞ்சு மொழியில் சோகப் பாட்டு பாடற ஒரு கேரக்டர்...

ஒரு தென்னிந்திய கிராமத்துப் பொண்ணுக்கு இலக்கண சுத்தமான ஃப்ரெஞ்ச் எப்படித் தெரிய வந்திருக்கும்னு என்னால நினைச்சே பார்க்க முடியலை. யுனிவர்ஸல் கான்ஷியஸ்னஸ்.. அப்படி இப் படின்னு நாம என்னத்த போட்டு சமாளிச் சாலும்... நவீன மன இயலுக்கு இன்னமும் எட்டாத கேள்விகள் நிறைய இருக்குன்னு நினைக்கிறேன்."

"அந்தப் பொண்ணுக்கு அப்புறம் என்ன ஆச்சு...?"

"மூணு சிட்டிங் மட்டும்தான் அந்தப் பொண்ணை கூட்டி வந்தாங்க... என்னோட மருந்துகளால வழக்கத்துக்கு மாறான குணங்களை ஓரளவு கட்டுப்பாட்டுக் குள்ளதான் வைக்க முடிஞ்சது. முழுமையா குணப்படுத்த முடியலை. ஒருவேளை தொடர்ச்சியா வந்திருந்தாங்கன்னா கேஸை குணப்படுத்தி இருப்பேன்னு நம்பறேன். ஆனா அதையும், அந்த கேஸைப் பொறுத்தவரை என்னால உறுதியா சொல்ல முடியலை..."

"அப்ப பேய், பிசாசு இருக்குன்னு நம்பறியா...?"

"இல்ல... நான் அப்படிச் சொல்லலை. பேய், பிசாசு எல்லாம் நம்மோட உள் மனசோட வெளிப்பாடு... ஆனா... நம் உள் மனசு எப்படி இந்த மாதிரி விஷயங்கள்ல செயல்படுது, எப்படி இந்தத் தோற்றங் களைக் கற்பிக்குது, இதெல்லாம் இலக்கண பூர்வமா கணித பூர்வமா ஒரு கணக்கைப் போடற மாதிரி... நவீன மன இயல் மருந்து வத்தால தீர்க்க முடியலை. சில நேரங்கள்ல வெற்றி கிடைக்குது... பல நேரங்கள்ல தீர் மானமான வெற்றின்னு சொல்ல முடியாது..."

"ரொம்பக் குழப்பற..."

நான் சிரித்தேன். "உண்மை இதுதான் சசி... கேட்கறது நீங்கறதுனால இவ்வளவு விளக்கமா சொன்னேன்..."

அவள் அமைதியாக இருந்தாள்.

"சொல்லு சசி... என்ன பிரச்னை?" என்றேன்.

அவள் என்னைத் தீர்க்கமாகப் பார்த்தாள். "எல்லாத்தையும் ஆரம்பத்துல இருந்து சொல்லணும்னு நினைக்கறேன் முரளீ..."

"சொல்லு சசி. அதுக்கு முன்னாடி... நாம்ப இனி பேசறதை எல்லாம் டேப் எடுத்துக்கலாமா... பின்னாடி உன்னோட கேஸை நிதானமா ஆராய எனக்கு உபயோகமாக இருக்கும்..."

அவள் சற்று யோசித்து விட்டு 'சரி' என்றாள். சில நோயாளிகளின் பேச்சுக்களை அப்படியே டேப் செய்து கொண்டு, பின் னால் நேரம் கிடைக்கும் போது அவற்றை ஆராய முற்படுவது என் வழக்கம். ஆனால் அப்படி டேப் செய்வதற்கு நோயாளிகளின் அனுமதி பெற வேண்டும் என்பது ஒரு எழுதப்படாத விதி...

ஒரு பட்டனை மென்மையாக அழுத்தி னேன். மறைக்கப்பட்டிருந்த ஒலிப்பதிவுக் கருவி இயங்கத் தொடங்கியதை உறுதி செய்து கொண்டேன்.

"சொல்லு சசி..." என்றேன். சற்று நேர அமைதிக்குப் பின் அவள் ஆரம்பித்தாள்.

"நம்முடைய ட்ரிப்ளிகேன் வாழ்க்கை உனக்கு ஞாபகம் இருக்கா முரளி...?"

"இருக்கு சசி..."

"அற்புதமான காலம் அது..."

நான் அமைதியாக இருந்தேன். அவள் கண்கள் அந்தக் கால நினைவுகளில் சற்றே பனித்தன. சற்று நேர தீர்க்கமான அமைதிக்குப் பிறகு அவளே தொடர்ந்தாள்.

"உனக்கு அருணை ஞாபகம் இருக்கா முரளி...?"

"இருக்கு சசி... நல்ல பெர்சனாலிட்டியான இளைஞன்..."

அவளின் பெருமூச்சு எனக்குத் தெளிவாகக் கேட்டது.

"நானும் அருணும் ஒருத்தரை ஒருத்தர் காதலிச்சோம்.. உனக்குத் தெரியும்தானே..."

"தெரியும் சசி..."

"உன்னதமான காதல் அது..."

நான் மௌனமாய் இருந்தேன். அவளே தொடர்ந்தாள்.

"அதனாலதான் அது தோல்வில முடிஞ்சதோ என்னமோ..." என்றவாறு மெல்லியதாய் சிரித்தாள். கனவுலக அமைதியில் அவள் சற்று நேரம் லயிக்க, நான் அவளை,

"மேலே சொல்லு சசி..." என்று தூண்டினேன்.

"எங்க காதலுக்கு எங்க ரெண்டு பேர் வீட்லயும் எதிர்ப்பு இருந்தது. ஆனாலும் நாங்க பொறுமையாய் இருந்தோம். அருணுக்கு சரியானபடி வேலை கிடைக்கலை. அவன் செட்டிலானதுக்கு அப்புறம் நாங்க கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருந்தோம்..."

சற்று நேர அமைதிக்குப் பின் அவள் தொடர்ந்தாள்...


"அப்போ அருணுக்கு துபாய்ல ஒரு நல்ல கம்பெனில இருந்து வேலைக்கு அழைப்பு வந்தது... அவன் ரொம்ப தயங்கினான்.. நான்தான் அவனை வற்புறுத்தி அனுப்பி வச்சேன். அங்க அவன் ஒரு மூணு வருஷம் வேலை செஞ்சா போதும். ஒரு நல்ல அடித்தளம் கிடைச்சிடும்னு நான் நினைச்சேன். என்னோட வறபுறுத்தலால் தான் அருண் துபாய் போனான்."

மீண்டும் சற்று நேர அமைதிக்குப் பின் அவள் தொடர்ந்தாள்.

"அதுக்கு அப்புறம்தான் இங்க பிரச்னைகள் ஆரம்பிச்சது... அப்பா வேலை செஞ்ச கம்பெனி முதலாளி பிரபாகர். நடுத்தர வயசுக்காரர். கம்பெனியை டெவலப் பண்ணணுங்கறதுக்காகக் கல்யாணம் பண்ணிக்காமலே இருந்தார். அவர் எங்க வீட்டுக்கு அடிக்கடி வருவார்... அப்ப அவர் என் மேல ஆசையை வளர்த்துக்கிட்டு இருந்திருக்காரு...."

சற்று நேர மௌனம் பிறந்தது...

"அப்பா அவர் கம்பெனில காஷியரா இருந்தாரு.. ஒருநாள் அப்பா ஒரு பத்து லட்ச ரூபாய் கம்பெனி பணத்தை பேங்க்ல கட்ட எடுத்திட்டுப் போனாரு. பேங்க்ல நுழையும் போது அவருக்கு திடீர்னு முதல் முறையா வலிப்பு வந்திருக்கு... பணமிருந்த சூட்கேஸோட பேங்க் வாசல்லயே விழுந்தவரு கொஞ்ச நேரம் மயக்கமாயிட்டாரு... நினைவு வந்ததுக்கப்புறம் பார்த்தா... சூட்கேஸைக்



காப்னாட...

நான் மௌனமாய் கேட்டுக் கொண்டிருந்தேன்...

"அப்பாவோட முதலாளி பிரபாகர் ரொம்ப கோபமாயிட்டாரு. போலீஸ்ல கம்ப்ளெயின்ட் கொடுக்கப் போறதா குதிச்சாரு. அப்பா ரொம்ப நேரம் கெஞ்சினதுக்கு அப்புறம் அவர் கொஞ்சம் சமாதானம் ஆனாரு. பத்து லட்ச ரூபாய் நஷ்டத்தை ஏத்துக்க அவர் தயார்னு சொன்னாரு. ஆனா அதுக்கு ஒரு நிபந்தனையா என்னை மனைவியா கேட்டாரு..."

அவள் சற்று நேரம் கண்களை மூடிக் கொண்டிருந்தாள். அந்தக் கண்கள் திறந்த போது அதில் கோத்துக் கொண்டிருந்த கண்ணீரை என்னால் தெளிவாகக் காண முடிந்தது.

"பத்து லட்ச ரூபாயில் ஒரு சின்ன



பகுதியைக் கூட, திருப்பித் தர முடியாத நிலையிலிருந்த என்னோட அப்பா ஜெயிலுக்குப் போகத் தயாரா இருந்தாரு. அருணோட இருந்த என்னோட காதலை எதிர்த்தபோது கூட, எனக்கு விருப்பமில்லாத ஒரு இடத்துல என்னைக் கல்யாணம் செஞ்சு வைக்க அவர் சம்மதிக்கலை... ஒருவேளை அவர் என்கிட்ட, தன்னைக் காப்பாத்திக்கறதுக்காக பிரபாகரை கல்யாணம் செஞ்சிக்கோன்னு சொல்லியிருந்தார்னா, நான் கண்டிப்பா முடியாதுன்னு சொல்லியிருப்பேன். ஆனா, அவர் ஜெயிலுக்குப் போறதா முடிவு செஞ்சதும், என்னால சும்மா இருக்க முடியலை... ஏதோ ஒரு ஆழமான உணர்வு உந்த, அருணுக்கு விவரமா ஒரு லெட்டரைப் போட்டுட்டு, பிரபாகரை கல்யாணம் பண்ணிக்கிட்டேன்..."

குரல் கம்ம அவள் முடித்த போது, அவளிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது...

"சினிமா கதையாட்டம் இருக்கு..." என்றேன்.

மெலிதாகச் சிரித்துவிட்டு, "எனக்கும், இப்ப நினைச்சாக் கூட அப்படித்தான் இருக்கு... ஆனா, நீ எப்ப வேணா தியேட்டரை விட்டு வெளில போயிடலாம். என்னாலதான் முடியாது..." என்றாள்.

"அப்புறம் என்ன ஆச்சு... மேலே சொல்லேன்..." என்றேன் ஆர்வமாய்.

சிறிய இடைவெளிக்குப் பின் அவள் தொடர்ந்தாள்...

"விருப்பமில்லாத கல்யாணம். வயசு வித்தியாசம் ரொம்ப அதிகம். ஏதோ இயந்திரத்தனமா வாழ்ந்தேன். அருணைப் பத்தின நினைவுகளை என்னால துளி கூட அழிக்க முடியலை. ஒரு இலக்குமே இல்லாத அர்த்தமற்ற வாழ்க்கையை வாழ்ந்தேன். என் கணவர் பிரபாகர் ஒரு பயங்கரமான குடிவெறியர்ங்கறது கூட என்னைப் பாதிக்கலை..."

"பிரபாகர் உன்கிட்ட எப்படி நடந்துக்கிட்டாரு...?" என்றேன்.

"அவர் என்கிட்ட பிரியமாத்தான் பழக முயற்சி செஞ்சாரு. ஆனா நான்தான் இடங் கொடுக்கலை... கிட்டத்தட்ட எப்பவுமே போதைல இருக்கற அவர்கிட்ட என மனம் திறந்து பேசக் கூட நான் முற்பட்டதில்லை..."

மீண்டும் சற்று நேர அமைதி...

"அவர் என்னோட உதாசினத்துக்கான காரணத்தைத் தெரிஞ்சுக்க ஆசைப்பட்டாரு... வெறும் விருப்பமில்லாத கல்யாணத்துக்கு மேல வேற ஏதோ இருக்கணும்னு சந்தேகப்பட்டாரு. நான் வேற யாரையாவது விரும்பினேனான்னு கூட என்கிட்டயே கேட்டாரு. நான் பதில் சொல்ல மறுத்துட்டேன். வெறும் இல்லற சுகத்தை மட்டும் அவர் என்கிட்ட எதிர்பார்க்கலேன்னு எனக்குத் தெரிஞ்சது.. ஒரு நல்ல மனைவியாய் நான் இருக்கணும்னு அவர் விரும்பறதும் எனக்குத் தெரிஞ்சது. ஆனா, ஆனா என்னால கொஞ்சம் கூட மாற முடியலை..."


மீண்டும் அமைதி...

"அப்பத்தான் ஒருநாள் எனக்கு ஒரு பார்சல் வந்தது. நல்லவேளையாய் அவர் அன்னிக்கு வீட்ல இல்லை. பார்சல் துபாய்ல இருந்து வந்திருக்குன்னு தெரிஞ்சதும் என் மனசுல ஒரு பரபரப்பு... நான் எதிர்பார்த்த படி அருண்தான் எனக்கு அந்தப் பார்சலை அனுப்பியிருந்தாரு... ஒரு அழகான குதிரை பொம்மை..."

"குதிரை பொம்மையா...." என்றேன் ஆச்சரியமாய்.

"ஆமாம், குதிரை பொம்மைதான்.... அதை எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது. ஆனா அதுதான் என் வாழ்க்கையையே உருக்குலைக்கிற ராட்சஸனா மாறும்னு அப்ப தெரியாமப் போச்சு!"

(தொடரும்)





1998 ஜூலை 5
வெகுதான்ய ஆனி 21
மலர் : 56
இதழ் : 49

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



மேடம் 356 – மெகாபோன் குரல்!


ஆட்சியில் அமர்ந்து நூறு நாட்கள் வரையில் ஓர் அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சனம் செய்யக் கூடாது என்பது மரபு.

ஆனால், பி.ஜே.பி ஆட்சியின் நூறு நாட்கள் நிறையும் தருணத்தில் அத்வானியே வருத்தப்படும்படியாகத்தான் இருக்கிறது நிலைமை. "பட்ஜெட் குளறுபடிகள் எல்லாம் தவறுதான். இந்த அரசு இன்னும் நிறைய தூரம் போக வேண்டியிருக்கிறது..." என்று பேட்டி அளித்திருக்கிறார் அத்வானி.

ஆட்சியின் அவலங்களை அத்வானி அடக்கி வாசிக்கிறார்; அதில் ஆச்சர்யமில்லை. உண்மை என்னவெனில், ஸ்திரமான ஆட்சி, ஆற்றல் மிக்க பிரதமர் என்ற தேர்தல் வாசகம் வெறும் ஏமாற்று வேலை என்று சராசரி இந்தியன் வெறுத்துப் போகிற அளவுக்கு நிலைமை தாழ்ந்திருக்கிறது.

நாட்டின் பொருளாதாரம் இதுநாள் வரை இத்தனை மோசமான நிலையைக் கண்டிருக்கிறதா என்பது சந்தேகம்தான். விலைவாசி உயர்வைக் கட்டுப்பாட்டில் வைக்க முந்தைய அரசாங்கங்கள் எடுத்துக் கொண்ட பகீரதப் பிரயத்தனங்களையும் சேர்த்து நாசமடித்து விட்டது பி.ஜே.பியின் நூறு நாள் ஆட்சி.

நிதிநிலை அறிக்கையில் தொலை நோக்குப் பார்வை இல்லாதது மட்டுமல்ல; அலட்சியம், கவனக்குறைவினால் பெட்ரோல் விலை நிர்ணயத்திலும் யூரியா விலை உயர்விலும் குளறுபடிகள் நடந்துள்ளன. பொதுமக்கள் பணம் ஏகத்துக்கு விரயமாகியிருக்கிறது.




தனது 'இமேஜை' வளர்க்க உதவும் என தப்புக் கணக்குப் போட்டு அரசு நடத்திய போக்ரான் பரிசோதனைகள் உலக நாடுகளின் கடுமையான கண்டனங்களைத்தான் எழச் செய்துள்ளன. விஷயத்தின் தீவிரம் புரியாமல், பட்டாசு வெடித்து இந்தியாவின் அணு ஆயுதத் தன்நிறைவைக் கொண்டாடிய சாமானிய மக்கள், இன்றைக்கு அயல்நாடுகளின் பொருளாதாரத் தடைகள் காரணமாக ரூபாயின் மதிப்புக் குறைந்து போக, விலைவாசி உயர்வைத் தாள முடியாமல் திண்டாடுகிறார்கள்.

மிதவாதியான பிரதமர் வாஜ்பேயின் கைகளைக் கட்டிப் போட்டிருக்கிறது ஆர்.எஸ்.எஸ். போக்ரான் பரிசோதனைகளைப் பெரிய வெற்றியாகத் தம்பட்டமடித்தும், அங்கு சக்தி ஆலயம் கட்டப் போவதாக அறிவித்தும், அயோத்தியில் ராமர் கோயில் அமைக்க மேள தாளத்துடன் ஏற்பாடு செய்தும் மதவாத சக்திகள் தலைவிரித்தாடுகின்றன. இந்தப் பேச்சுகளையும் நடவடிக்கைகளையும் கண்டித்துப் பிரதமரால் மூச்சுக்கூட விடமுடியவில்லை. பி.ஜே.பி கட்சிக்காரர்கள் பலர், 'நீதிமன்றத் தீர்ப்பு எவ்வாறு அமைந்தாலும் ராமர் கோயில் பணிகள் தொடரும்' போன்ற அபாயகரமான அறிக்கைகளைப் பொறுப்பின்றி விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல், 'நூறு நாட்களாகியும் ஆட்சி எதையுமே சாதிக்கவில்லை; எனவே அதை இனி உன்னிப்பாக கவனித்து வருவோம்' என்று ஆர்.எஸ்.எஸ்., அரசை எச்சரிக்கிறது! ஆர்.எஸ்.எஸ்ஸின் ரிமோட் கன்ட்ரோல் பிடிகள் மேலும் இறுகும் என்பதே இந்த எச்சரிக்கைக்கு அர்த்தம்!

இத்தனைக்கும் மத்தியில் மேடம் 356இன் மெகாபோன் குரல் நாட்டையே அதிரச் செய்து கொண்டிருக்கிறது! அவருடைய லேட்டஸ்ட் அறிக்கை அத்வானிக்கு வந்துள்ள **selective amnesia** (குறிப்பிட்ட சில விஷயங்களை மட்டும் மறந்து போகும் ஒருவித மனநோய் நிலை) குறித்துப் பேசுகிறது!

ஜெயலலிதாவின் அம்னீஷியாவோ **total and complete** - தாம் செய்த எந்தத் தவறும் ஊழலும் அவருக்கு நினைவில்லை. மக்களும் அவற்றை மறந்து விடுவார்கள் எனப் பகல் கனவு காண்கிறார்.



எனினும், தி.மு.க ஆட்சிக் கலைப்பு என்ற நிபந்தனையின்பேரில்தான் தாம் பி.ஜே.பி.யுடன் கூட்டணி வைத்துக் கொண்டதாக அவர் கூறியுள்ளதற்கு, பி.ஜே.பி தரப்பிலிருந்து திட்டவட்டமான மறுப்பு வராதது வருந்தத்தக்க நிலை.

மாநில அளவில் பேச்சுவார்த்தை நடந்தபோது தாம் அப்படியொரு நிபந்தனைக்கு அ.தி.மு.க. தலைவியிடம் ஒப்புதல் தெரிவிக்கவில்லை என்கிறார் ஜனா. கிருஷ்ணமூர்த்தி. 'ஆனால் மேலிடம் அவ்வாறு ஒப்புக் கொண்டதா தெரியாது' என்கிறார்.

மேலிடத்துத் தலைவர்களோ, 'மாநில அளவில் அப்படி ஏதாவது பேச்சு இருந்திருக்கலாம்' என்கிறார்கள்! பி.ஜே.பி தரப்பில் யாருமே வலுவாக மறுக்காத நிலையில், ஜெயலலிதா தமது தேர்தல் கூட்டப் பேச்சுகளையும் அ.தி.மு.க மாநாட்டு உரையையும் நினைவூட்டி, அத் தருணங்களில் அத்வானியும் இதர தலைவர்களும் உடனிருந்ததைச் சுட்டிக் காட்டுகிறார்!

தேர்தல் சௌகரியம் கருதி, ஜெயலலிதாவின் அநியாய நிபந்தனையை மறுக்காமல் பி.ஜே.பி மௌனமாக இருந்தது இப்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

இந்த ஜனநாயக விரோதப் போக்கு மன்னிக்க முடியாதது. ஜெயலலிதாவிடம் இதைத் தவிர வேறெதையும் எதிர்பார்க்க முடியாது என்பது நமக்குத் தெரிந்ததே. ஆனால், பி.ஜே.பி.யிடம் நாம் எதிர்பார்த்தது நிச்சயமாக இத்தகைய முதுகெலும்பற்ற சமரசங்கள் அல்ல.

பொருளாதாரம், அயலுறவுக் கொள்கை, உள்நாட்டுப் பாதுகாப்பு, நிர்வாகம் என்று பக்கத்துக்குப் பக்கம் ஏமாற்றம் அளித்து வரும் பி.ஜே.பி. ஆட்சியின் செயல்பாட்டுடன் இந்தத் தார்மிகத் தோல்வியும் சேர்ந்து கொண்டிருக்கிறது.

இத்தனை கேவலங்களை, தலை குனிவுகளைச் சந்தித்த பிறகும் ஆட்சியில் ஒட்டிக் கொண்டிருப்பதைக் காட்டிலும் வாஜ்பேயி, குடியரசுத் தலைவரிடம் ராஜினாமாவைச் சமர்ப்பிப்பதே மேல்... அடுத்தக் கட்ட நடவடிக்கையை யோசித்து முடிவெடுக்கும் பொறுப்பு கே.ஆர். நாராயணனுடையதாக இருக்கட்டும்.

ஃபெப்ஸி - படைப்பாளிகள் இணைப்பு :

தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் பிரச்னை, நட்சத்திரங்களின் அபரிமிதமான சம்பளம், சினிமா தியேட்டர்களில் டிக்கெட் கட்டண உயர்வு, திருட்டு வீடியோ... இவையனைத்தையும் தூக்கிச் சாப்பிட்டு ஏப்பம் விடுகிறாற்போல விஸ்வரூபம் எடுத்த சாடிலைட் சானல்களின் ஆதிக்கம் இவையெல்லாம் நெருக்கிய நேரத்தில் சினி உலகில் ஒரு போக்ரான்!

ஃபெப்ஸி - படைப்பாளிகள் பிரச்னை வெடித்தது. அதன் உக்ரத்தில் மற்ற பிரச்னைகள் சைடு வாங்கிக் கொள்ள, ஈகோ மோதல்களாகி, அதனையடுத்து நிஜமான சண்டைக் காட்சிகள் அரங்கேறின.

அரசாங்கம் தலையிட்டு, இரு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு, "இரு தரப்பினரும் தனித் தனியே செயல்பட்டுக் கொள்ளலாம்; ஒருவர் பணியில் அடுத்தவர் தலையிடக் கூடாது" என்று சமாதானம் செய்து வைத்தாலும், பிரச்னை தீர்ந்த பாடில்லை.

வேலையில்லாத் திண்டாட்டம் ஃபெப்ஸி தரப்பினருக்கு என்றால், திறமையான தொழிலாளர்கள், டெக்னீஷியன்கள் இல்லாத திண்டாட்டம் படைப்பாளிகள் தரப்பினருக்கு ஆக, இரண்டு தரப்பினரும், நஷ்டத்தை உணர்ந்து கொள்ள, மறுபடி பேச்சு வார்த்தை.

இந்தக் கட்டத்தில், ஃபெப்ஸி தரப்பில் விஜயன் விலகி, தாற்காலிக நிர்வாகக் குழு உருவானது.

எடிட்டர் லெனின் போன்ற, உணர்ச்சி வசப்படாமல் நல்லது, கெட்டதை சிந்தித்து, தொழிலாளர் நலம் பாதுகாக்கும் கொள்கை கொண்டவர்கள், பிரச்னையைப் பேசித் தீர்க்க முன் வந்தனர். படைப்பாளிகள் தரப்பிலும் பாலசந்தர், பாரதிராஜா போன்ற பெருந்தலைவர்கள் பின்னணியில் இருந்து கொண்டு அடுத்த தலைமுறையினரான ஆர்.கே. செல்வமணி, வி. சேகர் போன்றவர்களை அனுப்பி வைத்தனர்.

(மு)வரட்டுப் பிடிவாதம் என்கிற நிலையை விட்டு விட்டு, சினிமா உலகம்

• லெனின்

• பாரதிராஜா



அதை நம்பியுள்ள அனைவரது நலன் கருதி, விட்டுக் கொடுக்கும் மனப்போக்குடன் பேச்சுவார்த்தை நடந்தது. ஏறத்தாழ அனைத்து பாயிண்ட்களும் பேசி முடிவெடுக்கப்பட்டு விட்ட சூழ்நிலையில், இரு அமைப்புகளும் இப்போது இணைந்து விட்டன.

வெற்றி யாருக்கு? தோல்வி யாருக்கு என்று பின்னாளில் விவாதம் செய்ய வழி இல்லாதபடி காம்ப்ரமைஸ் ஒர்க் அவுட்



• கே.பி

அலை எப்போ ஓயும்?

ஆகியுள்ளது. தமிழ் படைப்பாளிகள் அமைப்பு மற்ற மாநிலங்களில் உள்ள அமைப்புகள் போல சுதந்தர அமைப்பாக அங்கீகரிக்கப்படும். ஆனால், அவர்கள் ஃபெப்ஸியுடன் தங்களை இணைத்துக் கொள்ளுவார்கள் போன்ற விஷயங்கள் தவிர, வேறு சில முக்கிய முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளன.

● எத்தனை சீரியஸான பிரச்னை என்றாலும், சம்பந்தப்பட்ட யூனியன்கள் மூலமாய்ப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டுமே தவிர, ஷூட்டிங் நடைபெறும் இடத்துக்குப் போய் கலாட்டா செய்வது, ஷூட்டிங்கை நிறுத்துவது போன்ற அத்துமீறல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

● ஒரு தரப்பினரை எதிர்த்து, இன்னொரு தரப்பினர் வேலை நிறுத்தம் செய்வது கூடாது.

● திரையுலகிற்கு அரசு மூலமோ அல்லது வேறு எதன் காரணமாகவோ ஏதாவது நெருக்கடி என்றால், அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைந்து, ஸ்டிரைக் செய்யத் தயங்கக் கூடாது. இவை தவிர இணைப்பு என்பது உடனடித் தேவை. வேறு என்ன பிரச்னை என்றாலும், இரு தரப்பினரும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

இதன்படி, படைப்பாளிகள் தரப்பு அத்தனை சங்கங்களிலும் உறுப்பினராக உள்ளவர்களுக்கு, ஃபெப்ஸியின் தாற்காலிக உறுப்பினர் அட்டை வழங்கவும் முடிவாகியுள்ளது.

மேலோட்டமாய் பிரச்னை முடிந்து விட்டது போலத் தோன்றினாலும், உள்ளூர மனத்தில் ஏற்பட்டுவிட்ட வடு ஆறுவது அவ்வளவு ஈசியில்லை என்பதை இரு தரப்பினருமே ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

மேலும் சில விசித்திரமான பிரச்னைகளும் எதிர்காலத்தில் வரக்கூடும் என்று சந்தேகிக்கிறார்கள். உதாரணமாக, ஃபெப்ஸியின் அங்கமான டான்ஸர்ஸ் அசோசியேஷனில், மெம்பராய்ச் சேர வேண்டுமென்றால், ஐம்பதாயிரம் ரூபாய் நுழைவுக் கட்டணமாகச் செலுத்த வேண்டும்.

ஆனால் படைப்பாளிகள் சங்கத்தில், நடனக் கலைஞர்கள் உறுப்பினராக ஐந்நூறு ரூபாய் கட்டினால் போதும்.

அதேபோல, ஃபெப்ஸியின் டான்ஸர் அசோசியேஷனில், வருடத்துக்கு ஐம்பது புது உறுப்பினர் களை மட்டுமே - அது கூடத் திறமையை சோதித்துப் பார்த்துத் தேர்ந்தெடுத்து - சேர்த்துக் கொள்ளுவது மரபு.

"இப்படி இருக்கும்போது, ஐந்நூறு ரூபாய் கட்டினவர்களை, ஐம்பதாயிரம் கட்டி உறுப்பினர்களாய் இருப்பவர்களுக்கு இணையாய் ஆக்கினால் பிரச்னை வராமல் இருக்குமா?" என்கிறார் ஒரு ஃபெப்ஸி தரப்பு டான்ஸ் மாஸ்டர்.

தமிழ் சினிமாவுக்கு அலை ஓய்ந்து, எப்போது சமுத்திர ஸ்நானம் வாய்க்கும் என்று சிண்டைப் பிய்த்துக் கொள்ளாத குறைதான். ◎

— மானஸா

பத்து மணிக்குத் தாலி கட்டியாகி விட்டது. எங்கு போக என்று தெரியவில்லை. லாட்ஜுக்கு வந்து ரூமெடுத்தாகி விட்டது. மகி தாலியை ஏனோ குழந்தையின் தவிப்போடு பிடித்துக் கொண்டிருந்தாள்.

"தாலி ஒரு அடையாளம் தான் தேவா. அது கட்டிட்டிருக்கிறவங்கள்லாம் உண்மையாயிருக்காங்கன்னோ, தாலி கட்டாம இருக்கிறவங்க மோசமானவங்கன்னோ சொல்லிற முடியுமா தேவா?" என்று விவாதித்திருக்கிறாள். இப்போது விவாதங்களுக்கெல்லாம் இடமில்லை. தாலி தேவை – லாட்ஜுக்காவது.

"தேவா..."

"என்ன மகி?"

"பசிக்குது."

"சாப்டலே நீ?"

"ம்ஹூம்." மகேஸ்வரிக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. இந்நேரம் வீட்டில் களேபரம் ஆகியிருக்கும். இன்னும் கொஞ்ச நேரத்தில் போலீஸ் கேஸாகும். தேவராஜ் வீட்டுக்குப் போலீஸ் போகும். ஆள் போகும். பேச்சு வார்த்தை ஆரம்பிக்கும். தடிக்கும். நீடிக்கும். கை நீளும். நாக்குகள் சுழலும். சுழலட்டும். ரிஜிஸ்தர் பண்ணி விட்டால் பயமில்லை. அதுவரை லாட்ஜிலேயே இருக்க வேண்டும். முடிய வேண்டும்.



படுத்திருந்த தேவராஜ் எழுந்து சட்டையை மாட்டிக் கொண்டான். அழாதே என்று சொல்லி விட்டு அசையாது நின்றான். அவனைக் கட்டிக் கொள்ள வேண்டும் போலிருந்தது இறுக்கமாக. மூச்சே வெளிவராத இறுக்கத்தோடு.

அக்னிக் குஞ்சு

"நீ சாப்டியா தேவா?"

"ம். அம்மா சாப்டுட்டு வெளியே போடா தேவான்னா."

"ம்ம்."

"உள்ள தாழ் போட்டுக்க."

"சரி."

தலைமுடியை கொண்டைவிட்டுக் கொண்டாள். எந்தவிதமான அலங்காரமுமில்லை. கல்யாணம் என்கிற நிகழ்வு நடந்ததற்குத் தாலியைத் தவிர வேறு அடையாளங்களில்லை. மண்டபத்துள் நுழைந்ததும் வீசும் பூ வாசம், சந்தன மணம், ஜரிகை சலசலக்க நகை பூசியப் பெண்கள், அடுப்பறைப் புகை, சாப்பாட்டுப் பந்தி, சின்ன சச்சரவுகள்... எதுவுமின்றி நிகழ்ந்து விட்டது. மகேஸ்வரி கதவைப் பூட்டிக் கொண்டு முகத்தை அழுந்தத் துடைத்தாள். ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தபோது தேவராஜ் தெருவில் இறங்கி ஒரு புள்ளியைப் போல ஊர்ந்து கொண்டிருந்தான். அநேகமாக பதினோரு மணி இருக்கலாம். வேலைக்குப்



மென்றால், வரதட்சணையை அடித்தடித்து வாங்கினாலும், அவன் நல்ல புருஷன்தான். மகேஸ்வரிக்கு தொண்டையிலிருந்து வயிறு வரை ஒரு நெருப்புக் கம்பி பசியாய் உழன்றது. தேவா வருகிறானா என்று பார்த்தாள். இல்லை.

தெருவே ஒரு நிதானத்தோடு செயல்பட்டுக் கொண்டிருந்தது. நெல் மூட்டைகளும் மளிகைச் சாமான்களும் வண்டியிலிருந்து மளிகைக் கடையொன்றில் இறங்கிக் கொண்டிருந்தது. மகி வீட்டுக் கூடத்தில் கூட இப்படித்தான் நெல் மூட்டைகளிருக்கும். நெல் அவியும் வாடையும் சதா ஒரு மண் வாசனையைப் போலக் கவிந்து கொண்டேயிருக்கும்.

அப்பா பொருமிக் கொண்டிருப்பார். வினோக்கா அழுது கொண்டிருக்கலாம் இல்லை ஒன்றுமே பேசாதுகூட இருக்கலாம். தேவராஜ் வீட்டுக்கு அண்ணன் போயிருக்கலாம். போயிருப்பான். அவர்களை நோக்கிப் பாய்வான். அவர்கள் பாய்வார்கள். அன்பு அழிந்து போகும். தேவராஜும் திடமாயிருக்க வேண்டும். என்ன நினைவு இது என்று தன்னையே மகி உலுப்பிக் கொண்டாள். நேரமானதால் கலங்கினோமோ என்று தோன்றிற்று.

மகேஸ்வரி திரும்பவும் தெருவை எட்டிப் பார்த்தாள். தேவராஜ் தென்படவில்லை. போய் அரை மணி நேரம் தாண்டியிருக்கும். ஹோட்டல் தூர இருக்குமோ என்னவோ. மகேஸ்வரிக்கு வியர்த்தது. ஃபேனைப் போட்டு விட்டு தண்ணீர்ச் செம்பிலிருந்து நீர் குடித்தாள். அது பசி நரம்புகளைத் தட்டி விட்டு உள்ளே சென்று நுரை விட்டு பஸ்பமாயிற்று. செம்பைக் கீழே வைக்கும் போது தாலி முன்னும் பின்னும் ஆடிற்று.

தமயந்தி

போகிற கூட்டம் குறைந்திருந்தது. மேலிருந்து பார்க்கையில் ஓர் அழகான நதியைப் போல தெரு கிடந்தது. ஆட்கள் நகர நகர, நதியில் அலையடித்தது.

தெரு ஓரமாக செருப்புத் தொழிலாளி உட்கார்ந்திருந்தான். அவனிடம் கால் கோணிய ஒருவன் செருப்புக்கு அளவு கொடுத்துக் கொண்டிருந்தான். அவனது வலது பாதம் இடது கால் பாதத்தை நோக்கி இருந்தது. அதற்குக் கடைகளில் செருப்பு கிடைத்திருக்காது. வெகு இயல்பாக, அவனது வசதியை அவன் செருப்பு தைப்பவனிடம் சொல்லிக் கொண்டிருந்தான். கைகளை ஆட்டி ஆட்டி தன்னைத் தெளிவுபடுத்திக் கொண்டிருந்தான். புரிதல் சிறந்த விஷயம் அல்லவா? ஆனால் புரிந்து கொள்ள மறுக்கிறவர்களை என்ன செய்ய இயலும்?

அப்பா புரிந்து கொள்ளவில்லை. அண்ணனும்தான். வினோதினி அக்கா கூட முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வான். காதல் என்ன கொலைக் குற்றமா? உள்ளே தகிக்கும் அக்னியல்லவா அது? வினோக்காவின் புருஷன் மாதிரி பார்த்து வைத்துக் கல்யாண



"நான் சொல்லலை? வாத்தியாருக்கு பசி மூடு வந்திடுச்சின்னு!"

— ஜி. பாபு

தேவா என்று சத்தமாக முணுமுணுத்தபடி அதை கைக்குள் இறுக்கிக் கொண்டாள். ஒருவேளை போலீஸாவது வேறு யாராவது பார்த்திருப்பார்களோ? தேவராஜை அப்படியெனில் அடித்துக் கூட்டிப் போயிருப்பார்கள். அப்படியெல்லாம் இருக்கக் கூடாது. மகேஸ்வரி அவளையே உலுப்பிக் கொண்டாள்.

மீண்டும் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். தெரு ஒரு மிருகத்தின் கொடூர வாயைப் போல மனிதர்களை விழுங்கிக் கொண்டிருந்தது. அதில் தேவராஜ் இல்லை. ஒரு நிமிடம் உயிர் லேசாக ஆடிற்று. நிலைத் தடுமாறியது. தேவராஜின் அப்பா வந்திருப்பாரோ? வா தேவா என்றதும் தேவாவும் போயிருப்பானோ? இவளுக்குள் ஊசலாட்டம் ஆரம்பித்தது. மனத்தில் பய வேர்கள்.

அப்படி இருக்காது மகேஸ்வரி. சரி. இருக்காது. ஆனால் இருந்தால்? திரும்பி வீட்டுக்கா போக? என்னவென்று சொல்ல? அவமானம் மரங்கொத்திப் பறவையாய் உயிர்க் கொத்திப் போயிற்று. அப்பா தோலுரித்து விடுவார். வாழ்க்கை ஒரு கேள்விக்குறியைப் போல மட்டுமே ஆகும். விடையில்லா குறிகள் போல. வெறும் அடையாளமாய். ''இவதான் ஓடிப் போயிட்டுத் திரும்பி வந்தவ. அந்தப் பையன் ஓடிட்டானாம்'' என்று முதுகுப் பக்கம் கிசுகிசுத்த குரல்களைக் கேட்கலாம்.

"என்ன ஆனானாம்?"

"வேற கல்யாணம் கட்டி வச்சிட்டாங்களாம்."

''பொட்டச்சிக்கு இத்தனை அவசரம் கூடாதுப்பா'' முகத்தை கோணிக் கொள்வார்கள்.

மகேஸ்வரிக்கு லேசாக சந்தேகம் பொறி தட்ட ஆரம்பித்தது. போக பத்து நிமிடம். பார்சல் கட்ட கால் மணி நேரம். அதுவே ஜாஸ்திதான். வர பத்து நிமிடம். ஆக முப்பத்தைந்து நிமிடம். இப்போது ஒரு மணி நேரத்துக்கும் மேலாகி விட்டது. ஏதோ ஆகி விட்டது. தேவா வர மாட்டான். மாட்டியிருந்தால் 'மகி லாட்ஜிலருக்கா' என்று சொல்லியிருப்பான். இதற்குள் லாட்ஜுக்கு ஆள் வந்திருக்கும். மகேஸ்வரி திரும்பவும் தண்ணீரெடுத்துக் குடித்தாள். லாட்ஜை விட்டுப் போவதென்றாலும் பணமில்லை. அடுத்து என்ன என்று கூட தேவாவிடம் பேசவில்லை. சூட்கேஸைத் திறந்தாள். இரண்டு செட் பாண்ட் ஷர்ட் இருந்தது. ஓரமாய் ஒரு ஐந்து ரூபாய் நோட்டு. மகேஸ்வரி அழுகை பீறிட சூட்கேஸை மூடினாள். அப்பாவுக்கு ஃபோன் செய்யலாமா என்று தோன்றிற்று. தேவா, ஏன் இப்படிச் செய்தாய்? ஏன்?

லாட்ஜ் பையன் வந்தால் வீட்டு ஃபோன் நம்பரைக் கொடுத்து வரச் சொல்ல வேண்டும். வேறெங்கு போக? தற்கொலை செய்து கொள்ளலாம். அவமானத்தை விட மரணம் கௌரவமானது.

மகேஸ்வரி ஸ்தம்பித்து உட்கார்ந்தாள். மனிதர்கள் தெருவில் குறைந்து போனார்கள். வற்றிய நதி போல. கதவு தட்டப்பட்டது. லாட்ஜ் பையனாயிருக்கும். மகி அவசரமாகத் தாளெடுத்து ஃபோன் நம்பர் எழுதினாள். கதவைத் திறந்தாள்.

"சேட்டு கடைல மோதிரத்தை அடகு வைக்கப் போனேன் மகி. செலவுக்குச காசில்லை. நேரமாயிட்டுது. ரொம்பப் பசியா. கண்ணெல்லாம் கலங்கிருச்சு? என்றபடி தேவா பொட்டலங்களைப் பிரித்து இட்லி, சட்னியை நீட்டினான்.

பசி மறந்து, ராட்சஸத்தனமாக அவனை இறுக்கிக் கொள்ளும் வேகம் வந்தது அவளுக்கு. ●



அல்சரா ! மூட்டு வலியா !
இனி கவலையே வேண்டாம்!
தெய்வீக மூலிகை மருத்துவம்



அல்சர் நோயாளிகள் அவ்வப்போது ஏதேனும் சாப்பிட்டுக் கொண்டே இருக்க வேண்டும். வயிற்றுப் பகுதியினை காலியாக வைத்திருந்தால் எரிச்சல் உண்டாகும் என்னும் கருத்து முற்றிலும் தவறானதாகும். குடல் பகுதிகளுக்கு போதிய ஓய்வினை அளிப்பதன் மூலமும் , கசப்பு சுவை நிறைந்த மூலிகைகளை உண்பதன் மூலமுமே, குடல் பாகத்தினில் ஏற்பட்டுள்ள புண்களை ஆற்றுதல் முடியும். புண்களினால் எரிச்சல் இருப்பின் அவ்வப்போது தண்ணீர் அருந்தலாம். ஆபரேஷன் செய்ய வேண்டும் என்ற நிலையிலுள்ள அல்சர் நோயாளிகளும் தெய்வீக மூலிகைகள் மூலம் குணம் பெறலாம். நடக்கவும், குனியவும், உட்காரவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் தீராத மூட்டுவலி உடையவர்களும் முறையான உணவு கட்டுப்பாட்டுடன் தெய்வீக மூலிகைகளை தேவைக்கேற்ப பயன்படுத்தி உண்பதன் மூலம் நாட்பட்ட மூட்டு வலியிலிருந்து நிவாரணம் பெறலாம்.

இரசாயனப் பொருட்கள் கலக்காத உணவும், மருந்துமே, அல்சர் நோய்க்கான முதலுதவி, மூட்டு வலிக்கு காரணமாக விளங்கும் பசை, சுரப்பது குறைவதற்கு காரணமே இரத்தத்தில் இரசாயனப் பொருட்களின் ஆதிக்கமே. வேப்பிலை, அத்தி, துளசி, வில்வம், அருகு போன்ற தெய்வீக மூலிகைகளாலும், இயற்கை உணவுகளாலும் மட்டுமே முழுமையாக நீக்க முடியும். இது பற்றிய விரிவான ஆலோசனையை நேரிலும், கடித மூலமும் பெற முகவரிகள்.

50



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, S/o.Dr.C.K. மாணிக்கவாசகம்

P.B. No: 30, No: 3, திருநாத முதலி நகர், காலேஜ் எதிரில், திருப்பத்தூர் (N.A.A.) 635 601 ✆ : 04179-20469, 22769.

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, பிரின்ஸ் மேனர் பக்கத்தில் கெல்லீஸ், சென்னை-10.

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1 மாலை 6 to 8

✆ : 6424285, 6427638

Singapore Enquiry : Mrs. Renuka, Blk 101, #04, -176, Jurong East Street-13, Singapore - 600 101. ✆ : 0065 - 5621218

1998 வைத்தியரிடம் நேரில் ஆலோசனை/மருந்தினைப் பெற முகாம் விபரம்.
(முக்கிய பண்டிகை தினங்களிலும் முகாம் உண்டு)

2-ந் தேதி	- வேலூர் (N.A.)	: பிற்பகல்	1 to 2 மணி வரை ஹோட்டல் [illegible], 16, [illegible]. ✆ : 0416 / 23060.
2-ந் தேதி	- காஞ்சிபுரம்	: மாலை	5 to 6 ராஜம் லாட்ஜ், பஸ் நிலையம் அருகில் 9, காமராஜர் தெரு. ✆ : 04112 / 22519.
[illegible]-ந்தேதி	- சென்னை	: காலை	9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில். ✆ : 044 / 6424285, 6427638.
4-ந் தேதி	- கடலூர் (S.A.D.)	: காலை	9 to 11 ஆற்காடு [illegible] ஹோட்டல். ✆ : 04142 / 30707, 30717
4-ந் தேதி	- விழுப்புரம்	: பிற்பகல்	2 to 3 ஹோட்டல் ஆனந்தா, பஸ்நிலையம் எதிரில். ✆ : 04146 / 22962.
4-ந் தேதி	- திருவண்ணாமலை	: மாலை	5 to 6 ராதா லாட்ஜ் பஸ் நிலையம் எதிரில் ✆ : 04175 / 22536.
9-ந் தேதி	- பெங்களூர்	: காலை	11 to 12.30 ஹோட்டல் பிராட்வே, கல்பனா தியேட்டர் அருகில் கெம்பே கவுடா ரோட். ✆ : 2266374
9-ந் தேதி	- ஓசூர்	: மாலை	3 to 4 சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட். ✆ : 04344 / 22899.
12-ந் தேதி	- சேலம்	: காலை	11.30 to 12.30 ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில். ✆ : 0427 / 448333.
12-ந் தேதி	- ஈரோடு	: மாலை	4 to 5 ஹோட்டல் ஆக்ஸ்போர்டு, பஸ் நிலையம் எதிரில். ✆:0424 / 226811 / 12 / 13 / 14/15/16/17/18
13-ந் தேதி	- கோயம்புத்தூர்	: காலை	9.30 to 12.30 சேரன் பேலஸ் லாட்ஜ் சாந்தி தியேட்டர் பின்புறம் ✆ : 0422 / 302211, 302220
14-ந் தேதி	- மதுரை	: காலை	9 to 11 ஹோட்டல் கிரான்ட் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு. ✆ : 0452 / 743941
14-ந் தேதி	- தஞ்சாவூர்	: மாலை	5 to 6 அசோகா லாட்ஜ். ✆ : 04362 / 30021 / 30022
15-ந் தேதி	- திருச்சி	: காலை	9 to 11 ஹோட்டல் ஆனந்த், சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில். ✆ : 0431 / 460545.
15-ந் தேதி	- நாமக்கல்	: பிற்பகல்	2.30 to 3.30 ஹோட்டல் தேவி அன்னபூர்ணா. ✆ : 04286 / 20433
22-ந் தேதி	- தர்மபுரி	: காலை	9 to 10 ஸ்ரீ மகேஸ்வரா லாட்ஜ். ✆: 04342 / 60226.
22-ந் தேதி	- திருப்பூர்	: பிற்பகல்	2 to 3 ராமகிருஷ்ணா லாட்ஜ். ✆ : 0421 / 740416.
22-ந் தேதி	- உடுமலைபேட்டை	: மாலை	6 to 7 குறிஞ்சி லாட்ஜ், பஸ் நிலையம் எதிரில் ✆ : 04252 / 24353.
23-ந் தேதி	- திண்டுக்கல்	: காலை	9 to 10.30 ஹோட்டல் குறிஞ்சி, பஸ் நிலையம் பின்புறம் ✆:27017.
23-ந் தேதி	- தூத்துக்குடி	: மாலை	5 to 6 ஹோட்டல் ஆஸ்வின், தேவர் புரம் ரோடு. ✆ : 0461 / 327780
24-ந் தேதி	- திருநெல்வேலி	: காலை	8.30 to 11 ஹோட்டல் ஸ்ரீ சீதாபதி, மதுரை ரோடு. ✆ : 0462 / 333312.
24-ந் தேதி	- நாகர்கோவில்	: பிற்பகல்	2 to 3 ஹோட்டல் சரவணா, மீனாட்சிபுரம். ✆: 04652 / 25689.
25-ந் தேதி	- விருதுநகர்	: காலை	9 to 10 அண்டன் லாட்ஜ், மதுரை ரோடு. ✆ : 04562 / 45537.
25-ந் தேதி	- கரூர்	: பிற்பகல்	2.30 to 3.30 மணி வரை அரசி லாட்ஜ், ஜவகர் பஜார். ✆ : 63763.

Dr.CKM
DIVINE HERBAL CENTRE

தகவல்: டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 23 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.60/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய 'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்' என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.60/-ம் தலைமை முகவரிக்கு M.O. அல்லது D.D. அனுப்பவும்.

7-ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), Ph : 4011589

நீதிபதிக்கு

அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணியில் பிளவை ஏற்படுத்தப் பிள்ளையார் சுழி போட்டு விட்டதாக விமர்சனத்துக்கு ஆளாகியிருக்கிறார் தமிழக பா.ஜ.க. பொதுச் செயலாளரான இல. கணேசன். தமிழக அரசாங்கத்தில் வருவாய்த் துறையில் ரெவின்யூ இன்ஸ்பெக்டராய்ப் பணியாற்றிய இவரது அரசியல் வாழ்க்கை மிகவும் சுவாரசியமானது.

தஞ்சாவூர் டவுனில், விகடன் ஏஜெண்ட் லட்சுமி ராகவன் ரொம்பப் பிரபலமானவர். அவருக்கு ஒன்பது குழந்தைகள். (ஆறு பையன்கள், மூன்று பெண்கள்) ஐந்தாவதாய்ப் பிறந்த பையன் தான் கணேசன். *(பிறந்த தேதி 16 பிப்ரவரி 1945)*

ஆர்.எஸ்.எஸ். ஈடுபாடு கொண்ட குடும்பம் என்பதால், கணேசனுக்கு ஒரு வயதாய் இருக்கும்போதே, அவருடைய அண்ணன், கணேசனைத் தோளில் தூக்கிக் கொண்டு ஆர்.எஸ்.எஸ். 'ஷாகா'வுக்குப் போவாராம். ஐந்தாம் வயதிலிருந்து கணேசனுக்கும் 'ஷாகா' பரிச்சயம்.

ஒன்பதாவது வயதில் திடீரென்று அப்பா மரணத்தால், குடும்பத்தில் ரொம்பவே பாதிப்பு. கஷ்டப்பட்டு எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்த கணேசன், பரீட்சை எழுதின மறு தினமே, ஒரு கடையில் வேலைக்குச் சேர்ந்து விட்டார். ஆனால் கடைக்கு வந்தவர்கள் பலர், "எவ்வளவு நல்லா இருந்த குடும்பம்; இவ்வளவு கஷ்டப்படுகிறீர்களே!'' என்று விசாரித்தபோது ரொம்ப தர்மசங்கடமாய் உணர்ந்து, நாலாவது நாளே அந்த வேலையை விட்டு விட்டார். அப்புறம் முனிசிபல் ஆபீசில் தற்காலிக வேலை. தொடர்ந்து, வருவாய்த் துறையில் தற்காலிக உத்தியோகம். பரீட்சை எழுதி பர்மனென்ட் ஆனதும், படிப்படியாய்ப் பதவி உயர்வு பெற்று ரெவின்யூ இன்ஸ்பெக்டர்!

''ரெவின்யூ இன்ஸ்பெக்டராய் இருந்த போது ஏற்பட்ட அனுபவங்கள் பல. ஒருநாள் களப்பணிக்குச் சென்றிருந்தபோது, தமது நிலத்தைப் பார்வையிட உடனடியாக வர வேண்டும் என்று சொல்லி, ஒருவர் லஞ்சம் கொடுத்தார். 'உங்களைப் போன்றவர்கள்தான், நல்லவர்களையும் கெடுக்கிறீர்கள்!' என்று கூறி உணர்ச்சிவசப்பட்டு ஓங்கி அடித்து விட்டேன். அதன்பின், எனக்கே வயது முதிர்ந்த அவரை அடித்து விட்டது தவறு என்று பட்டதால், வருத்தம் தெரிவித்தேன்'' என்கிறார் கணேசன்.

"எனக்குத் தமிழ் ஆர்வம் ரொம்ப அதிகம். ஆங்கிலம் அன்னிய மொழி; அது கலக்காமல் தமிழ் பேச வேண்டும் என்று அப்படியே பேசுவேன். தமிழில்தான் கையெழுத்துப் போடுவேன். ஒருநாள், சம்பளப் பட்டியலில், 'இல. கணேசன்' என்று தமிழில் கையெழுத்துப் போட்டபோது, மேலதிகாரி, 'வேலைக்குச் சேர்ந்தபோது ஆங்கிலத்தில்தான் கையெழுத்துப் போட்டிருக்கிறாய். இப்போது தமிழில் போடக் கூடாது. தமிழில் போட்டால் சம்பளம் தரமாட்டேன்' என்று



வீம்பு செய்தார்.

'நீங்கள் சம்பளம் தர வேண்டாம்! எப்படி சம் பளத்தை வாங்குவது என்று எனக்குத் தெரியும்' என்று சொன்னவுடன், 'இவனோடு எதற்கு வீண் வம்பு?' என்று பேசாமல் சம்பளத்தைக் கொடுத்து விட்டார்!"

தாசில்தார் ஆவதற்கான ஏழு தேர்வுகளில் ஐந்தை பாஸ் பண்ணிய போதிலும், ஒன்பது வருட கால அரசாங்க சர்வீஸைத் துறந்து 1970-ல் முழு நேர ஆர்.எஸ்.எஸ். பிரசாரகரானார் கணேசன்!

தென் தமிழ்நாட்டு மாவட்டங்களில் தீவிரப் பணிபுரிந்த கணேசனின் நெருக்கடி நிலைக் கால அனுபவங்கள் திரில்லானவை.

ஆர்.எஸ்.எஸ். தடை செய்யப்பட்டபின், அந்த இருபது மாத காலத் தலை

அல்வா!

மறைவு வாழ்க்கை பற்றி மணிக்கணக்கில் பேசுமளவுக்கு விஷயங்கள் இருக்கின்றன.

குளோஸ் ஹேர்கட், பாண்ட், டீ ஷர்ட், மீசை கிடையாது. அந்தப் புதிய கெட் அப்பில், கணேசன் தனக்குச் சூட்டிக் கொண்ட புனைபெயர் பாஷ்யம் (பால்ய சினேகிதனின் பெயராம்) போலீஸில் சிக்கிக் கொண்ட ஒரு ஆர்.எஸ்.எஸ். தொண்டரிடமிருந்த டைரி மூலமாக, இல. கணேசன், பாஷ்யம் என்ற புனைபெயரில் நடமாடும் விஷயம் லீக் ஆகிவிட, கணேசன் சூட்டிக் கொண்ட புதிய புனைபெயர் ராமானுஜம். (சமூக சீர்திருத்தவாதியான ராமானுஜர் மீது கொண்ட அபிமானம்தான் காரணம்)

"நான் எங்கே இருக்கிறேன் என்று கண்டுபிடிக்க போலீஸ் படாதபாடு பட்டது. சிக்கிய ஆர்.எஸ்.எஸ். தொண்டர்களைப் பிரம்பால் பின்னி எடுத்து விட்டார்கள்! ஊகூம்... யாரும் மூச்சு விடவில்லை!

"எமர்ஜென்ஸி அறிவித்ததைத் தொடர்ந்து ஒருநாள் இருள் கவியும் மாலையில் ஏழு மணிக்கு வைகைக் கரையில் (அதற்குக் கூட மீனாட்சிபுரம் என்று சங்கேதப் பெயர்) ரகசியமாய் கூடிப் பேச தகவல் அனுப்பப்பட்டது.

ஆறரை மணிக்கெல்லாம் நான் போய் விட்டேன். ஒருவரையும் காணோம். இருளில் ஆங்காங்கே, சிலர் மணலில் இயற்கைக் கடனைக் கழிக்க அமர்ந்திருப்பதைத்தான் காண முடிந்தது. 'எப்படியடா எமர்ஜென்ஸியின் அடக்குமுறைகளை எதிர்கொள்ளப் போகிறோம்' என்று ரொம்பவே கலங்கிப் போனேன். என் கடிகாரத்தில் சரியாய் ஏழு மணி. ஆங்காங்கே மணலில் அமர்ந்திருந்த உருவங்கள் எழுந்து என்னை நோக்கி நகர ஆரம்பித்தன. அத்தனை பேரும் ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள்! போலீஸின் சந்தேகக் கண்ணிலிருந்து தப்ப, அவர்கள் கையாண்ட தந்திரம் வியப்பை அளித்தது. இப்படிப்பட்ட அவர்களைக் கொண்டு எந்தப் பிரச்னையையும் சமாளித்து விடலாம் என்று எனக்கு தைரியம் ஏற்பட்டது!" என்கிறார்.

"**ஒ**ரு தடவை என்னை சந்தேகத்தின் பேரில் போலீஸ் பின் தொடருவதை மோப்பம் பிடித்து விட்டேன். ஓடினேன். ஓடினேன். தலை தெறிக்க ஓடினேன். அது போல என் வாழ்நாளில் அதற்கு முன் நான் ஓடியதில்லை. ஒரு நண்பர் வீட்டுக்குப் போய் கதவைத் தட்டியபோது, அவர் இல்லை. அவரது மனைவியும் குழந்தைகளும்தான். ஆனாலும் சூழ்நிலையை உணர்ந்த அவர், பதற்றமில்லாமல், என்னை ஓர் அறைக்குள் அனுப்பி, கதவைத் தாளிட்டது மட்டுமின்றி சமயோஜிதமாய், ஒரு பெரிய பீரோவை, தனி ஆளாக தள்ளிக் கொண்டு வந்து, நான் ஒளிந்திருந்த அறைக் கதவின் முன்நிறுத்தி அங்கு ஓர் அறை இருப்பதே வெளியில் தெரியாமல் செய்து காப்பாற்றினார்!

"ஒருநாள் இரவு, சென்னைக்கு ரயிலில் வந்து கொண்டிருந்தேன். என் எதிர் சீட்டில் அமர்ந்து பயணம் செய்து கொண்டிருந்தவரிடம் நான் யார் என்று வெளிப்படுத்திக் கொள்ளாமலேயே பேசிக் கொண்டே வந்தேன். விடை பெறுவதற்கு முன்பு, எங்

களது எமர்ஜென்ஸி எதிர்ப்பு ரகசிய வெளியீடுகளையெல்லாம் ஒரு கவரில் போட்டு ஒட்டி, அவரிடம் கொடுத்து, நேரம் கிடைக்கும்போது படித்துப் பாருங்கள் என்று சொல்லிவிட்டு, இடத்தைக் காலி செய்தேன். அது என் வாழ்க்கையில் மிக திரில்லான தருணம். காரணம் என் சக பயணி யார் தெரியுமா? என்னைக் கைது செய்ய வாரண்ட் பிறப்பித்த ஜட்ஜ்தான்!" – உற்சாகமாகச் சிரிக்கிறார்.

"பேச்சாளர் என்ற முறையில் உங்களுக்கு இன்ஸ்பிரேஷன் யார்?"

"சுவாமி தயானந்த சரஸ்வதியின் நாற்பத்து ஐந்து நாள் கீதைச் சொற்பொழிவு கேட்டபின் எனக்கு கீதை மீது ஸ்பெஷல் ஈடுபாடு வந்தது. பொன். முத்துராமலிங்கத் தேவரின் தேசபக்தி + கணீர் குரல் என்னை ரொம்பக் கவர்ந்த விஷயம். அப்புறம் ஆர்.எஸ்.எஸ்.ஸின் குருஜி கோல்வால்கர்."

கூடப் பிறந்தவர்கள் அனைவரும் திருமணம் செய்து கொண்டு விட்டனர் என்றாலும், இன்னும் இல. கணேசன் பிரம்மச்சாரிதான். பாரதியார் பாடல்களில் ரொம்ப ஈடுபாடு உண்டு. தேசபக்திப் பாடல்கள் பல தாமும் எழுதியிருக்கிறார்.

சினிமா பார்ப்பது ரொம்ப அபூர்வம். கடைசியாகப் பார்த்த தமிழ்ப் படம் அவ்வை சண்முகி. ஆங்கிலத்தில் டைடானிக்.

"தேர்தலில் ஏன் போட்டியிடுவதில்லை?"

"நான் அரசியல்வாதி இல்லை. அரசியலில் பணியாற்றப் பணிக்கப்பட்ட தேசியவாதி" என்று போட்டார் ஒரு போடு!

— மௌலி

படம் : ஸ்ரீஹரி

யானைத் திருவிழா!

வழக்கமாய் ராஜஸ்தானில், ஒட்டகங்களுக்கு அதிக முக்கியத்துவம் தரும் திருவிழாக்கள், மணற்பாங்கான ஜோத்பூர், பிக்கானீர், ஜெய்சால்மீர் போன்ற பகுதிகளில் நடைபெறும். ஆனால், யானைகள் பங்கு பெறும், யானைத் திருவிழா, ஆண்டுதோறும் மார்ச் மாதம், ஜெய்ப்பூரில் நடைபெறுகிறது. முன்பெல்லாம் இந்தத் திருவிழாவின் போது, யானைச் சண்டை, யானைகள் மீது ஏறி ஆடும் போலோ விளையாட்டு முதலியவை ஜெய்ப்பூர் மன்னர்கள் முன்னிலையில் நடைபெறும். ஒருமுறை போலோ விளையாட்டின் போது, பந்தை யானை மீது இருந்தவர் அடிக்கத் தவறிவிட, யானையின் காலின் கீழ் சிக்கிய பந்து, வினோத சப்தத்துடன் உடைந்தது. அடுத்து இன்னொரு பந்து கொண்டு வரப்பட்டு, ஆட்டக்காரர் அடிக்க முற்பட, துடுக்குத்தனமான யானை, வேண்டுமென்றே பந்தை காலால் அழுத்தி, உடைத்து, அதன் சப்தத்தை ரசித்தது. அடுத்து கொண்டு வரப்பட்ட பந்துக்குக்கும் அதே கதிதான். இதே போல, தொடர்ந்து மொத்த பந்துகளும் உடைந்து போக, ஆட்டம் நிறுத்தப்பட்டது.



இப்போது, திருவிழாவின் போது, யானை ஒருபுறம் நிற்க, மறுபுறம் இருபது முப்பது டூரிஸ்ட்கள் நிற்க, கயிறு இழுக்கும் போட்டி நடக்கிறது. வருஷத்தோறும் வெற்றி பெறுவது யானைதானாம்!

— ஸியெம்

தானத்தில் சிறந்தது கல்வி தானம்!

ஒருவருக்கு இன்று உதவும்போது அன்றைய ஒரு சிரமத்துக்குக் கைகொடுக்கி றோம். ஆனால் இளைஞர்களுக்கும் யுவதி களுக்கும் கல்வி பெற உதவும்போது அவர்கள் ஆயுள் முழுவதும் நன்கு வாழ வகை செய்கி றோம். எனவே தானத்தில் சிறந்தது கல்வி தான மாகத்தானே இருக்க முடியும்! நிதானமாக யோசித்தால் இது புரியாமலா போகும்!

எனவேதான் அமரர் கல்கி நினைவு அறக் கட்டளை கல்கி வாசகர்களின் ஒத்துழைப் புடன் தொடங்கப் பெற்று வெற்றிகரமாக நடந்து வருகிறது. ரூ. 10,000/- உதவித் தொகை களாக விநியோகிப்பதில் தொடங்கி, நடப்பு கல்வி ஆண்டுக்கு ரூ. 90,000/- பல்வேறு மாண வர்களுக்கு விநியோகிக்க முடிவெடுத்திருக் கிறது. அமரர் கல்கியின் நூற்றாண்டாகிய அடுத்த ஆண்டு இவை ரூ. 1,00,000/- ஆக உயரும்.

உங்களுடைய நன்கொடை யாருக்கு, எப்படி உதவுகிறது? இரண்டு உதாரணங்கள்:

● நான் கடம்பூர் இந்து நாடார்கள் மேல் நிலைப்பள்ளி யில், மேல் நிலை முதலாம் ஆண்டு படிக்கிறேன். என் தந்தையார் உடல் ஊன முற்றவர். வேலை செய்ய இயலாது. என் தாயார் சத் துணவுக் கூடத்தில் பணிபுரி கிறார். அவரது வருவாயில்தான் நான் படிக்கவும் வேண்டும். கடந்த 10ம் வகுப்பு பொதுத் தேர் வில் எங்கள் பள்ளியில் நான் தான் முதல் மாணவன். அதற்குரிய சான்றும் இணைத்துள்ளேன். எனக்கு அமரர் கல்கி நினைவு அறக் கட்டளையின் கல்விக்கான உதவித் தொகை வழங்கி ஆதரிக்க வேண்டுகிறேன். நன்றி.

கடம்பூர் - 628 714 பி.எஸ். சங்கர்



• பூபாலகந்தர்



• பி.எஸ். சங்கர்

● நான் 1997 ஏப்ரல் மாதம் நடைபெற்ற DMRE தேர்வில் 90% மதிப்பெண் பெற்று கோவை, ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் வித் யாலயா பாலிடெக்னிக்கில் முதல் மாணவ னாகத் தேர்வு பெற்றுள்ளேன். இந்த ஆண்டு BE இரண்டாம் ஆண்டு நேரடியாக காருண்யா இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி கல்லூரி யில் சேர்ந்துள்ளேன். என் தந்தை ஒரு தனியார் தொழிற்சாலையில் வேலை பார்க்கிறார். கடந்த ஒரு வருஷமாக தொழிற்சாலை சரிவர இயங் காததால் மிகுந்த பொருளாதார நெருக்கடி ஏற் பட்டுள்ளது. தாங்கள் கல்விக்கான உதவித் தொகை அளித்தால் என் BE படிப்பு வெற்றிகர மாக அமையும்.

காரமடை - 641 104

ஜி. பூபாலகந்தர்.

இது போன்று பல்லாயிரக்கணக்கான கடிதங்கள் ஆண்டுதோறும் வருகின்றன. அறங்காவலர்கள் இவற்றை கவனமாகப் பரிசீலித்து உண் மையிலேயே உதவித் தொகை தேவைப்படுகிறவர்களை, படிப்பிலும் சிறந்தவர்களாக இருப்பின் தேர்ந்தெடுத்து, உதவித் தொகைகளை விநி யோகிக்கிறார்கள்.

இந்த நற்பணிக்கு உதவும் ஆர்வம் உள்ளவர்கள், தங்களால் இயன்ற அளவு நன் கொடையை கல்கி கிருஷ்ண மூர்த்தி நினைவு அறக் கட்டளைக்கு அனுப்பி வைக்கலாம்.

டிராஃப்ட் அல்லது எம்.ஓ. அல்லது காசோலை மூலம் KALKI KRISHNAMURTHY MEMORIAL TRUST என்ற பெயருக்கு மட்டுமே அனுப்புதல் வேண் டும். நன்கொடைகளுக்கு வருமானவரி விலக்கு உண்டு.

முகவரி :

கி. ராஜேந்திரன்
(பதிப்பாளர், கல்கி
நிறுவனப் பத்திரிகைகள்)
நிர்வாக அறங்காவலர்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி
நினைவு அறக்கட்டளை,
தெ. 1, ஐந்தாவது தெரு,
ஏரி வட்டம்,
நுங்கம்பாக்கம்,
சென்னை - 600 034.

நீங்கள் கேட்டவை

❒ ரூ. 50 பரிசு பெறுபவர்:
செ. செல்மான் பாரீஸ்,
4/12, முதல் வாசல் தெரு,
பாம்பன் – 623 521.

● பெ. பொன் ராஜபாண்டி, மதுரை – 10.

? '356ஐப் பயன்படுத்தி தி.மு.க. அரசைக் கலைத்தால், தேர்தலைப் புறக்கணிக்கத் தயாரா?' என்று வை.கோவுக்கு ஜெ சவால் விடுகிறாரே?

! 'நானும் கருணாநிதி ஆட்சி போக வேண்டும் என்றுதான் கருதுகிறேன். ஆனால் 356ஐப் பிரயோகிப்பதால் அல்ல; மக்கள் தீர்ப்பு மூலம்' என்கிறார் வை.கோ. அவர் சொல்லாமல் விட்டது: 356ஐப் பிரயோகிப்பதில் சட்டச் சிக்கல் இருப்பது தெரிந்தும் தேர்தல் வரை காத்திராமல் அவசரப்படுகிறீர்களே...? உங்கள் மீதுள்ள ஊழல் வழக்குகளிலிருந்து தப்பிக்கத்தானே...?'– பழைய வை.கோவாயிருந்தால் கேட்டிருப்பார். இன்று இதைச் சொல்ல முடியாமல் தவிக்கிறார்... என்ன செய்வது? ஊழலுடன் கை கோத்துக் கொண்டாயிற்றே!

● எம். அசோக்ராஜா, அரவக்குறிப்பட்டி.

? மே. வங்கம் மத்திய அரசின் குழுவைப் புறக்கணித்துத் திருப்பி அனுப்பியது சரியா?

! குழுவுக்கும் விசாரணைக்கும் அவசியம் இல்லாதபோது மாநில அரசை நிர்ப்பந்திப்பது ஜனநாயக விரோதம்தான். எனவே மே. வங்க அரசின் புறக்கணிப்பைக் குற்றம் கூற முடியாது. ஆனால் இதே புறக்கணிப்பைப் பிற மாநில அரசுகள் ஆபத்தான தருணங்களிலும் காட்ட இந்நிகழ்ச்சி முன்னோடியாகிவிடக் கூடும். எனவே மத்திய அரசு, புத்திசாலித்தனமாக நடந்து கொண்டு அவசியமான நேரத்தில் மட்டுமே பார்வையாளர்களை அனுப்புதல் வேண்டும்.

● ஜி. ராமதாஸ், கணபதி அக்ரஹாரம்.

? கல்வி அறிவு பெற்று விட்டால் குற்றங்கள் குறையுமா...?

! உண்மையான கல்வி என்றால் அப்படித்தான் நிகழ வேண்டும். ஆனால் இன்றைய கல்வி மனிதர்களை மேம்படச் செய்வதாக இல்லை. பணம் சம்பாதிக்க வழிகாட்டுவதாக மட்டுமே கருதப்படுகிறது.

● கே. கண்ணன், மதுரை – 9.

? ஜெயலலிதா நினைத்தால் சோனியா பிரதமர் என்று தாமரைக்கனி பேசியிருப்பது பற்றி...?

! பி.ஜே.பியை ஜெ படுத்தி வைக்கும் பாட்டைப் பார்த்த பிறகு, எந்த எதிர்க்கட்சியும் புத்திசாலித்தனமாக யோசித்து அ.தி.மு.க. தொடர்பைத் துண்டிக்கவே முயற்சி செய்யும்; செய்ய வேண்டும். இல்லையேல் உலக்கைக்குப் பயப்படாமல் உரலில் தலை கொடுத்ததாகும்.

● செ. கார்த்திகேயன், சாத்தூர்.

? அமெரிக்காவின் பொருளாதாரத் தடை இந்தியாவை ஒருபோதும் பாதிக்காது என்று ஹெக்டே கூறியுள்ளாரே!

! விலைவாசி உயர்வு, டாலருக்கு எதிராக ரூபாயின் வீழ்ச்சி; அன்னியச் செலாவணி கையிருப்புச் சரிவு, பங்குமார்க்கெட் சரிவு... எல்லாம் வேறு மாதிரி சொல்கின்றன!

● கங்கா கணேசன், பொறையாறு.

? இன்றைய நிலையில் ஜெயலலிதாவின் நடவடிக்கையால் ஏற்படப் போகும் பின் விளைவு என்ன...?

! இன்னொரு தேர்தல்; நிலையான மத்திய அரசு.

● செ. சல்மான், பாம்பன். ❒

? எந்த மாநிலமும் நாம் கேட்டவுடன் தண்ணீர் தந்துதவ வேண்டுமென்று நாம்



• வாய்ப் பூட்டு! • ஆசைக் கனவு...! • தடையற்ற உற்சாகம் • புதிய பிரகடனம்!

ஜெ. நினைத்தால் சோனியா பிரதமராமே...?

விரும்புகிறோம். அதே நேரத்தில், அங்குள்ள மக்கள் மனநிலை, அரசியல் சாதக/பாதகங் களை யாரும் கண்டு கொள்வதில்லையே.. ஏன்?

! அவர்களுக்கும் பிரச்னைகள் இருப்பதை நாம் மறுக்க முடியாது. அனுபவ பாத்தியதை அடிப் படையில்தான் நாம் கேட்கிறோம்... அவர்கள் அதை மறுக்க முடியாது.

● **இ. மகாராசன், தடமலைக்குண்டு.**

? 'நான் இப்பொழுது சுப்பிரமணிய சுவாமித் தேவர்' என சுப்பிரமணியம் சுவாமி கூறி யிருக்கிறாரே...?

! கௌரவம் மிக்க தேவர் இன மக்களுக்கு இப்படி ஒரு அபகீர்த்தி தேட வேண்டாம் சு.சுவாமி!

● **எல்.எம்.அபிதா, திருவண்ணாமலை.**

? ஜெயலலிதாவுக்குப் பின் அ.தி.மு.க.வின் பெரிய புள்ளி யார்...?



! புள்ளி மட்டும் தான் இருக்கு... முற்றுப் புள்ளி!

● **ஆர். பி. ஜெயச்சந்திரன், பூனாம்பாளையம்.**

? எஸ்.ஸி, எஸ்.டி. இனத்தவருக் கான சலுகைகள் 2002ஆம் வருஷத்துக்கு மேலே நீடிக்க வேண்டாம் என்று கன்ஷி ராம் கூறுவது பற்றி...?

! இச் சலுகைகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு இறுதியில் நீக்கப்பட வேண்டும் என்பதுதான் தர்மம். ஆனால் அரசியல் திருவிளையாடல்கள் இதற்கெல்லாம் இடம் தராது. தாழ்த்தப்பட்டவர் களை அந்த அளவுக்கு 2002ஆம் ஆண்டுக்குள் உயர்த்திவிடவும் மாட்டார்கள்!

● **ப. இராம் முருகன், சிவகங்கை.**

? 'அதிசயமே அசந்து போகும் அதிசயம்' என்று அவசரத்தில் ஐஸ்வர்யா ராயைச் சொல்லிவிட்டேன். உண்மையில் அது கலை ஞர்தான்...' என்று வைரமுத்து சொல்லி யிருக்கிறாரே... இது பற்றி...?

! ஐஸ்வர்யா ராயை வர்ணித்த சொற்களால் தான் கலைஞரையும் வர்ணிக்க முடியும் என் றால், வைரமுத்துவின் கற்பனை சக்தி வரண்டு போய்க் கொண்டிருப்பதாக ஆகிவிடும். அதை மறந்துவிட்டு, கலைஞருக்குத் தகுதியான வேறு சொற்களை அவர் தேர்ந்தெடுத்திருக்கலாம். கிடைக்காமல் போய்விடாது!

● **கே.ஆர். உபேந்திரன், தஞ்சாவூர்.**

? சட்டம் ஒழுங்கு ஆராயும் மத்தியக் குழுவுக்கு எத்தவிதமான ஒத்துழைப்பும் நாங்கள் தரமாட்டோம். முடிந்தால் ஜனாதிபதி ஆட்சியை இங்கு அமுல் படுத்திப் பார்க்கட்டும்' என மிகத் துணிவுடன் மேற்கு வங்க அரசு அறி வித்தது போல் தி.மு.க. அரசு கூற முடியவில்லையே...ஏன்...?

! உரிமைக்குக் குரல் கொடுப்பதுடன் உறவுக்கும் கரம் கொடுப்பதுதான் தி.மு.க. பண்பாடு. ஜோதிபாசு விஷ யம் வேறு.

● **வி.எஸ். கிருஷ்ணமூர்த்தி, சென்னை - 17.**

? இன்று ஒரு முருங்கைக்காய் விலை ஆறு ரூபாய். இது எதைக் குறிப்பிடுகிறது?

! மனைவி முருங்கைக்காய் சாம்பார் வைத்தால் தோலையும் மென்று சாப்பிடத் தோன்றும் என் பதை!

● **ச. சோமசுந்தரம், போளூர்.**

? வழக்கறிஞர்கள் விஜயன் மற்றும் சண் முகசுந்தரம் தாக்கப்பட்டபோது, முன்னாள் முதல்வர் ஜெவுக்கு ஏற்படாத கரிசனம், தற்போது தாக்கப்பட்ட வக்கீல் ராஜன் மீது ஏற்பட்டுள்ளது பற்றி...?

! தம்முடைய நடிப்புத் திறனிலும் மக்களுடைய மறதியிலும் அவருக்கு அத்தனை நம்பிக்கை!

இந்த வார இளைஞர்

பெப்ஸி பார்வை திரும்புமா?

இந்திய ஹாக்கி அணிக்கு இது போதாத காலம். தர்ம அடி வாங்கிக் கொண்டு இருக்கிறது. 'மிக முன்னணி டீம்' என்கிற பெயரெல்லாம் போய் உலக அளவில் பத்தாவது இடத்துக்குத் தள்ளப்பட்டு விட்டது. இந்த நிலை மாறும். மீண்டு வரும் என்கிற நம்பிக்கையை - பல தோல்விகளுக்கு நடுவிலும் - ஏற்படுத்துகிற ஒரே இளைஞர் திலீப் ட்ரிக்கி. இந்திய அணியில் 'தற்காப்பு ஆட்டம்' ஆடும் இவர் விரைவில் கேப்டன் ஆகி விடுவார் என்கிற பேச்சும் இருக்கிறது. அவரைச் சந்தித்தோம்.

“சமீபத்திய போட்டிகளில் இந்தியாவின் படுதோல்விக்கு என்ன காரணம் திலீப்?” என்று கேட்கத் தொடங்குமுன் படபடவென்று பொழிய ஆரம்பித்து விட்டார்.

முதல் இரண்டு ஆட்டங்களில் நடுவர்கள் இந்திய அணிக்கு எதிராகச் செயல்பட்டதை முக்கியக் காரணமாகச் சொல்கிறார் திலீப். என்னதான் அந்த நடுவர்கள் பின்பு சஸ்பெண்ட் செய்யப்பட்டாலும் அணியினரின் உற்சாகம் குறைந்து விட்டதே தோல்விக்குப் பிரதான காரணமாகி விட்டது. ஆனால் மறுபடியும் நாங்கள் மீண்டு வருவோம் என்ற திலீப், ஜூனியர் ஹாக்கி அணியில் இடம் பெறவே ஆரம்பத்தில் ரொம்ப சிரமப்பட்டவர்.

"எங்கள் பள்ளி அணியில்கூட என்னை அப்போது சேர்த்துக் கொள்ளவில்லை. மைதான ஓரத்தில் நின்று ஆடுபவர்களைப் பார்த்துக் கொண்டே இருப்பேன். மனத்தில் வெறி வரும். எப்படியும் நாம் நன்கு ஹாக்கி ஆடக் கற்றுக் கொள்ள வேண்டும்; சாதனை புரிய வேண்டும் என்று சொல்லிக் கொள்வேன்.

"மற்ற பையன்கள் ஆடி முடித்ததும், அவர்களிடமிருந்து ஹாக்கி ஸ்டிக்கை வாங்கிக்கொண்டு, பந்தே இல்லாமல் அப்படி இப்படி நானே மானசீகமாகப் பந்தைத் துரத்திக் கொண்டு ஓடுவேன். இந்தக் காட்சியை ரெகுலராகப் பார்த்துக் கொண்டிருந்த இந்தியன் ஏர்லைன்ஸ்காரர் ஒருவர், என் ஆர்வத்தைப் புரிந்து கொண்டு, அவர்களது ஹாக்கி கிரவுண்டுக்குக் கூட்டிப் போய், என்னைப் பற்றிச் சொல்லி, சேர்த்துக் கொள்ளச் செய்தார். ஆறு மாதத்தில் நான் அடிப்படை விதிகளைக் கற்றுக் கொண்டேன். அங்கே ஏ.கே. பன்ஸால் என்பவர் என்னை முழுமையான ஓர் ஆட்டக்காரனாக உருவாக்கினார். அவர் மூலம்தான் ஏர் லைன்ஸ் ஜூனியர் அணியில் விளையாட வாய்ப்புக் கிடைத்தது. ஐந்து வருஷம்! 93-94ல் இந்திய ஜூனியர் அணிக்கு ஒரு வழியாகத் தேர்வு செய்யப்பட்டு, 94ல் இங்கிலாந்தில் நடந்த மேட்சின்போது முதல் முறையாக என் ஆட்டம், பத்திரிகைகளில் பாராட்டுப் பெற்றது. சீனியர் அணியிலும் இடம் பெற்றேன்."

ஒரு காலத்தில், ஹாக்கி என்றாலே இந்தியா, பாக். இரு நாடுகள்தான் ஸ்டார் என்றிருந்தது. இன்று இரண்டுமே பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது பற்றி ரொம்ப வருத்தப்படுகிறார் திலீப்.


• திலீப் ட்ரிக்கி

"நம் வீரர்களிடம் திறமைக்குப் பஞ்சமில்லை. ஆனால், ஆதரிப்பாரில்லாத அநாதைக் குழந்தை போல் இருக்கிறது ஹாக்கி அணி. அரசு ஆதரவு இல்லாமல் என்ன செய்ய முடியும்? கிரிக்கெட் வீரர்களுக்குத் தரப்படும் முக்கியத்துவம், விளம்பரம், ஆதரவு, உதவி எதுவும் எங்களுக்கு இல்லை! பெரிய பெரிய நிறுவனங்கள், கிரிக்கெட்டை, கிரிக்கெட் வீரர்களை ஸ்பான்சர் செய்வதுபோல் எங்களைச் செய்ய முன் வருவதில்லை. என் சகோதரனைப் போன்ற ஒரு பாகிஸ்தான் வீரர் சொன்னார், அங்கேயும் இதே நிலைமைதானாம். ஹாக்கி வீரர்களை யாருமே கண்டு கொள்வதில்லை! கோடிக் கணக்கில் கிரிக்கெட்டுக்குக் கொட்டும் கோக் - பெப்ஸி போன்ற நிறுவனங்கள் ஒரு இரண்டு வருஷத்துக்கு நம் ஹாக்கி அணியைத் தத்தெடுக்கட்டும்... அப்புறம் பாருங்கள்... மறுபடி நாம்தான் உலக சாம்பியன்!" என்றார் திலீப்.

— சிம்மம்


கர்நாடக இசை, 'ஸி.டி.ரோம்' வடிவில் முதல் முறையாக வெளிவந்திருக்கிறது. அதற்காக முனைந்தவர்கள் இளம் பாடகர்களான சௌம்யா, சசிகிரண் – இது எல்லோருக்கும் தெரிந்த செய்தி... இந்த முயற்சிக்குப் பின் பல தெரியாத செய்திகள்...

"வெளிநாடுகளில் கச்சேரி செய்யும்போது 'என்ன ஒரு அற்புதமான மியூசிக் சிஸ்டம்' என்று பிறநாட்டினர் பாராட்டுவதுண்டு. ஆனால் இந்தியா வரும் பல வெளிநாட்டினர்கள் வட இந்தியாவோடு நின்று விடுவதால், இந்துஸ்தானி இசையோடு அவர்கள் அறிமுகம் முடிந்து விடுகிறது. கர்நாடக இசைக்கு உலக அளவில் ஒரு சிம்மாசனம் தரப்பட வேண்டும் என்று வெறியே ஏற்படும். அதுதான் இந்த முயற்சி" என்றார் இதை உருவாக்கியவர்களுள் ஒருவரான சௌம்யா.

"நமக்குப் புகழ், பொருள் ஆகியவற்றைத் தரும் இந்த இசைக்கு நன்றி கூறும் விதமாக ஏதாவது செய்ய வேண்டும். அது இளைஞர்களை ஈர்ப்பதாகவும் இருக்க வேண்டும். அதேசமயம் சம்பிரதாயத்தை மீறியதாக மூத்த கலைஞர்கள் குறை கூறும்படியும் இருக்கக் கூடாது என்று எல்லா



ணிச் செயல்பட்டதன் விளைவு இது" – சசிகிரண் சொன்னது இது.



• சசிகிரண்

சென்னைப் பல்கலைக் கழகத்தில் இசையில் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த சசிகிரணும், அங்கு எம்.ஏ படித்துக் கொண்டிருந்த சௌம்யாவும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டபோது, இணைந்தே இந்த முயற்சியில் ஈடுபடத் தீர்மானித்தனர். தொழில் நுட்ப விஷயத்தில் உதவ முன் வந்தார் சௌம்யாவின் கணவர் ஸ்ரீதர். ஏற்கெனவே ஸி.டி. ரோம் தொழில் நுட்பத்தில், பதிவு செய்யப்பட்ட ஒரு பரத நிகழ்ச்சிக்குப் பாடிக் கொடுத்த அனுபவம் சசிகிரணுக்குக் கை கொடுத்தது.

ஆடியோ, வீடியோ என்று பல சாதனங்கள் இருக்க, மல்டிமீடியா ஏன்?



• சௌம்யா

"முப்பது புத்தகங்கள் அல்லது ஆறு வீடியோக்கள் ஆகியவற்றில் அடங்கும்படியான விஷயங்களை இந்த ஒரே 'டிஸ்க்'கில் கொடுக்க முடிந்திருக்கிறது. தவிர புத்தகமென்றால் சரிகமபதநி என்று ஸ்கேல் மட்டுமே எழுதியிருக்கும். ஆடியோவில் அதைக் கேட்கும்போது இலக்கணத்தில் சந்தேகம் எழலாம். கம்ப்யூட்டரில் இந்த டிஸ்க்கைப் போட்டுப் பார்க்கலாம்; கூடவே கேட்கலாம் என்பதால் உணர்வது சுலபமாகிறது.

"இன்றைய இளைஞர்கள் மூன்று மணி நேரம் இசையைப் பற்றி லெக்சர் என்றால் எழுந்து போய் விடுவார்கள். அவர்களுக்கு

இஷ்டப்பட்ட நேரத்தில், இசையைப் பற்றி அறிந்து கொள்வதுடன், இன்டர் ஆக்ஷனுக்கும் இதில் வசதி உண்டு" என்கின்றனர்.

இன்டர் ஆக்ஷன்?

இப்போது ஸ்வரங்கள் பற்றிய பகுதி என்றால், ராகப் பயிற்சியோடு, கீபோர்டில் நீங்களும் அந்த ராகத்தை இசைக்கலாம். தவறென்றால் கம்ப்யூட்டர் சுட்டிக்காட்டும்.

இதற்கான முயற்சிகளில் சில ஆச்சரியங்கள் காத்திருந்தன. சாம்பமூர்த்தி என்ற இசைமேதை அந்தக் காலத்திலேயே 'கோலம், வரைபடமெ'ல்லாம் போட்டு கர்நாடக இசையின் அடிப்படையை விஷுவலைஸ் செய்திருப்பது தெரிய வந்தது. 1904லேயே ஏ.எம். சின்னசாமி முதலியார் மேற்கத்திய நொடேஷன்களை நம் இசைக்குப் போட்டிருக்கிறார்.

உருப்படியாக ஒரு புதுமை!

ஆச்சரியங்கள் மட்டுமல்ல, சிக்கல்களுக்கும் குறைவில்லை. இன்ரிகோ, ஏ.வி.எம்., ஓரியண்டல் ஆகிய நிறுவனங்கள் தங்கள் ரெகார்டுகளிலிருந்து சில பகுதிகளை எடுத்தாளச் சம்மதித்தன. ஆனால் வேறு சில இசை நிறுவனங்கள் மறுத்தன. வேறு சில இசைப்பதிவுகள் கிடைக்கவேயில்லை... இதனால் சில விற்பன்னர்களை இணைக்க முடியவில்லை. முக்கிய உதாரணம் – வீணை தனம்மாள். அவரைப் பற்றிய விவரங்களையும், புகைப்படத்தையும் காட்ட முடிந்ததே தவிர, அவரது இசையைச் சேர்க்க முடியவில்லை. பொருளாதாரப் பிரச்னையும் பலமாக எழுந்தது. கடன் தருவதாக வாக்களித்த சில வி.ஐ.பி.க்கள் கடைசியில் கைவிரிக்க, இவர்களே சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம்!

மொத்த டிஸ்க்கிலுமே 640 மெகா பைட்ஸ் அளவு என்பதால் இடக் கட்டுப்பாடு. நிறைய கிராபிக்ஸூம், பல ஆடியோக்களும் தயார் செய்தும் ஓரளவே பயன்படுத்த முடிந்தது. காரணம் தொழில் நுட்ப நிர்ப்பந்தங்கள்.

1930 கால கட்டத்திலிருந்து சுமார் 200 கர்நாடக இசை மேதைகள் இருப்பதைக் கணக்கிட்டாலும் பல்வேறு காரணங்களுக்காக நூறு பேரைத்தான் சேர்க்க முடிந்ததாம். சில வடமொழிப் பதங்களுக்கு ஆங்கிலத்தில் பொருத்தமான வார்த்தை எது என்பதற்கு மண்டையை உடைத்துக் கொள்ள வேண்டி வந்தது.

தொழில் நுட்ப மிக்ஸிங்குக்கு சிங்கப்பூர் கிளம்பத் தயாரானபோது, கடைசி நொடி வரை 'மாஸ்டர் காபி' எதிர்பாராத விதமாக ரெடியாகாததால், ஃப்ளைட் மிஸ்ட்! மியூசிக் அகடெமியில் வெளியீட்டு விழாவில் கம்ப்யூட்டர் மக்கர் செய்ய, டென்ஷனுடன் செய்த மாற்று ஏற்பாடு,... இப்படிப் பலவித சிக்கல்கள்.

இத்தனையையும் தாண்டி வெற்றிகரமாக வெளியாகி இருக்கிறது இந்த டிஸ்க்!

விலை 2175 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த 'ஸிடி-ரோம்' வாங்க எண்ணுபவர்கள் தவறாமல் கேட்கும் இரண்டு கேள்விகள்:

"இதை வச்சுக்கிட்டு கர்நாடக இசையைக் கத்துக்க முடியுமா?"

"இதை ஸி.டி. ஆடியோவிலோ, வீடியோ விலுமோ போட்டுப் பார்க்கலாமா?"


இரண்டாவது கேள்விக்கு விடை 'முடியாது'!. கம்ப்யூட்டரில் மட்டுமே இதைப் பொருத்தி ரசிக்கலாம்!

முதல் கேள்விக்கு பதில் அதை விடப் பெரிய முடியாது!

"கர்நாடக சங்கீதம் என்பது ஒரு கடல். அதைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள இந்த சி டி ரோம் உதவும்; கொஞ்சம் கவனமாக இந்த சிடி ரோமைப் பயன்படுத்தினால் கர்நாடக இசையைப் புரிந்து கொள்ளவும், ரசிக்கவும்கூட இது பெரிதும் உதவும்" என்கிறார் சசிகிரண்.

உருப்படியான புதுமைகளுக்கு உற்சாகம் அளிப்பதுதானே நியாயம்?

— ஜி.எஸ்.எஸ்.



ஹைஜ-

அவர் தலைமை விஞ்ஞானி டாக்டர் ஜமால் முகம்மது. இந்திய ரகசிய ராக்கெட்டுகளின் தந்தை. டாக்டர் ஜமாலுக்கு வியர்த்தது. நேற்றுக் காலை கால் பதித்ததிலிருந்து காலில் கஞ்சி கொட்டிக் கொண்டாற் போல டைட் ஷெட்யூல்.

மரியாதை நிமித்தம் சி.எம்., அதிகாரிகள் தொடர் சந்திப்பு. இடையே ஐஐடி விசிட் வேறு. இந்த ஊரில் ஊற்றும் வியர்வை அவருக்கு அலர்ஜி. இந்த ஊரில் பிறந்தது தவிர வேறு தொடர்பில்லை. சிறு வயது முதலே வடக்கே வாசம்.

'மண்ணின் மைந்தன்' அது இது என்று சிறப்புச் செய்ய வற்புறுத்தி அழைத்திருந்தார்கள். துப்பாக்கி தூக்கிக் கொண்டு சுற்றிலும் கும்மி அடிப்பது போன்ற பாதுகாப்பு பந்தாவும் அவருக்குப் பிடிக்கவில்லை. எரிச்சல் பட்டதற்கு, "மூச்! எவ்வளவு பெரிய விஞ்ஞானி! விமானம் ஏறும்வரை காப்பது எங்கள் பொறுப்பு!" என்று கமிஷனர் அடக்கி விட்டார்.

பரந்த கூட்டம். விஞ்ஞானம் என்றால் வீசை என்ன விலை என்று வினவும் அர

சியல்வாதிகள், அவர் விஞ்ஞான சாதனையில் விளம்பரக் குளிர் காய்ந்து சொற்பொழிந்தனர். டெல்லியில் விட்டு விட்டு வந்த ஆராய்ச்சியிலேயே அவர் மனம். கொடுக்கும் 'பட்டத்தை' வாங்கிக் கக்கத்தில் வைத்துக் கொண்டு சீக்கிரம் பறக்க வேண்டும். இந்தியாவை மேலும் உன்னத உயரத்தில் வைக்க அவருக்குள் பேராசை...

விமான நிலையம். வழக்கமான பரபரப்பு. காத்திருந்தான் அமர். டாக்டர் ஜமாலுக்காகத் தவமிருந்த விவிஐபி என்ட்ரன்ஸ் திறப்பைப் பார்த்தான். அவனும் எக்ஸிக்யூடிவ் கிளாஸ் டிக்கட் வைத்திருந்தான். புன்சிரிப்புடன் தலையசைத்துக் கொண்டான். நடுவானில் வெடிக்கப் போகும் விமானத்தில் அ(எ)வர் எங்கிருந்தால் தான் என்ன... கூண்டோடு கைலாசம்! ஏதும் மீதமில்லாத சேதம்...

அவன் கைவசம் ஒரு ப்ரீஃப் கேஸ்; ஒரு ஷோல்டர் ஸ்போர்ட்ஸ் பேக். அந்தப் பேகின் அடியில் உட்புறம், பஞ்சும் 'பிளாஸ்டிக் பாமும்' வைத்து இன்னொரு லேயர் நைலான்

ஜாக்(கிரதை)!

ஷீட் வைத்துத் தைத்திருந்தான்!

சிறிது நேரத்தில் அவன் முறை வந்தது.

அமர் விந்தி விந்தி நடந்து செல்வதைத் தொலைவிலிருந்து பார்த்த இயக்கத் தோழன் பிட்டு, தன் செல்போனைத் தயார் நிலையில் உள்ளதா என ஒரு தரம் பார்த்துக் கொண்டான்.

இவன் உடைமைகளைத் துப்புரவாகத் துழாவித் திருப்தியான அதிகாரி தம் மெட்டல் டிடக்டரை அமர் உடம்பின் மேல் தடவிக் கொண்டு வந்தார்.

மார்பருகே 'பீப்' என்று ஒலித்தது. சட்டைஉள் பாக்கட்டிலிருந்தது 'சாவி' எடுத்துக் காண்பித்தான். மெல்லக் கீழிறங்கிய டிடக்டர், இவன் காலருகே வந்ததும் 'பீப் பீப்' என்றது.

"என்ன?"

"சக்கரம் ஏறிய விபத்தில் காலில் காயம்! ஸ்க்ரூ ப்ளேட்டிங் வைத்துக் கட்டப்பட்டிருக்கிறது!"

"சாரி! தொழில் முறை கடமை. காண்பியுங்கள் பார்ப்போம்."

"இட்ஸ் ஓகே ஆபீசர்!"

சற்றும் தயங்காமல் கால்களை அகட்டிக் கொண்டு குனிந்து பேண்ட்டின் வலது கால் பகுதியை மேலேற்றினான். தேவைக்கும் அதிகமாகக் சுற்றிப் பெருத்திருந்த கட்டு அது. மேலிருந்து மெல்ல மெல்லப் பிரிக்க ஆரம்பித்தான். முட்டிக்கு அருகிலிருந்தே காயம் துவங்கியது. சில நாட்கள் முன் கத்தியால் நெடுகக் கீறியது ஏக ரணமாயிருந்தது. அதிகாரி முகம் சுளித்தார். வேதனையில் முனகினான்.

போன் ஒலித்தது. "எக்ஸ்கியூஸ் மீ" என்று அதிகாரி அகன்றார். Diversion!

'வாழ்க பிட்டு' - வாழ்த்திக் கொண்டே பேண்டேஜுத் துணியை மேலும் பிரித்து, ஸ்க்ரூ ப்ளேட்டிங் தெரிந்ததும் நிறுத்திக் கொண்டான் அமர்.

படபடப்புடன் திரும்ப வந்த அதிகாரி காயத்தையும் மெட்டல் ஸ்க்ருவையும் பார்த்துவிட்டு "க்ளியர்! போகலாம்!" என்று அனுமதித்தார்.

கேபினை விட்டு அமர் வெளியேறும் போது மறுபடி போன் ஒலிப்பது கேட்டது! எப்போதும்... எப்போதும் துல்லியமாகச் செய்வதைத் திருந்தச் செய்யும் பிட்டு!

சீரிய சில வினாடிகள். பிளிறும் என்ஜின். விமானம் தயங்கியது. திரும்பியது. ஊர்ந்தது. வேகமெடுத்தது. வானம் விரும்பும் விமானத்தின் மூக்கு முதலில் மேலே எவ்வ -

இனி, இது தரைக்குத் திரும்பாது! பரவசமானான், அமர். க்ளிக். சீட் பெல்ட்டிலிருந்து

பத்மா ரவிசங்கர்

விடுவித்துக் கொண்டான். இவனிடமிருந்து சில வரிசைகள் தள்ளி, விஞ்ஞானி ஜமால்! முனையில் முதல் வரிசை அது. பக்கத்தில் இரு பாதுகாவலர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களின் சஃபாரி உடுப்பு மறைப்புக்குள், நிச்சயம் துப்பாக்கிகள்.

இருக்கட்டுமே. அமர், ஏன் அங்கே செல்லப் போகிறான்? ஏன் அவர்களிடம் மல்லுக் கட்டி நிற்கப் போகிறான்?

அவன் கால் கட்டினடியில் எலக்டிரானிக் டிட்டனேட்டர். பேகினடியில் பிளாஸ்டிக் பாம். எடுத்து இணைத்தால், மூக்கினடியில் முழுமையாகும் அபாய பாம்!

இருந்த இடத்தில் ஒரு பொத்தானில் சிறு அழுக்கல்; விளையும் பெரும் 'டொம்'! அவ்வளவுதான். இந்த இந்திய விமானமும், ஏனைய இந்தியர்களும், முக்கியமாக அந்த இந்திய விஞ்ஞானச் சாத்தானும்...

கூடவே தானும் சேர்ந்து சாவதில் சற்றும் வருத்தமில்லை. மாறாக, ஊறும் பெருமை. இனி, தியாகிகளில் அவனும் ஒருவன்.

"தொந்தரவு செய்யாதே பெண்ணே!" சாக்லேட், சிரிப்புடன் அணுகிய ஏர் ஹோஸ்டஸை சிடு சிடுப்புடன் விரட்டி விட்டான். இந்திய உபசரிப்பு எவருக்கு வேண்டும்...!

தம் இயக்கத்தின் திட்டத்தை எண்ணிப் பார்த்தான். என்ன ஒரு திட்டம்! சுலபமாக மண் தூவி கமுக்கமாகச் செய்த சாதனையில் பெருமிதமாக உணர்ந்தான். தன் தலைமைக்கு, இயக்கத்திற்குச் சகலமும் சாத்தியம். ப்பூ! எளிமையாக ஏமாறும் அற்ப இந்தியர்கள்!

அவ்வப்போது உபசரிக்க ஊடாடும் விமானப் பணிப் பெண்கள். அப்புறம், அந்தத் தாடி இளைஞன்! இதுவரை மூன்று முறை கண்ணில் பட்டு விட்டான். யார் அவன்?

இந்த விமானப் பயணத்திற்குச் சற்றும் பொருந்தாத தோற்றம். அழுக்கேறிய ஜீன்ஸ். பழுப்பேறிய பரட்டைத் தலை முடி. சிக்கேறிய புசு புசு தாடி. ஒட்டுப் போட்ட கோட்டு. ஒரு மாதிரி வெறித்த பார்வை. ஏதோ அவஸ்தையில் இருப்பவன் போலிருந்தான். Restless ஆகத் தெரிந்தான். விமானத்தினுள் விடாமல் நெடிய உலாத்தல். காதில் வாக்மேன் ஸ்பீக்கர்கள். கையில் பிளாஸ்டிக் உறையிட்ட மலர்க் கொத்து. பிச்சைக்காரன் போலிருந்தான். மன நலம் குன்றியவன் போலவுமிருந்தான்.

பொறு என் கிறுக்கு நண்பா! உன் சகல வித அவஸ்தைகளிலிருந்தும் உனக்கு விரைவில் விடுதலை! முறுவலுடன் பேகின் ஜிப்பைத் திறந்தான் அமர். வலக் கையை அதனுள் செலுத்தினான். உள்ளே ஒரு முனையில் விரலால் நிரடினான்.

நைலான் நூல் துண்டு சிக்கியது. அதைப் பற்றி மெல்ல இழுத்துக் கொண்டே வந்தான். சில வினாடிகளில், False Bottom, நைலான் ஷீட் சுருண்டு கொள்ள பிளாஸ்டிக் பாம் விடுதலையாகியது! அதை ஆசையுடன் தடவிக் கொடுத்தான்.

அடுத்து என்ன? கால் கட்டிலிருந்து டிட்டனேட்டர் எடுக்க வேண்டும். எடுத்ததும் பாமுடன் பொருத்த வேண்டும். இணைத்ததும், தீர்ந்தது வேலை; விமானம்; விஞ்ஞானி; எல்லாம்... எல்லாம்!

"ஹலோ! இன்று எனக்குப் பிறந்த நாள்!"

அந்த 'மெண்ட்டல்' தாடி இளைஞன் கையில் பொக்கேயுடன் முன் வரிசையில் உளறுவது கேட்டது.



தவறு நண்பா! இன்று நம இறந்த நாள்...!

'இனிய' பாம் தயார்! அமர் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். இனி இந்த விஞ்ஞானியைத் தன்னிடமிருந்து எவராலுமே காப்பாற்ற முடியாது.

பயணத்தில் பாதித் தூரம்தான் கடந்திருக்கும். தரை தொட, தாராள நேரம் இருக்கிறது. வெடி விசை அழுத்த, அமருக்குத் தேவை சில சிறு வினாடிகளே. அந்தத் திடும் 'டொம்' சாகஸ நொடி எப்போது... எப்போது...

அப்போது -

தொலைவில் திடுமென்று காக்பிட் கதவு திறந்து அந்தத் தாடி இளைஞன் வேகமாக வெளிப்படுவதைப் பார்த்தான் அமர். அதிர்ந்தான். இது என்ன கூத்து...

தற்போது தாடி இளைஞன் கையில் துப்பாக்கி!

"யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ். இப்போது இந்த விமானம் ஹைஜாக் செய்யப்படுகிறது! இந்த நொடி முதல் இந்த விமானம் என் கட்டுப்பாட்டில்!"

உரத்தக் குரலில், மிரட்டல். தீப்பற்றிக் கொண்ட கண்கள். இங்கே, நடுவானில் என்ன நடக்கிறது? அமர் சுவாரசியமானான். விஞ்ஞானியின் பாதுகாவலன் ஒருவன் உருவிய துப்பாக்கியுடன் அவசரமாக எழுவதைப் பார்த்தான்.

"ஆபத்து! அசையாதே நாய் மகனே! இங்கே பார்த்தாயா...." கோபமுடன் கோட்டின் முன்புறம் விசிறித் திறந்து காண்பித்தான்.

அமர் வாய் பிளந்தான். தாடிக்காரனின் மார்பில் பாம் வைத்துக் கட்டியிருந்தது! அவன் இடக் கையில் பொத்தான் வைத்த கையடக்க விசை!

''இதை அழுத்தினால், இந்த பாம் வெடித்து..." வெறியுடன் சிரித்தான்.

''என்ன சொன்னீங்க? நடிகை பயந்தபடியிருக்காங்க?''

''தொப்புள்ல என்னை ஊற்றி திரி போட்டு தீபம் ஏற்றும் சீன் இன்னைக்கு எடுக்கப் போறோம்னு சொன்னேன்.''

— ஆ. அருண்ராஜ்

"ப்ளேன் தூள்! தூள்!"

இரு காவலர்களின் துப்பாக்கிகளையும் தூர எறியச் சொன்னான். சாவகாசமாக நடந்தான். பின், எச்சரிக்கையுடன் குனிந்தான். துப்பாக்கிகளை எடுத்துப் பாண்ட் பாக்கட்டில் திணித்துக் கொண்டான்.

"மறுபடி எச்சரிக்கிறேன். என் உயிர் பற்றி எனக்குச் சிறிதும் அக்கறையில்லை. எவரிடமேனும் தப்பிதமாகச் சிறு அசைவு தெரிந்தாலும் போதும்! கூசாமல் பாமின் விசை பட்டனை அழுத்தி விடுவேன். மாறாக, அமைதியாக இருந்தால் உங்கள் உயிருக்கு நான் உத்தரவாதம். இந்த விமானம் கராச்சியில் தரையிறங்கியதும் என் கோரிக்கை நிறைவேறியதும் உங்களுக்கு விடுதலை! ஆம்! க...ரா...ச்...சி!" என்றான் கண்கள் பளபளக்க. ''இந்த விமானம் கராச்சிக்கு ஹைஜாக் செய்யப்படுகிறது!"

கராச்சியா...! அமர் பரவசமானான். அவசரமாகச் சிந்தித்தான். என் ஓர் எதிர்பாரா அதிர்ஷ்டம்! தன் இயக்கத்திற்கு அங்கே ஆதரவு இருக்கிறது. தன் கூட்டத்தின் கூட்டாளிகள் அங்கே இருக்கிறார்கள். இந்திய டாப் சைன்டிஸ்டை உயிருடனே சிறை பிடிக்க வலிய வந்த அரிய வாய்ப்பு இது. அவரின் எதிர்காலத் திட்டம் தெரிந்து கொள்ளலாம். பேரம் பேசலாம். புதிய சதி ஏதும் புரியலாம். யோசித்து, எதுவும் செய்யலாம். ஹைஜாக்கினால் அங்கே விளையும் களேபரக் குழப்பத்தில் கமுக்கமாகவும் செய்யலாம்.

தன் பாம் வெடிப்பைத் தற்காலிகமாக ஒத்தி வைத்தான் அமர். நடப்பதைக் கவனித்துக் கொண்டுக் காத்திருக்க முடிவு செய்தான். ஏதேனும் அசந்தர்ப்பமாக தாடி இளைஞன் அகப்பட்டுக் கொண்டு, ஹைஜாக் முயற்சி புஸ்வாணமாகி விட்டால் பயம் ஏதுமில்லை. கைவசம் பாம் தயாராக இருக்கிறது. ஒரிஜினல் திட்டப்படி சட்டென்று வெடித்து விட வேண்டியது தான்.

சரி. யார் இவன்? என்ன இவன் கோபம்? ஐஎஸ்ஐ ஆசாமியா? விமானத்தினுள் சூப்பர் சைன்டிஸ்ட் இருப்பது தெரியுமா? இவன் எவனாக இருந்தால் என்ன? இவனிடம் சாகஸத் துணிச்சல் இருக்கிறது. ஏகத்திற்கு எச்சரிக்கை இருக்கிறது. திறமை நிறைய இருக்கிறது. இந்தத் தேசத்தின் மேல் கடும் வெறுப்பு இருக்கிறது. போதாதா?

வா நண்பனே! பாக். மண்ணில் இறங்கியதும் உன்னை ஆரத் தழுவுகிறேன்! உன் விருப்பங்களை நான் நிறைவேற்றுகிறேன். எங்களுடன் இணைந்து கொள்! உன் திறமை மிகு உஷ்ண உரசல்களுக்கு நான் வழி செய்து தருகிறேன்.

''பழரசம்! விஷம் கலந்து கொண்டு வந்தாயா?" என்று உறுமிய தாடி இளைஞன் பணிப்பெண் கன்னத்தில் பளீரென்று அறைந்தான்.

"இல்லை! வந்து...."

"ஷட்டப்! போய் மூலையில் முடங்கு. எவருக்கும் எந்த உபசாரமும் வேண்டாம். புரிகிறதா?"

அவன் எச்சரிக்கை உணர்வை சிலாகித்துக் கொண்டான் அமர்.

அதற்குப் பிறகு, இரை தேடும் மிருகம் போல அவன் உலாத்திக் கொண்டிருந்தான்;



''யாருக்குமே லேகல லீவு தராத மானேஜர் உனக்கு மட்டும் எப்படி உடனே லீவு சாங்ஷன் பண்றார்?''

''லீவு கொடுங்க, இல்லாட்டி ரூ.200/- கடன் கொடுங்கன்னு கேட்டேன்!''

— சீர்காழி வி.ரேவதி

உருவிய துப்பாக்கி, உயர்த்திய பாம் பட்டன் சகிதம்...

நடுவில், காக்பிட்டிலிருந்து ஒரு மயங்கிய கோ-பைலட்டை வெளியே இழுத்து வந்து தரையில் கடாசினான்.

''கொஞ்சம் முரண்டு பிடித்தான்! அதான்...'' தாடி குரூரமாகச் சிரித்தான்.

சுமார் இரண்டரை மணி நேரம் கழித்து விமானம் தரை தொட்டிருந்தது. ஜன்னல் வழியாக அமருக்கு ஏதும் புலப்படவில்லை. இருளாக இருந்தது. ரன்வேயின் ஏதோ ஓர் ஒதுக்குப்புறம் போலும்.

காக்பிட்டிலிருந்து அந்தத் தாடி இளைஞன் வெளிப்பட்டான். இன்னமும் அவன் கையில் அந்தத் துப்பாக்கி. மெல்ல நடந்து வந்தான்.

அமர் அருகே வந்து நின்றான் அவன்.

''சபாஷ்! சாதித்து விட்டாய் இளைஞனே!'' என்று ஸ்னேகமுடன் புன்னகைத்தான் அமர்.

''ஆம்!'' என்று முதன் முறையாக சிரித்த தாடி, ''இது என்ன இடம் தெரியுமா?''

''ஊம்!'' என்று மகிழ்ந்த அமர், ''கராச்சி!'' என்றான்.

''இல்லை! டெல்லி!'' என்ற தாடிக்காரன் தன் துப்பாக்கி பின்புறத்தால் அமர் தலையில் மின்னல் வேகத்தில் நச்சென்று தாக்கினான்!

திடுமென்று கதவு திறந்தது. கமாண்டோக்கள் திமுதிமுவென்று உள்ளே வந்து சூழ்ந்தனர். மயக்கமாகியிருந்த அமரை அள்ளிக் கொண்டனர்.

டெல்லி. ஏர்போர்ட்டில் ஒரு தனியறை. விஞ்ஞானி ஜமால், சில உயர் அதிகாரிகள் மற்றும் அந்தத் தாடி இளைஞன்.

''அற்புதம்!'' என்றார் ஜமால். ''நடக்க இருந்த பேரழிவைத் தடுத்த உன் தடாலடி சாகஸம் பிரமாதம்! இப்போது விளக்கு...''

''விஞ்ஞானம் வளர, நாளும் ஹை-டெக் குற்றங்கள் நிகழ்வதால் நாங்களும் பல விதத்தில் உஷாராக இருக்க வேண்டியுள்ளது. வெளிப்படையாக இருக்கும் கமாண்டோ பாதுகாவல் தவிர, ஒவ்வொரு மெகா விஐபியையும் ரகசியமாகப் பாதுகாக்க ஒரு நிழல் ஏஜெண்ட்டை நியமித்துள்ளது இந்திய உளவுத் துறை! Highly Discreet Job! மறைவாகவும், மாறு வேடத்திலும் வெகு ரகசியமாகவும் செய்கிறோம். ஆபத்து எனில், மின்னல் விரைவில் முடிவு எடுக்கிறோம்...'' என்று தன் மாறுவேடத்தைக் கலைத்தான்.

ஜமால் வியப்புடன், ''எவ்வளவு வேறுபட்டு ஹாண்ட்சமாக இருக்கிறாய்! உன் மாறுவேடம் பிரமாதம்! அதை விட உன் நடிப்பு சூப்பர்!''

அவன் சிரித்து, ''மயக்கமாக நடித்து ஒத்துழைத்த கோ-பைலட்டை விடவா!''

''அந்தத் தீவிரவாதியின் திட்டம் பற்றி உனக்கு முன் கூட்டியே தெரியுமா?''

''தெரியாது. விமானத்தினுள்தான் கண்டு பிடித்தேன்! உல்லாசப் பயணத்திற்கா உடன் வருகிறோம்? எந்தப் புற்றில் எந்தப் பாம்போ (பாமோ!)? ஒவ்வொருவரையும் ரகசியமாக தொடர்ந்து உற்றுக் கவனிக்கிறோம்...''

''ஓஹோ. அதற்காகத்தான் விமானத்தினுள் அந்தத் தொடர் உலாத்தலா...! அப்புறம் காதில் ஸ்பீக்கரும் கையில் பொக்கேயும் ஏன்?''

''உஷ்... அது ரகசியம்! சில 'விஷயங்களை' சந்தேகங்களை உறுதிப்படுத்திக் கொள்ள உதவும் ஹை-டெக் எலக்டிரானிக் ஜிம்மிக்ஸ்!'' என்று கண் சிமிட்டினான்.

''கிரேட் வொர்க் மை பாய்! உன் பெயர் விரைவில் செய்தித்தாளில் பிரபலமாக வரப் போகிறது!'' என்றார் நமுட்டுச் சிரிப்புடன்.

''என்ன சொல்கிறீர்கள்?''

''பல வருடங்களுக்கு நிரந்தரமாக! இன்னும் சில நாட்களில் இந்தியா ஒரு சூப்பர் ராக்கெட் சோதனை செய்யப் போகிறது! அந்த கிரேட் ராக்கெட்டுக்கு ஒரு கிரேட் உளவாளியின் பெயர்! எப்படி? உன் பெயர் என்ன?''

''சூர்யா!''

பொன்னியின் செல்வன்



ஐம்பத்து நான்காம் அத்தியாயம்

"நஞ்சினும் கொடியாள்"

மாமல்லபுரத்தில் பழைய பல்லவ சக்கரவர்த்திகளின் மாளிகை ஒன்றில் அன்றிரவு அம்மூன்று வீரசிகாமணிகளும் தங்கினார்கள். இரவு உணவு அருந்தியானதும் மலையமான் அரசர் ஐந்து ரதங்களுக்கு அருகில் அரவான் கதை நடக்கிறது என்று கேள்விப்பட்டு அதைக் கேட்கப் போய் விட்டார். ஆதித்த கரிகாலனும் பார்த்திபேந்திரனும் அரண்மனை மேல் மாடத்துக்குச் சென்றார்கள்.

மேல்மாடத்திலிருந்து ஆதித்த கரிகாலன் மாமல்லபுரத்தின் இரவுத் தோற்றத்தைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். ஆங்காங்கு மினுக்கு மினுக்கு என்று சில தீபங்கள் மங்கலாகப் பிரகாசித்தன. வீதிகளில் பெரும்பாலும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. கோவில்களில் அர்த்தஜாம பூஜை முடிந்து வெளிக் கதவுகளைச் சாத்திக் கொண்டிருந்தார்கள். சமுத்திரத்தின் கோஷம் 'ஓ'வென்று சோகத் தொனியாகக் கேட்டது. ஐந்து ரதங்களுக்குப் பக்கத்தில் வில்லுப்பாட்டு வித்வானும் அவருடைய கோஷ்டியும் அரவான் கதை நடத்த, அவர்களைச் சூழ்ந்து கதை கேட்டுக் கொண்டிருந்த ஜனக் கூட்டம் தீவர்த்திகளின் ஒளியில் கரிய நிழல் உருவங்களாகத் தெரிந்தது.

"இந்த



அமரர் கல்கி

கல்கி கலெக்ஷன்

முதிர்ந்த வயதில் கிழவர் கதை கேட்கப் போய் விட்டார், பார்! என்ன இருந்தாலும் பழைய காலத்து மனிதர்கள்தான் மனிதர்கள்! அவர்களுடைய உடல் வலிமையும் மனோதிடமும் இந்த நாளில் யாருக்கு உண்டு?" என்றான் ஆதித்த கரிகாலன்.



"அரசே! தாங்களும் பழைய காலத்தின் பெருமையைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்து விட்டீர்களா? பழைய கால மனிதர்கள் சாதித்த என்ன காரியத்தை நம் காலத்தில் நாம் சாதிக்கவில்லை? தங்களைப் போல் இளம் பருவத்தில் போர்க்களத்தில் வீரச் செயல் புரிந்தவர்களைப் பற்றிக் கதைகளிலும் காவியத்திலும் கூடக் கேட்டதில்லையே?" என்றான் பார்த்திபேந்திரன்.

"பார்த்திபா! நீ உண்மை உள்ளம் படைத்தவன், மனத்தில் ஒன்று வைத்துக் கொண்டு வாயினால் ஒன்று பேசாதவன் என்பதை நன்கு அறிந்திருக்கிறேன். இல்லாவிட்டால் நீ என்னுடைய நண்பன் அல்ல. இத சத்ரு என்றே சந்தேகிப்பேன். அவ்வளவு தூரம் என்னைக் குறித்து நீ முகஸ்துதி செய்கிறாய். முகஸ்துதியைப் போல் ஒருவனைப் பாதாளப் படுகுழியில் தள்ளக்கூடியது வேறொன்றுமில்லை!" என்றான் ஆதித்த கரிகாலன்.

"ஐயா! சுயநல நோக்கத்துடன் ஒருவனைப் பற்றி இல்லாத உயர்வைப் புனைந்து சொன்னால் அது முகஸ்துதியாகும். தஞ்சாவூரில் பழுவேட்டரையர்களின் அடிமையாக இருக்கிறானே மதுராந்தகன், அவனிடம் சென்று 'நீ வீராதி வீரன்' என்று நான் புகழ்ந்தால் அது முகஸ்துதியாகும். அப்படி நான் எப்போதாவது செய்ததாகத் தெரிந்தால் என்னை உடனே தங்கள் கையிலுள்ள வாளினால் கொன்று விடுங்கள். தங்களைப் பற்றி நான் சொன்னதில் ஒரு வார்த்தை கூட அதிகம் இல்லையே? பழைய காலத்தில் எந்த வீரன் இவ்வளவு இளம் வயதில் இத்தனை பெரிய காரியங்களைச் சாதித்திருக்கிறான்! தங்கள் பெரிய பாட்டனாராகிய யானை மேல் துஞ்சின இராஜாதித்தியரை ஒருவேளை தங்களுக்குச் சமமாக வேணுமானால் சொல்லலாம்; தங்களை விட அதிகம் என்று அவரையும் சொல்ல முடியாது..."

"நிறுத்து, பார்த்திபா, நிறுத்து! இராஜாதித்யர் எங்கே? நான் எங்கே? மகா சமுத்திரம் போல் பொங்கி வந்த இராஷ்டிர கூடர்களின் மாபெரும் சைன்யத்தை ஒரு சின்னஞ்சிறு படையை வைத்துக் கொண்டு எதிர்த்து நிர்மூலமாக்கி வீர சொர்க்கம் அடைந்த இராஜாதித்தியரைப் பற்றிப் பேசுவதற்கே நாம் தகுதியற்றவர்கள். அவருடன் நம்மை ஒப்பிட்டுக் கொள்வதா? சோழகுலம் இருக்கட்டும்; நீ பிறந்த பல்லவ குலத்தில் முற்காலத்தில் எப்பேர்ப்பட்ட மகாபுருஷர்கள் இருந்தார்கள்? மகேந்திரவர்மரையும் மாமல்லரையும் இனி இந்த நாட்டில் எப்போதாவது காணப் போகிறோமா? தெற்கே துங்கபத்




திரையிலிருந்து வடக்கே நர்மதை வரையில் ஒரு குடை நிழலில் ஆண்ட புலிகேசியை வென்று வாதாபியை அழித்து ஜயஸ்தம்பம் நாட்டிய நரசிம்மவர்மர் எங்கே? நீயும் நானும் எங்கே? இந்த மாமல்லபுரத்தைப் போல் ஒரு சொப்பன புரியை நம்முடைய காலத்திலோ நமக்குப் பிறகாலத்திலோ யாராவது சிருஷ்டி செய்ய முடியுமா?... அடடா! ஒரு தடவை நாலு புறமும் நன்றாய்ப் பார், பார்த்திபா! அதோ வில்லுப் பாட்டு நடக்கிறதே, அங்கே உற்றுப் பார்! அம்மாதிரி கற்பாறைகளைக் குடைந்து அற்புத ரதங்களின் வடிவங்களிலே அமைத்தவர்கள் சாதாரண மனிதர்களா? முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்த மாமல்லபுரம் எத்தகைய கோலாகலமான காட்சி அளித்திருக்க வேண்டுமென்று நினைக்கும் போதே எனக்கு உடம்பு சிலிர்க்கிறது! உனக்கு அத்தகைய உணர்ச்சி உண்டாகவில்லையா? உன் முன்னோர்களைப் பற்றி எண்ணும்போது உன் தோள்கள் பூரிக்கவில்லையா?...''

''அரசே! சற்று முன்பு தங்களை முகஸ்துதி செய்வதாகச் சொன்னீர்களே? சில சமயம் தங்களிடமுள்ள குற்றங் குறைகளையும் நான் எடுத்துச் சொல்வதுண்டு என்பதை மறந்து விட்டீர்கள். சிற்பம் - சித்திரம் - கலை என்று வாணாளை வீணாக அடிக்கும் பைத்தியம் தங்களையும் பிடித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பைத்தியம் பிடித்ததினாலேதான் என் முன்னோர்கள் அடைந்த வெற்றியெல்லாம் வீணாக ஆயிற்று. வாதாபிக்குச் சென்று ஜயஸ்தம்பம் நாட்டி விட்டு மாமல்லர் திரும்பி வந்தாரே? பிறகு என்ன செய்தார்? கற்களைச் செதுக்கிக் கொண்டும் பாறைகளைக் குடைந்து கொண்டும் உட்கார்ந்திருந்தார்! அதன் பலன் என்ன? சில காலத்துக்கெல்லாம் மறுபடியும் சளுக்கர்கள் தழைத்தோங்கினார்கள். பெரும்படையுடன் மீண்டும் பழிவாங்குவதற்கு வந்தார்கள். காஞ்சியையும் உறையூரையும் அழித்தார்கள். மதுரை வரையில் சென்றார்கள். நெடுமாற பாண்டியன் மட்டும் நெல்வேலியில் சளுக்கர் படையைத் தடுத்து நிறுத்தித் தோற்கடித்திராவிட்டால் இன்று வரை இத் தென்னாடு முழுதும் சளுக்கர் ஆட்சியில் இருந்திருக்கும் அல்லவா?''

"இல்லை, பார்த்திபா, இல்லை! உலகில் எந்த அரச குலமும் என்றென்றைக்கும் நீடித்திருந்ததாக நாம் கேள்விப்பட்டதில்லை. இராமர் பிறந்த இக்ஷ்வாகு குலத்துக்கும் ஒரு முடிவு ஏற்பட்டது. சளுக்கர்களை வீழ்த்த இரட்டை மண்டலத்தார் தோன்றினார்கள். இராஜ்யங்கள் சில சமயம் உன்னத நிலைமை அடைவதும் சில சமயம் தாழ்ச்சி உறுவதும் இயல்பு. சில இராஜ்யங்கள் சில காலம் எவ்வளவோ உன்னதமாக இருந்து விட்டு இருந்த இடம்தெரியாமல் போய் விடுகின்றன. என்னுடைய முன்னோர்களையே பார்! கரிகால் வளவன், கிள்ளி

வளவன் முதலிய சோழ மன்னர்கள் எவ்வளவோ சீரும் சிறப்புமாயிருந்தார்கள். அவர்களையெல்லாம் பற்றி இப்போது நமக்கு என்ன தெரிந்திருக்கிறது? கவிஞர்கள் சிலர் அவர்களைப் புகழ்ந்து பாடியிருப்பதனால் அவர்கள் பேரையாவது தெரிந்து கொண்டிருக்கிறோம். கவிபாடிய பாணர்கள் உண்மையைத்தான் பாடினார்களோ, அல்லது நன்றாக மதுபானம் செய்துவிட்டு, மனம் போன போக்கில் பாடினார்களோ, நமக்குத் தெரியாது. ஆனால் மகேந்திர பல்லவரும் மாமல்லரும் இந்தச் சிற்பபுரியைச் சிருஷ்டித்தார்களே, இது ஆயிரமாயிரம் ஆண்டு காலம் அவர்களுடைய பெருமையை உலகத்துக்கு உணர்த்திக் கொண்டிருக்கும். அவர்கள் செய்த காரியத்துக்கு ஈடாக நீயும் நானும் என்ன செய்திருக்கிறோம்! போர்க்களத்திலே பல்லாயிரம் மனிதர்களைக் கொன்று குவித்திருக்கிறோம்; இரத்த வெள்ளம் ஓடச் செய்திருக்கிறோம். உலகில் நம் பெயரை நிலைநிறுத்த வேறு என்ன செய்திருக்கிறோம்?''



இதைக் கேட்ட பார்த்திபேந்திரன் இவ்விதம் பேசுவது ஆதித்த கரிகாலன்தானா என்று ஐயுறும் பாவனையுடன் சிறிது நேரம் திகைத்திருந்தான். பிறகு ஒரு பெருமூச்சு விட்டு, "அரசே! போரையும் வீரத்தையும் குறித்துத் தாங்களே இவ்விதம் பேசுவது என்றால், நான் என்ன சொல்வதற்கு இருக்கிறது? தங்களுடைய மனம் இன்று சரியான நிலையில் இல்லை. ஆகையினாலேயே இப்படிப் பேசுகிறீர்கள்! ஐயா! தங்கள் மனத்திலுள்ள வேதனை இன்னதென்பதை எனக்குச் சொல்லலாகாதா? தங்களுடைய வயிர நெஞ்சத்தைச் சிறிது திறந்து காட்டக் கூடாதா?'' என்று ஆவலோடு கேட்டான்.

"பார்த்திபா! என் நெஞ்சைப் பிளந்து காட்டினேனாயின், அதற்குள்ளே என்ன இருக்கும், - எவர் இருப்பர் என்று நினைக்கிறாய்?''

''அதைத்தான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன், சுவாமி!''

"என்னைப் பெற்ற தாயும் தந்தையும் இருக்க மாட்டார்கள். என் உயிரினும் இனிய தங்கையும் தம்பியும் இருக்க மாட்டார்கள். என் உயிருக்குயிராகிய நண்பர்களாகிய நீயும் வந்தியத்தேவனும் இருக்க மாட்டீர்கள். வஞ்சகமே வடிவான ஒரு பெண் அதில் இருப்பாள். பாவமே உருவான பழுவூர் இளையராணி அதில் இருப்பாள். நஞ்சினும் கொடியவளான நந்தினி என் நெஞ்சுக்குள்ளே இருந்து என்னைப் படுத்தி வைக்கும் பாட்டை இன்று வரை வாயைத் திறந்து யாரிடமும் சொன்னதில்லை. உன்னிடந்தான் இன்று சொன்னேன்!'' என்று ஆதித்த கரிகாலன் கூறிய வார்த்தைகளில் தணலின் ஜுவாலை வீசிற்று.

"அரசே! அதை ஒருவாறு நான் ஊகித்தேன். பழுவூர் இளையராணியின் பேச்சு வரும்போதெல்லாம் தங்கள் முகம் கறுத்துக் கண்கள் சிவந்து, சொல்ல முடியாத மனவேதனையை வெளியிட்டதைக் கொண்டு அறிந்தேன். ஆனால் இந்தத் தகுதியில்லா மோகம் எப்படித் தங்கள் நெஞ்சில் இடம்பெற்றது? அன்னியப் பெண்களையெல்லாம் அன்னையெனக் கருதும் மரபில் தாங்கள் வந்தவராயிற்றே? பழுவேட்டரையர் தங்கள் குலத்துக்கு நெடுங்கால உறவினர்; பிராயம் முதிர்ந்தவர். இன்றைக்கு அவர்கள் நமக்குப்



பகைவர்களானாலும் முன்னால் அப்படியில்லையே? தங்கள் தந்தையும் பாட்டனாரும் அவரை எவ்வளவு மதித்து மரியாதை செய்தார்கள்? அப்படிப்பட்டவர் அக்னி சாக்ஷியாக மணந்து கொண்ட பெண்ணை... அவள் எவ்வளவுதான் கெட்டவளானாலும்... தாங்கள் மனத்திலும் கருதலாமா?"

"கூடாது, பார்த்திபா, கூடாது! அது எனக்குத் தெரியாது என்றா நினைக்கிறாய்? தெரிந்திருப்பதினாலேதான் இந்த மனவேதனை. அவள் பழுவேட்டரையரை மணந்த பிறகு என் நெஞ்சில் இடம் பெறவில்லை. அதற்கு வெகு காலம் முன்பே என் உள்ளத்தில் அவளுடைய மோக விஷம் ஏறிவிட்டது. அதைக் களைந்தெறிய எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. குற்றம் எல்லாம் அவள் பேரில் என்று தோன்றும்படி நான் பேசுகிறேன். குற்றம் யாருடையது என்பதைக் கடவுளே அறிவார். பார்க்கப் போனால், பாவம் பழியெல்லாம் எங்களைப் படைத்த கடவுள் தலையிலேயே விழ வேண்டும். அல்லது எங்களைச் சந்திக்கப் பண்ணிப் பின்னர் பிரித்து வைத்த விதியின் பேரில் குற்றம் சொல்ல வேண்டும்!"

"அரசே! நந்தினி பழுவூர் ராணியாவதற்கு முன்னால் தாங்கள் அவளைச் சந்தித்ததுண்டா? எங்கே, எப்போது எப்படிச் சந்தித்தீர்கள்?"

"அது பெரிய கதை, இன்றைக்கு அதைக் கேட்க விரும்புகிறாயா?"

"கட்டாயம் கேட்க விரும்புகிறேன். அதைத் தெரிந்து கொள்ளாவிட்டால் எனக்கு மனநிம்மதியிராது. நாளைக்கு இலங்கை போகச் சொல்லுகிறீர்களே? அங்கே சென்று என் கடமையைச் சரிவரச் செய்ய முடியாது. நிலைமை இன்னதென்பதைத் தெரிந்து கொண்டு தங்களுக்கு ஆறுதல் சொல்லிவிட்டுப் போனால்தான் என் உள்ளம் ஒருவாறு நிம்மதி அடையும்!"

"நண்பா! எனக்கு ஆறுதல் சொல்லப் போகிறாயா? இந்த ஜன்மத்தில் எனக்கு ஆறுதல் என்பது கிடையாது. அடுத்த பிறவியில் உண்டா என்பதும் சந்தேகம் தான். உன்னுடைய மன நிம்மதிக்காகச் சொல்கிறேன். உன்னிடம் சொல்லாமல் நான் எதையோ ஒளித்து வைத்திருப்பதாக எண்ணிக் கொண்டு நீ இலங்கை போக வேண்டியதில்லை!"

இவ்விதம் கூறி ஆதித்த கரிகாலன் சிறிது நிதானித்தான். பிறகு ஒரு நெடிய பெருமூச்சு விட்டு விட்டுச் சொல்லத் தொடங்கினான்.

ஐம்பத்தைந்தாம் அத்தியாயம்

நந்தினியின் காதலன்

"முதன் முதலாக என்னுடைய பன்னிரண்டாம் பிராயத்தில் நந்தினியை நான் சந்தித்தேன். ஒருநாள் பழையாறையில் எங்கள் அரண்மனையின் பின்புறத்திலுள்ள நீர் ஓடையில் நானும் என் தங்கையும் தம்பியும் ஓடம் விட்டு விளையாடிக் கொண்டிருந்தோம். விளையாட்டு



முடிந்து ஓடத்திலிருந்து இறங்கிப் பூஞ்சோலை வழியாக அரண்மனைக்குச் சென்றோம். வழியில் எங்கள் பெரிய பாட்டி செம்பியன் மாதேவியின் குரல் கேட்டது. நாங்கள் மூன்று பேரும் பாட்டியின் செல்லமாக வளர்ந்தவர்கள். பாட்டியிடம் நாங்கள் ஓடம் விட்டதைப் பற்றிச் சொல்வதற்காக அவருடைய குரல் கேட்ட கொடி வீட்டுக்குள் புகுந்தோம். அங்கே பாட்டியைத் தவிர இன்னும் மூன்று பேர் இருந்தார்கள். மூன்று பேரில் ஒருத்தி எங்களையொத்த பிராயத்துச் சிறு பெண். மற்ற இருவரும் அவளுடைய பெற்றோர்கள் என்று தெரிந்தது. அந்தப் பெண்ணைப் பற்றி அவர்கள் ஏதோ மாதேவடிகளிடம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் கொடி வீட்டுக்குள் புகுந்ததும் அங்கிருந்த எல்லாரும் எங்களைப் பார்த்தார்கள். ஆனால் அந்தச் சிறு பெண்ணின் வியப்பினால் விரிந்த நெடிய கண்கள் எங்களைப் பார்த்தது மட்டுமே என் கண்ணுக்குத் தெரிந்தது. அந்தக் காட்சி இன்றைக்கு நினைத்துப் பார்த்தாலும் என் மனக்கண் முன்னால் நிற்கிறது...''

இவ்விதம் கூறிக் கரிகாலன் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டு மௌனமாயிருந்தான். வானத்தில் அச்சமயம் உலாவிய மெல்லிய மேகத் திரைகளுக்குள்ளே அந்தச் சிறு பெண்ணின் முகத்தை அவன் பார்த்தானோ என்னமோ தெரியாது.

''ஐயா! அப்புறம் சொல்லுங்கள்!'' என்று பார்த்திபேந்திரன் கேட்டதும்;

கரிகாலன் இந்த உலகத்துக்கு வந்து கதையைத் தொடர்ந்தான் :

"பாட்டியிடம் ஓடம் விட்டு விளையாடியதைப் பற்றி என் தங்கை குந்தவைதான் சொன்னாள். அதைக் கேட்ட பிறகு, மாதேவடிகள், "என் கண்ணே! இந்தப் பெண்ணைப் பார்த்தாயா? எவ்வளவு சூடிகையாயிருக்கிறாள்? இவர்கள் பாண்டிய தேசத்திலிருந்து நம்முடைய ஈசான சிவபட்டர் வீட்டுக்கு வந்திருக்கிறார்கள். கொஞ்ச நாளைக்கு இங்கே இருப்பார்கள். இந்தப் பெண்ணின் பெயர் நந்தினி. இவளையும் சில சமயம் உங்கள் விளையாட்டுக்களில் சேர்த்துக் கொள்ளுங்கள். இவள் உனக்கு நல்ல தோழியாயிருப்பாள்!'' என்றார். ஆனால் என் தங்கைக்கு இது பிடிக்கவில்லையென்பதை நான் அறிந்து கொண்டேன். நாங்கள் மூவரும் அங்கிருந்து அரண்மனைக்குச் சென்ற போது குந்தவை, 'அண்ணா! அங்கே ஒரு பெண் நின்றாளே? எவ்வளவு அவலட்சணமாயிருந்தாள் பார்த்தாயா? அவளுடைய முகம் ஏன் அப்படிக் கோட்டான் முகம் மாதிரி இருக்கிறது? அவளுடன் நான் விளையாட வேண்டும் என்கிறாரே, பாட்டி? அவள் முகத்தைப் பார்த்தால் என்னால் சிரிக்காமலிருக்கவே முடியாதே! என்ன செய்வது?'' என்றாள். இதைக் கேட்டதும் எனக்கு ஒரு முக்கியமான உண்மை தெரிய வந்தது. அதாவது பெண்கள் பிறக்கும்போதே பொறாமையுடன் பிறக்கிறார்கள் என்பதுதான். ஒரு பெண் எவ்வளவு அழகுடையவளாயிருந்தாலும் இன்னொரு பெண் அழகாயிருப்பதைக் காணச் சகிப்பதில்லை. எங்கள் குலத்தில் பிறந்த பெண்களுக்குள்ளே என் சகோதரி செளந்தரியம் மிக்கவள் என்பது பிரசித்தமானது. அவளுக்கும் இன்னொரு பெண் அழகாயிருப்பதைக் கண்டு பொறுக்கவில்லை. இல்லாவிட்டால் அந்தப் பெண்ணைக் குறித்து ஏன் அப்படிச் சொல்ல வேண்டும்? நான் என் சகோதரியை இலேசில் விடவில்லை. அவளுக்குக் கோபம் உண்டாக்குவதற்காகவே அந்த இன்னொரு பெண் அழகாய்த்தான் இருக்கிறாள் என்று வற்புறுத்திச் சொன்னேன். இருவரும் அடிக்கடி இதைப் பற்றி விவாதம் செய்து சண்டை பிடித்தோம். எங்கள் சகோதரன் அருள்மொழியோ இந்தச் சண்டையின் காரணத்தை அறியாமல் திகைத்தான். பிறகு சில நாளைக்கெல்லாம் பாண்டிய நாட்டு யுத்தத்துக்குச் சென்ற என் தந்தையோடு நானும் புறப்பட்டுச் சென்றேன். பாண்டிய சைன்யத்தையும் பாண்டியர்களுக்கு உதவியாக இலங்கை அரசன் அனுப்பிய சைன்யத்தையும் பல இடங்களில் முறியடித்தோம். கடைசியில், வீர பாண்டியன் ஓடி ஒளிந்து கொண்டானா அல்லது போர்க்களத்தில் மடிந்தானா என்பது அச்சமயம் தெரியவில்லை. வீரபாண்டியன் மறைந்ததும் பாண்டிய சைன்யத்துக்கு உதவியாக வந்த இலங்கை வீரர்கள் பின்வாங்கி ஓடினார்கள். அவர்களைத் துரத்திக் கொண்டு நாங்கள் சேதுக்கரை வரையில்





சென்றோம். இறந்தவர்கள் போக மற்றவர்கள் கப்பலேறித் தப்பித்துச் சென்றார்கள். அடிக்கடி பாண்டியர்களுக்கு உதவியாகப் படைகள் அனுப்பித் தொல்லைப் படுத்தும் இலங்கை மன்னர்களுக்கு என் தந்தை புத்தி கற்பிக்க விரும்பினார். கொடும்பாளூர்ச் சிறிய வேளாரின் தலைமையில் ஒரு பெரிய படையை இலங்கைக்கு அனுப்புவதென்று தீர்மானித்தார். இதற்கு வேண்டிய கப்பல்களையும் தளவாடங்களையும் சேகரிக்கச் சிறிது காலமாயிற்று. ஆயினும் நாங்கள் அங்கேயே தாமதித்து, கப்பல்களில் படைகளை ஏற்றி அனுப்பினோம். மாதோட்டத்தில் நம் வீரர்கள் பத்திரமாய்ச் சென்று இறங்கினார்கள் என்று தெரிந்த பிறகே அங்கிருந்து சோழ நாட்டுக்குத் திரும்பினோம்.

மீண்டும் நான் பழையாறைக்கு வந்து சேர்வதற்குள் இரண்டு வருஷத்துக்கு மேலாகிவிட்டது. மதுரைப் பக்கத்திலிருந்து வந்திருந்த அர்ச்சகர் பெண்ணை நான் அடியோடு மறந்துவிட்டேன். பழையாறைக்கு வந்து பார்த்தபோது என் சகோதரியும் அப்பெண்ணும் அடையாளம் அறிய முடியாதபடி வளர்ந்திருக்கக் கண்டேன். அவர்களிருவரும் மிக்க சிநேகத்துடன் பழகுவதையும் கண்டேன். நந்தினி வளர்ந்திருந்தது மட்டுமல்ல, ஆடை ஆபரணங்களினாலும் ஜொலித்துக் கொண்டிருந்தாள். இது என் சகோதரியின் காரியம் என்று அறிந்தேன். முன்போலில்லாமல் நந்தினி இப்போது என்னைப் பார்க்கவும் பேசவும் கூச்சப்பட்டாள். அதை நான் போக்குவதற்குப் பாடுபட்டேன். வேறு எதிலும் காணாத இன்பம் அவளுடன் பேசிப் பழகுவதில் அடைந்தேன். இது எனக்கு அந்தச் சிறிய பிராயத்தில் எவ்வளவு வியப்பை அளித்தது என்பதைச் சொல்ல முடியாது. காவேரியில் பெருகி வரும் புது வெள்ளத்தைப் போல் என் உள்ளத்தில் ஏதோ ஒரு புதுமை உணர்ச்சி பொங்கி, வெள்ளமாய்ப் பெருகிக் கொண்டிருந்தது. ஆனால் இது என்னைச் சேர்ந்தவர்கள் யாருக்கும்





பிடிக்கவில்லையென்பதை விரைவிலேயே கண்டு கொண்டேன். நான் வந்ததிலிருந்து குந்தவை அப்பெண்ணிடம் வெறுப்பைக் காட்டத் தொடங்கினாள். ஒருநாள் எங்கள் பாட்டியார் மாதேவடிகள் என்னை அழைத்து, 'நந்தினி அர்ச்சகர் வீட்டுப் பெண்; நீயோ சக்கரவர்த்தி குமாரன்; உங்கள் இரண்டு பேருக்கும் இபபோது பிராயமும் ஆகிவிட்டது. ஆகையால் நந்தினியிடம் நீ பழகுவது உசிதமல்ல' என்று புத்திமதி கூறினார். அதுவரை பாட்டியைத் தெய்வமென மதித்து வந்த நான் அப்போது அவரிடம் கோபமும் அவருடைய வார்த்தையில் அவமதிப்பும் கொண்டேன். அவருடைய புத்திமதியை மீறி நந்தினியைத் தேடிப் பிடித்துப் பேசிப் பழகினேன். இது நெடுங்காலம் நிலைத்திருக்கவில்லை. திடீரென்று ஒருநாள் நந்தினியும், அவளுடைய பெற்றோர்களும் பாண்டிய நாட்டில் அவர்களுடைய ஊருக்குப் புறப்பட்டுச் சென்று விட்டார்கள் என்று தெரிந்தது. அப்போது எனக்குத் துக்கம் பொங்கி வந்தது; கோபம் என்னை மீறி வந்தது. துக்கத்தை என் மனதிற்குள் வைத்துக் கொண்டு கோபத்தை என் சகோதரியின் பேரில் காட்டினேன். நல்லவேளையாகச் சில நாளைக்கெல்லாம் நான் வடக்கே பிரயாணப்பட நேர்ந்தது. திருமுனைப்பாடியையும் தொண்டை மண்டலத்தையும் ஆக்கிரமித்திருந்த இராஷ்டிர கூடப் படைகளை விரட்டுவதற்காகப் புறப்பட்ட சோழ சைன்யத்துடன் நானும் புறப்பட்டு வந்தேன். அப்போதுதான் நீயும் நானும் சந்தித்தோம். இணை பிரியா சிநேகிதர்களானோம்.

"மலையமான் அரசருடைய உதவியுடன் நீயும் நானும் இராஷ்டிர கூடப் படைகளுடன் போரிட்டோம். பாலாற்றுக்கு வடக்கே அவர்களைத் துரத்தி அடித்துக் காஞ்சி நகரையும் கைப்பற்றினோம். அச்சமயத்தில் இலங்கையிலிருந்து கெட்ட செய்தி வந்தது. நமது படை அங்கே முறியடிக்கப்பட்டதென்றும் கொடும்பாளூர் சிறிய வேளார் இறந்து விட்டார் என்றும் தெரிந்தன. இதைக் கேட்டுவிட்டு, அதுவரையில் பாலைவனத்தின் மத்தியில் பாறைக் குகையில் ஒளிந்திருந்த வீரபாண்டியன், புற்றிலிருந்து பாம்பு புறப்படுவது போல் வெளிப்பட்டு வந்தான். மறுபடியும் சைன்யத்தைத் திரட்டிக் கொண்டு மதுரையைக் கைப்பற்றி மீனக் கொடியை ஏற்றினான். இதையெல்லாம் கேட்டபோது உனக்கும் எனக்கும் எப்படிப்பட்ட வீராவேசம் உண்டாயிற்று என்பது ஞாபகம் இருக்கிறதல்லவா? நாம்

இருவரும் உடனே புறப்பட்டுப் பழை யாறைக்குச் சென்றோம். என் தந்தை சக்கரவர்த்திக்கு அப்போதே உடல் நலம் கெடத் தொடங்கியிருந்தது. கால்களின் சுவாதீனம் குறைந்திருந்தது. ஆயினும் சக்கரவர்த்தி பாண்டிய நாட்டுப் போர்க் களம் புறப்படச் சித்தமாயிருந்தார். வேண் டாம் என்று நான் அவரைத் தடுத்தேன். பாண்டிய சைன்யத்தை முறியடித்து மதுரையை மீண்டும் கைப்பற்றி வீர பாண் டியனுடைய தலையையும் கொணராமல் சோழ நாட்டுக்குத் திரும்புவதில்லை என்று என் தந்தை முன்னால் பிரதிக்ஞை செய்தேன். அப்போது நீயும் என்னுடன் இருந்தாய். என் பிரதிக்ஞையை ஒப்புக் கொண்டு என் தந்தை நம்மைப் பாண்டிய நாட்டுப் போர்க்களத்துக்கு அனுப்பினார். ஏற்கெனவே படைத் தலைமை வகித்துச் சென்றிருந்த கொடும்பாளூர் பூதி விக்கிரம கேசரியின் தலைமையில் நாம் போர் செய்ய வேண்டும் என்று பணித்தார். அதற்குச் சம்மதித்து நாம் சென்றோம். வழியில் பெரிய பழுவேட்டரையரைச் சந்தித்தோம். அவரைப் படைத் தலை வராக்காமல் கொடும்பாளூர் வேந்தரை நியமித்ததில் பழுவேட்டரையருக்கு அதிருப்தி உண்டாகியிருந்தது என்பதை அறிந்தோம்.

"நம்முடைய போர் ஆவேசத்தைக் கண்டு சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி யுத்தம் நடத்தும் பொறுப்பை நம்மிடமே ஒப்புவித்துவிட்டார். நண்பா! அந்த யுத்தத்தில் நீயும் நானும் நம்ப முடியாத வீரச் செயல்களைப் புரிந்தோம் என்று பெருமை கொள்வதில் யாதொரு தவறும் இல்லை. பாண்டிய சைன்யத்தை முறி யடித்து மதுரையைக் கைப்பற்றினோம். அத்துடன் நாம் திருப்தி அடைந்துவிட வில்லை. மறுபடியும் பாண்டிய சைன்யம் தலையெடுக்க முடியாதபடி அதை நிர் மூலம் செய்துவிட விரும்பினோம். சிதறி ஓடிய வீரர்களை நாலா பக்கத்திலும் துரத்திச் சென்று ஒருவர் மிச்சமில்லாமல் துவம்ஸம் செய்துவிடும்படி நம் படை வீரர்களுக்குக் கட்டளையிட்டோம். நாம் மட்டும் ஒரு வலிமையான படையுடன் பாண்டியனைத் துரத்திக் கொண்டு போனோம். உயரமாகப் பறந்த மீனக் கொடி பாண்டியன் எந்தத் திசையை நோக்கி ஓடுகிறான் என்பதை நமக்குக் காட்டியது. அந்தத் திசையை நோக்கி நாமும் சென்று அவனைப் பிடித்தோம். வீர பாண்டியனைச் சுற்றிலும் ஆபத்து தவிகள் மதில் சுவரைப் போல் பாதுகாத்து நின்றார்கள். சோழ நாட்டு வேளக்காரப் படையைக் காட்டிலும் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் ஒருபடி மேலான வீரர்கள். பின் வாங்கி ஓடுவதில்லையென்றும் தங்கள் உயிரை அளித்தாவது பாண்டிய மன்னனைக் காப்பாற்றுவோம் என்றும் சபதம் செய்தவர்கள். அது சாத்தியப் படாமற் போய், பாண்டிய மன்னனுக்கு ஆபத்து வந்து விட்டால், தங்கள் தலை யைத் தாங்களே வெட்டிக் கொண்டு பலி கொடுப்போம் என்று சபதம் பூண்டவர் கள். அப்படிப்பட்ட வீரர்கள் தங்கள் கடனை நிறைவேற்றினார்கள். ஒருவர் மிச்சமின்றி அவர்களைக் கொன்று தீர்த் தோம். இறந்தவர்களின் சவங்கள் மலை மலையாய்க் குவிந்தன. ஆனால் அவர் களுக்கு நடுவில் வீர பாண்டியனை நாம் காணவில்லை. மீனக் கொடியைப் பார்த்து நாம் ஏமாந்து போனோம். மீனக் கொடி யைத் தாங்கிக் கொண்டு யானை ஒன்று நின்றது. ஆனால் அதன் பேரிலோ, பக்கத்திலோ பாண்டிய மன்னனைக் காணவில்லை! வீரபாண்டியன் போர்க் களத்திலிருந்து தப்பி ஓடி ஒளிந்து கொள்ளுவதில் சமர்த்தன் அல்லவா? இப்போதும் அவன் ஓடியிருக்கலாம் என்று சந்தேகித்து, படைகளைப் பிரித்து நாலாபுறமும் அனுப்பினோம்.

"வைகை நதியின் இரு கரை களோடு நீங்கள் எல்லோ ரும் விரைந்து சென்றீர்கள். நானும் சும்மா இருக்கவில்லை. வைகை நதியில் இறங்கி மணலில் நடந்து தெற்கே சென்றேன். ஒரு தனிக் குதிரையின் குளம்படி மணலில் சில இடங் களில் பதிந்திருந்தது. குதிரை போன வழியில் மணலில் இரத்தக் கறையும்


காணப்பட்டது. அதைப் பிடித்துக் கொண்டு நான் போனேன். வைகை யாற்றின் மத்தியில் ஒரு தீவு போல் அமைந்திருந்த சோலையை அடைந்தேன். அந்தச் சோலைக்குள்ளே திருமாலின் கோவில் ஒன்றிருந்தது. அதையொட்டி இரண்டொரு அர்ச்சகர் வீடுகள் இருந்தன. பெருமாள் பூஜைக்குரிய பூ மரங்கள் அச்சோலையில் ஏராளமாக இருந்தன. ஒரு சிறிய தாமரைக் குளம் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தது. நண்பா! உனக்கு ஒருவேளை ஞாபகம் இருக்கலாம். அந்தச் சோலையைச் சுட்டிக்காட்டி அதில் நம் வீரர்கள் யாரும் தப்பித் தவறிக்கூடப் பிரவேசிக்கக் கூடாது என்று நான் கண்டிப்பான கட்டளையிட்டிருந்தேன். இதற்குக் காரணம், அந்தப் பெருமாள் கோவிலின் பூஜைக்குப் பங்கம் எதுவும் வரக் கூடாது என்று நான் எண்ணியது மாத்திரம் அல்ல. அங்கே இருந்த பட்டரின் வீட்டில் என் உள்ளத்தைக் கவர்ந்து என் நெஞ்சில் கோவில் கொண்ட பெண்ணரசி இருந்தது தான். ஒருநாள் அந்தச் சோலைக்குள் நான் புகுந்தபோது நந்தினியைப் பார்த்து விட்டேன். அவளுடைய கோலம் இப்போது சிறிது மாறிப் போயிருந்தது. தலைக் கூந்தலை ஆண்டாள் விக்கிரகத்தைப் போல் முன்னால் மகுடமாகக் கட்டி அதில் பூமாலை சுற்றியிருந்தாள். கழுத்திலும் பூமாலை தரித்திருந்தாள். 'இது என்ன கோலம்?' என்று நான் கேட்டேன். அவள் என்னைப் பிரிந்து வந்த பிறகு மானிடர் யாரையும் மணப்பதில்லை என்றும் ஆண்டாளைப் போல் கண்ணனையே மணப்பது என்றும் சங்கல்பம் செய்து கொண்டதாகக் கூறினாள். இது வெறும் பைத்தியக்காரத்தனமாக எனக்குத் தோன்றியது. மானிடப் பெண்ணாவது, கடவுளை மணப்பதாவது? – ஆயினும் அதைப் பற்றி அச்சமயம் விவகாரம் செய்ய நான் விரும்பவில்லை. 'யுத்தம் முடியட்டும்; பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று எண்ணினேன். அவளுக்கு ஏதேனும் உதவி வேண்டுமா என்று கேட்டேன். 'உங்கள் போர் வீரர்கள் யாரும் இங்கு வராதபடி செய்யுங்கள். இங்கே என் வயதான தாய் தந்தையர் மட்டுந்தான் இருக்கிறார்கள். அவர்கள் கண் தெரியாதவர்கள். திடகாத்திரனான என் தமையன் ஒருவன் உண்டு; அவன் இப்போது திருப்பதி யாத்திரை போயிருக்கிறான்!' என்றாள். அவள் கேட்டபடி அங்கே நம் வீரர் யாரும் வராமல் பார்த்துக் கொள்வதாக நான் வாக்குறுதி கொடுத்துவிட்டுத் திரும்பினேன். அப்புறம் இரண்டு மூன்று தடவை அவளைப் போய்ப் பார்த்தேன். அவளிடத்தில் நான் கொண்ட பழைய மோகம் ஒன்றுக்குப் பத்து மடங்கு பெருகிக் கொழுந்துவிட்டெரிந்தது. எனினும் பொறுமையைக் கடைப் பிடித்தேன். வந்த காரியத்தை முதலில் முடிக்க வேண்டும். வீர பாண்டியனுடைய தலையுடன் பழையாறைக்குப் போக வேண்டும்; அதற்குப் பிரதியாக நந்தினியை மணந்து கொள்ளத் தந்தையிடம் அனுமதி கேட்பது என்று முடிவு செய்தேன்.

"இப்படி நான் தீர்மானித்திருந்த நிலையில், ஒற்றைக் குதிரையின் குளம்படி அந்தச் சோலைக்குள்ளே போயிருப்பதைக் கண்டதும் அளவிலாத வியப்பும் ஆத்திரமும் கொண்டேன். மேலும் சென்று பார்த்தபோது, அடர்ந்த மரங்களின் மறைவில் குதிரை கட்டியிருப்பதைக் கண்டேன். எனவே தப்பி வந்தவன் அந்தக் குடிசை வீடுகளில் ஒன்றில்தான் இருக்க வேண்டும். நந்தினியின் வீட்டுக்குச் சென்று பலகணி வழியாகப் பார்த்தேன். நண்பா! அங்கே நான் கண்ட காட்சி பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் என் நெஞ்சில் தீட்டியது போலப் பதிந்திருக்கிறது. ஒரு பழைய கயிற்றுக் கட்டிலில் வீரபாண்டியன் படுத்துக் கிடந்தான். நந்தினி அவனுக்குத் தாகத்துக்குத் தண்ணீர் கொடுத்துக் குடிக்கச் செய்தாள். அவன் முகம் முன் எப்போதுமில்லாத காந்தியுடன் ஜொலித்தது. அவள் கண்களில் இரண்டு துளி கண்ணீர் ததும்பி நின்றது. என்னை மீறி வந்த ஆத்திரத்துடன் கதவைப் படார் என்று உதைத்துத் திறந்து கொண்டு உள்ளே போனேன். காயங்களைக் கட்டிக் கொண்டிருந்த நந்தினி என்னைக் கண்டதும் அதை

நிறுத்தி விட்டு முன்னால் வந்தாள். சாஷ்டாங்கமாக என்னை நமஸ்கரித்து எழுந்தாள். கை கூப்பிய வண்ணம், 'ஐயா! நீங்கள் என் பேரில் ஒருநாள் வைத்திருந்த அன்பின் பேரில் ஆணையிட்டு வேண்டுகிறேன். இவரை ஒன்றும் செய்யாதீர்கள்! படுகாயப் பட்டுக் கிடக்கும் இவரை உங்கள் கையால் கொல்ல வேண்டாம்!' என்றாள்.

நான் தட்டுத் தடுமாறி, 'உனக்கும் இந்த





மனிதனுக்கும் என்ன சம்பந்தம்? எதற்காக அவன் உயிரைக் காப்பாற்றும்படிக் கேட்கிறாய்?' என்றேன்.

"இவர் என் காதலர்; இவர் என் தெய்வம்; இவர் என்னை மணந்து கொள்ளச் சம்மதித்திருக்கும் தயாளன்!' என்றாள் நந்தினி.

"காயம் பட்டிருந்த வீரபாண்டியனைப் பார்த்துக் கொஞ்சம் உண்டாகியிருந்த இரக்கமும் என்னிடமிருந்து அகன்று விட்டது. இந்தப் பாதகன் சண்டாளன் - எப்படி என்னைப் பழி வாங்கி விட்டான்! என் இராஜ்யத்தையே கைப்பற்றியிருந்தாலும் பாதகம் இல்லை; என் உள்ளத்தில் குடி கொண்டிருந்த பெண்ணரசியையல்லவா அபகரித்து விட்டான்? இவனிடம் எப்படி இரக்கம் காட்ட முடியும்? முடியவே முடியாது.

"நந்தினியை உதைத்துத் தள்ளி விட்டு அவளைத் தாண்டிக் கொண்டு சென்று வாளின் ஒரே வீச்சில் வீர பாண்டியனுடைய தலையை வெட்டி வீழ்த்தினேன். அந்த மூர்க்க பயங்கர செயலை இப்போது நினைத்துப் பார்த்தால் எனக்கு வெட்கமாயிருக்கிறது. ஆனால் அச்சமயம் யுத்த வெறியோடு கூடக் குரோத வெறியும் என்னைப் பிடித்திருந்தது. அந்த ஆவேசத்தில் வீர பாண்டியனைக் கொன்றுவிட்டு அந்த வீட்டின் வாசற்படியைத் தாண்டும் போது நந்தினியை ஒருமுறை திரும்பிப் பார்த்தேன். அவளும் என்னைக் கண் கொட்டாமல் பார்த்தாள். அதைப் போன்ற பார்வை இந்தப் பூவுலகில் நான் கண்டதில்லை. அதில் காமக் குரோத லோப மோக மத மாற்சரியம் என்னும் ஆறு வித உணர்ச்சிகளும் அத்தனை நெருப்பு ஜுவாலைகளாகக் கொழுந்து விட்டு எரிந்தன. அதன் பொருள் என்னவென்று எத்தனையோ தடவை எண்ணி எண்ணிப் பார்த்தும் எனக்கு இன்றுவரை தெரியவில்லை!

"அதற்குள் என்னைத் தேடிக் கொண்டு நீயும் இன்னும் பலரும் வந்து விட்டீர்கள். வீரபாண்டியனுடைய தலையற்ற உடலையும் இரத்தம் சிந்திய தலையையும் பார்த்துவிட்டு எல்லோரும் ஜயகோஷம் செய்தீர்கள். ஆனால் என்னுடைய நெஞ்சில் விந்திய பர்வதத்தை வைத்ததுபோல் ஒரு பெரும் பாரம் அழுத்திக் கொண்டிருந்தது....

(தொடரும்)

கல்கி கலெக்ஷன்

ஆடல் பாடல்

நீலக் கடற்கரையின் ஓரத்திலே சோலை சூழ்ந்த பிரதேசத்திலே வாழ்வோர் அதிகாலையில் துயில் நீங்கி எழும் போது கடல் அலைகளின் ஓங்கார ஒலி முழக்கத்தைக் கேட்பார்கள். பிறகு புள்ளினங்களின் மதுர கீதம் அவர்கள் செவியில் ஒலிக்க ஆரம்பிக்கும். முதலில், ஒவ்வொரு குரலாகக் கேட்ட பட்சிகளின் கானம் விரைவில் பலப் பல குரல்களிலிருந்து ஏக காலத்தில் திரண்டு எழும் அற்புத கோஷ்டி கானமாக மாறும். இந்தப் புள்ளினங்களின் கீதப் பிரவாகத்துக்குத் திவ்யமான சுருதி கொடுப்பது போலிருக்கும், 'வெள்ளலைக் கைகளைக் கொட்டி முழக்கும்' சமுத்திரத்தின் ஓசை. இதையெல்லாம் பல காலம் நன்கு கேட்டு அனுபவித்து ரஸித்த இசைக் கவி, ஸ்வாமி சுத்தானந்த பாரதியார், - ஒரு தமிழ்க் கீர்த்தனத்தில் பின்வருமாறு தமது ஆனந்தத்தை வெளியிட்டிருக்கிறார்:-

பல பல என்னுங் காலை
பாடும் புள்ளோசை போலும்
பாற்கடல் உள்ளம் விம்மி
ஆர்க்கும் கர்ஜனை போலும்.



பூர்வி கல்யாணி ராகத்தில் ''ஜங்கார சுருதி செய்குவாய்!'' என்று ஆரம்பிக்கும் கீர்த்தனத்தில், சரணத்தின் முதல் இரண்டு அடிகள் மேற்கண்டவை. இந்த வரிகளை வைத்துக் கொண்டு ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி சென்ற 20-ந் தேதி சென்னை கோகலே மண்டபத்தில் நடந்த கச்சேரியில் நிரவல் செய்தார். அச்சமயம் பல பல புள்ளினங்களின் இனிய குரல்கள் ஒலிப்பதையும், கடலலைகள் ஆர்த்து முழங்குவதையும் சபையோர் செவி நிறையக் கேட்டு அனுபவித்தார்கள். எம்.எஸ்.ஸின் கான முழக்கத்துடன் சபையோரின் 'ஹா ஹா'கார முழக்கமும், கரகோஷ முழக்கமும் சேர்ந்து கொண்டன. ஒரே ஆனந்தக் களிப்பாயிருந்தது.

மேற்படி நிரவலைக் கேட்டுக் கொண்டிருந்தபோதுதான் இந்தக் கச்சேரியைப் பற்றி எழுதியாக வேண்டுமென்றும் தீர்மானித்தேன். கீர்த்தனத்தில் நிரவல் செய்யும் பகுதியானது பொருள் விளங்கும் இனிய சொற்களால் ஆகிக் கவிதா ரஸமும் பொருந்தியிருந்தால் அதைப் பூரணமாக அனுபவிக்கலாம் என்னும் நமது கட்சிக்கு இவ்வளவு பெரிய அத்தாட்சி கிடைத்திருக்கும்போது, நேயர்களுக்கு அதை எவ்விதம் தெரிவிக்காமலிருக்க முடியும்?

பூர்விகல்யாணி ராகத்தில் கும்பகோணம் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளையினால் மெட்டு அமைக்கப்பட்ட இந்தக் கீர்த்தனம், மிக உயர்ந்த மத்திய கால தெலுங்கு கீர்த்தனங்களுக்கு இணையாக விளங்குகிறது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றப்படி, அன்று ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மியின் கச்சேரி ''மகத்தான கச்சேரி'' என்று சொல்லக் கூடியதாயமைந்தது. தோடி வர்ணம் ஆரம்பித்தது முதல் கடைசியில் மங்களம் பாடி முடிக்கும் வரையில் கச்சேரி உச்ச நிலையிலிருந்து கீழிறங்கவேயில்லை.

அமரர் கல்கி

ராக ஆலாபனத்தில் கரகரப்ரியா மிக உயர்வாயிருந்தது. சங்கராபரணம் பிரமாதமாயிருந்தது; தடவைக்குத் தடவை இந்த ராகத்தை எம்.எஸ். ஆலாபனம் செய்வது பிரமாதமாகிக் கொண்டுதான் வருகிறது. இந்த ஆலாபனத்தின்போது ஒரு சமயம் ஒரு சுழட்டல் பூர்த்தியாவதற்குள் மூன்று தடவை கரகோஷம் வந்தது என்றால், ஆலாபனம் எவ்வளவு உயர்தரமாயிருந்திருக்குமென்று ஊகிக்கலாம். இடையிடையே கார்வை கொடுத்துக் கொண்டு மேலே படிப்படியாகச் சென்று, மேல் ஸ்தாயியில் வட்டமிட்டு நின்று, சங்கதிகளைப் பொழிந்து, கடைசியில் பஞ்சமத்தைத் தொடும்போது யாருக்கும் புளகாங்கிதம் உண்டாகாமலிருக்க முடியாது.

பல்லவிக்கு முன்னால் பாடிய ஒன்பது கீர்த்தனங்களில் ஐந்து தமிழ்; ஒன்று சமஸ்கிருதம்; மூன்று தெலுங்கு. பல்லவிக்குப் பிறகோ அநேகமாக எல்லாம் தமிழ்மயம். ஆனாலும், சபையோரின் உற்சாகத்தைப் பார்த்தபோது, "இப்படித் தமிழ்ப் பாட்டாயிருக்கிறதே!" என்று யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. "யாமறிந்த மொழிகளிலே" என்னும் பாரதியாரின் பாட்டைக் கச்சேரியின் கடைசி வரையில் தள்ளி வைப்பது பொறுக்காமல் சிலர் பல்லவி முடிந்ததுமே கேட்கத் தொடங்கினார்கள்!

பல்லவிக்குப் பிறகு பாடிய பாட்டுக்களில் "சின்னஞ் சிறு கிளியே" என்னும் கண்ணன் பாட்டு சுமாக ராகத்தில் கீத இன்பத்துக்கு எல்லையாக அமைந்தது. ஆனால், "ஆடு ராட்டே" பாடும்போதுதான் சபையோரின் உற்சாகம் எல்லையையும் மீறியது! "மகாத்மா காந்திக்கு ஜே!" "வந்தே மாதரம்" முதலிய கோஷங்கள் மண்டபம் நிறைய முழங்கி, இது சங்கிதக் கச்சேரியா, தேசியக் கூட்டமா என்ற சந்தேகத்தை உண்டு பண்ணியது. "சுயராஜ்யம் வந்ததென்று ஆடு ராட்டே" என்று பாடியபோது, அரசியல் சுயராஜ்யம் இன்னும் வராது போனாலும், சங்கித சுயராஜ்யம் வந்து விட்டதாகச் சபையோர் குதூகலப்பட்டதாகத் தோன்றியது!

"சுயராஜ்யம் வந்ததென்று ஆடு ராட்டே" என்று பாடியபோது, அரசியல் சுயராஜ்யம் இன்னும் வராது போனாலும், சங்கீத சுயராஜ்யம் வந்து விட்டதாகச் சபையோர் குதூகலப்பட்டதாகத் தோன்றியது!

ஸ்ரீ வரகூர் முத்துஸ்வாமி ஐயரின் பிடில் வாசிப்பில் பிரதானமான அம்சம் சுருதி சுத்தமும் இனிய ஓசையுமாகும். அந்த இரண்டும் அன்றையக் கச்சேரியிலும் அமைந்திருந்தன. 'மூர்த்தி சின்னதானாலும் கீர்த்தி பெரிது'' என்னும் பழமொழிக்கு உதாரணமாகிவிட்ட மிருதங்கம் டி.கே. மூர்த்தியின் வாசிப்பில் ஜீவன் ததும்பிற்று. கோகலே மண்டபத்தில் மிருதங்கம் தனி ஆவர்த்தனத்துக்குச் சாதாரணமாக முடிவிலே கரகோஷம் பெறுவது ரொம்ப சிரமம்; பாதியிலேயே கரகோஷம் ஆரம்பமாவது வழக்கம்! மூர்த்தியின் தனி ஆவர்த்தனத்துக்கோ, ஒவ்வொரு தடவையும் கடைசியிலே கரகோஷம். மேலே இருந்து ஒருவர் "பலே மணி!" என்று கூச்சல் போட்டதில் அவ்வளவு தவறிருப்பதாகத் தோன்றவில்லை.

இந்தக் கச்சேரியின்போது கோகலே மண்டபத்தில் எழுந்த ஜங்கார சுருதியும், சங்கிதாமிர்தமும் அங்கே இன்னும் பல தினங்களுக்குக் குமுறிக் கொண்டிருக்குமென்று எதிர்பார்க்கிறேன். ○

(கல்கி, அக்டோபர் 1, 1942 இதழில் 'கர்நாடகம்' என்ற பெயரில் அமரர் கல்கி எழுதிய இசை விமர்சனம்.)

அஞ்சலி டெண்டுல்கரின் பேட்டி:

அஞ்சலி டெண்டுல்கர் – சச்சினின் காதல் மனைவி. ஓர் உலக சூப்பர் ஸ்டாரைத் தம் கைப்பிடிக்குள் வைத்திருக்கும் இந்த மும்பைப் பறவை, டெண்டுல்கரை விடச் சற்றே வயதில் மூத்தவர்! காதலுக்கு இதெல்லாம் ஒரு பொருட்டா? சமீபத்தில் சென்னை வந்திருந்த அஞ்சலியைச் சந்தித்தோம். பந்தா இல்லாத பேச்சு. காதல் நினைவுகளில் மூழ்கும் போது கவியும் வெட்கம். பளிச் புன்னகை! இதோ, அஞ்சலி!

"உங்கள் காதல் அத்தியாயத்திலிருந்து ஆரம்பிக்கலாமா? எப்படி மலர்ந்தது அது?"

"சச்சின் முறைப்படி கிரிக்கெட் கற்றுக் கொள்ள வழி செய்தவர், அவரது அங்கிள்தான். அவர் வீட்டுக்கு சச்சின் அடிக்கடி வருவார். நான் இருந்தது, அந்த வீட்டுக்கு எதிர் வீட்டில். போதாதா? சச்சின் அப்போது பெரிய ஸ்டார் இல்லை. மும்பை ரஞ்சிப் போட்டிகளில்தான் ஆடிக் கொண்டிருந்தார். ஆனால், வெகு விரைவில் தேசிய அணியில் நுழைந்து விடுவார் என்று எல்லாரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நான் அவர் வரும்போது ஜன்னல் வழியே பார்ப்பதோடு சரி. டீன்-ஏஜின் தொடக்க காலம் அது! மனத்தில் தோன்றிய உணர்வு, காதல்தானா என்றெல்லாம் தெரியவில்லை.

"இரண்டு, மூன்று மாதங்களில் அவர் இந்திய அணியில் நுழைந்து, தொடக்கத்திலேயே சதம் அடித்து, ரொம்ப பாப்புலர் ஆகி விட்டார். அதன்பின் ஒருதரம் அவர் தம் அங்கிள் வீட்டுக்கு வந்த போது, சச்சினின் மாமி முதன் முதலாக அவரை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். 'ஓ- இந்தப் பெண்ணை எனக்குத் தெரியுமே... நான் பார்த்திருக்கிறேனே...' என்று அவர் சொன்னபோது எனக்குள் சிறகடித்தது!

"அவர் போய் விட்டார். ஆனால் அந்தச் சில நிமிடங்கள் அவருடன் இருந்ததை என் வாழ்வின் மகத்தான நேரம் என்று கருதினேன்! மறுபடி மறுபடி அவர் ஞாபகம்! 'நான் சச்சினுடன் பேசினேன்; எனக்கு அவரைத் தெரியும்' என்று என் தோழிகளிடம் கூடச் சொல்ல விரும்பவில்லை. 'சச்சின் எனக்கே எனக்கானவர்; அவருடன் நான் பேசியதைச் சொல்லி, தோழிகள் பொறாமைப்படுவதைக் கூட என்னால் தாங்க முடியாது' என்று தோன்றியது.

"மறுபடி அவரை எப்போது பார்ப்பேன்? எப்போது பார்ப்பேன்? என்று மனம் அடித்துக் கொண்டது. அவரோ ஆஸ்திரேலியா டூருக்குப் போய் விட்டார்! அதுவரை கிரிக்கெட்டே பார்க்காத நான், அந்த ஸீரிஸை மட்டும் விழுந்து விழுந்து பார்த்தேன்.

"ஒருவழியாக சச்சின் ஊர் திரும்பியதும் எப்படியோ முயன்று அவரது போன் நம்பரை வாங்கி விட்டேன். தினம் அதிகாலை போன் செய்து, 'சச்சின் ஐ லவ் யூ' என்று சொல்லி விட்டு வைத்து

• மாமனார் + கணவருடன் அஞ்சலி



காதல் கனிந்தது — கிரகாம்பெல் தயவில்!

விடுவேன். சுமார் பத்து நாட்கள் இப்படி ஆகியிருக்கும்.

"அடுத்த முறை அவர் தம் அங்கிள் வீட்டுக்கு வந்த போது, 'நான் இன்று இங்குதான் படுத்துக் கொள்ளப் போகிறேன். தினம் காலை நாலு மணிக்கு யாரோ ஒரு பெண் போன் செய்து, பாடாய்ப்படுத்துகிறாள்; நேரில் பார்த்தால் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது' என்று அங்கிளிடம் சொல்லிக் கொண்டிருந்ததை நான் அருகில் இருந்து கேட்டேன். நமுட்டுச் சிரிப்பு எனக்கு!

"அன்று இரவு, அங்கிள் வீட்டுக்கு போன் செய்து அவருடன் பேசினேன். 'நான் அஞ்சலி. நாளைக் காலை நான் உங்கள் முன் நிற்பேன். என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்' என்றேன் சிரித்தபடி. அவரைப் பேச விடாமல் போனை வைத்து விட்டேன்.

"ஆனால் மறுநாள் காலை ஒரு சந்தோஷப் புயல் என்னைத் தாக்கியது. சச்சினே போன் செய்து, 'I too love you' என்று சொல்லி விட்டார்! உலகமே என் காலடிக்கு வந்து விட்டது."

"திருமணத்துக்கு முன்னால் எங்காவது வெளியே போயிருக்கிறீர்களா?"



"அதிகபட்சம் டெலிபோன் மூலம் வளர்ந்த காதல்தான். சந்தித்துப் பேசவெல்லாம் அவருக்கு ஏது நேரம்? எப்போதும் டூர், டூர், டூர்! ஆனால் மும்பையில் இருந்தால் சந்திக்கத் தவற மாட்டோம். காரை எடுத்துக் கொண்டு நூறு கி.மீ. தள்ளிப் போய், காரிலேயே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்துவிட்டுத் திரும்புவோம்."

"திருமணத்துக்கு எதிர்ப்பு இருந்ததா?"

"அவர் தரப்பில் க்ரீன் சிக்னல்தான். எங்கள் வீடுதான் கொஞ்சம் முரண்டு பிடித்தது. காரணம் என் அப்பாவுக்கு கிரிக்கெட் பிடிக்காது. கிரிக்கெட் வீரர்களெல்லாம் அத்தனை உத்தமர்கள் இல்லை என்றொரு அபிப்பிராயம் அவருக்கு. என் அம்மாதான் அவரை சரிக்கட்டி, எங்கள் திருமணத்துக்குச் 'சம்மதிக்க வைத்தார்."

"இப்போது வாழ்க்கை எப்படி இருக்கிறது?"

"நிறைவாக. பெரிய புகழ்மிக்க வீரரின் மனைவி அல்லவா இப்போது நான்? ஆனால் இதற்குக் கொடுக்கிற விலையும் அதிகம். நினைத்த இடத்துக்கு இஷ்டப்படிப் போக 'முடியாது. வீட்டு விசேஷங்களுக்கெல்லாம் கூட அவர் இருக்க மாட்டார். அவ்வளவு ஏன்? ஷார்ஜாவிலிருந்து சமீபத்தில் திரும்பியதும் உங்களுக்கு ஒரு பேட்டி அளித்தாரல்லவா? அதில் கூட 'ஒரு மாதம் கம்ப்ளீட் ரெஸ்ட்; குடும்பத்துடன் ஜாலி டூர் போகப் போகிறேன்' என்று சொல்லியிருந்தாரே! நான் கூட ரொம்ப சந்தோஷப்பட்டேன். ஆனால் நடந்தது என்ன தெரியுமா? ஒரு நாள் கூட வெளியே போக முடியவில்லை! ரெஸ்டில் இருக்க விரும்பியவரை வலுக்கட்டாயமாக கென்யா – பங்களாதேஷுடன் ஆடப் பிடுங்கிக் கொண்டு போய் விட்டார்கள். இதோ, இன்று சென்னையில்! மாலை சிலோனுக்குப் பறந்து விடப் போகிறார். என்ன ஒரு விஷயம்... இது எனக்கு மட்டும் இல்லையே! எல்லா பிரபல மானவர்களின் மனைவியரும் அந்தப் பெருமைக்குக் கொடுக்கிற விலை இதுதான்!" ●

சந்திப்பு : **நந்தினி**

பட்டுக்கோட்டை பிரபாகர்

காதல் டைரிக் குறிப்பு:

என்னை நேரில் சந்திக்கும் உன்னை விட என் மனத்தில் சந்திக்கும் உனக்குத் தான் சக்தி அதிகம் என்பது உனக்குத் தெரியுமா?

நான் உன்னை ஆராதிக்கிறேன்

அரவிந்த் சோர்வோடு தன் பிரஸ்ஸுக்குத் திரும்பியபோது, அலுவலக அறையில் ஒரு புத்தகம் படித்தபடி காத்திருந்த பிருந்தாவைப் பார்த்து ஆச்சரியப்பட்டான்.

அவசரமாக கர்சீப் எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டு உள்ளே வந்து, "ஹலோ பிருந்தா..." என்றான்.

"ஹலோ" என்று புன்னகைத்தாள், "ரெண்டு மணி நேரமா உங்களுக்காக நான் வெய்ட் பண்ணிட்டு இருக்கேன். சார் பயங்கர பிஸியாய்ட்டிங்க போலிருக்கு."

"அப்படியெல்லாம் இல்லை" என்று சிரிக்க முயன்றான். அறையின் கதவை மூடிவிட்டு வந்தமர்ந்தான். "ஹவ் ஆர் யு பிருந்தா?"

"ஃபைன். நீங்க ஏன் டல்லா இருக்கீங்க?"

"வெயில்ல வெளில போய்ட்டு வந்தது. ஏதாச்சும் சாப்பிடலாமா? வாங்கிட்டு வரச் சொல்லட்டுமா?"

"வேணாம். என்னாச்சு? மிஷின்ல ஏதோ மேஜர் ரிப்பேராமே. ஏன் மிஷின் ஓடலைன்னு கேட்டேன். உங்க ஸ்டாஃப் சொன்னாரு."

"ஆமாம்" என்று பெருமூச்சு விட்டான்.

"ஏன் சரி பண்ணாம இருக்கீங்க? பார்ட்ஸ் எதுவும் கிடைக்கலையா?"

சில விநாடிகள் அமைதியாக பேப்பர் வெய்ட்டை உருட்டினான்.

"பிருந்தா, நான் உன்கிட்ட பொய் சொல்ல விரும்பலை. இப்ப பெரிய சிக்கல்ல மாட்டிக்கிட்டிருக்கேன். சூழ்நிலைகள் திடீர்னு எனக்கு விரோதமா மாறிப் போச்சு. ஒரு கவர்ன்மெண்ட் ஆர்டர் வாங்கறதுக்காக என் ஃப்ரெண்டு ஒருத்தனை நம்பி ஒரு லட்சம் லஞ்சம் கொடுத்தேன். அந்தப் பணம் இப்போ திருப்பிக் கிடைக்கிற மாதிரி இல்லை. மிஷினை சரி செய்யணும்னா ஒண்ணே கால் லட்சம் ஆகும். என் பைக்கை முப்பதாயிரத்துக்கு வித்துட்டேன். பாக்கிப் பணம் புரட்ட முடியலை. வாங்கின ஆர்டர்லை அடிச்சிக் கொடுக்க முடியாம கஸ்டமர்ஸ்கிட்ட கெட்டப் பேரு. மிஷினை எப்படியும் ஓட்டியாகணுமேன்னு ஏற்கெனவே கடன் கொடுத்த சேட்டுக்கிட்டயே மேற்கொண்டு ஒரு லட்சம் கேட்டுப் பார்க்கலாம்னு போனேன். அது ரொம்பப் பெரிய தப்பாப் போச்சி."

"என்ன சொல்றார்?"

லால்சந்த் சேட் முற்றிலும் தொழிலை மாற்றிக் கொடுத்துவிட்டு விலகிக் கொள்ளச் சொன்னதை விரிவாகச் சொன்னான்.

"என்ன அரவிந்த், எவ்வளவு நம்பிக்கையோட ஆரம்பிச்சீங்க? ஏன் இப்படி எல்லாம் நடக்குது?"

"தெரியலை. மனசாலகூட நான் யாருக்கும் துரோகம் செஞ்சதில்லை பிருந்தா. எனக்கு ஏன்..."

அரவிந்திற்கு தொண்டை அடைத்துக் கொண்டது.

"இப்ப என்ன செய்யப் போறீங்க?"

"புரியலை பிருந்தா. வர்ற வழியில ரயில்வே டிராக்கைத் தாண்டி வந்தேன். அப்போ ஒரு செகண்ட் பேசாம எலெக்ட்ரிக் டிரெயின் முன்னாடி பாய்ஞ்சிடலாமா[illegible] கூட ஒரு நினைப்பு வந்தது."

"வாட் நான்சென்ஸ்? என்ன பேச்சு இ[illegible]? எவ்வளவு தைரியமாப் பேசறவர் நீங்க!"

"தைரியமாத்தான் இறங்கினேன். அந்த தைரியத்தை பலவீனப்படுத்தற மாதிரியே தொடர்ந்து சோதனை வந்தா என்ன சொல்றது?"

"சந்துருவுக்கு ரொம்பத் தெரிஞ்சவர் தானே அந்த சேட்டு? திடீர்னு ஏன் இப்படிப் பேசறார்? சந்துரு என்ன சொன்னாரு?"

"அவனுக்கு இன்னும் தெரியாது. சேட்டுக்கிட்ட மறுபடி கடனுக்குப் போய் நிக்கிறது சரியில்லைன்னு அவன் சொன்னான். அவன் வார்த்தையை மீறிப் போய் விஷயத்தை இன்னும் சிக்கல் பண்ணிட்டேன் பிருந்தா."

"இப்ப சந்துரு எங்க இருக்கார்னு பாருங்க. விஷயத்தைச் சொல்லி அவரை விட்டு சேட்டை சமாதானப்படுத்தச் சொல்லுங்க."

அரவிந்த் போன் எடுத்து டயல் செய்தான். பேசினான். வைத்தான்.

"நல்ல வேளையா இன்னிக்கு சந்துருவுக்கு ஷூட்டிங் கேன்ஸல் ஆயிடுச்சாம். சேட்டை நேர்ல போய்ப் பார்த்துப் பேசிட்டு நேரா இங்க வர்றேன்னு சொன்னான். ஸாரி பிருந்தா. நீ என்ன விஷயமா என்னைப் பார்க்க வந்தேன்னுகூடக் கேக்காம நான் பாட்டுக்கு என் பிரச்னைகளைப் புலம்பி உன் மூடைக் கெடுத்துட்டேன்."

"ஏன் அரவிந்த், உங்க பிரச்னைகள்ல எனக்குப் பங்கு இல்லையா?"

சட்டென்று நிமிர்ந்து அவனைப் பார்த்தான்.

அவளின் உரிமையான இந்தக் கேள்வியை எப்படி அர்த்தப்படுத்திக் கொள்வதென்று மனம் தடுமாறியது. நாக்கு உலர, உச்சி வெயிலில் நடந்து கொண்டிருக்கும் போது திடீரென்று வீசிய தென்றலாக அந்தக் கேள்வி இருந்தது.

"தெரியலை" என்று முணுமுணுத்தான்.

"நீங்க புரிஞ்சிக்கிட்டது அவ்வளவுதானா? இங்க பாருங்க அர

26



விந்த். என்ன மோசமான பிரச்னை வந்தாலும் முட்டாள்தனமான முடிவை சிந்திக்க மாட்டேன்னு நீங்க எனக்கு ப்ராமிஸ் செய்யுங்க முதல்ல."

"தப்புதான். ஆனா என் மனசில அப்போ உண்மையா ஒரு செகண்ட் அந்த தாட் வந்தது. அதை மறைக்காம சொல்லிட்டேன்."

"வாழ்க்கைப் பயணத்தில எல்லாருக்குமே பூ தூவின பாதை அமைஞ்சிடாது அரவிந்த். நிறையப் பேருக்கு அது முள் பாதைதான். உங்களுக்கு தொழில்ல பிரச்னை. எத்தனை லட்சம் பேருக்கு உயிரைக் காப்பாத்தறதே பிரச்னை தெரியுமா? பிரச்னைகளோட முகங்கள்தான் மனுஷனுக்கு மனுஷன் மாறும். மனசு நொந்துட்டா பாய்ஞ்சிடலாம்ன்னா ஊர்ல ஒரு ரயில் கூட உருப்படியா ஓட முடியாது. தண்டவாளம் பூரா தலைகளாத்தான் கிடக்கும்."

மௌனமாகத் தலை குனிந்து அமர்ந்திருந்தான் அரவிந்த்.

"இல்லை பிருந்தா. என் மனநிலையிலேர்ந்து கொஞ்சம் யோசிச்சுப் பாரு. சாதிச்சுக் காட்டறேன்னு வீட்டைவிட்டு சவாலா வெளில வந்து பெரிய ப்ராஜெக்ட்ல இறங்கி என்னை நிரூபிக்கணும்னு துடிப்பா செயல்பட்டுக்கிட்டிருக்கிறப்போ இப்படியெல்லாம் நடந்தா எப்படி இருக்கும்?"

"நீங்களே நொந்து போயிருக்கிறப்ப, குத்திக் காட்டறதா நினைக்கலைன்னா உங்களை ஒண்ணு கேக்கட்டுமா அரவிந்த்?"

"கேளு. நீ எது கேட்டாலும் அது என் மேல உள்ள அக்கறையில கேக்கறதாத்தான் இருக்கும்."

"அரவிந்த் ஒரு திறமை இல்லாத மனுஷன்னு யாராச்சும் வீதி வீதியா தண்டோரா போட்டாங்களா? இல்லை பேப்பர்ல விளம்பரம் கொடுத்தாங்களா? யார்கிட்ட நிரூபிக்கணும்? எதுக்கு இந்த கற்பனைச் சவால்? இதெல்லாம் உங்க ஈகோ செய்ற வேலைதானே? உங்ககிட்ட நான் பார்க்கறது தொழில் ஆர்வம் இல்லை! வெறி! சம்பாரிச்சு நிறைய பணம் சேர்த்துக் காட்டணுங்கற வெறி! அந்த வெறி உங்க புத்தியை, பாசத்தை எல்லாத்தையும் மழுங்கடிச்சிடுச்சி! இல்லைன்னா அநியாய வட்டிக்குப் பணம் வாங்கி ஆரம்பிச்சிருப்பீங்களா? இப்ப கண்ட்ரோல் பூரா அந்தாள்கிட்ட இருக்கறதால ரெண்டு நாள்ல எல்லாம் ஒப்படைச்சுட்டு வெளில போன்னு சொல்றார். அவ்வளவு வட்டி கொடுத்து அதுக்கும் மேலயும் லாபம் பார்த் தாகணுமேன்னு லஞ்சம் கொடுத்து ஆர்டர் வாங்கற குறுக்கு வழியில யோசிச்சிங்க. இதுவும் அந்த வெறியோட தூண்டுதல்தானே? சரி, நம்பி ஒப்படைச்ச அந்தப் பணமும் வராதுன்னு சொல்றீங்கன்னா அந்த நண்பன் நம்பிக்கையானவன்தானான்னு ஜட்ஜ் பண்ண முடியாமப் போனது ஏன்? உங்க நோக்கம் சம்பாரிச்சி சாதிக்கணும். அதனால அதுக்கு சாதகமா இருக்கற யாரையும் கண்ணை மூடிக்கிட்டு நம்பினீங்க. பணம் சம்பாதிக்கிறது தப்புன்னு சொன்னா நான் முட்டாள். ஆனா வாழ்க்கைல அது ஒண்ணுதான் சாதனைன்னு என்னால ஏத்துக்க முடியாது. அரவிந்த், அடிப்படையில நீங்க ரொம்ப நல்ல மனுஷன். சில வீம்புகளும், பிடிவாதங்களும்தான் உங்க குறைகள். ஐ ம் ஸாரி. நான் பாட்டுக்கு..."

படபடப்பாகப் பேசிய பிருந்தா கட்டென்று நிறுத்தி முகத்தைத் திருப்பிக் கொண்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

"பிளேடு பக்கிரிக்கு மகனாகப் பிறந்தது ரொம்ப தொல்லையாப் போச்சுடா!"

"ஏண்டா அப்படி சொல்றே?"

"அப்பா, நான் போலீஸ் வேலைக்குப் போக விரும்பறேன்'னு சொன்னதுக்கு, டேய்! நாமெல்லாம் மாமூல் கொடுக்கிற பரம்பரையைச் சேர்ந்தவங்கடா, மாமூல் வாங்கற பரம்பரை இல்லை! நம்ம பரம்பரை மானத்தைக் காப்பாத்துடான்னு டயலாக் பேசறாரு!"

— வடபழனி பாலு

"சொல்லு பிருந்தா. நல்லா சொல்லு. எனக்கு இப்ப நீ சொல்றது எதுவும் வலிக்கலை. இதே கேள்விகளை என் மனசாட்சி அப்பப்ப கேட்ருக்கு. நீ சொன்னியே அந்த வெறிதான் அதை அதட்டி வைக்கும். நீ சொன்னது எதுவும் மிகை இல்லை. வார்த்தைக்கு வார்த்தை உண்மை. வெறும் ஆர்வம் மட்டும் இருந்திருந்தா நிதானமாத்தான் செயல்பட்டிருப்பேன். என் வீட்ல என்னை செல்லாக் காசா எல்லாரும் நினைக்கிறாங்களேங்கற வேதனைல வந்த வெறிதான் அது. ரொம்ப யோசிச்சா அதுவும் நானே மனசில பெரிசு படுத்திக்கிட்ட பிரமைதானோன்னும் சமயத்தில தோணும். என் அண்ணனும், அக்காவும் வசதியா இருக்கிறதால அவங்க மேல ஒருவித பொறாமை உள்ளுக்குள்ளே ஏற்பட்டு எப்பவும் வெறுப்பாப் பார்ப்பேன். வெறுப்பா பார்க்கறப்ப அவங்க செயல்,

பேச்சு எல்லாமே இன்னும் வெறுப்பேத்தற மாதிரி தோணும். சேட்டு இனிமே எனக்கு ஒத்துழைப்பு தருவார்ங்கிற நம்பிக்கை எனக்குப் போயிடுச்சி. இன்னும் ரெண்டு நாள் கழிச்சி என் நிலைமை என்னன்னு யோசிச்சா கலக்கமா இருக்கு. இந்தச் சூழ்நிலையிலயும் என்கிட்ட உரிமையோட நீ பேசறே பாரு, இது ஒண்ணுதான் இப்ப எனக்கு ஆறுதலா இருக்கு."

"இப்பதான் நான் உங்களுக்கு ஆதரவா இருக்கணும். அரவிந்த், இப்ப வெளிப்படையாச் சொல்றேன். நான் உங்களை மனப்பூர்வமா எப்பவோ நேசிக்க ஆரம்பிச்சிட்டேன். அதை வெளிப்படுத்த நினைச்சப்பதான் நீங்க உங்க வீட்டைவிட்டு வந்துட்ட செய்தியைச் சொன்னீங்க. அது எனக்கு ரொம்ப அதிர்ச்சியா இருந்திச்சி. உங்க லட்சியத்துக்காக உங்க அப்பா, அம்மாவை உதறின உங்க அவசர நடவடிக்கை உங்க



மேல கோபத்தை ஏற்படுத்திச்சி. அப்பக்கூட உங்களை வெறுத்து விலகிட நினைக்கலை. உங்களோட பழகி உங்ககிட்ட உள்ள சில தப்பான குணங்களை சரி செய்யணும்னுதான் நினைச்சேன். உங்க அர்த்தமில்லாத வெறியை இப்ப உணர்ந்து பேசினீங்க தெரியுமா, இது எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. தப்பை ஒத்துக்கறதுக்கு பெரிய மனசு வேணும் அரவிந்த். உங்களோட பண நிலைமை இப்போ பலவீனமா இருக்கலாம். ஆனா குணத்தில இப்ப நீங்க பெரிய கோடீஸ்வரனாத் தெரியறீங்க."

"எனக்கு காப்பி வேணாம். முதல்ல விஷயத்தைச் சொல்லு. சேட்டு என்ன சொன்னாரு?" என்றான் அந்த சிறிய ரெஸ்ட்டாரெண்ட்டில் அரவிந்த்.

"குடி, சொல்றேன்" என்று தன் கோப்பையில் ஊதிப் பருகிய சந்துரு, "ஒரு மணி நேரம் கெஞ்சினேன் அரவிந்த். இறங்கியே வரலை."

"தெரியும் சந்துரு. அவர் பிடிவாதக்காரர். ரெண்டாவது என்மேல அவருக்கு நம்பிக்கை போயிடுச்சி. என் தப்பு. நீ அவ்வளவு சொல்லியும் கேக்காம அவர்கிட்டப் போனேன் பாரு, என்னை செருப்பாலத்தான் அடிச்சுக்கணும்."

"ஈஸி... ஈஸி... எமோஷனலாகாதே! கடைசியா அவர் கையைப் பிடிச்சி கண் கலங்கி கெஞ்சினதும் கொஞ்சம் இறங்கி வந்தார்."

"என்ன சொல்றார்?"

"ஒரு மாசம் டயம் தர்றாராம். இப்ப அவர் பணம் எதுவும் உதவி செய்ய மாட்டாராம். நீயே எப்படியாச்சும் ஏற்பாடு செஞ்சி மிஷினை ரிப்பேர் செஞ்சி தொழிலை நடத்தணுமாம். ஒரு மாசம் கழிச்சி அசல் வட்டியோட முதல் தவணை திருப்பித் தரணுமாம். அப்படி நீ செஞ்சிட்டா ஒழுங்கா நீ தொழில் நடத்தி பணத்தை திருப்பிக் கட்டுவேன்னு நம்பிக்கை வருமாம். ஒரு மாசத்தில முதல் தவணையே கட்ட முடியலைன்னா அடுத்த நாளே ஒப்படைச்சுடணுமாம்."

"ஆறு மாசத்துக்கு அசல், வட்டி எதுவும் வேணாம்னுதானே பேச்சு."

"அது பழைய கண்டிஷன் இல்லே? இப்போ அவர் சொல்ற எந்த கண்டிஷனையும் ஏத்துக்கிட்டாக வேண்டிய சூழ்நிலையில நாம இருக்கறப்போ எப்படி எதிர்த்துப் பேச முடியும்? சரின்னு உன் சார்பா ஒத்துக்கிட்டு வந்திருக்கேன். தலைக்கு மேல தொங்கின கத்தி இப்ப விலகிருக்கு. ஒரு மாசம் கழிச்சி மறுபடி அது தொங்காம பார்த்துக்க வேண்டியது உன் பொறுப்பு. இவ்வளவுதான் அவரை சரிக்கட்ட முடிஞ்சது."

யோசனையுடன் தாடையைத் தடவினான்.

"ஓகே. முழுமூச்சா இறங்கறேன். இப்ப உடனடியா மிஷினை ரிப்பேர் செய்ற வழியைத்தான் பார்க்கணும்."

மறுநாள். வெளியில் பண ஏற்பாட்டிற்காக சிலரைச் சந்தித்துவிட்டு தன் பிரஸ்ஸுக்கு அரவிந்த் வந்தபோது... மெஷினில் புதிய சிலிண்டரைப் பொருத்தி சர்வீஸ் பணி நடந்து கொண்டிருந்தது.

இது யாரின் ஏற்பாடு? எப்படி ரிப்பேர் வேலை நடக்கிறது?

எதுவும் புரியாமல் உள்ளே வந்தான்.

(அடுத்த இதழில் முற்றும்)

இப்படியும் ஓர் அரசியல்வாதி!

"நேர்மைக்கும் நியாயத்துக்கும் மனிதன் ஊறு செய்தால், மனிதத் தன்மையே இல்லாமல் ஆகிவிடும். மனிதத் தன்மையை இழந்து வெற்றி பெறுவதை விட, மனிதத் தன்மையை இழக்காமல் தோல்வி அடைவதே மேல்!"

– இதைச் சொன்னவர் ஓர் அரசியல்வாதி என்றால் வாய் பிளப்பீர்கள். ஆனால், உண்மை. இன்று நூற்றாண்டு விழாக் காணும் முன்னாள் சென்னை மாகாணப் 'பிரதமர்' (அன்று அப்படித்தான் அழைத்தார்கள்.) பி.எஸ். குமாரசாமி ராஜா சொன்னது இது!


• குமாரசாமி ராஜா

ராஜா, ராஜபாளையத்துக்காரர். அன்னி பெஸன்ட் அம்மையாரால் கவரப்பட்டு, தேசிய உணர்வுகளால் தன்னை நிரப்பிக் கொண்டவர். 'Dangerous city' என்று ஆங்கிலேயர்கள் ராஜபாளையத்தைக் குறிப்பிடும் அளவுக்கு, அந்த வட்டாரத்து மக்களின் தேசிய உணர்வைத் தூண்டி விட்டு, பெரும் புரட்சிகளுக்கு வழி வகுத்தவர்.

சட்டமறுப்பு இயக்கத்தில் பங்குபெற்றதால் ஒரு வருஷம், தனி நபர் சத்தியாகிரகத்துக்காக ஒன்பது மாதம் என்று சிறை வாசனையை நிறைய நுகர்ந்தவர் பி.எஸ்.கே. 1934-ல் நாட்டில் முதல் முறையாக நடந்த மத்திய சட்டசபைத் தேர்தலில், ராமநாதபுரம், நெல்லை, மதுரை மாவட்டங்கள் உள்ளிட்ட தொகுதியில் காங். வேட்பாளராகப் போட்டியிட்டு 98.5 சதவீத வாக்குகளில் மெகா வெற்றி பார்த்தவர். (எதிர்த்து நின்ற ஜஸ்டிஸ் கட்சிக்காரர் பெற்றது 1.5 சத வோட்டுக்கள் மட்டுமே!)

குமாரசாமி ராஜா சென்னை மாகாணப் பிரதமராக இருந்த போதுதான் நிர்வாகத் துறையிலிருந்து முதல் முறையாக நீதித் துறை பிரிக்கப்பட்டு, பிறகு இதுவே நாடு முழுவதும் பின்பற்றப்பட்டது.

ராஜாவின் தமிழ்ப் பற்று அபாரமானது. லாலா லஜபதிராயின் 'யங் இந்தியா' என்கிற நூலில் லயித்து, அதை அமரர் கல்கி மூலம் தமிழில் மொழிபெயர்க்கச் செய்து 'யுவ பாரதம்' என்கிற நூலாக அச்சிட்டு, தமிழகம் முழுவதிலுமுள்ள காங்கிரஸ் தொண்டர்களுக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தார். 1937-ல் இந்தப் பணிக்கு ஆன செலவு, ரூ. இருபதாயிரம்! ('யங் இந்தியா' பிரிட்டிஷ் அரசால் தடைசெய்யப்பட்டிருந்தது!)

பி.எஸ். கேவும் கல்கியும் 'சிறைத் தோழர்கள்'. கல்கி, எட்டயபுரத்தில் பாரதிக்கு மணிமண்டபம் எழுப்பத் தீர்மானித்தபோது, அதற்கான முதல் நன்கொடை, குமாரசாமி ராஜாவிடமிருந்துதான் பெற வேண்டும் என்று தீர்மானித்திருந்தார். ராஜாவின் வள்ளல் தன்மை, அவரது வளமான சொத்து முழுவதுமே கரைத்து விட்டு இருந்தது அப்போது.

கல்கி, ராஜபாளையத்துக்கே வந்து விஷயத்தைச் சொல்லிக் கேட்ட போது, ராஜா தம் வங்கி இருப்பாக இருந்த ரூ. ஐந்நூறை அப்படியே எடுத்து வந்து கொடுத்து, "என்னால் இப்போது இதுதான் முடியும்!" என்று வருத்தத்துடன் சொன்னார்.

அதற்குக் கல்கியின் பதில் : "பேங்க் பேலன்ஸில் ஒரு பகுதியை – அது அதிகமாகவே இருந்தாலும் – எடுத்து வந்துதான் தருவார்கள். நீங்கள் பேலன்ஸை அப்படியே அல்லவா தந்து விட்டீர்கள்? இது எத்தனை சிறப்பு!"

இப்படியும் அரசியல்வாதி!

— குன்றக்குடி பெரியபெருமாள்

மாறாத ரிதம்

சில மாதங்களுக்கு முன் எட்டுப்பட்டி ராசாவின் வெற்றி விழா, மேயர் மு.க. ஸ்டாலின் தலைமையில் சென்னையில் நடைபெற்ற போது, தமிழ்ப் படங்களுக்கு ஆங்கிலத் தலைப்புகள் வைப்பது அதிகரித்து வருகிறது என்று வருத்தப்பட்டார் ஸ்டாலின்.

விழா மேடையிலிருந்த படத்தின் தயாரிப்பாளர் பிரமிட் நடராஜன், தமது அடுத்தப் படமான 'ரிதம்' - மேயரின் ஆலோசனைப்படி, 'பூப்பூக்கும் ஓசை' என்று மாறுவதாக மேடையில் அறிவித்துக் கைதட்டல் பெற்றார்.

சென்ற வாரம் இயக்குனர் வசந்த் டைரக்‌ஷனில், ரிதம் படத்தின் பூஜை, நட்சத்திர ஓட்டல் ஒன்றில் வெகு விமரிசையாக நடந்தது. 'பூப்பூக்கும் ஓசை' என்று அறிவிக்கப்பட்ட பெயர் என்ன ஆயிற்று?

படத்தின் தயாரிப்பாளர் பிரமிட் நடராஜனிடம் கேட்டோம்.

"மேயர் ஸ்டாலின் கலந்து கொண்ட விழாவில், 'ரிதம்'ஐ, பூப்பூக்கும் ஓசை என்று நான் மாற்றி அறிவித்தது உண்மை தான். அதன்பின் பிலிம் சேம்பரில் அந்தப் பெயரைப் பதிவு செய்யச் சென்றபோது, அதே பெயரை வேறு ஒருவர் ரிஜிஸ்டர் செய்திருப்பது தெரிய வந்தது. அவரை அணுகிய போது, அந்தப் பெயரை எங்களுக்கு விட்டுத்தரவோ, விற்கவோ மறுத்து விட்டார்.

"அதே சமயம், படத்தின் இசையமைப்பாளர் ரஹ்மான், இந்தப் படம் மியூசிகல் சப்ஜெக்ட் என்பதால், ரிதம் என்ற பெயரே ரொம்பப் பொருத்தமாக இருக்கிறது. பெயரை மாற்ற வேண்டாம் என்று கூறினார்.

"அதனால்தான், படத்துக்கு ரிதம் என்ற பழைய பெயரையே வைத்து விட்டோம்."

(மேயர் டூ விட்டுவிடப் போகிறார்?!)



• ரிதம்

சேஷன் ஸ்டைல்!

சென்னை ஹியூமர் கிளப் அமைப்பு ஜூலை மாதம் ஏற்பாடு செய்துள்ள ஒரு நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்க டி.என். சேஷனை அணுக, அவரும் ஒப்புக் கொண்டிருக்கிறார். அதை உறுதி செய்து கொள்ள இவர்கள் ஃபேக்ஸ் அனுப்ப, சேஷனிடமிருந்து வந்துள்ள பதில்:

"ஸாரி! உங்கள் அழைப்பை ஏற்பதற்கில்லை. இனி இங்க விழா மாய்த் தொடர்பு கொள்ள வேண்டாம்!"

அவர் ஸ்டைலே அலாதி!

• சேஷன்



சென்ற வார டைரி

எழுத்தாளன் என்பதில் பெருமை!

டைரக்டர் கே.எஸ். அதியமான், ஹீரோவாகி விட்டார்; 'தலைமுறை' என்பது படத்தின் பெயர் என்பதெல்லாம் தெரிந்த விஷயமாயிருக்கும்.

சமீபத்தில் ஷூட்டிங்குக்காகக் கல்லிடைக்குறிச்சிக்கு வந்திருந்தவர் கொஞ்சம் கடுப்பாக இருந்தார், பத்திரிகையாளர்கள் மேல்.

"நான் ஹீரோவாக அறிமுகமாவதைப் பார்த்து, 'என்ன சார், உங்க தலைமுடி குறைவா இருக்கே?'ன்னு கேட்டாங்க. 'விக் வெச்சுக்கிட்டா போச்சு'ன்னு பதில் சொன்னேன். 'வயிறைக் குறைக்கலாமே'ன்னு கேட்டதுக்கு, 'வாஸ்தவம் தான். இப்போதைக்கு 'பேட்' வெச்சு சமாளிச்சிக்கலாம்'னு கேஷுவலா பதில் சொன்னேன். உடனே 'தலைக்கு விக்; தொப்பைக்கு 'பேட்' உடன் அதியமான் நடிக்கிறார்'னு நியூஸ் போட்டா என்ன அர்த்தம்? அஃப்கோர்ஸ், நடிகனுக்கு இமேஜ் அவசியமில்லைங்கறதுதான் என் கருத்து. எவ்வளோ பெரிய கலைஞர் ரஜினி. இமேஜ் வளையத்தை நொறுக்கிப் போட்டுட்டு வெளியில வரலையா? நாமெல்லாம் இமேஜ் பத்திப் பேசறதுல அர்த்தமே இல்லை!" என்று பொறிந்து தள்ளிவிட்டார்.

சொர்ணமுகி, படத்தின் வெற்றியை விட, அது ஒரு வாரப் பத்திரிகையில் தொடராக வந்தபோது கிடைத்த வாசகர் வரவேற்பு ரொம்ப உற்சாகம் தந்தது என்றார் அதியமான்.



• அதியமான்

"எழுத்தாளன்னு சொல்லிக்க முடியறது ரொம்பப் பெருமையா இருக்கு. இன்னும் பெட்டரா எழுதினா இன்னும் பேர் கிடைக்குங்கற நினைப்பு, தயாரிப்பாளர் - இயக்குநர்ங்கற பெருமையை விடக் கூடுதலா இருக்கு!" என்கிறார்.

தேசிய சொத்து

ஒரு நண்பரை, கல்கத்தாவுக்கு பிளேனில் ஏற்றிவிடச் சென்றபோது, விமானத்தில் ஏதோ பழுது ஏற்பட்டு, அது சரி செய்ய முடியாமல் அந்த ஃப்ளைட் கான்சல் செய்யப்பட்டது. பயணம் செய்ய வந்தவர்கள் மறுபடி தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பப் புறப்பட்டுப் போனார்கள். ஆனால் ஒரே ஒருவர் மட்டும் டிபார்ச்சர் லௌஞ்சிலேயே தனியாக உட்கார்ந்திருந்தார்.

நான் அவரிடம் போய், "கல்கத்தா விமானம் கான்சல் ஆகிவிட்டது. உங்களைக் கூட்டிக் கொண்டு போக யாரும் இல்லையா?" என்று கேட்டேன்.

"அவர்கள் என்னை இங்கே விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்களே" என்றார்.

நான் அவரை என்னுடன் அழைத்துப் போகத் தயாராக இருப்பதாகச் சொன்னதும், வர சம்மதித்தார். அப்போது ஜெயலலிதா முதல் அமைச்சர். மறுநாள் அவரைப் பார்க்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார் அவர். நான் முதல்வரின் பி.ஏவுடன் தொடர்பு கொண்டு விஷயத்தைச் சொன்னேன்.

"அவரை எப்படி நீங்கள் உங்களுடன் கூட்டிக் கொண்டு போகலாம்? பெரிய ரிஸ்க் அல்லவா? வழியில் ஏதானும் அசம்பாவிதம் நடந்து விட்டால் தவறாகி விடுமே? அவர் தேசியச் சொத்து அல்லவா?" என்று கேட்டார். பிறகு போலீஸ் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்வதாகக் கூறி, அனுப்பியும் வைத்தார்.

அவர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசினார்.


"அவர் தேசியச் சொத்து" என்று குறிப்பிட்ட நபர்: அன்னை தெரசா.

– மகாராஜபுரம் சந்தானம் நினைவு நாள் விழாவில் நல்லி குப்புசாமி செட்டியார் பேசியது.

— கௌதம், சாருகேசி, அம்பை தேவா


நடக்குமென்பார் நடக்கும்!

மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*




கிரங்களோட ஒத்துழைப்பு உங்களுக்கு இருக்கு. அதால உங்க செல்வாக்கு பளிச்சினு வெளிப்படும். குடும்பத்துல ஏதாவது சின்னச் சின்ன சலசலப்புங்க இருந்தா இந்த வாரம், ஜகா வாங்கிடும். பண விஷயத்திலும் பிரச்னை இருக்காது. என்னடாது... இந்த வேலை கஷ்டமாச்சேன்னு எதிலும் யோசனை பண்ணாம கடுமையா உழைச்சிங்கன்னா பலன் நிச்சயம். கொடுக்கல் - வாங்கல் விஷயத்துல எச்சரிக்கை தேவை.

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*




அந்தஸ்து, புகழ், வாழ்க்கை வசதிகள், தேக ஆரோக்கியம்... எதிலுமே இந்த வாரம் உங்களுக்குக் குறையிருக்காது. நீங்க செய்யணும்னு நெனைச்சுக்கிட்டிருந்த விஷயங்களெல்லாம் செய்யறதுக்கான சூழ்நிலை உருவாகும். சிலர் செயற்கரிய செயல் எதுனாச்சும் கூட செய்யறதுக்கு சான்ஸ் இருக்கு. ஸ்பெகுலேஷன், ஷேர் எல்லாம் லாபமே தரும். எதிரிங்க காணாம போயிடுவாங்க. ஆனாலும் சிலருக்கு அலைச்சலும் சில பிரச்னைங்களால மனக் குழப்பமும் வரலாம்.

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*




ஏற்றுமதி - இறக்குமதி, தோல், ரசாயனம் போன்ற தொழில்கள்ல இருக்கறவங்களுக்கு இந்த வாரம் பலன் கியாரண்டி. சிலருக்குப் பயணத்தால பலன் இருக்கும். இரும்பு, எண்ணெய் வகைகளிலும் ஆதாயம் கிடைக்கும். குடும்பத்துல அமைதியும் மகிழ்ச்சியும் இருக்கும். ஷேர் கீர் மாதிரியான விஷயங்களெல்லாம் வாரக் கடைசியிலதான் பலன் கொடுக்கும். கூடப் பிறந்தவங்ககிட்டேர்ந்து ரொம்ப எதிர்பார்த்தா ஏமாந்து போயிடுவீங்க.

கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*



ஆற்றல் வெளிப்படும்; அந்தஸ்து உயரும். முயற்சிகள் வெற்றியடையும்; மத்தவங்களும் உங்களைப் பாராட்டுவாங்க; எதிரிங்க விலகிப் போவாங்க; வழக்கு கிழக்குன்னு எதுனா இருந்தாலும் ஜெயிப்பதற்கே நெறைய சான்ஸ் இருக்கு; பண விஷயமும் தாராளமாவே இருக்கும்! அப்புறம் என்னங்க, இந்த வாரம் நீங்கதானே ராஜா! ஆனாக்கூட பேச்சுல மட்டும் நிதானம் காட்டுங்க. இல்லேன்னா சின்னச் சின்ன தொல்லைங்க வர்றதுக்கு சான்ஸ் ஆயிடும்.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*




நல்ல ஃபிரண்ட்ஸ், பெரியவங்க ஆதரவு, வி.ஐ.பி.களோட உதவியெல்லாம் இருக்கறபோது, என்னங்க கவலை? சில விஷயங்கள்ல, நீங்க நினைச்சதை விடவும் அதிக வெற்றி கிடைக்கும்னா சந்தோஷத்துக்கு என்ன குறைச்சல்! விருந்து - கேளிக்கைன்னு குடும்பமே குதூகலமா இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவியுயர்வுக்கான வாய்ப்பு கூடி வரும். சில பிரச்னைங்க வரத்தான் செய்யும்னாலும் கொஞ்சம் யோசிச்சுச் செயல்பட்டீங்கன்னா போதும், பிரச்னைங்க காணாம போயிடும்.


கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

மேஷ ராசிக்காரரான பதிப்பாளர் அகிலன் கண்ணனுக்கு கிரகங்கள் சாதகமா இருக்குது. செல்வாக்கு பிரமாதமா உயருமாம். பணப்புழக்கம் கூட தாராளமா இருக்கும்னு கிரகங்கள் சொல்லுது.




வியாபாரிங்க, நிர்வாகத் துறைல இருக்கறவங்களுக்கு வளர்ச்சிக்கான அறிகுறிகள் அதிகம். தொழிலதிபர்கள், கணிதம், பத்திரிகை போன்ற துறைகளில் இருப்பவர்களுக்குப் பாராட்டும் புகழும் உறுதி. அரசியல்வாதிகள் திடீர்த் திருப்பங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். அரசாங்கக் காரியங்கள் ஏதும் ஆக வேண்டியிருந்தா, அதுக்கான சூழ்நிலை கூடிவரும். வெளிநாட்டுத் தொடர்பால உற்சாகம் கிடைக்கும். பயணத்திலயும், மின்சாரம், இயந் திரம் போன்ற துறைகள்ல இருக்கறவங்களும் எச்சரிக்கையா இருக்கணும்.





துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

உங்களுக்கு இந்த வாரம் கிரகங்களோட சப்போர்ட் இல்லீங்க. அதனால எடுத்த காரியங்களில் குறுக்கீடுகள் வரும்; மனகல குழப்பம் வரும். பிரண்ட்ஸுங்களும் உதவ மாட்டாங்க. சில பிரண்ட்ஸுங்க உங்களுக்கு எதிராப் போகக் கூட சான்ஸ் இருக்கு. யாருகிட்டயும் மனந்திறந்து வெளிப்படையாப் பேசாம இருக்கறதே நல்லது. கொடுக்கல் - வாங்கல், ஷேர் விஷயங்களில் ஈடுபடாம இருக்கறதே நல்லது. உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகள் கிட்ட ஜாக்கிரதையா நடந்துக்கணும். வழக்கு, வியாஜ்ஜியமெல்லாம் தள்ளிப் போடறதே நல்லது.



விருச்சிகம் : *(விசாகம் 4 - ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

உங்க செயலும் ஆற்றலும் பளிச்சிடற வாரம் இது. உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். ரொம்பக் காலமா தள்ளிப் போய்க்கிட்டே இருந்த பிரார்த்தனை இந்த வாரம் நிச்சயம் நிறைவேறும். பண விஷயத்துலயும் பிரச்னை இருக்காது. ஸ்பெகுலேஷன், ஷேர் விஷயங்களில் லாபமே கிடைக்கும். கெஸ்டுங்க வருகையால விருந்து - கேளிக்கைன்னு குடும்பமே குதூகலமா இருக்கும். சுபகாரியங்கள் நடக்கறதுக்கும் சான்ஸ் இருக்கு. ஃபாரின் காண்டாக்ட் இருந்தா அனுகூலமான பலனே கிடைக்கும். தாயாரின் உடல் நலத்துல மட்டும் கொஞ்சம் அதிக அக்கறை காட்டுங்க.




தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

மனகல துணிச்சலும் தன்னம்பிக்கையும் ஏராளமா வரும்கிறதால எந்த எதிர்ப்பா இருந்தாலும் 'ப்பூ'ன்னு ஊதித்தள்ளிட்டு ஜெயிச்சுக் காட்டுவீங்க. வழக்கு மாதிரியான விஷயங்களிலும் வெற்றிக்கான வாய்ப்புகள் கூடி வரும். வீடு, மனை, ரியல் எஸ்டேட் விஷங்களிலும் அளவான பலன் இருக்கும். நண்பர்கள் - சொந்தக்காரங்களாலயும் சில நன்மைகள் கிடைக்கும். சங்கீத - நாடகத் துறையிலும் ஓரளவுக்குத்தான் வெற்றி கிடைக்கும்.


அக்னி சர்மா பக்கம்

ஜூலை 1 முதல் 7 வரை




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

உங்கள் தோற்றமும் முகராசியுமே பல விஷயங்களில் வெற்றியைத் தேடித் தந்திடும் போங்க. குடும்பத்துல விருந்து - கேளிக்கைன்னு அமர்க்களப்படும். வெளியூர் லேர்ந்து சுபமான சேதி ஒண்ணு வரலாம். சிலருக்கு ஆடை, ஆபரணங்கன்னு வாங்கற சான்ஸ் இருக்கு. பண விஷயம் தாராளமா இருக்காதுன்னாலும் வாரக் கடைசில எல்லாம் சரியாயிடும். கொடுக்கல் - வாங்கல், ஜாமீன் கையெழுத்து மாதிரியான விஷயங்கள்ல உஷாரா இருங்க.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

பண விஷயம் தாராளமா இருக்கும். ஸ்பெகுலேஷன், ஷேர் விஷயங்கள்ல நல்ல லாபம் கிடைக்கும். சில நல்லவர்களோட தொடர்பால நற்பணிகள்ல நீங்க ஈடுபடறதுக்கும் நிறைய சான்ஸ் இருக்கு. இளைஞர்கள் - இளைஞிகளுக்கு கால்கட்டுக்கான வேலைகள் ஆரம்பமாயிடும். புது டீ.வி., 220 லிட்டர் ஃபிரிஜ்ஜுன்னு ஏதாவது வாங்கற சான்ஸும் நிறையவே இருக்கு. எந்தத் தொழில் செய்யறீங்களோ அதுல வளர்ச்சிக்கான அறிகுறிகள் தென்படும்.



மீனம் : *(பூரட்டாதி 4 -ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

தடைகளையெல்லாம் தாண்டிக் கொண்டு வந்து உங்க ஆற்றல் வெளிப்படுகிற வாரம் இது. இருந்தாலும் கேதுவும் சனியும் சரியா இல்லாததால பொருளாதார விஷயத்துல ரொம்ப எச்சரிக்கையா இருக்கணும். குடும்பத்துல சில பிரச்னைகள் ஏற்பட்டு மன அமைதியைக் கெடுக்கும். செலவும் பெருகும். சிலர் அனாவசிய பயத்தால கூட வீண் செலவு செய்வாங்க. தாயாரின் உடல் நலத்தில் அதிக கவனம் காட்டறது நல்லது. ●

வட்டமேஜை

✉ அட்டையில் 'டெலிபோன் மணி போல் சிரிக்கும் மனீஷாவா' உள்ளே கோபத்துடன் பேட்டி கொடுத்திருக்கார்! நம்ப முடியவில்லையே!
திருச்சி – 18, அம்மனூர் என். சாம்பமூர்த்தி.

✉ மனீஷா கொய்ராலா கோபத்தைக் கிளறும் கேள்விகளைக் கேட்டு பூவுக்குள் பூகம்பம் ஏற்படுத்தி விட்டீர்களே!
அயன்புரம், த. சத்தியநாராயணன்.

✉ 'தப்பாகப் பேசுபவர்கள் நரகத்துக்குப் போவார்கள்' என்று கோப பேட்டி அளித்த மனீஷா கொய்ராலாவிடம் ஒரு சாந்தமான கேள்வி. இளைஞர்களின் உணர்ச்சிகளைத் தூண்டி, கிளர்ச்சியில் ஆழ்த்தி, கவர்ச்சியைக் காட்டி நடிக்கும் நடிகைகள் சொர்க்கத்துக்குப் போவார்களா?
பெங்களூர் – 47, மு. புஷ்பராசன்.

கவர்ச்சி நடிகைகள் சொர்க்கத்துக்குப் போவார்களா?

✉ விஷம் தடவிய கத்தி தலையங்கத்தில் தமிழக முதல்வருக்கு வைத்த இரண்டு பரீட்சைகளில் முதல் பரீட்சையில் (ஜூன் 15 போராட்டம்) வெற்றியடைந்து விட்டார். இரண்டாவது பரீட்சையில் வெல்வது எளிது. நாகல் நடை வசவுகளை (ஜூன் 19 – ஜூலை 2 பொதுக் கூட்டங்களில்) தி.மு.க.வினர் சகித்துக் கொள்ள வேண்டும் என்று முதல்வர் வேண்டிக் கொண்டால் போதும். தமிழக முதல்வர் பரீட்சைகளில் தேறுவது மட்டும் போதாது. வாஜ்பேயின் பொறுமைக்கு விடப்படும் சவாலை அவரும் ஏற்று ஜெ.க்கு சரியான பாடம் புகட்ட வேண்டும்.
திருவரங்கம், சிவ. ஸ்ரீரெங்கா.

✉ 'பிரார்த்தனைப் பூக்கள்' இலவச இணைப்பு, ஒவ்வோர் இல்லத்திலும் அவசியம் பாதுகாக்கப்பட வேண்டிய அரிய பொக்கிஷம்!
கும்பகோணம்,
எஸ். கே. மூர்த்தி.

✉ 'தெரிந்திருக்க நியாயமில்லை' என்ற பகுதியின் மூலம் பல அரிய பெரிய விஷயங்களைத் (உலக விஷயங்களை) தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திய உங்களுக்கு என் நன்றி.
விழுப்புரம், வை. வெங்கடேசன்.

✉ ரோஜாவின் அழகை ரசித்துச் சந்தோஷப் படாமல், அதில் முள் இருக்கிறதே என்று வருத்தப்படுபவள் எவ்வளவு முட்டாளோ, அதே போன்றவள்தான் தன் வாழ்க்கையில் நடந்த இன்பமான சம்பவங்களான வாசனை வீசும் பூக்களை மனத்தில் சேர்த்து வைத்துக் கொள்ளாமல், தனக்கு இழைக்கப்பட்ட துன்பங்களான வெட்டிக் குப்பைகளை மனத்தில் சேர்த்து வைத்து மருகிப் போகிறவள் என்பதை அழகாக எடுத்துக்கூறிய அருமையான சிறுகதை சூடாமணியின் 'பூமாலை'.
திருப்பரங்குன்றம், டி. கே. சுப்பிரமணியன்.

✉ இந்தோனேஷிய மாணவர்களையும் 'ஜெ'யையும் ஒப்பிட்டு அது போராட்டம், இது பித்தலாட்டம் என்று தராசு கூறிய பதில் சரியான சுருக்–நறுக்!
பொறையாறு, கங்கா கணேசன்.

✉ 58-லிருந்து 60 வரையிலான ஜோக் ஒவ்வொன்றும் வயிறைப் பதம் பார்த்தன.
அரசரடி, எம். அழகம்மாள்.

✉ தங்கள் இதழில் எங்கள் ஊரில் உள்ள தேசப்பிதா மகாத்மா காந்தி திருக்கோவில் பற்றிய கட்டுரையை வெளியிட்டுச் சிறப்பித்தீர்கள். கல்கியில் செய்தி வந்ததில் இருந்து, வெளியூரில் இருந்து மக்கள் அதிகமாக வந்து காந்தி கோயிலை தரிசிக்கிறார்கள். மற்றும் 5.6.98 அன்று காலை 11 மணிக்கு மூப்பனார் மற்றும் பீட்டர் அல்போன்ஸ் ஆகியோரும் வந்து, கும்பிட்டு விட்டுப் பேசுகையில், 'எனக்கு இந்த மாதிரி கோவில் இருப்பதே தெரியவில்லை; கல்கி வார இதழைப் பார்த்த பின்புதான் தெரியும். எனவே உடனடியாகப் புறப்பட்டு வந்தேன்' என்று பேசினார். கல்கி இதழுக்கு எவ்வாறு நன்றி கூறுவது என்றே தெரியவில்லை.
செந்தாம்பாளையம்,
எஸ்.எஸ். ஆறுமுகக் கவுண்டர்,
காந்திகோயில் டிரஸ்டி.

கைப்பற்றுங்கள் கலர் டீவி பரிசை!

பன்னிரண்டு வாரப் போட்டிகள் முடிந்து விட்டன. அதிர்ஷ்டசாலிகள் 12 பேர் பட்டுப் புடைவை பெறுவார்கள்.

'நாமும் தானே சரியாக எழுதினோம்? குலுக்கல் என்பதால் கிடைக்காமலாகி விட்டதே!' என வருத்தப்படும் அன்பர்களுக்காக இதோ, இன்னொரு சான்ஸ்!

இந்த வாரம் இடம் பெறும் இந்தக் 'கொசுறு'ப் போட்டியில் நீங்கள் பங்கு பெறுங்கள். வென்றால், வசந்த் & கோ வழங்கும் கலர் டீவிப் பரிசு உங்களுக்குத்தான்!

ஒருவேளை இந்தப் போட்டியிலும் பலர் சரியான விடை எழுதி விட்டால்? ஸாரி! மறுபடி குலுக்கலைத் தவிர வேறு வழி இல்லை. 'கூடுதலாக ஒரு சான்ஸ்' வழங்கிய திருப்தி எங்களுக்கு; உற்சாகமாகக் கலந்து கொண்டு, சலிக்காமல் சரியான விடைகளைக் கண்டறிந்த பெருமை உங்களுக்கு! ஓகே?

- விடையை கூப்பனில் மட்டுமே எழுத வேண்டும். ஜெராக்ஸ் பிரதி செல்லாது.
- இந்த 13வது வார கூப்பனுடன் ஏற்கனவே நீங்கள் 12 வாரங்களாக சரியான விடை எழுதி, சேகரித்து வைத்திருக்கும் கூப்பன்களையும் வரிசைப்படி இணைத்து அனுப்ப வேண்டும்.
- 12 வார கூப்பன்களையும் இணைக்காமல் அனுப்பப்படும் இவ்வார கூப்பனை ஏற்க இயலாது.
- 12 வாரங்களிலும் சரியான விடை எழுதி, இவ்வாரக் கேள்விக்கும் சரியான விடை எழுதும் வாசகருக்கு மெகா பரிசாக கலர் டீவி வழங்கப்படும். பலர் சரியாக எழுதி விட்டால் குலுக்கலில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

கலர் டீவி வழங்குபவர்:



வசந்த் & கோ

- கூப்பன் அனுப்பக் கடைசித் தேதி **20.7.98**
- ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

இனி இவ்வாரக் கேள்வி: 'மொபைல் ஹோம்' எந்த வருடம் பிரபலமாயிற்று? இது எந்தக் கதை/கட்டுரை/ தொடரில் வருகிறது?

'கொசுறு'ப் போட்டி

மொபைல் ஹோம் பிரபலமான வருடம்:...................................

இடம் பெறும் கதை/கட்டுரை/தொடர்:

....

என் பெயர்:...

முகவரி:...


....

....

இந்த கூப்பனுடன் 12 வாரங்கள் சரியான விடை எழுதி, சேகரித்து வந்த கூப்பன்களை இணைத்து அனுப்புகிறேன்.

....

கையொப்பம்



"அம்மா, வா... இங்கிருந்து போயிடுவோம்!"

"ஏன்... பறக்கிற?"

"அதோ... வராரு பாரு... அவரு நல்லா காக்கா பிடிப்பார்னு பேசிக்கிறாங்க!"

— கழுகுமலை சோமு

அயோத்தியில் ராமர் கோவில் கட்டலாமா? கூடாதா? 'சீதா' என்ற பெயர் கொண்ட சிலரிடம் கேட்டோம்.

சீதா (நங்கநல்லூர்): ராமர் இருக்குமிடமே அயோத்தி என்பது நமது மரபு. அயோத்தியில் ராமர் கோவில் கட்டாயமாக வேண்டும்தான். ஆனால் சர்ச்சைக்குரிய அந்த இடத்தில்தான் வேண்டும் என்கிற அவசியமில்லை.

சீதா (திருவல்லிக்கேணி): ராமஜென்மபூமி விஷயம் பாரத மக்களின் உணர்வு பூர்வமான விஷயம். அது அரசியல், சட்டம், கோர்ட் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டது. அங்கே ராமர் கோவில் கட்டத்தான் வேண்டும்.


சீதா (ஹைதராபாத்): அயோத்தியில் ராமர் கோவில் திட்டமிட்டபடி கட்டி முடிக்கப்பட வேண்டும். இது விஷயமாய், முஸ்லிம்கள் முரண்டு பிடிக்காமல் பாரத தேசத்தின் பாரம்பரியம், கலாசாரம் இவற்றை மனதில் கொண்டு விட்டுக் கொடுப்பதுதான் சரி.


• சீதா பார்த்திபன்


• நங்கநல்லூர் சீதா


• திருவான்மியூர் சீதா


• ஹைதராபாத் சீதா


• திருவல்லிக்கேணி சீதா


• தி.நகர் சீதா

அயோத்தியில் ராமர் கோவில்:

'சீதா'க்கள் என்ன சொல்கிறார்கள்?

சீதா (தி.நகர்): அயோத்தியில் ராமர் கோவில் கட்டும் அதேசமயம், முஸ்லிம் சகோதரர்களுக்காக இந்துக்களே ஒரு மசூதியையும் கட்டித் தரலாம்.

சீதா(திருவான்மியூர்): பிற மதத்தவரின் மரபுகளையும் மதிப்பதுதானே இந்துமத தர்மம்? எனவே சர்ச்சைக்குரிய அந்த வளாகத்தில் ஒருபுறம் ராமருக்குக் கோவிலும், மறுபுறம் மசூதியும் கட்டி விடலாம். உலகமே இந்தியாவை மதிக்கும்.

சீதா(மைலாப்பூர்): இன்று நம் நாட்டில் உடனடியாய்த் தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகள் எத்தனை இருக்கின்றன? அவற்றைத் தீர்க்க அரசியல் கட்சிகளும், அரசாங்கமும் முனையட்டும்; ராமர் கோவில் கட்டுவதைத் தள்ளிப் போடட்டும்; கோர்ட் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளட்டும்.

(முன்னாள்) நடிகை சீதா பார்த்திபன்: நடிப்பதை நிறுத்திய பிறகு, பத்திரிகைகளுக்கு நான் பேட்டி தருவதில்லை. அடுத்த வாரம் என் கணவர் ஊரிலிருந்து வந்து விடுவார். அவரைக் கேளுங்கள். பளிச்சென்று கருத்து சொல்லுவார்.

தொகுப்பு: **எம். பாரதி**

எங்கள் நிறுவனத்தில் ஐந்து மண்டல நிர்வாகிகள் இருந்தார்கள். இரண்டு மண்டல நிர்வாகிகள் 800 மைல் தள்ளி, - தொலை தூரத்தில்! அவர்களை எல்லாம் அவர்கள் ஊரிலேயே சென்று சந்தித்தேன்.

அமெரிக்காவில், இப்படி, நாம் முதன் முறையாகத் தெரிந்து கொள்ளும் முக்கிய மானவர்களுடனும், அரைகுறையாகத் தெரிந்து வைத்திருக்கும் நண்பர்களுடனும் வியாபாரம் பற்றிய பேச்சு பொதுவாக காப்பிக் கடைகளிலோ பெரிய உணவு விடுதிகளிலோதான் நடக்கும். எப்போது நமக்கு ஒரு சாதகமான விளைவு ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறேமோ அப்போது சாதகமான சூழ்நிலையை உருவாக்கித் தருவது இந்த உணவு விடுதிகள்தாம். அது சில சமயம் வெறும் காப்பி சாப்பிட்டுக் கொண்டு ஒரு இரண்டு மணி நேரம் பேசுவதாக இருக்கும். விடுதியில் உணவு பரிமாறும் பெண்ணுக்கு அதிகமான 'டிப்ஸ்' கொடுத்து விட்டால் போதும்.

வெளியே சென்று நாம் பேசும்போது நாம் இருவரும் சம நிலையில் பேசுகிறோம்; உறவாடுகிறோம். மற்றொருவரைப் பூரணமாக - அதிகமாக - ஆழமாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பேற்படுகிறது. இது ஒரு சகஜமாகப் பழகும் பிணைப்பை ஏற்படுத்தி விடுகிறது. வியாபாரத்தில் இது முக்கியம். உணவு விடுதிகளில் நம்மை எழுந்திருக்குமாறு நெருக்க மாட்டார்கள். நாமும் சின்னச் சின்ன ஆர்டர்களைக் கொடுத்துக் கொறித்துக் கொண்டிருக்கலாம்.

நான் என்னுடைய நிர்வாகிகளையும் எங்கள் நிறுவனத்தின் விற்பனையாளர்களையும் இப்படித்தான் சந்திப்பது வழக்கம். "உங்களை நமது தலைமை நிர்வாகி சந்திக்க விரும்புகிறார். நமது நிறுவன வளர்ச்சி பற்றியும் விற்பனை பற்றியும் பேச விரும்புகிறார்" என்ற செய்தியை எங்கள் விற்பனைப் பிரிவு மேலாளர் முதலிலேயே அனுப்பி விட்டார்.

அவர்களுக்கு இப்படி ஒரு புதிய தலைமை வந்திருப்பதில் மகிழ்ச்சி. காரணம்: பொருளின் புதிய தரம் அவர்களுடன் பேசியது! எனவே அவர்கள் என் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தார்கள்.



என்னைச் செதுக்கிய எண்ணங்கள் - 26

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

ஒருசமயம் காலையிலிருந்து மாலை வரை ஒரு விற்பனையாளருடன் அவருடைய பொருளை ஏற்றிச் செல்லும் வாரியிலேயே நானும் சென்றேன். பெரிய வாடிக்கையாளர் கடைகளில் நிறுத்துவார். அங்கே ஆறு கேஸ் கட்டுகள் கொடுக்க வேண்டி இருக்கும். எனது விற்பனையாளர் இரண்டு தூக்க நான் இரண்டைத் தூக்கிச் செல்வேன். எந்த வேலையாக இருந்தாலும் நமது

வீட்டு வேலையை நாமே செய்வதில் நான் இயல்பாகவே கொஞ்சமும் வெட்கமோ, கௌரவமோ பார்ப்பதில்லை. 14, 15 வயதிலும் கூட எங்கள் வீட்டுக்கு வேண்டிய குடிநீரை குடத்தில் தெருக்கோடியிலிருந்து தூக்கிக் கொண்டு வருவேன். என் மூத்த சகோதரி கோபித்துக் கொண்டார்; என் தாயைப் பார்த்து: "என்ன இப்படி கல்யாணம் செய்து கொள்கிற ஒரு பிள்ளையைப் போய் தண்ணீர்க்குடம் தூக்கி வரச் சொல்கிறாயே?" என்று. நான் அது பற்றிக் கவலைப்பட்டதில்லை.

எனது விற்பனையாளருடன் செல்லும் போது அவர் அந்தக் கடையின் முதலாளிக்கு என்னைப் பெருமையுடன் அறிமுகப்படுத்துவார். மதியம் ஒரே இடத்தில் சாப்பிடுவோம். ஒருசமயம் எங்கள் பணியாளர் என்னை "இன்று மாலை என் வீட்டுக்கு விருந்துக்கு வர முடியுமா?" என்றார். யோசித்தேன், ''வருகிறேன்'' என்றேன்.

மாலையில் ஒரு பூங்கொத்தை வாங்கிக் கொண்டு அவர் வீட்டிற்குச் சென்றேன். அது வீடு இல்லை. 'மொபைல் ஹோம்' என்று சொல்வார்கள். நமது பஸ் போன்ற ஒரு வெளி அமைப்பு, மரப் பலகைகளால் ஆனது. மேலே தார்ப்பாய் போன்ற பொருளால் கூரை. மற்றபடி வீட்டினுள் இரண்டு அறைகள், சமையலறை, வரவேற்பறை, பாத்ரூம் மற்றும் மின்சாரத் தொடர்பு, டெலிபோன், தண்ணீர் என்று எல்லா வசதிகளும் கொண்ட வீடு. நாம் வேலை மாறினால் இதை அப்படியே சக்கரத்தை மாட்டி வேறு ஊருக்கு இழுத்துக் கொண்டு போய் விடலாம். 1960வாக்கில்தான் இது பிரபலமாயிற்று.

வெள்ளைக்காரர்களுக்கு சைவ உணவு தயாரிப்பது மகா கஷ்டம். "எப்படி உனக்கு வெறும் பொங்கிய சாதத்தையும் வேக வைத்த கறிகளையும் படைப்பேன்? எப்படி இதை மட்டுமே சாப்பிட்டு உயிர் வாழ முடியும்?" என்று பதைத்துப் போவார்கள். இவை எல்லாம் எனக்கு சகஜமாகி விட்டன. பசி நோக்கார் கண் துஞ்சார் என்கிற பாடல் போல நமக்குக் காரியத்திலேயேதான் கண்; சாப்பாடு இரண்டாம் பட்சம்.

ஒரு மனிதருடன் காரில் தனியாகச் செல்வது என்பது ஒரு தனி அனுபவம். நாம் அவருடன் நெருக்கமாகிறோம். நாம் கீழே இறங்க முடியாது. ஏதாவது பேசிக் கொண்டே போகிறோம். ஒருவரை ஒருவர் அதிகம் தெரிந்து கொள்கிறோம்.

அமெரிக்காவில் 14 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருக்குமானால் நீங்கள் அவர்களை வீட்டிலேயே பார்க்க முடியாது. பள்ளி, விளையாட்டு, நண்பர்கள் என்று பெரும்பாலும் அவர்கள் வெளியேதான் இருப்பார்கள். அந்த ஊர் அப்படித்தான். எனவே உங்கள் மகனுக்கு நீங்கள் புத்திமதி சொல்ல வேண்டும், அறிவுரை வழங்க வேண்டும், வாழ்க்கையின் உண்மைகளைத் தெரிவிக்க வேண்டும் என்றால், சரியான இடம், இப்படிப்பட்ட தொலை தூரக் கார்ப் பயணம்தான்; அல்லது விடுமுறை நாட்களில் குழந்தைகளுடன் நான்கு நாட்கள், பத்து நாட்கள் என்று அமெரிக்க நாட்டைச் சுற்றிப் பார்க்கும் பயணங்கள்தான். இது பெரிய வாய்ப்பு. சில சமயம் இது மட்டுமே வாய்ப்பு – விரிவாக, மனம் விட்டுப் பேச! நாம் அவர்களுக்குப் பிடிக்காததைச் சொன்னாலும் அவர்கள் கீழே இறங்க முடியாது பாருங்கள்!

செலவைக் குறைத்தேன்; செயலில் விரைந்தேன்...

எங்களது விற்பனை மண்டலத்தைப் பற்றி ஓரளவு தெரிந்து கொண்டேன். அதாவது வெகு தொலைவில் இருக்கின்ற பல விற்பனை நிலையங்கள் லாபமில்லாமல் சில – நஷ்டத்தில் இயங்குகின்றன. ஆனால் நிறுவனமோ மொத்தத்தில் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. விரிவு படுத்த இது தருணமல்ல. எனவே "செலவைக் குறை" என்பதுதான் செய்யக்கூடிய காரியம்.

ஆனால், இதை இப்படிச் சொன்னால் எப்படி? அமெரிக்கத் தொழில் நிர்வாகத்தில் மகா பெரிய நிபுணர்கள் எல்லாம் இதற்கு

(Down sizing) 'டவுன் சைஸிங்' என்ற புதிய பெயரை இட்டிருக்கிறார்கள். அளவை அதாவது 'சைஸை' சிறிதாக்குதல் என்பதுதான் அர்த்தம்.

ஒரு விஷயத்தை இங்கே சொல்ல வேண்டும். இன்றைய மேற்படிப்பில் இந்த 'நிபுணர்கள்' என்போர் கையாளும் தந்திரம் இது. பழைய விஷயத்தை புதிய மாறுபட்ட வார்த்தைகளில் சொல்வதன் மூலம் இது ஏதோ இதுவரை கண்டு பிடிக்கப்படாத விஷயம் போலவும் இவர்தான் கண்டுபிடித்தது போலவும் இவர்கள் செய்து விடுவார்கள்! இவர் 'டவுன்சைஸிங்' எக்ஸ்பர்ட் ஆகி விடுவார்.

இந்த நிர்வாகக் கலை என்று சொல்கிறேமே, இது அனைத்துமே பொதுவாக எல்லோரும் அறிந்த - தெரிந்து கொண்டிருக்கும்போது அறிவுதான். நிபுணர்கள் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து தெளிவு படுத்துவார்கள். அதுவும் அவசியம்.

நமது உலக ஞானத்தை வைத்துக் கொண்டு நடப்பு விஷயங்களைக் கூர்மையாக கவனித்தோமானால், சிந்தித்தோமானால், நண்பர்களுடனோ, நமது சகாக்களுடனோ விவாதித்தோமானால் எல்லா விஷயங்களுமே நமக்கு விளங்கும் என்பதுதான் நான் கண்ட உண்மை. இதற்காக நிர்வாகக் கலை பயில நான் கல்லூரி போகவில்லையே தவிர ஆர்வத்துடன் நிர்வாகம் பற்றிய நூல்களையும் கட்டுரைகளையும் படிப்பதுண்டு; தெளிவு படுத்திக் கொள்வதுண்டு.

ஐந்தாக இருந்த விற்பனை மண்டலங்களை மூன்றாகக் குறைத்தேன். சில தொலை தூர விற்பனை நிலையங்களை மூடினேன். மாவட்டங்களின் எல்லைகளை இடமாற்றம் செய்வதுபோல மூன்று புதிய மண்டலங்களுக்குள் சில விற்பனை நிலையங்களை உள்ளடக்கினேன். மிக முக்கியமாக இரண்டு மண்டல மேலாளர்களின் பணி இதனால் தேவை இல்லாமல் போயிற்று. இதனால் பெரும் சம்பளம், செலவுப்படி மற்றும் கார் செலவு என்று செலவு குறைந்தது. இதற்கு மற்றொரு காரணமும் இருந்தது.

பல நாட்கள் ஒரே தொழிலில் இருப்பவர்கள் சிறிது காலத்தில் 'தொழில் கிழடு' தட்டி விடுகிறார்கள். "ஏதோ ஒரு வேலை. சம்பளத்திற்காக சில சடங்குகள்" என்கிற ரீதியில் அவர்கள் அலுத்துப் போய் செயல் படுகிறார்கள். துடிப்பு குறைந்து விடுகிறது. புதுமை, மாறுபட்ட சிந்தனை, உலகின் நடப்பைக் கண்காணிக்கும் தன்மை - எல்லாம் இல்லாமல் போய் விடுகிறது. இதனால் மண்டல விற்பனையில் தேக்கம் ஏற்பட்டது. இந்தக் காரணமும் எனது முடிவுகளுக்கு வித்தாய் இருந்தன.

இப்படி ஆட்களை வீட்டுக்கு அனுப்புவதில் ஒரு விஷயத்தை நாம் மறந்து விடுகிறோம். அதாவது, அவன் ஒரு மனிதன்; அவன் பின்னால் அவனை நம்பி இருக்கும் ஒரு குடும்பம்; இந்த வயதில் வெளியேற்றினோமானால், அவனுக்குக் கிடைக்கக்கூடிய வேலை வாய்ப்பு. இவை எல்லாவற்றையும்விட அவனுக்கு ஏற்படும் மனக் கிலேசம், உளைச்சல், உலகமே தன்னைக் கைவிட்டது போன்ற உணர்வு, தான் எதற்கும் லாயக்கில்லை என்ற மாபெரும் தாழ்வு மனப்பான்மை.

இந்த செயல் அங்கே சகஜமாக நடைபெறுகிறது. லூசியானா மாநிலத்தில் எண்ணெய் மூலம் வந்த வரிப்பணம் குறைந்து போன போது - மாநில வருமானம் பாதியாகிப் போனபோது - அரசாங்க அதிகாரிகள் உட்பட பள்ளி ஆசிரியர்கள் உட்பட 25 சதம் பேரை வீட்டுக்கு அனுப்பினார்கள். வெளியே அனுப்பும்போது கொடுக்கும் சலுகைகளுடன். அதை அங்கே அரசாங்க அதிகாரிகளும், ஆசிரியர்களும் அப்படியே ஏற்றுக் கொண்டார்கள்.

"அரசாங்கத்தில் பணமில்லாவிட்டால்

பட்டுப் புடைவை
பரிசுப் போட்டி – 10 – முடிவு

சீனத் தலைவர் 'டெங் சோபிங்' என்ற சரியான விடையை எழுதியவர்களுள் குலுக்கலில் தேர்வாகி, பட்டுப் புடைவைப் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

எஸ். தனலட்சுமி,
பிளாட் 93. திருமால் நகர்,
லட்சுமிபுரம் கிராமம் – போஸ்ட்,
சென்னை – 99

எப்படி சம்பளம் கொடுக்க முடியும்?'' என்று வேலை நீக்கப்பட்டவர்களே பேசினார்கள். மாறாக, அநியாயம் இழைத்து விட்டதாக ஆத்திரப் படவில்லை.

விற்பனையில் எங்கெங்கு செலவினங்களைக் குறைக்க முடியுமோ அதைச் செய்தேன். அப்படிச் செய்யாமல் - இருக்கிறபடியே ஓட்டிக் கொண்டிருந்தால் எங்கள் நிறுவனத்தின் சொந்தக்காரர் சொன்னது போல மூன்று நான்கு மாதங்களில் முழு நிறுவனமும் திவாலாகிப் போகும்!

இது மனிதாபிமானமற்ற செயல்தான். எனினும் பலரைக் காப்பாற்ற சிலரைத் தியாகம் செய்ய வேண்டிய நிலை என்றுதான் சமாதானம் செய்ய வேண்டி இருக்கிறது. இது இன்று மலேசியாவிலிருந்து சவுதியிலிருந்து கனடாவரை இந்தியர்களைத் திருப்பி அனுப்புவது சர்வ சாதாரணமான விஷயம்.

ஒரு தொழிலில் எப்போதும் வெற்றி முகம் என்பது நடக்காத ஒரு விஷயம். சரிவு வரத்தான் வரும். அதை எப்படி குறைந்த காயங்களுடன் சமாளிக்கிறோம் என்பதில்தான் வெற்றி அமைந்திருக்கிறது.

வேலை நீக்கப்பட்டவர்கள் என் மீது கோபப்பட்டார்கள்; நீக்கப்படாதவர்களில் சிலரும் என்னை விமர்சனம் செய்தார்கள். வாங்கிக் கொள்வது கஷ்டமாய்த்தான் இருந்தது. கலிங்கப் போரிலும் சரி வியட்நாம் யுத்தத்திலும் சரி பலர் இறக்கக் காரணமாய் இருக்கிறது போர். தொழில் நடத்துவதும் ஒரு போராட்டம்தான். எனினும் இன்னும் அவை என் மனத்தில் ஆறாத வடுக்களாய் என்னை சிந்திக்கச் செய்கின்றன.

லீ அயோகாக்கா, ஃபோர்டு கார் நிறுவனத்தின் ஒரு துறை நிர்வாகியாக இருந்த பின்னர், கிரைஸ்லர் என்கின்ற கார் நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார். நிறுவனமோ நஷ்டத்தில் போய்க் கொண்டு மூட வேண்டிய நிலையில் உள்ளது. நிறுவனத்தில் 27 துணைத் தலைமை நிர்வாகிகள் இருந்தார்கள். மூன்று பேரை மட்டும் வைத்துக் கொண்டு, மற்றவர்களை வீட்டுக்கனுப்பினார். தொழிலாளர்கள் முன்பு மணிக்கு 21 டாலர் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்கள். அயோகாக்கா தொழிலாளர் சங்கத்திடம் சொன்னார். ''என்னிடம் மணிக்கு 18 டாலர் வேலைதான் இருக்கிறது! மணிக்கு 21 டாலர் வேலை இல்லை!'' என்றார். தொழிலாளர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

லூசியானா மாநிலத்தில் வருமானம் குறைந்தபோது அரசு எடுத்த நடவடிக்கைகளும், அதேபோல என் அனுபவங்களுக்குப் பின்னால் இதே போன்று கிரைஸ்லர் நிறுவனத்தில் அயோகாக்கா எடுத்த முடிவுகளும் அதை மக்கள் ஏற்றுக் கொண்டவிதமும் என்னுள் முன்பே இருந்த எண்ணங்கள் என்றால் அது உண்மை.

பின்னால் நான் சொந்தக் கம்பெனி நடத்திக் கொண்டிருந்தபோது தொழில் சரிவு நாடு பூராவும் இருமுறை ஏற்பட்டது. இந்த அனுபவம்தான் எனக்குப் பாடமாய் இருந்தது.

அதுவும் நாட்டின் வருமானமும், நலிந்து கிடக்கும் நிறுவனங்களின் வருமானமும் தத்தளிக்கும் நிலையில் நம் நாட்டுத் தலைவர்களையும், நம் நாட்டு மக்களைச் செதுக்க வேண்டிய - சிந்திக்க வேண்டிய - எண்ணங்கள் இவை என்கிற எண்ணம்தான் மனத்தில் ஓடுகிறது!

(தொடரும்)



''மாப்பிள்ளை மகா அல்பம்...''

''எப்படிச் சொல்றே?''

''தன்னிடம் சொந்தக் கார் இருக்கு; அதிலேதான் மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் வருவேன்னு சொன்னது சரி... அதுக்காக வாடகை 1000 ரூபாய் தரணும்னு மாமனாரிடம் வசூலிப்பது நல்லாவா இருக்கு?''

— ராஜி ராதா



விசு ஏன்©



'கோயிலில் மணியடிக்கும் முன் சாமரம் வீசக் கூடாது; நைவேத்யம் பத்து நிமிடம் வைக்க வேண்டுமா, அரை மணி நேரம் வைக்க வேண்டுமா – இவையெல்லாம் கிரியை அல்ல; இவற்றின் பெயர் பைத்தியம்! காசியிலும் பிருந்தா வனத்திலும் கோயில் கதவுகளைத் திறப்பதற்கும் மூடுவதற்குமாக எத்தனையோ லட்ச ரூபாய்கள் செல வழிக்கிறார்கள். இப்போது பிரபு நீராடுகிறார், இப்போது உணவு அருந்துகிறார்... வேறு என்னென்ன செய்வாரோ தெரியவில்லை. இங்கே மனித தெய்வங்கள் உணவும் கல்வியும் இன்றிச் சாகிறார்கள். பம்பாய் வணிகர்கள் மூட்டைப் பூச்சிகளுக்காக மருத்துவச் சாலைகள் கட்டுகிறார்கள். மனிதர்களுக்கு? மனிதர்கள் சாகட்டுமே? இந்தச் சிறு விஷயத்தைப் புரிந்து கொள்ளக் கூட உங்களுக்கு மூளை இல்லை. நம் நாட்டில் தொற்றுநோய் போல் பைத்தியக்கார விடுதிகளே எங்கும் உள்ளன...'

– மேல உள்ள பேராகிராஃபைப் படிச்சதும் யாரோ தீவிர நாஸ்திகர், பகுத்தறிவுவாதியோட வீரப் பிரசங்கம் போல இல்லை? கஷ்டப்பட்டு நம்பிடுங்க. இதை எழுதினவர் விவேகானந்தர். வருஷம் 1894. அவர் ஃபாரின் போயிருந்தப்ப, கல்கத்தா மடத்துல இருந்த தன்னோட கலீக்ஸுக்கு (குருபாயிகள்) எழுதின லெட்டர்ல ஒரு பகுதி. (காண்க – விவேகானந்தரின் 'கடிதங்கள்' – ராமகிருஷ்ண மடம் வெளியீடு.) மத்த எல்லாத்தை விடவும் மனுஷனை வெறித்தனமா நேசிக்கற ஒருத்தரால மட்டுமே இப்படி ஷார்ப்பா எழுத முடியும்னு தோணுது. மதரீதியிலான சடங்குகள் எல்லாமே, எல்லாமே டோட்டல் வேஸ்ட்னு நம்பறார் சுவாமி. அந்தக் காலத்துல இப்படிப் பேசி, எழுதினா எத்தனை எதிர்ப்பு இருந்திருக்கும்னு யோசிச்சுப் பாருங்க. மனுஷன் மசியலையே! க்ரேட்!

எங்க பக்கத்து வீட்டுப் பையனுக்கு வயசு 16. ஐ மீன் காதல் மாதிரி ஏதாவது எட்டிப் பார்க்கற வயசு. சும்மா இருக்குமா? யாரோ பொண்ணை நினைச்சு உருகி, கொஞ்சம் கவித்துவமா ஒரு பேஸேஜ் எழுதி வெச்சு இருந்திருக்கான் நோட் புக்ல.

போறாத வேளை. சனிப்பெயர்ச்சி வேற ஆகியிருக்கு இல்லை? அப்படி ஒருதரம் லாஸ்ட் வீக் அதை எடுத்து, தானே படிச்சி ரசிச்சிட்டிருந்திருக்கான். பின்னால காலபைரவன் மாதிரி அவங்கப்பா வந்து நின்னதை கவனிக்கலை.

அந்த மனுஷருக்கும் இதெல்லாம் ஆகாத காரியம்னு ஒரு தீர்மானம். பின்னால பையன் பெரிய பொயட்டா வரலாம்னெல்லாம் நினைச்சுப் பார்க்காம போட்டு சாத்திட்டார்! நாலு நாளா அந்தப் பையன் மூஞ்சியெல்லாம் வீங்கி, படு சோகமா போயிட்டு வரதை ஜன்னல் வழியா பார்த்துட்டிருக்கேன். ஆயிரம் வளர்ந்தாலும் நம்ம சொஸைடில லவ் ஒரு மகா பாவ காரியம்.

சங்க இலக்கியத்துல ஆரம்பிச்சி, புழக்கத்துல இருக்கற ஏதாவது ஒரு நூலில் லவ் இல்லாம இருக்கா? (டெலிபோன் டைரக்டரியை விட்ருங்க.)

படிக்கிற பசங்க, உடல், பசலைன்னு சப்தம் போட்டுப் படிச்சாக் கூட பேரண்ட்ஸ் கண்டுக்கறதில்லை. பட், லைட்டர் வெயின்ல அவன்/அவள் ஒரு நாலு வரி சொந்தமா சிருங்காரமா எழுதவோ, பேசவோ, நினைக்கவோ செஞ்சா ஏன் பெற்றோர் ஒத்துக்கறதில்லை?

எனக்குத் தெரிஞ்சு ஒரே ஒரு விதிவிலக்கு. என் ஃப்ரெண்டு ஒருத்தன் இப்படித்தான் சும்மா ஒரு



சுமி சூப்பர் மார்க்கெட்

எட்டு வரி காதல் கவிதை நோட்டுல எழுதி வெச்சிருந்தான். (+2 படிக்கறப்ப.) வீட்டுல அவங்கம்மா பார்த்துட்டு 'ஓ'ன்னு அழ ஆரம்பிச்சிட்டாங்க.

என்ன விஷயம்னு அப்பா கேட்டு, அந்தக் கவிதையை வாங்கிப் படிச்சாரு.

இவர் என்ன குதிகுதிக்கப் போறாரோன்னு அவன் தவிக்க, அவர் என்ன சொன்னார் தெரியுமா?

"மரபுக் கவிதை உனக்கு சரிப்பட்டு வரலை. சந்தம் உதைக்குது. புதுக்கவிதை ட்ரை பண்ணிப் பாரேன்!"

அமெரிக்க அதிபர் க்ளிண்டன் மேல பாலியல் வழக்கு போடப்பட்டப்புறம் உலகம் முழுக்க எக்கச்சக்க க்ளிண்டன் ஜோக்ஸ் உலவுது. என் காதுல விழுந்ததுல ஒரு சாம்பிள் :

ஒரு ஆசாமி க்ளிண்டனைப் பார்க்கப் போனாரு. ஒயிட் ஹவுஸ் வாசல்ல, க்ளிண்டனை மடக்கி, "உங்களை நான் இதுக்கு முன்னால பார்த்ததில்லை. ஆனா நிறைய கேள்விப்பட்டிருக்கேன்"னாரு.

அதுக்கு க்ளிண்டனோட பதில் :

"நிறைய கேள்விப்பட்டிருக்கலாம். ஆனா எதையும் நம்பிடாதீங்க. எல்லாமே பொய்!"

தலைதெறிக்க ஓடினார்!

சில ஜோக்ஸைப் படிச்சாலே சிரிப்பு வரும். சிலதை மானசீகமா விஷுவலைஸ் பண்ணிப் பார்த்தா சிரிப்பு வரும். அப்படியொரு 'விஷுவல்' ஜோக் அனுப்பியிருக்கார், நம்ம ரசிகர் மன்ற உறுப்பினர் சிட்லப்பாக்கம் ஷண்முக சுந்தரம்.

டைரக்டர் விசு, அவுட்டோர் ஷூட்டிங் போயிருக்கார். ஈவினிங் காலாற மலைப் பக்கம் நடந்துட்டிருக்கறப்ப, ஒரு மந்தை ஆட்டை ஒரு சின்னப் பையன் மேச்சிட்டிருந்ததைப் பார்த்தார். சும்மா பேச்சுக் குடுக்கலாமேன்னு ஆரம்பிச்சார்:

"இந்த மந்தையில எத்தனை ஆடு இருக்கும்?"

"கறுப்பு ஆடுகளா? வெள்ளை ஆடுகளா?"

"கறுப்பு."

"அம்பது ஆடு."

"வெள்ளை?"

"அம்பதுதான்."

"ஒரு ஆடு எவ்ளோ புல் தின்னும்?"

"கறுப்பு ஆடா? வெள்ளை ஆடா?"

"கறுப்பு."

"ஒரு சுமை."

"வெள்ளை ஆடு?"

"அதே அளவுதான்."

"எவ்ளோ பால் கறக்கும்?"

"கறுப்பா? வெள்ளையா?"

"கறுப்பு."

"ஒரு லிட்டர்."

"வெள்ளை?"

"ஒரு லிட்டர்."

"ஒரே பதிலைத் தான் சொல்றே. அப்புறம் ஏன் கறுப்பா, வெள்ளையான்னு ஒவ்வொரு தடவையும் பிரிச்சுப் பிரிச்சு கேக்கறே?"

"கறுப்பு ஆடுகள் எங்கப்பாவுக்கு சொந்தம்."

"வெள்ளை ஆடுகள்?"

"அதுவும் எங்கப்பாவுடையதுதான்."

விசு தலைதெறிக்க ஓடுகிறார். பையன் கத்துகிறான் : "சார் ஏன் ஓடறீங்க? நான் உங்க படம் ஒண்ணு விடாம பார்த்திருக்கேன்!"

— சுமி

நேற்று – ஐஸ்க்ரீம் வியாபாரி

ஜெஃப்ரி ஆர்ச்சரைத் தெரியுமல்லவா? உலகப் புகழ் பெற்ற நாவலாசிரியர். இவருக்கு அரசியல்வாதி, கலைப் பொருட்கள் சேகரிப்பவர், பிசினஸ் மேன், முதலீடு ஆலோசகர் என்று பல முகங்கள் உண்டு. ஆனாலும், தமக்கு உலக அளவில் அங்கீகாரம் பெற்றுத் தந்தது பேனாதான் என்று பெருமையுடன் கூறுகிறார்.

சின்ன வயசில், கடற்கரையில் டூரிஸ்ட்களிடம் ஐஸ்கிரீம் விற்று, சம்பாதித்தவர். வறுமையான குடும்பம். சல்லிக்காசு கையில் இல்லாமல், கடனாளியாய் செத்துப் போனார் அப்பா. ஆர்ச்சரைப் பள்ளியில் படிக்க வைக்கக் கூட, அவரது அம்மா ரொம்ப சிரமப்பட வேண்டியிருந்தது.

இன்று – நாவலாசிரியர்



• ஜெஃப்ரி ஆர்ச்சர்

ஆனால் கடுமையான உழைப்புதான், தன்னை இந்த நிலைக்கு உயர்த்திய தாய்க் கூறுகிறார்.

''1974ல் எனக்குப் பெரும் கடன். வேலை கிடைக்கவில்லை. பணம் சம்பாதிக்க என்ன வழி என்று யோசித்தேன். அப்போதுதான் எழுத்தாளனாக முடிவெடுத்தேன். எழுதிய முதல் நாவல் நாட் எ பென்னி மோர்; நாட் எ பென்னி லெஸ்.''

இதுவரை சுமார் ஒரு டஜன் நாவல்கள் எழுதி விட்டார். புத்தகங்களின் ராயல்டி கோடிக் கணக்கில் கொட்டுகிறது. இன்று ஜெஃப்ரி ஆர்ச்சருக்கு உலகம் முழுக்க பதினாலு கோடி வாசகர்கள் இருக்கிறார்களாம்!

நம்மூரில் ஆயிரம் நாவல் எழுதியவர் இல்லையா? இது என்ன பெரிய விஷயம் என்பவர்களுக்கு: பெரிய விஷயம்தான்.

ஒரு புத்தகம் எழுத ஆரம்பிக்கும் முன்பு சுமார் ஒரு வருடம் அந்த சப்ஜெக்ட் குறித்து ஆராய்ச்சி செய்கிறார் இவர். புத்தகமாய் எழுதுவதற்கு இன்னும் ஒரு வருடம் பிடிக்கிறது!

இவரது சமீபத்திய நாவலான 'பதினோராவது கட்டளை' அமெரிக்க, ரஷ்ய உளவுப் படைகள், மாஃபியா குழுக்கள் பற்றியது. அதற்காக, ரஷ்யா சென்று மாஃபியா தலைவர்களுடன் ஓர் இரவு முழுக்கக் கூட இருந்து கவனித்தார். சி.ஐ.ஏ. பற்றி விரிவான தகவல்களைச் சேகரித்தார். இறுதி ஸ்கிரிப்ட் ரெடியானவுடன், தவறு ஏதும் உள்ளதா என அறிய சி.ஐ.ஏவின் தலைவரிடம் நாவலைத் தந்திருக்கிறார். அதைப் படித்த சி.ஐ.ஏ. தலைமை அதிகாரி என்ன சொன்னார் தெரியுமா?

"உங்கள் கதையில் இருபத்து ஆறு இடங்களில் சின்னஞ்சிறு தவறுகள். அவற்றையெல்லாம் திருத்தி விட்டேன். அதே சமயம் உங்களது ஐடியாக்களில் இரண்டு என்னை ரொம்பக் கவர்ந்தது. அதில் ஒன்றை உடனடியாக சி.ஐ.ஏ. நிர்வாகத்தில் செயல்படுத்தி விட்டேன்."

''உங்கள் புத்தகம் சரியாக விற்பனை ஆகாமல் போனால் என்ன செய்வீர்கள் ஜெஃப்ரி?''

"இதுவரை அப்படி நடக்கவில்லை. அதுபோல இனியும் நடக்காது என்று நம்புகிறேன். மீறி நடந்தால், எழுதுவதை நிறுத்தி விடுவேன்'' என்கிறார்.

ஜெஃப்ரி ஆர்ச்சருக்கு, லண்டன் நகர மேயர் பதவி மீது ஒரு கண். இது பற்றி ஒரு விமர்சகரின் கமெண்ட்: ''அவர் மேயர் ஆனால் அது எழுத்துலகின் அதிர்ஷ்டமா? இல்லை அரசியலின் துரதிருஷ்டமா? தெரியவில்லை!''

நாளை – மேயர்...

— கௌதம்

நன்றி : தி வீக்

கத்தரிக்காயுடன் கட்டாயக்காதல்!

மனச்சாட்சியைத் தேடி

மஹாராஷ்ட்ராவில் நடந்து முடிந்த 'ராஜ்யசபை, 10 லெஜிஸ்லேடிவ் கவுன்சில் ஸீட்டுகளுக்கான தேர்தலால், சோனியா காந்திக்கு நெத்தியடி! நஜ்மா ஹெப்துல்லா, ராம் பிரதான் ஆகிய இரு காங்கிரஸ் வேட்பாளர்களில், சோனியாவால் 'பர்சனலாக' ஆசீர்வதிக்கப்பட்ட ராம் பிரதான் தோற்று விட்டாரே! வயிற்றெரிச்சல் போதாதென்று சரத் பவார் ஆதரித்த சுயேச்சையான விஜய் தத்தா வென்றிருக்கிறார். சிவசேனையின் சார்பாக நின்ற சதீஷ் பிரதானும், ப்ரீதிஷ் நந்தியும் வெற்றி பெற்றிருந்தாலும், 'மார்ஜின்' மிக மிக ஒல்லி! கவுன்சிலுக்காக நின்ற கித்வானி தோற்றே விட்டார்! சுரேஷ் கல்மாடியும், பிரமோத் மஹாஜனும் இம்முறையேனும் வென்று, கொஞ்சம் பால் வார்த்திருக்கிறார்கள். காங்கிரஸ், சிவசேனை இரண்டு பக்கமும் எக்கச்சக்க 'க்ராஸ்-வோட்டிங்'. சரத்பவார் கூலாக லண்டன் பறந்து விட, சோனியாவும் தாக்கரேவும், தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் 'க்ராஸ்-வோட்டிங்' செய்தவர்களை சல்லடை போட்டுச் சலிக்கச் சொல்லியுள்ளார்கள். அரசியலில் பொய் சாட்சிக்குக் கூட இடமுண்டு! மனச்சாட்சிக்குக் கிடையாதே!



வளர்த்த கடா



மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது பழைய பல்லவி; கார், பங்களா, காசு, ஆன்மீகம் (ஃபாஷனுக்குத்தான்) என்பது இன்றைய மெகா ஹிட் ட்யூன்! அண்மையில் கெம்ப்ஸ் கார்னரில், எட்டாவது மாடியிலுள்ள தங்கள் ஃப்ளாட்டிலிருந்து வாசுதேவ் (76) – தாரா (70) என்ற வயதான தம்பதி கீழே குதித்து தற்கொலை செய்து கொண்டிருப்பது மும்பையையே உலுக்கியுள்ளது – அதுவும், 'ஒரே மகனும் மருமகளும் எங்களைத் துன்புறுத்துவது தாங்காமல் எங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்கிறோம்' என்று குறிப்பெழுதி இருப்பது சோகத்தின் சிகரம்! சில தினங்களுக்கு முன்தான், ஃப்ளாட்டைத் தன் பெயருக்கு மாற்ற விண்ணப்பம் அளித்திருக்கிறான் மகன். தந்தையைப் போல் போலிக் கையெழுத்திட்டிருப்பானோ எனப் போலீசார் சந்தேகித்தாலும், யாரையும் கைது செய்யவில்லை! ஆனால் தாங்கள் அப்பாவிகள் என சாதிக்கின்றனர் மகனும் மருமகளும். 'டிக்னிடி' என்ற முதியோர் ஃப்ரெண்ட்லி இயக்கம், இதே போல் எண்ணற்ற வயதானவர்கள் தங்கள் குழந்தைகளிடம் மாட்டிக் கொண்டு அல்லல் படுவதாகவும், வெளியிட வெட்கப்பட்டுக் கொண்டு மௌனமாக வதைபடுவதாகவும் தெரிவித்து, இவர்களின் உடனடி உதவிக்கென்று 3898078 என்ற ஹெல்ப் லைனையே தோற்றுவித்து விட்டது! இன்று அந்த எண் படு பிஸி!

மும்பை மசாலா :



"வக்கீல் சார்...
ஒரு சினிமா நடிகைய கல்யாணம் பண்ற வாய்ப்பு வந்துருக்கு!"

"பண்ணுங்க!"

"ஏற்கெனவே ஒரு நடிகைகிட்ட ஜீவனாம்சம் வாங்கிட்டு இருக்கேன். அதுக்கு பாதிப்பு வருமா?"

– அம்பை தேவா

கல்லடி பட்டு கண்ணாடியும் பட்டு...

வர வர மும்பை ட்ரெயின்களில் பயணிப்பதற்கென்றே தனியாக இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி எடுக்க வேண்டும் போலிருக்கிறது. ஸோனி ஜோஸஃப், அந்தேரியில் ரயில் பயணத்தைத் துவக்கிய போது இரண்டு கண்களுடனுமிருந்தாள்; ஆனால், இந்த 22 வயது கம்ப்யூட்டர் ப்ரோக்ராமர், நவஸோபாராவிலிருக்கும் தன் வீட்டை அடைந்தபோது ஒரே ஒரு கண் தானிருந்தது! தஹிசாருக்கும் மீரோ ரோடுக்கும் இடைப்பட்ட தூரத்தை ரயில் கடக்கும் போது, விஷமிகள் வழக்கம் போல் லேடீஸ் கம்பார்ட்மெண்ட்டை கற்களால் குறி பார்க்க, கதவருகில் நின்றிருந்த ஸோனியின் கண்ணில் கல் பட்டு, வலது கண் இருந்த இடத்தில் ஒரு குருதிக் குளம்! கல்லடியால் நிலைதடுமாறி வெளியே விழாமல், அருகிலிருந்தவர்கள் காப்பாற்றி, ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றிருக்கின்றனர். தினமும் நிகழும் இந்தக் கல்லெறி விளையாட்டு, குறைந்தபட்சம், மாதம் ஒருமுறையாவது வினையாகி விடுகிறது! கண், தலை, கழுத்து, காது என்று அங்கங்களையும் கண்ணாடி, தோடு, பை, வளையல் போன்ற வஸ்துக்களையும் இழந்தவர்கள் பலர். பிரபல நடிகர் ஸ்ரீராம் லாகுவின் மகன் உயிரையே இழந்திருக்கிறான். ரயில்வே நிர்வாகம் எப்போது விழித்துக் கொள்ளப் போகிறதோ? ஒருவேளை யாராவது வி.வி.ஐ.பி. அடிபடக் காத்திருக்கிறதோ?

ஸாங்ஷன் படுத்தும் பாடு

முன்பெல்லாம் ஐ.ஐ.டி. டாப் ராங்க்கில் பாஸ் செய்தவர்களெல்லாம் அடுத்த நிமிடம் யு.எஸ். பறந்து விடுவார்கள். இப்போதோ, அமெரிக்க யுனிவர்ஸிடிகளில் ஸீட் கிடைத்தும் கூட, அமெரிக்க விஸா கிடைக்காமல் படாதபாடுபடுகிறார்கள். போக்ரானுக்குப் பிறகு இவர்கள் போக்கு மாறிவிட்டிருக்கும் என நினைக்கிறார்கள் போலும்! ஒரு பௌதிக மாணவனிடமே "உன் அறிவை நீ தீவிரவாதத்துக்குப் பயன்படுத்தினால்..." என்று கொக்கி போட்டு, 'இன்று போய் நாளை வாராய்' சொல்லி அனுப்பியிருக்கிறார்கள். 'ஏராநாடிகல்' டிபார்ட்மெண்ட்காரர்களுக்குத்தான் எக்கச்சக்க தொந்தரவாம்! "எப்படியோ... இப்படியாவது ப்ரெயின் ட்ரெயின் ஆகாதிருந்தால் நல்லதுதான்" என சந்தோஷிக்கிறார்கள், தங்கள் நம்பிக்கை நட்சத்திரங்களை அமெரிக்காவுக்குத் தாரை வார்த்து விட்ட ஐ.ஐ.டிக்காரர்கள்!

கத்தரிக்க முடியாத கத்தரிக்காய்

கத்தரிக்காய் கறி, கத்தரிக்காய் சாம்பார், கத்தரிக்காய் ரசவாங்கி, கத்தரிக்காய் கொத்சு, 'பைங்கன் கா பர்த்தா' (இந்தி கத்தரிக்காய் பொறியல்)... இதுவேதான் மும்பைக்காரர்களின் 'மெனு'வாகி விட்டது கொஞ்ச காலமாக! அப்படி என்ன திடீர் கத்தரிக்காய் மோகம்? அது ஒன்றுதான் கிலோ 20 ரூ விற்கிறது. மற்ற எல்லாக் காய்கறிகளும் 30 ரூபாயிலிருந்து 60 வரை விலை! பட்டாணி 80 ரூ! "மூணே கறிகாய்தான் வாங்கி வந்தேன்; கையில் 300 ரூ தானே இருந்தது?" என்று ஆர். கே. லக்ஷ்மண் கார்ட்டூன் போடுமளவுக்கு விலை ஏறிக்கிடக்கின்றது. குஜராத்தில் புயல் அடித்ததுதான் காரணமாம்! (நல்லவேளை, போக்ரனில் குண்டு வெடிப்பால் என்று சொல்லவில்லை); இனி ஆந்திரமும் கர்நாடகமும் கருணை காட்டினால்தான் நிலைமை சுதாரிக்குமாம்! அதுவரை கத்தரிக்காயுடன் மும்பைக்காரர்களுக்கு கட்டாயக் காதல்தான்!

– ஜெயஸ்ரீ ராஜ்



நட்புக்காக

விஜயகுமாரும், சரத்குமாரும் நண்பர்கள். நண்பனின் குடும்ப நலனுக்காக செய்யாத குற்றத்திற்குச் சிறை செல்கிறார் சரத். சிறையிலிருந்து வந்த பிறகும் விஜயகுமாரின் குடும்ப நலத்திற்காகச் சில செயல்களில் ஈடுபட்டுத் தன் உயிரைத் துறக்கிறார். அதிர்ச்சியில் விஜயகுமாரும்.

விஜயகுமாருக்கு ரன்னிங் ரோல். முக்கால்வாசிப் படத்தில் கரடித்தனமான வெற்றுமார்போடு தோன்றுவது சங்கடத்தை ஏற்படுத்தினாலும் தேவைப்படும் முகபாவங்களை வஞ்சனையில்லாமல் வெளிப்படுத்துகிறார். தந்தையைப் பற்றிய உண்மையை அறிய வரும் காட்சியில் சரத்தின் நடிப்பு குறிப்பிடத்தக்கது.

தம்மை இளைய சரத் கெடுக்க முயற்சிப்பதாக ஒரு நாடகமாடி அப்பா விஜயகுமாரை சரத்துக்கு எதிராகத் திருப்புகிறார் சிம்ரன். இதற்கானப் பின்னணி நம்பும்படியாகவே இருக்கிறது என்றாலும், தாம் சரத்தைக் காதலிப்பதாகக் கூறி அவரை நம்ப வைக்க வேண்டிய அவசியமென்ன?

சித்தாராவிடம் அழுத்தமாகத் தெரிவது மேக்கப் மட்டுமல்ல; நடிப்பும். இவரை ஏன் தமிழ்த் திரையுலகம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்ற கேள்விக்கான விடை சிம்ரனைப் பார்க்கும்போது கிடைக்கிறது!

பாமரத்தனமானது என்றாலும் செந்திலுடைய இயல்பான, விரசமில்லாத காமெடிக்கு தாங்க்ஸ். கவுண்டமணி இல்லாத குறை தெரியவில்லை - படத்தில் ஆளாளுக்கு செந்திலை அறைகிறார்கள்.

தேவாவிடம் ஒரு ஒரிஜினாலிடி இருக்கிறது. குரல்! சொந்தக் குரலில் பாடும் 'மீசைக்கார நண்பனே' பாட்டும், சிம்ரன் பாடுவதாக வரும் 'அடிக்கிற கை அணைக்குமா'வும் இதம்.

படத்தில் சரத்தும் சிம்ரனைக் காதலிக்கவில்லை. சிம்ரனும் காதல் கொண்டதாக நடிக்கிறார் - அவ்வளவே. இந்த நிலையில் மூன்று டூயட்களைப் படமெடுத்து விட்டு, கனவுக் காட்சிக்கும் சான்ஸ் இல்லாமல், அவற்றை எங்கே புகுத்துவது என்று டைரக்டர் அவஸ்தைப் பட்டிருப்பது புரிகிறது.

விறுவிறுப்புக்காகப் பார்க்கலாம்.

— ஜி

65

தாய் தந்தையரை அந்திமக் காலம் வரையிலே பேண வேண்டும் என்பது யோசனைக்கே இடமில்லாத காரியம். ராமேஸ்வரம் யாத்திரை போனவரைப் பற்றி வேடிக்கையாய் ஒரு கதை சொல்வார்கள்:

ஒரு பெரிய செப்புச் செம்பை உடன் எடுத்துப் போனாராம் அவர். நன்றாகப் பளபளவென்று தேய்த்து, அதிலே ஜலத்தை ராத்திரியே கொட்டி வைத்துவிடுவார். காலையிலே எழுந்து அதிலிருந்து ஒரு தம்ளர் ஜலம் சாப்பிட்டால் ஹ்ருத் (இதய) ரோகம் வராது! நரம்புகளெல்லாம் நன்றாக வேலை செய்யும். செப்புப் பாத்திர தீர்த்தத்துக்கு அவ்வளவு சக்தி! அதை தாத்தா காலத்திலேயிருந்து வைத்துக் கொண்டிருக்கிறார் அவர்.

ராமேஸ்வரத்துக்கு இந்தச் செம்புடன் போனவர், ஸ்னாநம் பண்ணும்போது அதைப் பக்கத்தில் வைத்துக் கொண்டால், அலை அடித்துக் கொண்டு போய் விடுமே என்று யோசித்தார். சமுத்திரத்திலேயிருந்து இருபது கஜ தூரத்தில் மண்ணை நன்றாகத் தோண்டி, செம்பை உள்ளே வைத்து மூடிவிட்டார். ஸ்நானம் பண்ணிவிட்டு மறுபடியும் வந்தால் புதைத்த இடம் தெரியாமல் போய் விடுமில்லையா...? அதனாலே அந்த இடத்திலே மணலைக் கோபுரமாகக் குவித்தார்.

இவர் செம்பை வைத்து மூடியதை யாருமே பார்க்கவில்லை... ஆனால் மணலைக் கோபுரமாகக் குவித்தாரே, அந்த சமயத்தில் நான்கு டூரிஸ்ட் பஸ்கள் வந்தன. அதிலிருந்து நாநூறு பேர் இறங்கினார்கள்.

மணலைக் குவித்து வைத்தவர் குளிக்கப் போய்விட்டார். இதைப் பார்த்தவர்கள் அத்தனை பேரும், 'ராமேஸ்வரம் வந்தால் சமுத்திர ஸ்னாநம் பண்ணுவதற்கு முன்னால் மணலைக் குவிக்க வேண்டுமாக்கும்...' என்று முடிவு செய்து கொண்டனர்!

அந்த 'செம்பு யாத்திரிகர்' குவித்து வைத்தாரே... அதற்குப் பக்கத்திலே ஆளுக்கொரு குவியல் குவித்து வைத்து விட்டார்கள். வந்த நாநூறு பேரும் அப்படிக் குவித்து விட்டார்கள்! அவர்களுக்குப் பின்னால்




வந்தவர்களும் அவரவர்கள் ஆளுக்கொரு குவியல்!

நிதானமாக சமுத்திர ஸ்னாநமெல்லாம் முடித்துக் கொண்டு, வேட்டியை உலர்த்தி உதறி உடுத்துக்கொண்டு வந்து பார்த்தால்... ஒரே சஹஸ்ரலிங்கமாக இருக்கிறது அந்தக் கடற்கரையிலே! ஆயிரம் லிங்கம் உத்பவம் ஆகிவிட்டது அங்கே!

அழுகிறார் அவர்! செம்பை எப்படிக் கண்டுபிடிப்பதாம்! "ஐயோ! இந்த உலகத்தினுடைய இயல்பை நான் என்ன சொல்லுவேன்! யாராவது ஒருத்தராவது வந்து 'இங்கே ஏன் இப்படி மணலைக் குவிக்கிறீர்கள் என்று கேட்கக் கூடாதா..? நான் குவித்தேன் என்பதற்காக எல்லோரும் குவித்து விடுகிறார்களே! இப்போது அநியாயமாய், என் தாத்தா காலத்திலேயிருந்து வைத்திருந்த செப்பு செம்பு போய்விட்டதே!..." என்று புலம்புகிறார் அவர். புலம்பிக் கொண்ட, ஒரு நூறு குவியல்களைக் கிளறிப் பார்த்துத் தேடுகிறார்... செம்பு கிடைக்கவேயில்லை! தலையில் கை வைத்துக் கொண்டு புறப்பட்டுப் போய்விட்டார்!

இந்தக் கதையிலே வருகிற மாதிரிதான் வயதானவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்கிற தர்மம்... அது பற்றிய ஒரு யோசனையே- கேள்வியே நமக்கு வரக்கூடாது. கண்ணை மூடிக் கொண்டு அந்த



தர்மத்தை நாம் செய்ய வேண்டும். எந்த தர்மமுமே அப்படித்தான்.

அந்திமக் காலத்தில் அவஸ்தை இருக்கிற போது, வயதானவர்களுடன் கிரஹத்திலே கூட இருப்பவர்கள் சரியாக கவனிக்கவில்லையானால் அந்தப் பெரியவர்கள் எப்படியெல்லாம் அவஸ்தைப்படுகிறார்கள்... தன்னை கவனிக்காத குழந்தைகளைத்தான் அதிகமாகத் தேடுகிறார்கள், ஆசைப்படுகிறார்கள்... அந்திமக் காலத்திலே கிருஷ்ணா ராமா என்று சொல்லவிடாமல் இப்படித் தங்களைத் தேடும்படியான நிலைக்கு அந்தக் குழந்தைகள் அவர்களை உள்ளாக்கலாமா...?

எதற்கு இத்தனையும் சொல்ல வந்தேன் என்றால், அந்திமக் காலம் என்பது ரொம்பக் கஷ்டம். உடம்பிலும் பலம் போய் விடுகிறது; இதாரும் ஒத்துழைக்க மாட்டேன் என்கிறார்கள். அந்தச் சமயத்திலே கிருஷ்ணா ராமா, கோவிந்தா என்று சொல்லச் சொன்னால் யாரால் சொல்ல முடியும்?!

அதனால்தான் பகவானே சொல்லித் தருகிறான்: 'எல்லாம் உன் வசமாக இருக்கும் போதே, நீ நன்றாக இருக்கும்போதே என் நாமாவைச் சொல்லு... சொன்னாயானால் நான் ஒரு நாளும் கைவிட மாட்டேன். நானே வந்து அழைத்துப் போவேன்'.

பீஷ்மாச்சார்யாருக்கு அந்திமக் காலத்திலே பரமாத்மா நேரில் வந்தானா இல்லையா? அவர் எதிர்பார்த்தாரா? தானாகவே தான் அவன் வந்தான். வந்து, நேரில் காட்சி கொடுத்தான். பீஷ்ம ஸ்துதி பிறந்தது. ஸ்தோத்திரம் பண்ணினார். பகவானுடைய திருவடியை அடைந்தார்.

பக்தியோகம் பண்ணுகிறார்கள் பாருங்கள்... அவர்கள் தாங்களே சுயப் பிரயத்தனத்தினாலே அந்திம ஸ்ம்ருதியை வரவழைத்துக்கொள்ள வேண்டும். ஆனால், சரணாகதி பண்ணுகிறார்கள் பாருங்கள்... அவர்களுக்கு அந்திம ஸ்ம்ருதியை பகவானே கொடுத்து அழைத்துக் கொள்கிறான்– பாபாத்மாக்களுக்கு இரண்டு யம கிங்கரர்கள் வருவார்கள். புண்யாத்மாக்களுக்கு யமனே வருவான்! திரும்பிப் போதல் இல்லாத மோக்ஷத்தை அடைகிறவர்களுக்கு பகவானே வருவான்.

உபேயம்–பயன் அவன்தான். அடைவிக்கும் சாதனமாகவும் (உபாயம்) அவனே இருக்கிறான். வேறு ஒரு உபாயம் கிடையாது. அவனே உபாயம்; அவன் திருவடிதான் நமக்குத் தஞ்சம். சாதனமும் பயனுமாக அவனே இருப்பது எப்படித் தெரிகிறது என்றால் நம்மிடத்திலே இருக்கும்படியான இடுக்கண்களையெல்லாம் அவன் போக்குவதால்.

தூரத்தில் இருக்கிற விரோதிகளைப் போக்குகிறான். கிட்டே இருக்கும்படியான விரோதிகளையும் போக்குகிறான்.

முதலில் தூரத்தில் இருப்பதைப் பார்ப்போம்... நம்மையறியாமல் இருக்கும்படியான விரோதிகள்... யார் அவர்கள் என்றால்... நமக்குத் தெரியாமலே ஜன்மாந்திரங்களில் நாம் செய்த பாவம்! அது நமக்கு விரோதியாக இருந்துகொண்டேயிருக்கிறது. நம்மைச் செயல்பட விடாமல், நல்ல விஷயத்திலே ஈடுபட விடாமல் தடுக்கிறது. பெரிய தடையாக இருக்கிறது.

ஏன் இப்படித் தடுக்கிறது...? போய் உட்கார்ந்து கொண்டால் ஜபம் சித்திக்க மாட்டேனென்கிறது! இன்றைய தினம் நூறு

அருள்வாக்கு

துஷ்கார்யத்தை ஸத்கார்யத்தால் ஸரி செய்கிறாற்போல, கெட்ட நினைப்பை நல்ல நினைப்பால்தான் ஸரி செய்ய முடியும். இங்கே தான் அன்பு வருகிறது. நல்ல எண்ணங்களிலெல்லாம் தலைசிறந்தது அன்புதான். அந்த அன்பை ஸமஸ்த ஜீவராசிகளிடமும் செலுத்த வேண்டும். அத்தனை ஜீவராசிக்கும் மூலாதாரமான பரமாத்மாவிடம் செலுத்தி பக்தி செய்ய வேண்டும். மூலத்திடம் அன்பு (பக்தி) செய்யாமல் அதிலிருந்து வந்தவற்றிடம் மட்டும் செய்யப் பார்த்தால் அது ஸரியாய் வராது. அதனால்

ஆவர்த்தி ஜபம் பண்ண வேண்டும் என்று உட்காருகிறேன். ஆனால் இரண்டு ஆவர்த்தி பண்ணுகிற போதே அதிலே ஒரு விரக்தி வருகிறது. இடையிலே மனம் சஞ்சலமடைகிறது. ஏன்...?

அப்படியென்றால் அந்தப் பாவம் வேலை செய்கிறது என்று அர்த்தம். அது தடையாக நிற்கிறது. ஆகையினாலே அந்தப் பாவம் அகல அவன் திருவடியைத்தான் நாம் பற்ற வேண்டும். அப்படிப் பற்றினால் தூரத்தில் இருக்கும்படியான நம் பாவங்களையெல்லாம் போக்கடிக்கிறான்; நமக்குத் தெரியாமலிருக்கும் பாவங்களையும் நம் கிட்டே நெருங்கவிடாமல் பண்ணுகிறான்.

பாவமே பண்ணிக் கொண்டிருக்கும் ஒருவர் சௌக்கியமாக இருக்கிறார்... விடாமல் புண்யகர்மா பண்ணுகிறவர்கள் கஷ்டத்தையே அனுபவிப்பதைப் பார்க்கிறோம்.

ஜூதைப் பார்க்கிற நடுநிலையாளர்கள் என்ன நினைப்பார்கள்...? பாவம் பண்ணினால் தான் சௌக்கியமாக இருக்கலாம் போலிருக்கிறது. புண்ணியம் பண்ணி அவர் என்ன சுகத்தைக் கண்டார்...? அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறாரே? புண்ய கர்மாவினாலே என்ன பயன்...?' என்றுதான் தோன்றும்.

ஆனால் இது நமக்கு முதல் பிறவி இல்லை என்பதை நாம் நினைவு வைத்துக் கொள்ள வேண்டும். அனேக ஜன்மங்கள் நமக்கு ஏற்கெனவே ஏற்பட்டு விட்டன. பாவத்தைப் பண்ணுகிறவர் சௌக்கியமாக இருக்கிறார் என்றால், பின்னால் அவருக்கு அந்தப் பாவத்துக்கான பலன் வரத்தான் செய்யும். இப்போது அவர் சௌக்கியமாக இருக்கிறார் என்றால், ஏற்கெனவே செய்த புண்ணியத்தின் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்.

ஆகையினாலே, இப்போது பண்ணுகிற புண்யத்துக்குக் கஷ்டத்தை அனுபவிக்கிறேனே... என்று நினைக்கலாகாது. முதல் பிறவியாயிருந்தால் அப்படி நினைக்கலாம்... ஆனால் ஜன்ம ஜன்மாந்திரமாக எத்தனையோ பாவம் பண்ணி, அது உள்ளுக்குள்ளேயே படிந்து கிடப்பதனாலே பாவத்தையே பண்ணத் தூண்டுகிறது அது! உள்ளுக்குள்ளேயே இருக்கிற கெட்ட வாசனை அவ்வளவு சுலபத்தில் போய் விடுமா...? போகாது!

ஒருத்தர் மைசூர் ரசத்தை நன்றாக உறிஞ்சிக் குடித்து விட்டுக் கையை அலம்பிக் கொண்டு விடுகிறார். அரை மணி கழித்து இன்னொருத்தரின் மூக்கிலே போய் அவர் கையை வைத்து, 'எங்கள் வீட்டிலே என்ன சமையல், சொல்லுங்கள் பார்ப்போம்...' என்றால், முகர்ந்தவர் "என்ன மைசூர் ரசமா?" என்று கேட்டு விடுவார்.

கொஞ்சம் நேரம் மைசூர் ரசத்தோடு கலந்த இந்தக் கை... அரை மணி நேரம் சென்ற பின்னரும் அதில் வாசனாபலம் தெரிகிறதென்றால்... இந்த ஆத்மா எத்தனையோ ஜன்மங்களாக பாபமே பாபமே பாபமே பண்ணிக் கொண்டிருந்திருக்கிறதே... அந்த வாசனை அவ்வளவு சுலபமாகப் போகுமா...?!

அதைத்தான் பாகவதத்திலே சொல்லியிருக்கிறது... கெட்ட வாசனை என்பது எப்படியென்றால்... சுகப்ரும்மம் அதை பரீக்ஷித்துக்கு விளக்கிச் சொல்கிறார். பரீக்ஷித் ரொம்ப கெட்டிக்காரன்... அவன் கேட்கிறான்...


"ஸ்வாமி! ஒருத்தர் தப்பு பண்ணுகிறார்... தப்புக்குப் பிராயச்சித்தம் செய்யறார். அப்புறம் மறுபடியும் தப்பு, பாவம்... மறுபடியும் பிராயச்சித்தம். மறுபடியும் பாவம், இன்னொரு பாவம்... இந்தப் பிராயச்சித்த கர்மாவினாலே பிரயோஜனமில்லை என்று தோன்றுகிறது எனக்கு...."

இப்படிச் சொல்லிவிட்டு ஒரு உபமானத்தையும் சொல்கிறான் பரீக்ஷித் :

"யானையை நன்றாகப், பளபளவென்று தேய்த்துக் குளிப்பாட்டி, நல்ல கரு நிறத்திலே, மரத்தடியிலே கட்டி வைத்தால்... அந்த யானை என்ன பண்ணுகிறது...? கீழே இருக்கிற சத்தை குப்பையெல்லாம் எடுத்து, தலை மேலே போட்டு அழுக்கு பண்ணிக் கொள்கிறது...! எத்தனை நாள் குளிப்பாட்டினாலும் அழுக்கையே போட்டுக் கொள்கிறது... அது மாதிரிதான் நாம் பண்ணும் பாவமும்... பிராயச்சித்த கர்மாவினாலே பலனே இல்லையே..."

இதற்கு சரியானதொரு பதிலைக் கூறினார் சுக பிரும்ம மஹரிஷி... அதை அடுத்த வாரம் சொல்கிறேன்.

(தொடரும்)



ஈச்வரபக்தி அத்யாவச்யம். மனஸ் ஜீவனுக்குப் போடுகிற தப்பான எண்ணக் கட்டை எடுத்துப் போடுவதற்கு இது தான் வழி செய்யும்.

அதாவது மனஸ், தான் பின்னே நின்று கொண்டு, சரீரத்தை முன்னே விட்டுச் செய்விக்கிற கர்ம பந்தம் மட்டுமே ஸத்கர்மாவினால் போகும். மனஸின் நேர் பந்தமான எண்ணத்தின் பந்தம் பக்தியினால்தான் போகும். பக்தியும் எண்ணம்தான், மனஸை வைத்துக் கொண்டு அதனால் பண்ணுவதுதானென்றாலும், எப்படி சாஸ்த்ர கர்மா பழைய கர்மக் கட்டை அவிழ்க்கிற கட்டாயிருந்ததோ, அப்படியே இதுவும் எண்ணத்தின் விஷயத்தில் செய்யும். பக்தி செலுத்திக் கொண்டே போனால் அது முற்றிப் பூர்ணமாகும்போது, 'மனஸ் என்று தனியாக ஒன்றை வைத்துக் கொண்டு இவன் வேறாக பக்தன் என்று இருக்க வேண்டாம்' என்று பகவானே நினைப்பார் – இவனை மனஸிலிருந்தே அவிழ்த்து விடுதலை பண்ணித் தன்னுடைய ஆத்ம ஸ்வரூபத்தில் ஒன்றாக்கிக் கொண்டு விடுவார்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

அற்புதமாக இருக்கிறது ஆகாசம். எப்பொழுதாவது மேகச் சிதறல்களும் அதன் பொன்னிறச் சேர்க்கையும் தாற்காலிகமாக ஓர் ஓவியக் கண்காட்சி நடத்துவதைப் பார்க்கும்போது பிரமிப்பு, திகைப்பு என்பதோடு இயற்கைதான் எத்தனை பெரிய சக்தி என்கிற எண்ணமும் கலவையாகக் கிளர்ந்தெழுந்து விடுகிறது.

பலருக்கு இதை ரசிக்கத் தெரியவில்லை. அதோ மயிலாப்பூர் மாடவீதி மொட்டை மாடியில் நின்றபடி வெங்கடரமணன் பார்க்கும் போது, அது நிதர்சனமாகத் தெரிகிறது.

கையில் சந்தியாவந்தனம் பண்ண எடுத்து வந்திருந்த நீர்ப் பாத்திரம். அந்தப் பாத்திர நீரின் திவலைகளில் கூட ஆகாச ஓவியத்தின் பிம்பங்கள் பட்டுத் தெறிக்கின்றன.

ஊடாடிக் கலைக்கிறது கீழே அப்பா சைக்கிளை எடுக்கும் சப்தம்.


அப்பாவுக்கு கோவிந்த வெங்கடேச சர்மா என்று சற்று நீளமான பெயர். இந்த வேகயுகத்திற்கு அத்தனை நீளப் பெயரை உச்சரிக்க நேரமில்லாததால் கோந்து சாஸ்திரி என்றாக்கி விட்டது அவரை. வெங்கடரமணன் கூட இந்தச் சிதைவுக்குள்ளானவன்தான். வெங்க்கி என்றாகி விட்டான். அம்மா மட்டும் எப்பொழுதும் முழுப் பெயர் சொல்லித்தான் அழைப்பாள். பெயரைச் சுருக்கினால் வாழ்வும் சுருங்கிப் போகும் என்பது அவளது அசட்டு நம்பிக்கைகளில் ஒன்று. சரியான அடுப்படிப் பூனை. ஆகையால் புகை நிமித்தம் உருவாகும் வியாதிகள் சர்வமும் உண்டு. அதில் ஒன்று இருமல். சமயங்களில் கின்னஸில் இடம்பிடிக்குமளவு இருமுவாள். பதறிப் போய் நெஞ்சை வருடி விடுவான் வெங்க்கி.

''அம்மா, டாக்டர்கிட்ட போலாமா'' என்று கேட்பான். கோட்டு வாயில் எச்சில் ஒழுக புடைவை முந்தானைத் துடைப்போடு சிரிப்பான் அவள்.

''எதுக்கு வெட்டியா... சித்தரத்தை கஷாயம் போட்டுக் குடிச்சா சிட்டா பறந்துடாதா இந்த இருமல்?''

''எங்க பறக்கறது... நாளுக்கு நாள் ஜாஸ்தியாகறது எனக்குப் பயம்மா இருக்கும்மா...''

''போடா பைத்தாரா... டாக்டரைப் பார்த்து அம்பது நூறு அழறதுக்கு யார் கிட்ட இருக்கு திராணி. எல்லாம் நீ டாக்டரா வந்து



மனுஷனாகணும்!

சரிப்படுத்து... மாட்டியா என்ன?"

அப்பாவிற்கு உபாத்யாயம்தான் தொழில். மயிலாப்பூர் குளத்தங்கரையில் போய் உட்கார்ந்து கொண்டு பூணூல், திருமாங்கல்ய சரடு, தர்பைக் கட்டு, சமித்து இவைகளை போட்டுக் கொண்டு கடை பரப்புவது சாயங்கால வேளைகளில்....

சரடு திரிப்பதில், அதில் மஞ்சள் தோய்ப்பதில் அம்மா கெட்டிக்காரி.

இப்பொழுது கூட சாஸ்திரிகள் கடை பரப்பத்தான் கிளம்பிக் கொண்டிருக்கிறார்.

"பிராம்மணனை வாணிகனாக்கிடுத்தே காலம்..." என்கிற சலிப்போடு.

பார்த்துக் கொண்டே நிற்கிறான் வெங்கி.

வானக் கோலத்தை மனக்கோலம் மென்று விழுங்கி விட்டது. பரீட்சை ரிசல்ட் இன்று வரப் போகிறது. பாசைப் பற்றிக் கவலையில்லை. முதல் மாணவனா இல்லையா என்பது பற்றித்தான் கவலை.

"கோமடீஸ்வரய்யர் நீ முதல்ல வந்தா மெடிகல் சீட் வாங்கித் தர்றதா சொல்லியிருக்கார்..."

"பத்மநாபய்யங்கார் கூட நான் பாத்துக்கறேன் கவலைப்படாதேன்னு சொல்லியிருக்கார்..."

"உன் ஜாதகத்தைக் காமிச்சேன் வெங்கி... நீ நிச்சயம் டாக்டராவியாம். வித்யாகாரகன் அத்தனை பலமா இருக்கானாம்..."

– கடந்த ஒரு மாசமாய் இதே மாதிரி பிலாக்கணம்தான்.

"இன்னும் அஞ்சு வருஷம்தான் இந்த உபாத்யாயம். அப்புறம் நான் டாக்டரோட அப்பா. கௌரி, இதே மயிலாப்பூர் டேங்க்கை சுத்தி நாம கார்ல உக்காந்துண்டு வரணும்டி..."

"நன்னாருக்கு! முதல்ல சீட் கிடைக்கட்டும். அப்புறம் பேசலாம். ஒருக்கால் டாக்டருக்குக் கிடைக்கலேன்னா என்ன பண்றது... எஞ்ஜீனியரிங்குக்கும் போட்டு வைக்கணும்."

"பின்ன.... படிப்புதானேடி நமக்குப் பெரிய சொத்தே...?"

சாஸ்திரிகள் சொன்ன ரூட்டோடு பூணூல், சரட்டு விலைகளையும் கூட்டி விட்டார்.

உபாத்யாயம் போகுமிடங்களிலும் தட்சணை இவ்வளவு என்கிற கறார் தன்மை வந்து விட்டது. கொடுப்பதை வாங்கிக் கொண்டவர், வித்தைக்கு விலை வைக்கக் கூடாது அது பாவம் என்றவர்...

இன்று மகனின் கல்விச் செலவு அது இது என்று ஏகப்பட்ட உத்தேசங்கள், கொள்கையைச் சாப்பிட்டு விட்டது.

சமீப காலமாய்ப் பலர் அப்படி வெங்கி காது படவே சொன்னதை அவனும் கேட்க நேர்ந்தது. அது அவனை என்



இந்திரா சௌந்தர்ராஜன்

னென்னவோ செய்து விட்டது.

சந்தி முடித்து, கீழ் இறங்கி வருகிறான். வெறித்தனமாய் வெறும் வயிற்றுடன் அம்மா ஸ்லோகம் சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

மகனுக்கு முதல் மார்க் வர வேண்டுமே என்கிற மகா பெரிய கோரிக்கையோடு... அதைப் பார்க்க, பரவசம் தோன்றுவதற்குப் பதிலாக வெறுப்புத்தான் ஏற்படுகிறது.

மாடப்பிறையில் ரிசல்ட் வருமுன்பே வாங்கி வந்திருந்த அப்ளிகேஷன்கள் கிடக்கின்றன. அதை வரிசையில் நின்று வாங்கப் பட்டபாடு அவனிடம் ஒரு ஓட்டம் ஓடுகிறது.

சினிமா டிக்கெட் போல ஐம்பது ரூபாய் அப்ளிகேஷனை நூறு ரூபாய்க்கு வாங்கிய கொடுமை அவனை நிற்க வைத்துக் கொளுத்துகிறது.

"யார் சாஸ்திரிகள் பிள்ளையா... அப்படி வா. உனக்குன்னு ஒண்ணு எடுத்து வெச்சிருக்கேன். மொத்த சீட்டே முப்பதுதான். இதுக்கு எட்டாயிரம் பேர் அடிச்சிண்டா என்னத்துடா பண்றது? அதான் கவுண்ட்டர் திறந்த ஒரு மணி நேரத்துல எல்லாம் காலியாயிடித்து."

– புலம்பியபடியே கல்லூரி க்ளார்க் ஒருவர் மார்புக்கு முன், பனியனுக்குப் பின் பதுக்கியிருந்த அப்ளிகேஷனை வியர்வைச் சொத சொதப்போடு எடுக்கிறார்.

ஐம்பது ரூபாயை நீட்டுகிறான்.

"என்ன அம்பி இது... அம்பது தரே... ஆயிரம் ரூவா தர ஆள் இருக்கு தெரியுமா?" – அவர் மூக்கைச் சிந்துகிறார். பின் அப்படி இப்படி என்று நூறு ரூபாய் தந்து...

என்னவோ தெரியவில்லை. சரஸ்வதியை ஆளாளுக்குப் பிடித்து வைத்துக் கொண்டு ஒரு ரூபாய்... இரண்டு ரூபாய் என்று ஏலம் போடுவதாக ஒரு கற்பனையை அவனால் கட்டுப்படுத்தவே முடியவில்லை. அப்ளிகேஷன் அநியாயத்துக்கு கனக்கிறது. அதைக் கூட்டுகிறது பக்கத்து வீட்டு ருக்மணி மற்றும் பார்த்தசாரதியின் புலம்பல்.

"எல்கேஜிக்கு அஞ்சாயிரமா?"

"மத்த இடத்துல பத்தாயிரம்னா..."

''எஜுகேஷன் நன்னா இருக்கு மோல்லியோ?''

"ஆத்துல கூட பசங்க இங்கிலீஷ்லதான் பேசணும். அப்படி ஒரு கோச்சிங்."

"என்ன எழவோ... படிச்சு முன்னுக்கு வந்தா சரி. என்னை மாதிரி குமாஸ்தாவா குப்பை கொட்டாம டாக்டராவோ எஞ்ஜீனியராவோ ஆகணும். அதுக்கு என்ன உண்டோ அதைப் பண்ணணும்."

"அப்ப அந்த திருவான்மியூர் ப்ளாட்டை விலை பேசிடுங்கோ. இல்லேன்னா கடத் தேறாது."

"எனக்குத் தெரியாதா.. நேத்தே புரோக்கராண்ட சொல்லிட்டேன்."

அவர்கள் பேசுவது காதில் விழுந்ததில் இதய பாகமே இரைச்சலாகி விட்டது. சமுத்திரம் இந்த வினாடி திருவல்லிக்கேணிக்கு அப்பால் பீச் ரோடு கடந்து இல்லை. வெங்கியின் மனசுக்கு அது குடிபெயர்ந்து விட்டது.

எரிச்சலாக இருக்கிறது.

யாரைப் பார் எஞ்ஜீனியராகணும், டாக்டர் ஆகணும் – தப்பில்லாத ஆசை தான். ஆனால் அதற்கான பிரயாசைகளில் கொஞ்சமாவது ஒழுங்கிருக்கிறதா, நியாயமிருக்கிறதா?

கேள்வி குத்தி எடுக்கிறது. குடைந்து நெம்புகிறது.

தள்ளிக் கொண்டு வருகிறார் பத்திரிகை நிருபர். வீட்டு வாசலில் கூட நிலைகொள்ளாத கூட்டம்.

"வெங்கி ஸ்டேட் ஃபர்ஸ்ட்டாம்."

''தெரியுமே... அவன் வராம யார் வருவா?''

"இனி சாஸ்திரிகள் பொழுது விடிஞ்சுடும்.''

''ஹும்... என் வீட்டு அராத்தும் இருக்கே... அது தலைல கரெஸ்பாண்டென்ஸ் கோர்ஸ் பி.ஏன்னு எழுதியிருக்கு. யார் மாத்த முடியும்...''

"அதுக்கு பேசாம பழ வண்டி தள்ளி பொழைக்கலாமே..."

அக்கம் பக்கமாய் இப்படியெல்லாம் பிலாக்கணங்கள். ஆனால் வீட்டுக்குள் கங்கிராஜுலேஷன்ஸ், கங்கிராஜுலேஷன்ஸ் என்கிற ஆங்கிலக் கைகுலுக்கல்கள். பெருமை, அம்மாவின் முகத்தில் ராஜ நடனம் போட்டுக் கொண்டிருக்கிறது. சாஸ்திரிகளும் இருப்பதில் உகந்த புதிய துண்டால் மார்பு மூடியபடி கம்பீரமாக உட்கார்ந்து கொண்டு போஸ் கொடுக்கிறார்.

"நாங்க பெரிய மிராசு பரம்பரை.. என் தாத்தா மகாவித்வான் பட்டம் வாங்கினவர். என் தோப்பனார் மினிஸ்ட்ரில செகரட்ரியாவே இருந்தவர். அந்த வம்சாவளி வீண் போகுமா என்ன?"

தன்னைத் தவிர்த்துப் பெருமை பீத்து

கிறார் அவர். நிருபர் குறிப்பெடுத்துக் கொள்கிறார்.

"இந்த அளவு மார்க் வாங்க யார் காரணம்?"

நிருபரின் அடுத்த கேள்வி முன் அதுவரை மௌனமாக இருந்த வெங்கி என்னும் வெங்கடரமணன் முகம் நிமிர்த்துகிறான்.

"நான்தான்..."

"அதுதான் தெரியுமே. உங்க ஸ்கூல் வாத்யார் பத்தி எல்லாம் கொஞ்சம் சொன்னா தேவலை..."

"ஏன் என் அப்பாவை விட்டுட்டேள். அவர்தான் பெரிய காரணம். பூணூல் வித்து, உபாத்யாயம் பண்ணி என்னை ஆளாக்கியிருக்கார்.."

"அடுத்து டாக்டராக விருப்பமா... இல்லை எஞ்ஜீனியராகவா...?"

"முதல்ல மனுஷனாகணும்" – அவனது பதில் நிருபரை ஒரு இடி இடிக்கிறது.

"என்ன சொல்றீங்க...?"

"இல்ல... நான் மனுஷனாகணும்னேன்."

"அப்ப இப்ப...?"

"என்னை எங்க எல்லாரும் ஆக உடமாட்டாளோன்னு பயமா இருக்கு. கொடுக்கக் கொடுக்கக் குறையாதது கல்வி மட்டும்தான். ஆனா அதை எட்டாத உயரத்துல வெச்சு தங்கம், வைரம் மாதிரி விக்கற கொடுமையை என்னால ஜீரணம் பண்ண முடியலை. ஆகையால எனக்கு அந்தப் படிப்பு வேண்டாம். ஆயிரம் பத்தாயிரம் கொடுத்து அதை நான் விலைக்கு வாங்க வேண்டாம். அப்புறமா போட்டதை எடுக்கறேன்னு நாடி பிடிக்க நூறு ரூபா... ஊசி போட்டா நூத்தம்பதுன்னு மாறவும் வேண்டாம். எங்கப்பாவோட உபாத்யாயம், என் பக்கத்து வீட்டுக்காரரோட குமாஸ்தா உத்யோகம், ஒரு ஓட்டல் சப்ளையரோட சர்வர் வேலை எதுவும் தாழ்ந்ததில்லை."

"அப்படின்னா...?"

"நான் இனி உபாத்யாயம் படிக்கப் போறேன்.. பழுதில்லாத வேதப் படிப்புதான் எனக்குப் பெரிசு. அது எனக்கு ஒரு அந்தஸ்தைக் கொடுத்தா அது போதும்."

"பைத்யம்... பைத்யம்..." – சாஸ்திரிகள் குறுக்கில் புகுந்து கத்துகிறார். நிருபர் ஸ்தம்பித்துப் போயிருக்கிறார்.

யார் பைத்தியம் என்று அவனுக்குப் புரியவில்லை. ⭘

அட இதுல இவ்ளோ விஷயம் இருக்கா?

கொலஸ்ட்ரால் - எல்லோருக்கும் தெரிந்த பெயர்தான். அதே சமயம் பயத்தை ஏற்படுத்தும் பெயர்! ஆனால் "என் உடலிலே கொலஸ்ட்ராலே கிடையாது" என்று என்னதான் ஒல்லியான, ஆரோக்கியமான ஒருவர் சொன்னாலும் அது உண்மையல்ல.

நம் உடல் திசுக்களில் காணப்படும் இயல்பான, முக்கியமான பகுதிதான் கொலஸ்ட்ரால்.

நம் கல்லீரல் கொலஸ்ட்ராலை உருவாக்குகிறது. நம் ரத்தத்திலும் கொலஸ்ட்ரால் காணப்படுகிறது. நாம் சாப்பிடும் உணவு மூலமாகவும் கொலஸ்ட்ரால் நம் உடலில் சேருகிறது.

இதய நோய் உட்பட பல பாதிப்புகளை உறுதிப்படுத்திக் கொள்ள டாக்டர்கள் சிபாரிசு செய்வது கொலஸ்ட்ரால் பரிசோதனை. நம் உடலில் உள்ள ரத்தத்தில் குறிப்பிட்ட சதவிகிதத்திற்குள்தான் கொலஸ்ட்ரால் அளவு இருக்க வேண்டும். அதைத் தாண்டினால் இதயத்துக்கு ஆபத்து. 'குறிப்பிட்ட அளவு' என்றால் எவ்வளவு?

பொதுவாக ரத்தத்தில் உள்ள 'Serum' கொலஸ்ட்ரால் அளவை (ரத்தப் பரிசோதனை மூலம்) கணக்கிடுவது வழக்கம். இந்த அளவு, ரத்தத்தில் ஒரு டெஸி லிட்டருக்கு 250 மில்லி கிராம் அளவுக்குள் இருந்தால் ஓகே. மீறினால் உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி எல்லாம் உடனடித் தேவை.

ரத்தத்தில் அதிக அளவில் காணப்படும் கொலஸ்ட்ரால், ரத்தக் குழாய்களின் உட்புறமாக ஒதுங்கி, அவற்றை இறுக்கிக் கொண்டுவிடும். இதனால் ரத்தக் குழாயின் உட்புற அளவு குறைந்துவிட, ரத்தமும் வழக்கத்தைவிடக் குறைவான அளவிலேயே அங்கு கடந்து செல்கிறது.

கொழுப்பு ஜாஸ்தியா?

இந்த ரத்தக் குழாய்கள் மூளை மற்றும் இதயத்துடன் நேரடித் தொடர்பு கொள்பவையாக இருந்தால் அது பக்கவாதத்திலோ, தீவிர இதய பாதிப்பிலோ கூட, போய் முடியலாம்.

உடனே "வில்லன் கொலஸ்ட்ரால் ஒழிக" என்று கோஷமிட வேண்டாம். இதில் ஹீரோ வகையும் உண்டு!

நம் உடலில் ரத்தத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் (அல்லது தங்கிவிட்டிருக்கும்) கொலஸ்ட்ரால் என்பது வெவ்வேறு வகையிலான கொழுப்பு மற்றும் புரதங்களின் கூட்டணிதான். இவற்றை லிபோப்ரோட்டின்ஸ் என்கிறார்கள். இவை குறைவான அடர்த்தி கொண்டவையாக இருந்தால் அது வில்லன் கொலஸ்ட்ரால். ரத்தக் குழாய்களை அடைக்க வைக்கும் கொழுப்புச் சத்துகள் உருவாக வில்லன் உதவுகிறான். இதய நோய்க்கு வழி செய்கிறான்.

அடர்த்தி அதிகமான லிபோப்ரோட்டின்களும் நம் ரத்தத்தில் உண்டு. இவை ஹீரோ தன்மை கொண்டவை. இவை அதிகம் இருக்க, இதய நோய் வாய்ப்பு குறைவு!

திசுக்களில் உள்ள அதிகப்படி கொழுப்பை ஓரளவு எடுத்துப் போய், கல்லீரலில் சேர்க்கும் கைங்கர்யத்தை ஹீரோ கொலஸ்ட்ரால் செய்கிறது. கல்லீரலில் இவை 'Bile' அமிலமாக (ஜீரணத்துக்கு உதவுவது) ஓரளவு மாற, மற்றவை வெளியேற்றப்படுகின்றன.

கொலஸ்ட்ராலுக்கான ரத்த சோதனை செய்யப்படும்போது வில்லன் வகை கொலஸ்ட்ராலையே கணக்கிடுகிறார்கள். எனவே இனி இங்கு நாம் குறிப்பிடுவதெல்லாம் வில்லன் வகையைச் சேர்ந்ததாகவே வைத்துக் கொள்ளவும்.

திடீரென்று ஒரு 'கெட்ட செய்தி'யைக் கேள்விப்படுகிறோம். உடனே நம் உடலில் உள்ள அட்ரினலின் தூண்டப்படுகிறது. இதயத் துடிப்பும் மூச்சு வேகமும் அதிகமாகிறது. ஹைட்ரோகார்டிஸான் என்ற ஹார்மோன் அதிகம் சுரக்கிறது.

இந்த ஹார்மோனும் சரி, அட்ரினலும் சரி, நமக்கு ஏற்படும் டென்ஷனை சரிக்கட்ட உதவுவது உண்மைதான். ஆனால் இதெல்லாம் கொஞ்ச நேரத்துக்கு நடைபெற்றால் ஓகே. தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவி, இந்த ஹார்மோன்கள் சுரந்து கொண்டே இருந்தால் சில ஆபத்துகள் உண்டு.



அட்ரினலின் மிக அதிக அளவில் சுரந்து கொண்டே இருந்தால் அது இதயத்தையும், நுரையீரல்களையும் அதிக வேலை செய்ய வைக்கிறது. இதனால் ரத்த அழுத்தம் எகிறுகிறது.

ஹைட்ரோகார்டிஸான் அதிக அளவில் சுரந்து கொண்டே இருந்தால், கொலஸ்ட்ரால் அளவு அதிகமாகிறது. ரத்தம் அங்கங்கே கட்டிக் கொள்ள இந்த கொலஸ்ட்ரால் காரணமாக அமைந்து விடுகிறது. அதனால்தான் தொடர்ந்து டென்ஷனில் இருப்பவர்களுக்கு மூளை பாதிப்பால் பக்கவாதமோ, இதயநோயோ ஏற்படலாம்.

உடல் பருமனாக இருப்பவர்களுக்கு கொலஸ்ட்ரால் சத்து அதிகம் இருக்க நிறைய வாய்ப்புண்டு. உடலின் எடை அதிகமாக ஆக இதயத்தின் வேலைப் பளு அதிகமாகிறது. (உடலின் அ...த்...த...னை பகுதிகளுக்கும் ரத்தத்தை அனுப்ப வேண்டுமே). இதனால் அதிக ரத்த அழுத்தம் ஏற்படுவது இயல்பு. நார்மலான எடை கொண்டவர்களைவிட, அதிக பருமன் கொண்டவர்களின் உடலில் உள்ள கொலஸ்ட்ரால் அளவு சுமார் இரண்டு பங்கு அதிகம் இருக்குமாம்.

உணவுக் கட்டுப்பாடு, மிதமான உடற்பயிற்சி இரண்டும்தான் கொலஸ்ட்ராலை கட்டுக்குள் கொண்டு வரும் சிறந்த வழிகள். ஆனால் இவற்றைக் கடைப்பிடித்தும் ஒருவரின் உடலில் கொலஸ்ட்ரால் மிக அதிகமாக உள்ளதென்றால், அதற்கென சில வகை மருந்துகள் இப்போது உள்ளன.



ஆனால் ஒன்று! இந்த மருந்துகளை சாப்பிட்டால், இஷ்டத்துக்கு பல்வேறு திண்பண்டங்களை வெட்டலாம் என்று கனவு காண வேண்டாம். அப்போதும் உணவுக் கட்டுப்பாடு அவசியம்.

நார்ச்சத்து என்பது நம் உணவில் உள்ள, எந்த சத்தும் இல்லாத ஒரு வகை வேஸ்ட் என்று கருதப்பட்ட காலம் உண்டு. ஆனால் இப்போது இதற்குத் தனி மதிப்பு. நார்ச்சத்து மலச்சிக்கல் உண்டாகாமல் பார்த்துக் கொள்வதுடன், ஒரு விதத்தில் கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கவும் உதவுகிறது. சில வகை நார்ச்சத்துக்கள் வயிறு மற்றும் குடல் பகுதிகளில் செல்லும்போது அங்குள்ள நீரை உறிஞ்சிக் கொண்டு அளவில் பெருத்துவிடும். இதனால் வயிறு நிரம்பியிருப்பது போன்ற உணர்வு ஏற்பட்டு, நாம் உட்கொள்ளும் உணவின் அளவு குறையும். அதே சமயம் ஜீரண உறுப்புகள் உணவை கிரகித்துக் கொள்ளும் வேகத்தையும் இந்த வகை நார்ச்சத்துக்கள் கட்டுப்படுத்துகின்றன. இவற்றின் காரணமாக கொலஸ்ட்ரால் அளவு குறைகிறது. பல வகை காய்கறிகள், பழங்கள், கொள்ளு, பயற்றங்காய் ஆகியவற்றில் நார்ச்சத்து அதிகம்.

— **ஜி.எஸ்.எஸ்.**



"போலி டாக்டர் கேசுல பிடிபட்ட நீங்க அவசரமா ஜாமீன் கேட்கறீங்களே... ஏன்?"

"அவசரமான நாலு கேசுகளுக்கு ஆபரேஷன் பண்ண வேண்டியிருக்கு!"

— அம்பை தேவா

"அவரை 'போலி டாக்டர்'னு எப்படிச் சொல்றீங்க?"

"இந்த மாத்திரையில 'ஜுரம்' குறையலேன்னா, மூணு வேளை சுக்குக் கஷாயம் குடிங்கன்னு சொன்னாரே, அதை வெச்சித்தான்..."

— தேவந்தி துரைராஜ்





"தலைவி சொன்னால் பாழுங் கிணற்றிலும் குதிக்கத் தயார்னு சொன்னீங்களே, நிஜமாவே அப்படிச் செய்வீங்களா?"

"என்ன அப்படிக் கேட்டுட்டீங்க? ஏற்கெனவே அவுங்க சொல்லித்தானே நான் அரசியல்ல குதிச்சிருக்கேன்!"

— சீர்காழி ரேவதி

"புலவரே! மன்னர், 'குண்டு கலாச்சாரம் தலைவிரித்து ஆடுகிறது' என்று சொன்னாரே, என்ன பொருள்?"

"அந்தப்புரத்தில் இருக்கிற பெண்கள் எல்லாருமே குண்டாக இருக்கிற கவலையையே மன்னர், இப்படி வெளியிட்டார் அமைச்சரே!"

— ரேஸ். கிருஷ்ணரத்னம்





"நீ அழாமல் ஆபீஸுக்குப் போ, அம்மா! சமர்த்தா வேலை பாரு; சாயங்காலம் சந்திக்கிறேன்!"

— எஸ். மோகன்

ஸ்மைல் ப்ளீஸ்!

"அந்தப் போலி டாக்டருக்கு எவ்வளவு திமிர் பாரு!"

"என்ன சேதி?"

"எதுக்காக போலி டாக்டரா இருந்தீங்கன்னு கேட்டா மெடிக்கல் காலேஜ்ல இடம் கிடைக்காததுதான் காரணம்றார்!"

— அம்பை தேவா





"ஒரே ஒரு ஆளு, என் டிரீட்மெண்ட்ல செத்துட்டார்னு கைது பண்ணறீங்களே! எத்தனை பேர் என்கிட்ட டிரீட்மெண்ட்டுக்கு வராததால பிழைச்சிருக்காங்க. அதைக் கவனிக்க மாட்டேங்கறீங்களே!"

— ஜூலி

"என்னங்க இது, சுத்த அக்கிரமமா இருக்கு!"

"எதுங்க?"

"மாம்பழம் ஏன் இந்த விலை விக்குதுன்னு கேட்டா, ஏகமா மழை பெஞ்சி பூவெல்லாம் கொட்டிப் போச்சுன்னு சொல்றாங்க! தக்காளி ஏன் இந்த விலை விக்குதுன்னு கேட்டா, மழையே பெய்யல்லே, தண்ணி இல்லாம பயிரெல்லாம் வாடிப் போயிடுச்சுன்னு சொல்றாங்க!"

— கோவை கே. அனிதா



"எனக்கொரு சந்தேகம் சார்..."

"கேளு..."

"செந்திலை கவுண்டமணி உதைக்கிறது ரொனால்டோ ஸ்டைலா... பாசியோ ஸ்டைலா...?"

— வி.ஆர். கிருத்திகா




"அந்தப் போலி டாக்டருக்கு பெயில் கிடைக்கிலியா ஏன்?"

"அவருக்காக வாதாடின வக்கீல் போலியாம்!"

— ஜூலி





Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623;
Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)


கல்கி
இலவச இணைப்பு
KALKI 5.7.98
மெனோபாஸ்:
இயற்கை அளிக்கும் ரிடையர்மெண்ட்!

மெனோபாஸ் :

இயற்கை அளிக்கும் ரிடையர்மெண்ட்!

ஒரு பெண் பருவம் எய்துவது என்பது நமது நாட்டில் இன்றும் மகிழ்ச்சியுடன் ஏற்கப்படும் நிகழ்வாக – புனித நிகழ்ச்சியாக இருக்கிறது. சுற்றமும் நட்பும் அழைத்துச் சிலர் கொண்டாடுகிறார்கள்; சிலர் 'வீட்டோடு' சடங்கு செய்கிறார்கள். இதெல்லாம் நாகரிகமில்லை என்று நினைக்கும் அம்மாக்கள் கூட, தங்கள் மகளுடன் மட்டுமாவது அந்தரங்க சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ளத்தான் செய்கிறார்கள்.

பருவம் எய்தும் மகளிடம், அவள் உடலில்

டாக்டர் லக்ஷ்மி நாகராஜன்

நிகழ்ந்துள்ளது இயற்கையான முன்னேற்றமே; இனி அவள் தாய்மைக்குத் தயார் என்பதை அறிவுறுத்தும் நிகழ்வு என்றெல்லாம் எடுத்துச் சொல்லி அனாவசிய பயத்தைப் போக்கி, மனத்தைச் சமன்படுத்துகிறார்கள்.

பெண்ணும் அந்த மாதாந்திர 'விருந்தாளி'யை மிக இயல்பாக ஏற்றுக் கொண்டு விடுகிறாள். புதிய அந்தஸ்து வழங்கும் பெருமிதம் ஒருபுறம், புறத்தோற்றத்தில் ஏற்படும் அழகான மாற்றத்தின் விளைவுகள் இன்னொரு புறம்... மாதவிடாயின் அசௌகரியங்களை இவை மறக்கடித்து, அதை நட்புணர்வுடன் கூட ஏற்கச் செய்து விடுகின்றன!



விஞ்ஞானரீதியில் பார்த்தால் பருவம் எய்துதல் என்பது என்ன...? உடலின் வம்ச விருத்தி வல்லமை பக்குவப்பட்டு நிற்கும் கட்டம் அது. மருத்துவ மொழியில் சொன்னால் : Final maturation of reproductory system - when endocrine and gometogenic function begins and reproduction becomes possible.

எண்டோக்ரைன் என்னும் முக்கியமான நாளமிலாச் சுரப்பி தனது பணியைத் தொடங்கி, கருவுறுதலுக்குப் பெண்ணின் உடலைத் தயாராக்குகிறது என்பதே



இதன் அர்த்தம்.

ஆக, உடல் தயார் நிலையை எய்தும் போது மனமும் அதற்கான தயார் நிலையை அடைய குடும்பச் சூழலும் சமுதாய அமைப்பும் உதவுகின்றன.

ஆனால், இதே வம்சவிருத்தி ஆற்றலுக்கு 'டாட்டா' சொல்லும்போது என்ன ஆகிறது...? உலகமே அஸ்தமித்து விட்டதுபோல் ஒரு கலக்கம், இயல்பு வாழ்க்கையைப் புரட்டிப் போட்டு உலுக்கி எடுக்கும் சூறாவளியான மாற்றங்கள்; 'இந்த நேரத்தில இப்படித்தான் படுத்தும்...' 'எடுத்துப் போட்டுட்டு நிம்மதியாய் இரு...' என்பது போன்ற 'அட்சர லட்ச' அறிவுரைகள்!

உண்மையில், பூப்பெய்துவதைப் போலவே உடலின் அந்தப் பணிக்கு விடைகொடுத்து அனுப்புவதும் மிக இயற்கையான நிகழ்ச்சிதான் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொண்டால் மெனோபாஸ் ஒரு பயங்கர மிரட்டலாக இராது.

சினேகமுடன் 'டாட்டா' சொல்லத்

தயாராவது எப்படி....? எப்போது...? ஏன்...? எதற்கு...? – இந்தக் கேள்விகளுக்கெல்லாம் தோழமையுடன் பதில் சொல்லும் முயற்சியே இந்தக் கையேடு.

பருவமடைந்த காலகட்டத்திலிருந்து சுமார் 30 – 35 ஆண்டுகளுக்கு மாதாந்திர தீட்டு நீடிக்கும். இந்த 30 – 35 ஆண்டுகளும் ஒவ்வொரு மாதமும் தாய்மைப் பேறுக்குத் தயாராகிறது கருப்பை. கருவுறுதல் நிகழாமல் போகும்போது கருப்பையின் உட்சுவர் பகுதி, கருவுக்கென்று 'சேர்த்து வைத்ததை' வெளியேற்றி விடுகிறது. இந்த வெளியேற்றம்தான் மாதவிடாய்!

பெரும்பாலானவர்கள் நினைப்பது போல், மெனோபாஸ் என்பது இந்த



மாதவிடாய் நின்று போகும் நிலை மட்டும் அல்ல... கருவுறுதலுக்கு அவசியமான கருமுட்டை உற்பத்தி தான் முதலில் பாதிக்கப்படுகிறது.



பெண்ணின் கருப்பைக்கு இருபுறங்களிலும் இரு கருமுட்டைப் பைகள் (ovaries) உள்ளன. இவைதான் மாதா மாதம் கரு முட்டைகளை உற்பத்தி செய்து கருப்பையை நோக்கி அனுப்பி வைக்கின்றன.

பருவமெய்துவதற்கு எண்டோக்ரைன் சுரப்பிகளின் பணித்துவக்கமே காரணம் என்று பார்த்தோமல்லவா...? அந்தச் சுரப்பிகள் ஓய்வு எடுத்துக் கொள்ள ஆரம்பிக்கும்போது கருமுட்டை உற்பத்திக்குத் தேவையான ஹார்மோன்கள் குறைந்து விடுகின்றன. அதனால் முட்டை உற்பத்தியும் அது தொடர்பான முட்டைப் பைகளின் இதர வேலைகளும் படிப்படியாகக் குறைகின்றன. கருப்பையும் இனி தனக்கு வேலை இராது என்று உணர்ந்து, சினைமுட்டைக்காகத் தனது உட்சுவரைத் தயார்ப்படுத்தும் முன்னேற்பாட்டை நிறுத்தி விடுகிறது. இந்தப் படிப்படியான ரிடையர்மென்டில் முதல் கட்டம் ஓவரிகளின்

சுறுசுறுப்புக் குறைவுதான். மாதவிடாய் அடியோடு நிற்பதற்கு ஓரிரண்டு ஆண்டுகள் முன்பாகவே ஓவரிகள் சுறுசுறுப்பிழக்க ஆரம்பித்து விடுகின்றன. அவை சுரக்கும் ஈஸ்ட்ரோஜன், புரொஜெஸ்டரோன் என்ற முக்கியமான ஹார்மோன்கள் குறைய ஆரம்பிக்கின்றன. மாதவிடாய் நின்றுபோய் நான்கைந்து ஆண்டுகள் வரை அவற்றின் செயல்திறன் மெள்ளக் குறைந்து அடியோடு மறைகிறது. ஓவரிகளின் படிப்படியான ரிடையர்மெண்ட் கிளைமேக்டரிக் (climacteric) என்று அழைக்கப்படுகிறது.

சரி, இயற்கையே விதித்த இந்த நிகழ்வு ஏன் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பல வகையான துன்பங்களை உண்டாக்குகிறது...?

'காரணம் கிருமிகள்!' என்று டூத் பேஸ்ட் விளம்பரத்தில் சொல்வது போல், 'காரணம் ஹார்மோன்கள்' என்று விடை கூறலாம்.

இந்த ஹார்மோன்கள் இருக்கின்றனவே... அவை உடல் இயக்கத்துடன், மன இயக்கத்தையும் ரொம்ப ரகசியமான வகைகளில் கட்டுப்படுத்துகின்றன. உடல் இயக்கத்தை எப்படிக் கட்டுப்படுத்துகின்றன என்பதைத் துல்லியமாக விஞ்ஞான உலகம் கண்டறிந்திருக்கிறது. ஆனால் மன இயக்கக் கட்டுப்பாடுகள் இன்னமும் பெரும்பாலும் புதிராகவே இருக்கின்றன.

'அப்படியானால், மெனோபாஸ் படுத்தல்களைப் பொறுத்துக் கொள்வது தவிர வேறு வழி இல்லையா?'



என்று கேட்பீர்கள்.

முதல் வேலையாக மனோ பாவத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். நாற்பதை நெருங்கும்போதே 'அத்தையைக் கொண்டிருந்தால் படுத்தாது; அம்மாவைக் கொண்டிருந்தால் ஆட்டி வைக்கும்...' என்பது போன்ற 'பாட்டி' வசனங்களை வீட்டுப் பெரிசுகள் எடுத்து விடுவார்கள். இந்த அணுகுமுறையை முதலில் மாற்றிக் கொள்ள வேண்டும்.

இயற்கை அளிக்கும் இந்த ரிடையர்மென்டை இன்முகத்துடன் ஏற்பேன்; அதற்கு என்னைத் தயார்ப்படுத்திக் கொள்வேன் என்று ஒரு பெண் முடிவு செய்து விட்டால் 99% பிரச்னையை வென்று விடலாம். மீதி ஒரு சதவிகிதத்துக்குத்தான் மருத்துவ உதவியும், மற்றவர் உதவியும் தேவைப்படும்.

45 வயதை நெருங்கும்போது, மெனோபாஸுக்கான அறிகுறிகள் தெரிகின்றனவா என்று கவனித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

என்னென்ன அறிகுறிகள்...?

மாதாந்திர உதிரப் போக்கில் மாற்றங்கள் ஏற்படும் –

உதிரப் போக்கு அடியோடு நின்று போகலாம்; அல்லது உதிரப் போக்கின் அளவும் அது நீடிக்கும் காலமும் படிப் படியாகக் குறைந்து இறுதியில் நின்று போகலாம்; அல்லது சுழற்சி முறை பிசகிப் போய் மாதவிடாய் முன்னும் பின்னுமாக நிகழலாம்.



மாதவிடாய் அடியோடு நின்று போவதை அலட்சியம் செய்து விடக் கூடாது. ஆறு மாத இடைவெளிக்குப் பிறகு மீண்டும் உதிரப் போக்கு ஏற்படுமேயானால் மருத்துவ உதவி நாடி, பரிசோதனைகள் செய்து கொள்ள வேண்டும். அதே போல் ஐம்பது வயதைக் கடந்த பிறகும் மாதவிடாய் தொடர்கிறது எனில், பரிசோதனை செய்து வேறு பிரச்னைகள் இல்லையென்பதை உறுதி செய்தாக வேண்டும்.



தொடரட்டும் கு.க.!

இந்தக் காலகட்டத்தில் பெண்கள் மற்றொரு விஷயம் குறித்தும் எச்சரிக்கையாய் இருந்தாக வேண்டும்! மாதவிடாய் நின்று விட்டதே, இனி கருத்தரிக்க வாய்ப்பில்லை என்று முடிவுக்கு வந்து விடக் கூடாது. மாதவிடாய் நின்ற பிறகும் கருமுட்டை உற்பத்தி தொடர வாய்ப்பு இருக்கிறது என்பதால், இந்தக் கால கட்டத்தில் கு.க. அனுசரிக்காது போனால் பெண் கருவுறவும் வாய்ப்பு இருக்கிறது! பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணுகிற வயதில் யாராவது புதுசாக மீண்டும் அம்மாவாக விரும்புவார்களா! ஆகவே தாய்மார்களே, அவர்களது கணவன் மார்களே! உஷார் உஷார்!

உதிரப்போக்கு மாற்றங்கள் தவிர வேறு சில அந்தரங்க மாற்றங்களும் மெனோபாஸ் தொடங்குவதை உணர்த்தும். பெண்ணின் பிறப்புறுப்

பும் அதையொட்டியிருக்கும் பகுதிகளும் வறட்சியடைந்து வாட்டமுறும். வெள்ளைப்படுதல் அதிகரிக்கக்கூடும். உடலுறவு கொள்வதில் சங்கடம், சிரமம் ஏற்படக் கூடும். ஈஸ்ட்ரோஜென் என்கிற ஹார்மோன் சுரப்பு குறைவதே பிறப்புறுப்பில் உலர் உணர்வும் வாட்டமும் ஏற்படக் காரணம். பிறப்புறுப்பையொட்டியிருக்கும் சிறுநீரகப் பாதையையும் இதே ஈஸ்ட்ரோஜன் ஓரளவு கட்டுப்படுத்துகிறது என்பதால் இந்த உறுப்புகளும் கூட மெனோபாஸ் பருவத்தில் பாதிக்கப்படுகின்றன. தசைகள் தளர்கின்றன. அடிக்கடி சிறுநீர் பிரிவது, அடக்குதற்கு இயலாமல் அவசர உணர்வுடன் சிறுநீர் கழிக்க நேர்வது போன்ற சிறு உபாதைகள் தோன்றுகின்றன.

பெண்கள் தாங்களே உணரக்கூடிய இன்னொரு அறிகுறி மார்பகப் பகுதியில் ஏற்படும் மாற்றங்கள். சிலருக்கு மார்புகள் சிறுத்துச் சுருங்கிப் போகும்; வேறு சிலருக்கு அப் பகுதியிலும் இடுப்பு, வயிறு, தொடை பகுதிகளிலும் அதிக சதை போட்டு எடை கூடவும் செய்யும்.

சருமத்தில் மாற்றம் தெரியும். தோல் சுருங்கி வறண்டு போவதுடன் sub cutaneous fat எனப்படும் சருமத்தையொட்டியிருக்கும் கொழுப்புச் சத்து காணாமல் போய், தோலின் இறுக்கத்தையும் போக்கிவிடும்!

ஜீரண உறுப்புகள் சற்றே மந்தமுற்று வயிற்று உப்புசமும் வாயுத் தொல்லையும் ஏற்படலாம். திடீரென்று



மூச்சு வாங்குவது போன்ற உணர்வும் ஒருவித படபடப்பும் சிலருக்கு ஏற்படும்.

வெளிப்படையாகத் தெரியாமல், டாக்டர்கள் பரிசோதனையின் போது மட்டுமே உணரக்கூடிய சில மாற்றங்களையும் குறிப்பிடலாம் : கர்ப்பப்பை, அதன் வாய் (cervix) கருமுட்டைப் பைகள் ஆகிய உள் உறுப்புகள் சுருங்கிப் போய் அளவில் சிறுத்துப் போகும். அனுபவம் மிக்க டாக்டர்கள் இதைக் கைகளைக் கொண்டு பரிசோதித்தே உணர்வார்கள். கர்ப்பப்பையின் இறுக்கமும் தளர்ந்து விடுகிற இந்த நேரத்தில் பழக்கமில்லாத, வயதுக்கொவ்வாத முரட்டு வேலைகள் செய்வது நல்லதல்ல... தளர்ந்த கர்ப்பப்பை, சுருங்கிய பலூன் போல துவண்டு பிறப்புறுப்பில் 'விழுந்து' தொல்லையும் வலியும் ஏற்படுத்த இடம்தரக் கூடாது.

சிறுநீர் பிரிவதில் மாற்றங்கள் ஏற்படுவதால் இரவில் தூக்கம் கலைந்து, குறைந்து போகவும் வாய்ப்பு இருக்

கிறது. தூங்க விடாமல் தொல்லை தரும் இன்னொரு தொந்தரவும் இருக்கக்கூடும்; பின் மண்டை, கழுத்துப் பகுதிகளில் திடீர் உஷ்ணம் பரவி, குப்பென்று வியர்வை வெளிப்பட்டு முதுகும் மார்புப் பகுதியும் தொப்பலாக நனைந்து போகிற அவஸ்தைதான் அது! இரவில்தான் இந்தத் தொல்லை (hot flushes) அதிகமாயிருக்கும்.

மெனோபாஸ் காலகட்டத்தில் பெண்களுக்கு முதுகெலும்புப் பகுதியிலும் இடுப்பெலும்புப் பகுதியிலும் வலியோ வேதனையோ ஏற்படுவதுண்டு. இதற்குக் காரணம் எலும்புகளின் தேய்மானம்தான். Climacteric என்று சொன்னேன் அல்லவா... ஓவரிகளின் படிப்படியான வேலை நிறுத்தம்... அதன் ஓர் அங்கமாக எலும்புத் தாதுகளின் தேய்மானமும் ஆரம்பித்து விடுகிறது. இதில் அதிக பாதிப்பு இடுப்பு, தண்டுவட எலும்பு



களுக்குத்தான். சிலருக்குக் கூன் விழுகிற அளவுக்குக் கூட பாதிக்கப்படுகிறது...!

தோழமையுடன் உதவி செய்வதாகக் கூறி விட்டு, இப்படி சூப்பர் மார்க்கெட் ஷாப்பிங் லிஸ்ட் போல் உபாதைகளை அடுக்குகிறாரே இந்த டாக்டர் என்று கேட்பீர்கள்... இத்தனை உபாதைகளையும் வரவிடாமல் இருப்பதும் கட்டுப்பட்ட நிலைக்குள் அடக்குவதும் நம் கையில்தான் இருக்கிறது!

என்ன செய்ய வேண்டும்...?

பருவமடைகிற வயதிலும் அதன் பிறகு திருமணமாகி, கர்ப்பமடைந்து, பிரசவமாகிற காலகட்டம் வரையிலும் பெண்களைக் குடும்பமே தாங்கு தாங்கு என்று தாங்குகிறது. போஷாக்கான உணவு, மற்ற செலவுகளை



யெல்லாம் குறைத்துக் கொண்டு அவள் மகிழ்ச்சிக்கும், வசதிக்கும் மணவாழ்க்கையின் வெற்றிக்கும் ஒதுக்கப்படும் பணம், நேரம், கவனம், பொறுமை.. இவையெல்லாமே ஒரு பெண் தாயாகும் காலம் வரைதான் நீடிக்கின்றன. அதன் பிறகு கவனம் அடுத்த தலைமுறை நோக்கியே இயல்பாகத் திரும்புகிறது. ஆனால், கவனம் அவ்வாறு திசை திரும்பும்போது 30 அல்லது 35 வயதை அடைந்துள்ள பெண்ணின் உடல் நலம் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகிறது.

இந்தப் புறக்கணிப்பு திட்டமிட்ட சதியெல்லாம் இல்லை. சம்பந்தப்பட்ட பெண்ணே கூட தன் உடல் நலத்தைப் புறக்கணித்து விட்டு குழந்தை, கணவன், குடும்பம் அலுவல்கள் என்று பிஸி ஆகி விடுகிறார்....

இந்தக் காலகட்டத்தில் மட்டும் (30 - 40/45) ஒரு பெண் தன் உடல் நலத்தைப் புறக்கணிக்காமல் இருந்துவிட்டால், நான் அடுக்கிய 'சூப்பர் மார்க்கெட் ஷாப்பிங் லிஸ்ட்' உபாதைகளில் பெரும்பாலானவை மெனோபாஸ் கட்டத்தில் தலைகாட்டாது. அப்படியே தலைகாட்டினாலும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக் கூடிய எல்லைகளைத் தாண்டாது! தப்பித் தவறி தாண்டினாலும் அதைச் சமாளித்து மீண்டு வருகிற உடல் வலுவும் மன வலுவும் இருக்கும்...!



இன்றைய வீராங்கனைகள்!

பி.டி. உஷாக்களும் ஷைனி வில்ஸன்களும் மட்டும்தான் வீராங்கனைகள் என்று நினைத்து விட வேண்டாம். இன்றைக்கு நம் சமுதாயத்தில் ஒவ்வொரு பெண்ணுமே வீராங்கனைதான்! மாறி வரும் சமுதாய அமைப்பில் பெரும்பாலான பெண்கள் இரட்டைப் பொறுப்பை (வீடு + அலுவலகம்) வெளியுதவியின்றித்தான் சுமக்கிறார்கள்.

இந்தச் சமுதாய மாற்றங்கள் மூன்று தலைமுறைப் பெண்களை ஒரே சமயத்தில் பாதிக்கின்றன - பணிக்குச் செல்லும் பெண்கள், அப்பெண்களின் பெண்கள், அப் பெண்களின் அம்மாக்கள்!

- ஓரிரு தலைமுறைகளுக்கு முன் கிடைத்த வீட்டுச் சூழல் குழந்தைகளுக்கு இன்று கிடைப்பதில்லை.
- வேலைக்குப் போகும் பெண்களுக்கு (அம்மாக்கள்) மிக்ஸி, கிரைண்டர், வாஷிங்

மிஷின் போன்ற சாதனங்கள் வாழ்வை சுலபமாக்கியிருப்பது உண்மைதான்... ஆனால் இவை மன அழுத்தங்களைக் குறைக்காது!

• இந்த அம்மாக்கள் தங்கள் குழந்தைகளை கவனித்துக் கொள்ளும் பொறுப்பைப் பாட்டிகள் மீது திணிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. விரும்பியோ விரும்பாமலோ அதைப் பாட்டிகளும் ஏற்கத்தான் வேண்டியிருக்கிறது. வாழ்க்கை வேகம் குறைய வேண்டிய காலகட்டத்தில் அது அதிகரித்து உடல், மன வலுவை அதிகமாகக் கோருகிறது.

இதற்கிடையே பெண்ணின் சராசரி ஆயுட் காலம் முன்னெப்போதைக் காட்டிலும் அதிகரித்துள்ளது. மெனோபாஸ் வயதுக்குப் பின் முப்பது ஆண்டுகள் கூட ஒரு பெண்ணின் வாழ்க்கை நீடிக்க இன்று வாய்ப்பு இருக்கிறது. (பெண்ணின் சராசரி ஆயுட்காலம் 78 ஆண்டுகள் என்று புள்ளி விவரம் சொல்கிறது)

இந்த முப்பது ஆண்டுகளும் அர்த்தமுள்ளதாக வாழ்க்கை அமைய வேண்டாமா...? அதனால் தான் சொல்கிறேன், ரிடையர்மென்டுக்குத் தயாராவது போல் மெனோபாஸுக்கும் உடல்ரீதியாக மட்டுமின்றி, மன அளவிலும் தயாராக வேண்டும்.

தாய்மையுறும் வாய்ப்பு இனி இல்லை என்கிற நிலை இயற்கையாகவே மனத் தளர்ச்சியை உண்



டாக்கும். அதை ஜெயிக்க மனத்தை உற்சாகமாய் வைத்துக் கொள்வதுடன் உடலையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

குழந்தைகள் பிறந்த பிறகு 'இனி என் வாழ்க்கையே அவர்கள்தான்' என்று எண்ணுவது இயல்பே... ஆனால் அவர்களுக்காக நான் ஆரோக்கியமாய் உடல் வலுவுடன் இருக்க வேண்டும் என்ற உத்வேகமும் கூடவே வரவேண்டும். சமச்சீர் உணவு, உடற் பயிற்சி என்ற இரண்டு விஷயங்களில் சமரசமே கூடாது. பிரசவத்துக்குப் பிறகு விடாமல் செய்யுமாறு சில உடற்பயிற்சிகளை டாக்டர்கள் சொல்லித் தருவார்கள். பெரும்பாலான பெண்கள் இவற்றைச் செய்வதில்லை. இந்தப் பயிற்சிதான் மெனோபாஸ் காலத்தில் பெரிய அளவில் கைகொடுத்து

உதவும்.

குடும்பம் முழுவதுமே இதை உணர்ந்து ஒத்துழைக்க வேண்டும். அம்மாவைப் போல் 'taken for granted' நபர் குடும்பத்தில் வேறு யாரும் இல்லை. இன்றைய சமுதாய அமைப்பும் வாழ்க்கை முறையும் இந்த அணுகு முறையை மாற்றியாக வேண்டிய கட்டாயத்துக்கு நம்மைத் தள்ளிக் கொண்டிருக்கின்றன.



மெனோபாஸை எதிர்கொள்ள குடும்பம் எவ்வாறு உதவ முடியும் என்பதற்கு ஒரு ப்ரிஸ்கிருப்ஷன் எழுதித் தர முடியாது. அவரவர் சூழ்நிலைக்கு ஏற்ப அவரவரேதான் அந்த முடிவுகளை எடுக்க வேண்டும். ஆனால் ஒன்று, மெனோபாஸ் பருவத்தில் அதையும் ஓர் இயல்பான நிகழ்வாகக் குடும்பத்தவர் ஏற்று, அளவான அனுதாபத்துடன் புரிந்து கொண்டு செயல்பட

வேண்டும்.

மருத்துவ உதவியுடன் 'மாரல் சப்போர்ட்'டும் இருந்தால் தெம்பு தானாக வந்துவிடும்.

என்ன மருத்துவ உதவிகள்...?

மெனோபாஸ் தொடங்கும் வரை காத்திருந்து மருத்துவ உதவி நாடுவதுதான் வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் முப்பது வயதுக்குப் பிறகு ஒவ்வொரு பெண்ணும் சில முக்கிய பரிசோதனைகளைச் செய்து கொள்வதுதான் நல்லது. pap smear, mammogram, thyroid பரிசோதனைகள் வருமுன் காத்தலுக்குப் பேருதவியாய் இருக்கும். அதே போல் B.P., சர்க்கரை வியாதிக்கும் பரிசோதித்துப் பார்த்துக் கொள்வது அவசியம். இந்த உபாதைகளும் மெனோபாஸுடன் சேர்ந்து கொண்டு உச்சத்தை அடையாமல் கட்டுப்பாட்டில் வைக்கலாம்.

ஒரு routine health checkup + கர்ப்பப்பை மற்றும் அது தொடர்பான உறுப்புகளின் பல்வேறு சிறப்புப் பரிசோதனைகள், முப்பது வயதில் ஒருமுறையும் நாற்பதில் ஒருமுறையும் செய்வது மிக அவசியம்.

மெனோபாஸ் தொடங்கிய பிறகு என்ன மாதிரி மருத்துவ உதவிகள் செய்ய முடியும்...?

சரும வறட்சிக்கு நல்ல க்ரீம் அல்லது primrose oil, olive oil போன்ற எண்ணெய்கள் உதவிகரமாய் இருக்கும்.

எலும்புத் தேய்மானத்தைக் குறைக்க கால்ஷியமுடன் சிறிதளவு ஹார்மோன்களும் சேர்த்துத் தரலாம். எலும்புத் தேய்மானத்தைப் பலர் கவனிக்காமலே போகிற வாய்ப்புகள் அதிகம். திடீரென்று ஒரு நாள் தண்டு வடப் பிரச்னையாலோ, இருமல் தும்மல் போன்ற சிறு அதிர்ச்சியினால் கூட ஏற்பட்டு விடக் கூடிய எலும்பு முறிவாகவோ அது வெளிப்படும். அவ்வளவு தூரத்துக்கு அனுமதிக்காமல் சமச்சீரான (குறிப்பாக கால்ஷியம் அடங்கிய பால், தயிர் போன்ற உணவு வகைகள்) உணவை எப்போதுமே உட்கொள்ள வேண்டும்.



காலந் தப்பிச் சாப்பிடுவது, ஓய்வே இன்றி உடலை வருத்துவது,

தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு வேலை செய்வது போன்ற பெண்களுக்கே உரிய நிர்ப்பந்தங்கள்தான் எலும்புத் தேய்மானத்தை வேகப்படுத்துகின்றன. இவற்றைத் தவிர்ப்பது நல்லது.

சரியா? தப்பா?

ஹார்மோன் சிகிச்சை என்பது சர்ச்சைக்குரியதுதான். ஏனெனில், அது நோயின் அறிகுறிகளை மட்டும்தான் கட்டுப்படுத்துகிறதே யொழிய நோயைத் தீர்ப்பதில்லை! பக்க விளைவுகளும் அதிகம்.

ஈஸ்ட்ரோஜன் என்கிற ஹார்மோன் குறைவதால்தான் பெரும்பாலான மெனோபாஸ் பிரச்னைகள். இந்த ஹார்மோனை மாத்திரை வடிவில் உட்கொள்வதன் மூலம் அவற்றைக் குறைக்கலாம். ஆனால் மெனோபாஸ் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும்.

இதனால் ஹார்மோன் சிகிச்சையே கூடாது என்று நாமே முடிவுக்கு வந்து விடக் கூடாது. நிலைமையின் தீவிரத்தையும் அவசியத்தையும் பொறுத்து டாக்டர் அந்த முடிவை எடுக்க அனுமதிக்க வேண்டும். எனினும், சகிப்புத்தன்மைக் குறைவினால் அவசரப்பட்டு ஹார்மோன் சிகிச்சையை நாடுவது தவிர்க்கப் பட வேண்டும்.

ஹார்மோன் சிகிச்சையின்

முக்கியமான பக்கவிளைவு கான்ஸர். மருத்துவர் மேற்பார்வையில் அளவான சிகிச்சை தரப்படும்போது இந்த அபாயம் இராது. ஆனால் குடும்பத்தில் மார்பகப் புற்றுநோயாளிகள் ஏற்கெனவே இருப்பார்களானால் ஹார்மோன் சிகிச்சை தவிர்க்கப்பட வேண்டும்.

உடல் பருத்துப் போவது, தலைவலி, மார்புப் பகுதியில் கனமும் வலியும் என்று வேறு தொந்தரவுகளும் ஹார்மோன் சிகிச்சையால் விளையக்கூடும்.



ஹார்மோன்களைத் துளித்துளியாக உடலுக்குள் சருமம் வழியாகச் செலுத்தும் Oestrogen patch என்ற சாதனம் இப்போது கிடைக்கிறது. இதை இடுப்புப் பகுதியில் குறிப்பிட்ட கால அளவுக்குப் பொருத்திக் கொள்வதன் மூலம் மிக மிகக் கட்டுப்பட்ட அளவில் Oestrogen உடலுக்குள் செல்கிறது. இது பேன்ற நவீன முறைகள் இருப்பதால்

ஹார்மோன் சிகிச்சை என்றாலே முன்பு போல் பயந்து ஓடத் தேவையில்லை. முடிவை மருத்துவரிடம் விட்டுவிட்டு எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

மிகத் தீவிரமான மெனோபாஸ் தொல்லைகளால் அவதிப்படுகிறவர்களுக்குக் கவனமான ஹார்மோன் சிகிச்சை ஒரு வரப்பிரசாதமாகக் கூட அமையலாம். இந்தச் சிகிச்சை எடுத்துக் கொள்பவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் செக்-அப்களுக்குத் தவறாமல் போக வேண்டும். நம் பெண்கள் இதில் தான் அலட்சியம் காட்டுகிறார்கள். ஹார்மோன்கள் உடலுக்குள் மருந்து/சிகிச்சை மூலமாகச் செலுத்தப்படுகையில் மருத்துவரின் மேற்பார்வை தொடர்ந்து இருக்க வேண்டியது அவசியம் என்பதை மிகவும் வலியுறுத்த விரும்புகிறேன். இல்லாவிட்டால் அனாவசியமான பக்கவிளைவுகள் தோன்றி புதிய பிரச்னைகள் முளைக்கும்.

மெனோபாஸ் பிரச்னைகளுடன் வருவோருக்கு முதலில் அறிவுரை/வழிகாட்டல், அடுத்து உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு, உடல் பலம் கூட்ட டானிக்குகள் என்று படிப்படியாக முயன்று பார்த்து, கடைசிபட்சமாகத்தான் ஹார்மோன் சிகிச்சை தருவார்கள் டாக்டர்கள்.

அடிக்கடி சிறுநீர் பிரிந்து இரவுத் தூக்கம் கெடாமல் இருக்க, மாலை எட்டு மணிக்குப் பிறகு

திரவ உணவைக் குறைக்கலாம். உறங்கும்போது தலைமாட்டில் டேபிள் ஃபான் வைத்துக் கொண்டால் 'குப்'பென்று வியர்க்கும் நேரங்களில் உதவியாய் இருக்கும். இந்த வியர்வைப் புனல் பகலிலும் சிலருக்குப் பெருகும். இவர்கள் உள்ளாடையின் உட்பகுதியில் டிஷ்யூ நாப்கின் அல்லது மெல்லிய கர்சீஃப் வைத்துக் கொண்டால் உடைகள் ஈரமாகி அசௌகரியம் உண்டாவதைத் தவிர்க்கலாம். இந்த மாதிரி வியர்க்கிற தொல்லை இருப்பவர்கள் திரவ உணவு நிறைய உட்கொள்ள வேண்டும். (இரவு எட்டு மணிக்கு முன்பாக!) உடலை இறுக்காத பருத்தி ஆடைகள் அணிய வேண்டும்.



மனம், மனம், மனமே எல்லாம்!

பிறப்புறுப்பில் உலர்வுத் தன்மை

ஏற்பட்டு சுருங்கிப் போகும் என்று சொன்னேன். இயற்கையே அனுப்புகிற இந்த சமிக்ஞையால் மூளையும் மனமும் மாறுகின்றன. உடலுறவில் பெண்ணுக்கு நாட்டம் குறைகிறது.

இதே சமயத்தில் அவள் கணவனுக்கும் அந்த நாட்டம் குறைந்து போகும் என்று சொல்ல முடியாது. இதனால் தாம்பத்ய சிக்கல்கள் எழக்கூடும். உடலுறவை வலியின்றி அனுபவிக்க க்ரீம் அல்லது ஆயின்ட்மென்ட்டை டாக்டர் தரமுடியும். ஆனால் மனத்தின் அலை பாய்தலைப் புரிந்து கொள்ள பொறுமையும் தோழமை கலந்த அனுதாபமும் தம்பதிகளிடையே இருக்க வேண்டும்.

புதிதாக மணமான பெண்ணை நடத்துகிற கனிவுடன், பரிவுடன், இதமுடன் க்ணவன் மனைவியை இந்தக் கால கட்டத்தில் அணுக வேண்டும். தன் திருப்தியை மட்டும் விழையாமல் அவளது நிறைவையும் முக்கியமாகக் கருத வேண்டும். மனைவி சுத்தமாகவும் ரம்மியமாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் ஆண்கள், தாங்களும் மனைவியை அணுகும்போது குளித்து, சுத்தமாய் இருக்க வேண்டும்.

மனைவியும் 'தனக்கு இனி

எல்லாம் முடிந்து விட்டது' என்று வெறுத்து விரக்தியோடு இருக்கக் கூடாது. இது ஒரு புதிய வாழ்க்கை– இயற்கை தரும் ரிடயர்ட் லைஃப் எனக் கருதி உல்லாசமாக இருக்க மனத்தை இலேசாக்கிக் கொள்ள வேண்டும்.

தியானம், யோகா, போன்றவையும் தவறாமல் செய்யும் உடற்பயிற்சியும் தருகிற உணர்வு இருக்கிறதே... அதற்கு ஈடே கிடையாது!- Sense of well-being என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அதை அடைவது அவரவர் கையில் தான் இருக்கிறது. அது கைவந்து விட்டால் பிற பிரச்னைகள் துரும்பாகி விடும்.

உடல் எடை கூட அனுமதிக்கவே



அனுமதிக்காதீர்கள். தினமும் காலையில் இருபது நிமிடங்கள் மாலையில் இருபது நிமிடங்கள் வாக்கிங். வயிற்றை உள்ளிழுத்து

வெளியே விடுதல், ஆழமாக மூச்சு இழுத்து விடுதல் போன்ற உடற் பயிற்சிகளைச் செய்தே ஆக வேண் டும்.

சமச்சீரான உணவை அளவாக, வேளா வேளைக்குச் சாப்பிடுங்கள்.



இடையிடையே நொறுக்குத் தீனி வேண்டாம். நிறைய தண் ணீர், மோர், பழம், காய்கறி கள், இளநீர்... சாப்பிடுங்கள்.

. இரண்டு, மூன்று முறை கூட குளித்து உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். டியோ டரன்ட், மெல்லிய பர்ஃப்யூம் பயன் படுத்தி புத்துணர்சியுடன் இருங் கள்.

Sense of well-being பெறுவதற்கு

ஒவ்வொரு பெண்ணும் முயற்சி செய்ய வேண்டும். தனக்கென்று அவள் நேரம் ஒதுக்கி, உடற்பயிற்சியிலும் தோற்றப் பொலிவிலும், தான் விரும்புவதைச் செய்வதிலும் (படிப்பு, இசை, ஷாப்பிங்) கவனம் செலுத்த வேண்டும். சுயபச்சாதாபமோ தாழ்வு மனப்பான்மையோ நெருங்க அனுமதிக்கவே கூடாது! உபயோகமான சமூகப் பணிகள், கலகலப்பான நட்பு வட்டம் என்று மனத்தைச் செலுத்த வேண்டும்.

இந்த முயற்சிக்குக் குடும்பத்தாரின் ஊக்கமும் ஒத்துழைப்பும் மிக அவசியமாகிறது. 'உனக்குன்னா செய்துக்க நேரமிருக்கே...' என்று இடித்துக் காட்டுவது அநியாயம் மட்டுமல்ல; ஆபத்தானதும் கூட... இதைப் போன்ற அனுதாபமற்ற சுயநலம் கலந்த அணுகுமுறைகளால் மேனோபாஸ் தாங்க முடியாத கொடுமையாகவே மாறிப் போகும்.

இந்தக் கால கட்டத்தில்தான் குடும்பப் பொறுப்புகள், புதிய வடிவங்கள் பெறுகின்றன. அதே நேரத்தில் உடல் சுறுசுறுப்பு இயல்பாகக் குறைந்து சோதிக்கிறது! குழந்தைகள் கல்யாணமாகி வீட்டை விட்டு வெளியேறுகிறார்கள். கணவனின் அலுவலகப் பொறுப்பு அதிகமாகி, குடும்பத்தில் அவன் செலுத்தும் கவனம் மேலும் குறைந்து போகிறது. 'Empty nest syndrome' என்று மனவியல்காரர்கள் குறிப்பிடும் தனிமையுணர்வு பெண்ணை அழுத்துகிறது. ஆனால்

அவளுடைய மென் மனத்தின் சஞ்சலங்களை உணராமல் உலகமே புயல் வேகத்தில் வழக்கம்போல் இயங்கிக் கொண்டுதானிருக்கிறது...

'தாம் மிகவும் நேசிக்கும் ஒருத்தருக்கு, தம்மை மிகவும் நேசிக்கும் ஒருத்தருக்கு இந்தத் தனிமை உணர்வு வர அனுமதிக்கலாமா...?' என்று குடும்பத்தில் ஒவ்வொருத்தரும் யோசித்தால் நல்லது. அந்தச் சிந்தனையின் விளைவாக ஊற்றெடுக்கும் அன்பும் அரவணைப்பும் எந்தச் சிகிச்சையைக் காட்டிலும் விரைவாகவும் சிறப்பாகவும் பலன் அளிக்கும். சின்ன அன்றாட உதவிகள் தொடங்கி, எதிர்பாராத திடீர் விடுமுறை வரை எந்த வடிவத்தில் வேண்டுமானாலும் அது வெளிப்படலாம். ஆனால் அந்த அக்கறை வெளிப்பட வேண்டும் என்பதே மிக முக்கியம்.

ஹிஸ்டரக்ட்மி ஆபரேஷன் அவசியமா?

'ரொம்ப bleeding. கர்ப்பப்பையை நீக்கிவிட்டார்கள்!' இப்படி சுருக்கமாகச் சொல்லி உரையாடலை முடித்து விடலாம். ஆனால் உண்மையில் மெனோபாஸ் நிலைக்கும் கர்ப்பப்பை நீக்கும் அறுவை சிகிச்சைக்கும் சம்பந்தமில்லை! கர்ப்பப்பை அல்லது ஓவரிகளில் அனாவசிய வளர்ச்சி, கட்டி, கான்ஸர் போன்றவை ஏற்படுவதால் தான் ஆபரேஷன் அவசியமாகிறது.

அதுவும் இதர சிகிச்சை முறைகள் பலனளிக்கவில்லை என்னும் போது தான் ஆபரேஷன் செய்கிறோம். வெறும் மெனோபாஸ் உதிரப் போக்குக்காக மட்டுமே கர்பப்பை நீக்கப் படுவதில்லை என்பதை மீண்டும் அழுத்திச் சொல்கிறேன்.

பெரும்பாலும் கர்ப்ப உறுப்புகளில் ஏற்படும் தேவையற்ற வளர்ச்சி, கோளாறுகள் குறித்து பெண்களுக்குத் தெரிவதில்லை அல்லது தகுந்த கவனம் செலுத்துவதில்லை. மெனோபாஸ் காலகட்டத்தில்தான் அவர்கள் டாக்டர் உதவியை நாடுகிறார்கள். அந்தக் கட்டத்தில் கட்டியோ கான்ஸரோ முற்றிய நிலைக்குப் போய் விடுவதால் கர்ப்பப் பையை (சில சமயம் ஓவரிகளையும்) நீக்குகிற கட்டாயம் ஏற்படுகிறது. இதனால் மெனோபாஸுக்கும் கர்பப்பை ஆபரேஷனுக்கும் முடிச்சுப் போடுவது வழக்கமாகிவிட்டது.

இன்னொரு விஷயத்திலும் எச்சரிக்கை தேவை:

மெனோபாஸ் அறிகுறிகள் எதுவானாலும் நீண்ட காலத்துக்குத் தொடருமானால் சிகிச்சை இன்றியே சமாளிக்க முயற்சி செய்யக் கூடாது. ஆரம்ப அறிகுறிகளின் போதே ஒரு முறை டாக்டரைப் பார்த்து 'ஹலோ' சொல்லி விடுவது நல்லது. மறக்காமல் கணவரையும் உடன் அழைத்துச் செல்லுங்கள்.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS(S)M4392/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS/(S) 161 * Registered as a Newspaper in Srilanka * Supplement to Kalki 5.7.98



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்

16, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
சென்னை- 600 063. தொலைபேசி : 2376129



ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, வசதியற்ற, திக்கற்ற 50 மாணவர்களும் 20 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியை செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

காலை சிற்றுண்டி (70 பேருக்கு)	ரூ.	500/-
மதிய உணவு (இனிப்புடன்)	ரூ.	1,000/-
இரவு சிற்றுண்டி	ரூ.	750/-
இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	300/-
ஒரு மாணவனுக்கு ஓரண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	6,000/-
குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	40,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

உங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque/DD/MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி சர்வாத்மானந்தர்.

வருமான வரி விலக்கு (**Section 80 G**) உண்டு

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4382/ 98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

